இந்திய உச்ச நீதிமன்றம்

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1021-1026/2013

வி. கல்யாணசுவாமி (இறந்துவிட்டார்)
வாரிசுதாரர்கள் மூலம் மற்றும் ஒருவர் ... மேல்முறையீட்டாளர்(கள்)

-எதிர்-

எல். பக்தவச்சலம் (இறந்துவிட்டார்)
வாரிசுதாரர்கள் மூலம் மற்றும் பலர் ... எதிர்மேல்முறையீட்டாளர்(கள்)

உடன்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1027-1032/2013

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1033-1038/2013

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1039-1044/2013

மற்றும்

உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1045-1050/2013

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் திரு. கே.எம். ஜோசப் :

1. ஆர். வெங்கிட்டுசாமி நாயுடு என்ற ஒருவர் இரண்டு மகன்களையும் மற்றும் ஐந்து மகள்களையும் பெற்றிருந்தார். இலட்சுமையா நாயுடு மற்றும் ரங்கசாமி நாயுடு ஆகியோர் ஆர். வெங்கிட்டுசாமி நாயுடுவின் மகன்களாவர். ஆர். கிருஷ்ணம்மாள் என்பவர் ரங்கசாமி நாயுடுயயக்கு திருமணம் செய்துவைக்கப்பட்டார். அவர்களுக்கு வாரிசு இல்லை. லட்சுமண நாயுடு, 1. பக்தவச்சலம், 2. வெங்கடபதி, 3. ஜெகன்நாதன் மற்றும் 4. இராமசாமி ஆகிய

நான்கு மகன்களைப் பெற்றிருந்தார். இரண்டு உரிமையியல் வழக்குகள், சிறப்பு அனுமதி மூலம் இம்மேல்முறையீடுகளை எங்கள் முன்பு தோற்றுவித்துள்ளன. அ.வ. எண் 649/1985, லட்சுமண நாயுடுவின் வழியாக உரிமை கோருபவர்களால் தாக்கல் செய்யப்பட்டது; அ.வ. எண் 89/1983, ரங்கசாமி நாயுடுவால் உயில் எழுதிவைக்கப்பட்டதாக கோரும் உயில் உரிமையாளர்களுள் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இரு உரிமையியல் வழக்குகளின் வழக்குரை அட்டவணை சொத்துகளும் ஒன்றேயாகும்.

2. முதல் வழக்கு அதாவது, அ.வ. எண் 649/1985, (மேற்படி வழக்கானது, துவக்கத்தில் அ.வ. எண் 2063/1982-ஆக தாக்கல் செய்யப்பட்டு, அ.வ. எண் 649/1985-ஆக மறு எண்ணிடப்பட்ட அவ்வழக்கானது), வழக்குச் சொத்துகளில் வழக்காளர்களின் உரிமையை விளம்புகை செய்யவும் மற்றும் வழக்குச் சொத்துகளில் மறுப்பாளர்களுக்கு எதிரான உறுத்துக்கட்டளைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டது. இவற்றிற்கிடையில், அ.வ. எண் 89/1983-இல் கோரப்பட்ட பரிகாரங்கள் பின்வருமாறு:-

> "(அ) கீழ்க்காணும் அட்டவணை 1-இல் விவரிக்கப்பட்ட சொத்துகளில் 1/3 உரிமையை அல்லது கீழ்க்காணும் அட்டவணை 2-இல் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளில் வழக்காளரின் 1/4 உரிமையை விளம்புகை செய்யவும்;
>
> (ஆ) அட்டவணை 1-இல் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை மூன்று சம பங்குகளாகப் பிரித்து, அத்தகைய பங்குகளுள் ஒரு பங்கை வழக்காளருக்கு ஒதுக்கவும் அல்லது மாற்றாக, அட்டவணை 2-இல் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை நான்கு சம பங்குகளாகப்

பிரித்து, அத்தகைய பங்குகளுள் ஒரு பங்கை வழக்காளருக்கு ஒதுக்கி பணிக்கவேண்டும்;

(இ) பாகப்பிரிவினையை நிறைவேற்ற நீதிமன்ற ஆணையரை நியமிக்கவேண்டும்;

(ஈ) கடந்தகால வருவாய் பயனாக ரூ.15,000.00 வழக்காளருக்கு வழங்க, 4 முதல் 11 வரையிலான மறுப்பாளர்களைப் பணிக்க வேண்டும்;

(உ) எதிர்கால வருவாய் பலனை விசாரித்து வழக்கு தொடரப்பட்ட நாள் முதல் சொத்தின் அனுபவமானது ஒப்படைக்கப்படும் நாள் வரையிலான வருவாய் பலனானது விசாரணையில் தீர்மானிக்கப்படவும் பணிக்கவேண்டும்;

XXX XXX XXX"

(அ) வழக்கில் மாறிவரும் வரலாறு; முதல் கட்டம்

3. இவ்வழக்கானது மாறி மாறி வரும் வரலாற்றைக் கொண்டுள்ளது. அனைத்தும் 1955-இல் துவங்குகிறது. ("கு.வி.மு.ச.") என சுருங்க அழைக்கப்படும் 1898-ஆம் ஆண்டைய குற்றவியல் விசாரணைமுறைச் சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையானது, எம்.சி. எண் 1/1955 மற்றும் எம்.சி. எண் 8/1955 ஆகியவை கோயம்புத்தூர் முதல் வகுப்பு நீதித்துறை நடுவர் முன்பாக தாக்கல் செய்யப்பட்டன. ரங்கசாமியின் மனைவி (கணவனை இழந்தவர்) கிருஷ்ணம்மாள் என்பவர் 'அ'

தரப்பினராவார். இது, உப்பிலிபாளையம் கிராமம், சர்வே எண்கள் 613/04 மற்றும் 614/03 ஆகியவற்றில் அமைந்த நிலத்தின் அனுபவம் தொடர்பாக, காவல்துறை உதவி-ஆய்வாளர் அளித்த 04.07.1955-ஆம் தேதியிடப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் எழுந்ததாகும். 'அ' 1-ஆம் தரப்பினர், ரங்கசாமி நாயுடுவின் மனைவி ஆர். கிருஷ்ணம்மாள் (கணவனை இழந்தவர்). 'அ' 2-ஆம் தரப்பினர் 1-ஆம் தரப்பினரின் மைத்துனரும் மற்றும் உயிரை நிறைவேற்றுபவருமாவார். 'ஆ' 1-ஆம் தரப்பினர் இலட்சுமண நாயுடு, ரங்கசாமி நாயுடுவின் அண்ணன் ஆவார். 'ஆ' தரப்பின் 2 முதல் 4 வரையிலான தரப்பினர்கள் லட்சுமண நாயுடுவின் மகன்கள் ஆவர்.

'அ' தரப்பினால் தொடரப்பட்ட வழக்கின் விவரங்கள் பின்வருமாறு:

1932-ஆம் ஆண்டு 'ஆ' தரப்பின் 1-ஆம் நபருக்கும் மற்றும் காலஞ்சென்ற ரங்கசாமி நாயுடுவிற்குமிடையில் பாகப்பிரிவினை நடந்தது. ரங்கசாமி நாயுடுவும் ஏற்கெனவே சில சொத்துகளை வாங்கியிருந்தார். அவர் அநேக நிலங்களை குத்தகைக்கு எடுத்தார். 'அ' தரப்பினர், சுருக்கமாக, வினாவிற்கிடமான நிலத்தின் அனுபவத்திலிருப்பதாக கூறினர். மேலும், 'அ' தரப்பினர் வழக்கானது, புற்றுநோய் சிகிச்சையிலிருந்த முதல் மருத்துவமுறை முடிந்து கோயம்புத்தூருக்கு திரும்பிய பின்னர், குதிரைப் பந்தைய பங்களாவில் தங்கிய ரங்கசாமி நாயுடு 10.05.1955 அன்று ஒரு உயிலை நிறைவேற்றினார். அவர் தன்னுடைய மைத்துனரான 'அ' தரப்பின் 2-ஆம் நபர் உயிலை செயல்படுத்துபவராக நியமித்தார். அவர், தன்னுடைய பிரிக்கப்படாத சொத்தின் நிலையை 10.05.1955 நாளிடப்பட்ட 'நவ இந்தியா'' என்ற செய்தித்தாளில் ஒரு அறிவிப்புமூலம் பிரகடனம் செய்தார். 'ஆ' தரப்பினர்களுள் முதலாம் நபரும் மற்றும் ரங்கசாமி நாயுடுவின் சகோதரருமான லட்சுமண நாயுடு,

அறிவிப்பைப் பார்த்து, அதற்கு, அவர்கள் பிரிக்கப்படாத கூட்டுக் குடும்பத்தினரென்றும், ரங்கசாமி தன்னை பிரித்துக்கொள்ள விரும்பினால் அதுகுறித்து தகவல் அளித்திருக்கவேண்டுமென்றும் 11.05.1955-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பின்மூலம் பதிலளித்தார். மேலும், 11.05.1955-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பில் லட்சுமண நாயுடுவின் நிலைப்பாடு சரியானதல்ல என 16.05.1955-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பின்மூலம் ரங்கசாமி பதிலளித்தார் என்பது 'அ' தரப்பின் வழக்காகும். 'ஆ' தரப்பில் முதல் நபரால் 17.05.1955 அன்று ஒப்புக்கொள்ளப்பட்டது என்றும் கூறப்படுகிறது. 10.05.1955க்குப் பின்னர், ரங்கசாமி நாயுடுவின் உடல்நிலை மீண்டும் மோசமானது. அவர் 20.05.1955 அன்று பாம்பே சென்றார். அவர் இன்னமும் அவருடைய கடமையில் உணர்வுடனும், மற்றவர்களுடன் தகவல் தொடர்பிலுமிருந்தார். ரங்கசாமி நாயுடு, 01.06.1955 அன்று காலைப்பொழுதில் மரணமடைந்தார். மறுபுறத்தில், ரங்கசாமி நாயுடுவும் மற்றும் 'ஆ' தரப்பினரும் இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் என 'ஆ' தரப்பினர் வாதிட்டனர். 'ஆ' தரப்பினர்களுள் ஒன்றாம் நபரான லட்சுமண நாயுடு, அனைத்து பணிகளையும் கவனிக்க முடியாதளவிற்கு அதிக வயதுடையவரானார். ரங்கசாமி நாயுடுவும் மற்றும் லட்சுமண நாயுடுவின் மகன்களுள் ஒருவரும், விவசாய நிலங்களைப் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். 1932-ஆம் ஆண்டின் பாகப்பிரிவினையானது மறுக்கப்பட்டது. ரங்கசாமி நாயுடு நோய்வாய்ப்பட்டு, 1955-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் உணவு சாப்பிட முடியாமல், குழாய் மூலம் ஊட்டப்பட்டது. சுருங்கக்கூறின், ரங்கசாமி நாயுடு, கூட்டுக் குடும்பத்தின் பிரிக்கப்படாத உறுப்பினராக தொடர்ந்தார் என்பது 'ஆ' தரப்பின் வாதமாகும்.

4. மேற்படி உயிலைக் குறித்த விவாதம் தேவையற்றது என அறிந்து,

நீதித்துறை நடுவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. 'ஆ' தரப்பினர் நிலத்தின் அனுபவத்தில் உள்ளனர் என்றும், சட்டப்படி வெளியேற்றப்படும் வரையில், அவர்கள் அனுபவத்திற்கு அருகதையுடையவர்கள் என்றும் அறிந்து, 16.04.1956-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம், நீதித்துறை நடுவர் 'ஆ' தரப்பினருக்காதரவாக தீர்ப்பளித்தார். 'ஆ' தரப்பினர்கள், லட்சுமண நாயுடுவும் மற்றும் அவருடைய மகன்களுமாவர். 10.04.1958 அன்று லட்சுமண நாயுடு மரணமடைந்தார். அவர்களுக்கெதிரான சீராய்வு மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>வழக்கின் இரண்டாம் கட்டம்</u>

5. இரண்டாம் கட்ட வழக்கானது, அ.வ. எண் 71/1958 தாக்கல் செய்யப்படுவதன்மூலம் துவங்கியது. வழக்காளர் ஆர். கிருஷ்ணம்மாள், மரணமடைந்த ரங்கசாமியின் மனைவியாவார். மேற்படி வழக்கின் மறுப்பாளர்கள், எல். இராமசாமி நாயுடு, எல். பக்தவச்சலம், எல். ஜெகநாதன் மற்றும் எல். வெங்கடபதி ஆகியோர்; அவர்கள் அனைவரும் மரணமடைந்த லட்சுமண நாயுடுவின் மகன்களாவர். 5-ஆம் மறுப்பாளர், வெங்கடசுவாமி நாயுடுவின் மகன் என்.வி. ராமசந்திர நாயுடு ஆவார். (உயிலை செயல்படுத்துபவராக கிருஷ்ணம்மாள் அவர்களால் நியமிக்கப்பட்டவர்) வழக்குரையானது 10.04.1958 தேதியிடப்பட்டதாகும், அது நிகழ்வாக, லட்சுமண நாயுடு மரணமடைந்த நாளாகும். சுருக்கமாக, வழக்காளர் கிருஷ்ணம்மாளின் வழக்கானது கீழே தரப்படுகிறது. 1932-ஆம் ஆண்டுவரையில் தன்னுடைய கணவரும் மற்றும் லட்சுமணன் ஆகியோரும் பிரிக்கப்படாத கூட்டு குடும்பத்தின் உறுப்பினராக இருந்து வந்தனரென கிருஷ்ணம்மாள் நீதித்துறை நடுவர் முன்பான வழக்கில் மீண்டும் மீண்டும் கூறினார். 1932-ஆம் ஆண்டில் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது.

வழக்குரையின் 1-ஆம் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள சொத்துகள், அவருடைய மரணமடைந்த கணவர் ரங்கசாமியின் பங்கானது. அவர், அச்சொத்துகளின் தனி அனுபவமும் மற்றும் சுவாதீனமும் பெற்றிருந்தார். அதன்பின்னர், அவர் தன்னுடைய பெயரில் அநேக சொத்துகளை வாங்கினார். அச்சொத்துகள் 1அ-ஆக அட்டவணையிடப்பட்டுள்ளன. சட்ட மேலவை உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட ரங்கசாமி நாயுடுவிற்கு தொண்டை புற்றுநோய் ஏற்பட்டது. அவர் 1932-ஆம் ஆண்டில் சொத்துகளின் வாய்மொழி பாகப்பிரிவினையை முறைப்படுத்தும் எண்ணத்தில், தன்னுடைய மூதாதையர் சொத்துகள் மற்றும் சுய சம்பாத்திய சொத்துகள் ஆகிய இரண்டோடு மறுப்பாளர்களின் சொத்துகளையும் பட்டியலிட்டு, சகோதரரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைத்தார். அப்பட்டியலானது, லட்சுமண நாயுடுவின் கையெழுத்தில் சில திருத்தங்களுடன் திருப்பப்பட்டது. அவருடைய மரணமடைந்த கணவர், தான் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்ட தனி நபர் என்றும், தன்னுடைய தனிப்பட்ட பங்கு மற்றும் தகுநிலையை அறிவித்தும், 10.05.1955 அன்று உள்ளூர் தினசரி செய்தியில் அறிவிப்பு வெளியிட்டார். எனினும், கூட்டுக் குடும்பம் பிரியாததை, ரங்கசாமியின் செயல்பாட்டிலிருந்து யூகித்தம், அறிவிப்பின் சரித்தன்மை மற்றும் நியாயத்தை வினவியும், லட்சுமணன், 11.05.1955-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பை அனுப்பினார். கிருஷ்ணம்மாளின் கணவர், 16.05.1955 அன்று பதில் அனுப்பினார். 10.05.1955 அன்று முறையாக பதிவு செய்யப்பட்ட உயில் உள்ளதென்றும், அதில், 1932-ஆம் ஆண்டைய வாய்மொழி பாகப்பிரிவினையானது குறிப்பிடப்பட்டுள்ளதென்றும் வழக்காளர் கிருஷ்ணம்மாள் கூறினார். உயிலின்படி, அட்டவணை 1 மற்றும் 1அ ஆகியவற்றின் சொத்துகள் கிருஷ்ணம்மாளின் வாழ்வாதாரத்திற்காக ஒதுக்கப்பட்டன மற்றும் பிற சொத்துகள் அவருடைய சகோதரியின் மகன்களுக்கு ஒதுக்கப்பட்டன.

அவர், கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான வழக்கை சுட்டிக் காட்டினார். "சகோதரர்கள், இந்து கூட்டுக் குடும்பத்தின் பிரிக்கப்படாத உறுப்பினர்களாக தொடர்கின்றனர்" என்ற லட்சுமண நாயுடுவின் நிலைப்பாட்டை சுட்டிக்காட்டினார்; அதனடிப்படையில், அவர் மறுப்பாளர்கள் 1 முதல் 4 வரையிலானவர்களுடன் சொத்தின் அனுபவத்தில் இருந்ததாகக் கூறினார். அட்டவணை I மற்றும் Iஅ சொத்துகளில் மறுப்பாளர்களின் அனுபவமானது சட்டவிரோதமானதென கிருஷ்ணம்மாள் கூறுகிறார். தன்னுடைய கணவர் கூட்டுக் குடும்பத்தின் பிரிந்த உறுப்பினர், 1932-ஆம் ஆண்டில் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்தது மற்றும் தன்னுடைய கணவரால் நிறைவேற்றப்பட்டதான பதிவுசெய்யப்பட்ட உயிலானது செல்லத்தக்கதாகும் ஆகிய நிலைப்பாடுகளை, தன்னுடைய கணவரின் சட்டப்பூர்வ வாரிசுதாரரும், உயில் உரிமையாளரும் என்ற முறையில் பின்பற்ற, தான் கடமைப்பட்டவரென அவர் மேலும் கூறினார். அதற்கு மாற்றாக, அவர் பின்வரும் வழக்கை ஏற்படுத்தியதாகத் தோன்றும்:

> "11. சட்டப்பிரிவு 145-இன் கீழான வழக்கிலும் மற்றும் தன்னால் அளிக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்திலும் ஆர்.வி. லட்சுமண நாயுடுவால் ஏற்படுத்தப்பட்ட வழக்கில், தன்னுடைய உரிமைகள் மேலானவை என்றும், ஆர்.வி. லட்சுமண நாயுடுவின் இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் என்ற அடிப்படையில், 1937-ஆம் ஆண்டைய XVIII-ஆம் சட்டப்படியும் மற்றும் 1956-ஆம் ஆண்டைய XXX-ஆம் சட்டம் ஆகியவற்றின் கூட்டுச் செயல்பாட்டின் அடிப்படையில், கூட்டுச் சொத்துகளில் பாதியைப் பெறவும் மற்றும் அவற்றின் அனுபவத்தை கோரவும் தான் உரிமையுடையவரென

அவர் மேலும் கூறினார். மறுப்பாளர்கள் 1 முதல் 4 வரையிலானவர்களின் அனுபவத்திலுள்ள அனைத்து சொத்துகளையும் வழக்காளரால் குறிப்பிட முடியவில்லை, ஆனால், அவர் அட்டவணை I, II என அவற்றை கூறமுடிந்தது. தான் மேம்பட்ட விவரங்களை பெறும்பொழுது அவர்களை சேர்க்குமாறு அவர் கோரினார். 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள் தம்முடைய அனுபவத்திலுள்ள கூட்டுக் குடும்பச் சொத்துகளின் விவரங்களை முழுமையாகவும் மற்றும் உண்மையாகவும் கூறும்படி அழைக்குமாறும் வழக்காளர் வேண்டுகிறார்.

12. வழக்காளர், தன்னைப் பொறுத்தவரையில், சட்டப்பிரிவு 145-இன் கீழான வழக்கில் மறுப்பாளர்களால் வைக்கப்பட்ட வாதங்களை பின்பற்ற தான் முற்றிலும் விரும்புவதாகவும், அதிலிருந்து பின்வாங்குவது மறுப்பாளர்களைச் சார்ந்ததல்ல என்றும் வழக்காளர் கூறுகிறார். அதனைத் தொடர்ந்து, இச்சூழ்நிலைகளில், தன்னுடைய உரிமைகள் தகராறுக்கற்றவை என்றும், இறுதி ஆணை நிலுவையிலிருக்கையிலேயே அட்டவணை I மற்றும் Iஅ சொத்துகளில் உரிமையுடையவர் என்றும் மற்றும் அவற்றின் உடனடி அனுபவத்தைப்பெற அருகதையுடையவரென்றும் அல்லது அவருடைய நியாயமான உரிமைகளைப் பாதுகாக்க, அனைத்து சொத்துகளுக்கும் நீதிமன்ற காப்பாளரை நியமிக்க பெற உரிமையுடையவரென்றும் வழக்காளர் கூறகிறார்."

6. மாற்று வழக்கானது ஏற்கப்படுமெனில், லட்சுமண நாயுடுவின் அசையும் மற்றும் அசையாச் சொத்துகளின் வருவாயில், பகுதி பரிகாரமாக பாகம் பெற தான் அருகதையுடையவரென கிருஷ்ணம்மாள் மேலும் கூறினார். மேற்படி வழக்கின் வழக்குமூலமானது பத்தி 17-இல் பின்வருமாறு கூறப்பட்டது:

> "17. வழக்கின் வழக்குமூலம் எழுந்த காலங்கள்: 1.6.1955 அன்று ரங்கசாமி நாயுடு மரணமடைந்தபொழுது 1955-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் சொத்துகளில் மறுப்பாளர்கள் சட்டவிரோதமாக அத்துமீறி நுழைந்தபொழுது, 16.4.1956 அன்று லட்சுமண நாயுடு மற்றும் அவருடைய மகன்களின் சொத்தனுபவத்தை கோயம்புத்தூர் கோட்டாட்சியர் உறுதிசெய்தபொழுது, 26.9.1957 அன்று கோயம்புத்தூர் கோட்டாட்சியரின் உத்தரவில் குறுக்கிட உயர் நீதிமன்றம் மறுத்தபொழுது, இவ்வனைத்தும் சொத்துகள் அமைந்துள்ள இம்மாண்புமிகு நீதிமன்றத்தின் சட்டவரம்பிற்குள் நிகழ்ந்து வருபவையாகும்.

மேற்படி வழக்கில் கூறப்படும் பரிகாரம் பின்வருமாறு:

> "1. அட்டவணை I மற்றும் Iஅ-இன் சொத்துகள் வழக்காளருக்-குரியவை எனவும், அவற்றின் அனுபவத்தையும், சட்டப்பிரிவு 145-இன் கீழான வழக்கில் நியமிக்கப்பட்ட நீதிமன்ற கணக்கர் மூலம் வசூலிக்கப்பட்ட ரூ.7,000/- தொகையையும் மற்றும் நீதிமன்றம் நியமிக்கும்வகையில் சொத்தின் எதிர்கால வருவாய்

ஆதாயத்தைப் பெறவும் அருகதையுடையவரென விளம்புகை செய்யவேண்டும்.

2. வழக்குரையின் பத்தி 14-இல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.6,000/-ஐ வசூலிக்கவேண்டும்:

மாற்றுப் பரிகாரமாக, I. கூட்டுக் குடும்பம் கொண்டுள்ள சொத்துகள் மற்றும் 10.5.1955 முதல் அவற்றின் வருவாய் ஆகியவை கணக்கிடப்படவேண்டும்:

2. சொத்துகளின் எல்லைகளை வரையறுத்து பிரிக்க நீதிமன்ற ஆணையர் நியமிக்கப்படவேண்டும்;

3. வழக்குரை சொத்துகளை இரு சம பங்குகளாகப் பிரித்து, அவற்றுள் ஒரு சம பங்கின் அனுபவத்தை வழக்காளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

XXX XXX XXX"

நீதித்துறை நடுவர் முன்பு சட்டப்பிரிவு 145-இன் கீழான வழக்கானது நடத்தப்பட்டது போன்றே, மறுப்பாளர்கள் 1 முதல் 4 வரையிலானவர்களால் மேற்படி வழக்கு நடத்தப்பட்டது. எனினும், வழக்கானது பின்வரும் நிபந்தனைகளின்படி சமரசம் செய்யப்பட்டது.

வழக்குரையின் மீதான மேற்குறிப்பின்படி, தரப்பினர்கள் சமரசம் செய்துகொள்ள ஒப்புக்கொண்டுள்ளனர் என நீதிமன்றத்திற்கு தோன்றியும் மற்றும்

சமரச ஆவணத்தைப் பார்த்தும், கீழ்க்காணும் தீர்ப்பாணையானது வழங்கப்பட்டு, அதில் சமரச நிபந்தனைகள் பின்வருமாறு குறிப்பிடப்பட்டன:

"1. இதன் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான சொத்துகளில் வழக்காளர் முழு உரிமைக்கும் அருகதையுடையவராவார் மற்றும் 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள், அச்சொத்துகளின் அனுபவத்தை வழக்காளரிடம் ஒப்படைக்கவேண்டும்;

2. 8, 9 மற்றும் 13 வரிசையிடப்பட்ட பணத்தை, 1 முதல் 4 வரையிலான வழக்காளர்களுக்கு செலுத்தவேண்டும்; 10-ஆம் வரிசையிடப்பட்ட தீர்ப்பாணை கடனையும் அவர்கள் தீர்க்கவேண்டும்; 11 மற்றும் 12 வரிசையிடப்பட்ட சொத்துகள் இன்று முதல் நாற்பத்தி ஐந்து நாட்களுக்குள்ளாக பெயர் மாற்றம் செய்யப்பட வழக்காளருக்கு உதவவேண்டும்; அதிலிருந்து, மேற்படி பரிகாரங்களுக்காக தீர்ப்பாணையை நிறைவேற்ற வழக்காளர் சுதந்திரமுடையவராவார்.

3. வழக்காளர் ஏற்கெனவே அனுபவத்திலுள்ள சொத்துகளைத் தவிர, அவருடைய கணவர் ஆர்.வி. லட்சுமண நாயுடுவின் சொத்துகளிலோ அல்லது 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்களின் சொத்துகளிலோ, கூட்டாகவோ அல்லது

தனியாகவோ உரிமை கோர முடியாது;

4. வழக்காளரின் கணவர் ஆர்.வி. ரங்கசாமி நாயுடு மற்றும் அவருடைய சகோதரர் ஆர்.வி. லட்சுமண நாயுடு ஆகியோரின் சொத்துகள் தொடர்பாக வரி நிலுவையோ அல்லது பண்ணை வரி நிலுவையோ இருக்குமெனில், அவற்றை 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள் செலுத்தவேண்டும்;

5. 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்கள் அதனை அவர்களுடைய சொந்த செலவிலேயே நிறைவேற்றவேண்டும்; குடும்பத்திற்குரிய விகிதாச்சாரம் தொடர்பான ஏதேனும் தகராறை தம்முடைய செலவிலேயே எதிர்கொள்ளவேண்டும்; வழக்காளருக்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் உட்பட அனைத்து சொத்துகளின் வழக்கிற்கான பொறுப்பை மறுப்பாளர்கள் 1 முதல் 4 வரையிலானவர்களே ஏற்கவேண்டும் மற்றும் அதற்காக வழக்காளர் எதையும் செலுத்தத்தேவையில்லை; எனவே, வழக்காளரால் எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்துகளில் 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்களுக்கு எந்தவித உரிமையுமில்லை. அதுபோன்றே, ஆர்.வி. லட்சுமண நாயுடுவின் சொத்துகளிலோ அல்லது மற்றவர்களின் சொத்துகளிலோ வழக்காளருக்கும் எந்தவித உரிமையுமில்லை;

6. நிலத்திற்கான உயர்த்தப்பட்ட இழப்பீட்டிற்காக முன்னிலையாவதில்,

வழக்காளர் 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்களுடன் இணைந்து செயல்படவேண்டும் ... . அதில் ரூ.6775/- இந்நீதிமன்றத்திலுள்ளது. இந்நீதிமன்றத்தின் கோப்பிலுள்ள சி.சி. 17/58 வழக்கில் உயர்த்தப்பட்ட இழப்பீட்டுத் தொகைகளுக்கு, 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள் மட்டுமே உரிமையுடையவர்களாவர் மற்றும் அவ்வழக்கின் செலவினங்களை அவர்களே ஏற்கவேண்டும்.

7. இத்தீர்ப்பாணை ஆயத்தம் செய்யப்பட்ட முதல் ஒரு வார காலத்திற்குள்ளாக அதனை பகிர்ந்துகொள்ள தரப்பினர்கள் சுதந்திரமுடையவர்களாவர்;

8. ஒவ்வொரு தரப்பினரும் அவரவர் செலவை தாமே ஏற்கவேண்டும்;

விவரிக்கத் தேவைப்படாத பிற விவரங்களும் உள்ளன.

<u>வழக்கின் மூன்றாம் கட்டம்</u>

7. இது நம்மை தோற்றத்தில் முடிவுறா வழக்கின் மூன்றாம் கட்டத்திற்கு கொண்டுவருகிறது. இங்கு அ.வ. எண் 36/1963-ஐ தாக்கல் செய்வதன்மூலம் திரை விளக்கப்படுகிறது. மேற்படி வழக்கின் வழக்காளர்கள் ஆர். அழகிரிசுவாமி நாயுடு மற்றும் வி. கல்யாணசுவாமி ஆவர். ஆர். அழகிரிசுவாமி என்பவர் (ரங்கசுவாமி நாயுடு மற்றும் லட்சுமண நாயுடு ஆகியோரின் சகோதரியும் மற்றும் ரங்கசுவாமி நாயுடுவின் மனைவியினின்று (கணவரை இழந்தவர்) வேறுபட்டவருமான கிருஷ்ணம்மாள் என்ற ஒருவரின் மகனாவார். வி. கல்யாணசுவாமி என்பவர் ரங்கசுவாமி நாயுடு மற்றும் லட்சுமணநாயுடு ஆகியோரின் சகோதரி தாயம்மாளின் மகனான மைத்துனர் ஆவார்.

அவ்விரு வழக்காளர்களும் இங்குள்ள மேல்முறையீட்டாளர்களுள் உள்ளனர். மறுப்பாளர்கள் பின்வருமாறு:

மேற்படி வழக்கின் ஒன்றாம் மறுப்பாளர் யாருமல்ல, அவர் ரங்கசுவாமி நாயுடுவின் மனைவி (கணவனை இழந்தவர்) ஆர். கிருஷ்ணம்மாள் என்பவர்தான். 2-ஆம் மறுப்பாளரான எம்.வி. இராமசந்திர நாயுடு என்பவர், தகராறுக்குரிய உயிலை நிறைவேற்றுபவராவார். மூன்றாம் மறுப்பாளரான ஆர். சௌந்தர்ராஜன், த/பெ. கே.பி. ரங்கப்பா நாயுடு என்பவர் ஆர்.வி. ரங்கசாமி நாயுடு மற்றும் லட்சுமண நாயுடு ஆகியோரின் இன்னொரு மைத்துனராவார். நான்காம் மறுப்பாளரான எ. அழகிரிசுவாமி என்பவர் ஆர்.வி. ரங்கசுவாமி நாயுடு மற்றும் லட்சுமண நாயுடு ஆகியோரின் இன்னொரு சகோதரியின் மகனான மற்றொரு மைத்துனராவார். மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களும், எங்கள் முன்பாக மேல்முறையீட்டாளர்களாக உள்ளனர். 5 மற்றும் 6-ஆம் மறுப்பாளர்களுக்கெதிரான குற்றச்சாட்டு யாதெனில், அவர்களுக்கு ஒன்றாம் மறுப்பாளரான ஆர். கிருஷ்ணம்மாள் 1 முதல் 3 வரையிலான சொத்துகள் மற்றும் 7-ஆம் வரிசை சொத்தை விற்க எண்ணியுள்ளார் என்பதாகும். அ.வ. எண் 36/1963-இல் வழக்காளர்களால் தொடரப்பட்ட வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:

அவர்கள், அவர்களுடைய மாமா ரங்கசுவாமி நாயுடு அவர்களால் விட்டுச் செல்லப்பட்ட 10.05.1955-ஆம் தேதியிடப்பட்ட உயிலை குறிப்பிட்டனர். அதில் ரங்கசுவாமி நாயுடுவின் மனைவியான ஒன்றாம் மறுப்பாளர் கிருஷ்ணம்மாளுக்கு ஆயுட்கால அனுபவமும், வழக்காளர்களுக்கும், மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களுக்கும் முழு உரிமையளிக்கப்பட்டுள்ளது. மேலும், அ.வ. எண் 71/1958-இல் சுட்டப்பட்டது.

அவ்வழக்கானது சமரசம் செய்யப்பட்டுவிட்டது. அத்தகைய சமரசத்தில் ஈடுபடவேண்டிய தேவையேதும் இல்லையென்றும், அது தகுநிலைக்கும் பயனளிப்பதாக இல்லையென்றும் வாதிடப்பட்டது. ஆர். கிருஷ்ணம்மாள் ஆயுட்கால அனுபவம் மட்டுமே பெற்றிருந்தார். அவர் விற்பனை செய்ய தகுதி வாய்ந்தவருமல்ல மற்றும் வழக்காளர்கள் மற்றும் 3 மற்றும் 4 மறுப்பாளர்கள் ஆகியோரின் நலன்களையும் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. ஆர். கிருஷ்ணம்மாளுக்கு முழு உரிமையளிக்கும் தீர்ப்பாணையைப் பொறுத்தவரையில், அது செல்லத்தக்கதல்ல மற்றும் வழக்காளர்களையும் 3 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களையும் கட்டுப்படுத்தாது. சொத்துகளில் பிற்கால உரிமை பெற்ற வழக்காளர்கள் மற்றும் 3 மற்றும் 4-ஆமன் மறுப்பாளர்கள் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. ஆர். கிருஷ்ணம்மாள் சமரசத்தின்மூலம் தன்னுடைய உரிமையை மேம்படுத்திக்கொள்ள முடியாதென மேலும் கூறப்பட்டது. அவர் ஆயுட்கால உரிமை மட்டுமே பெற்றிருந்தார். சொத்தில் ஆர். கிருஷ்ணம்மாளின் (1-ஆம் மறுப்பாளர்) உரிமையானது ஆயுட்கால அனுபவ உரிமை என்பதை அவர் ஒப்புக்கொள்ளவும் மற்றும் சொத்தை விற்பனை செய்வதைத் தவிர்க்கவும் கோரி, அவருக்கு வழக்காளர்கள் 10.05.1959-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பு கொடுத்தனர். வழக்குரையின் பத்தி-11 பார்க்க. அது பின்வருமாறு:

> "11. கீழ்க்காணும் தீர்ப்பாணையில் 1-ஆம் மறுப்பாளரால் தன் கணவருடைய சகோதரரின் மகன்களுக்கு வழங்கப்பட்ட சொத்துகளைத் தவிர வேறு சொத்துகளையும் ஆர்.வி. ரங்கசுவாமி நாயுடுவின் உயில் கொண்டுள்ளது. வழக்காளர்கள் அச்சொத்துகள் தொடர்பான உரிமைகளை வேறு தனிப்பட்ட

வழக்கின்மூலம் தக்கவைத்துக்கொள்கின்றனர்"

மேற்படி வழக்கில் வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டன. வழக்கானது 17.10.1970-ஆம் தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் திருத்தப்பட்டது. வ.வி. எண் 925/1970-இன் உத்தரவின்மூலம் 7 முதல் 10 வரையிலான மறுப்பாளர்கள் வழக்கில் சேர்க்கப்பட்டனர். 7 முதல் 10 வரையிலான மறுப்பாளர்கள் லட்சுமண நாயுடுவின் நான்கு மகன்களாவர்; அவர்கள், பக்தவச்சலம், வெங்கட்டபதி, ஜெகன்நாதன் மற்றும் இராமசாமி ஆகியோர். அவ்வழக்கின் வேண்டுரை பின்வருமாறு:

அ) இதன்கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளில் 1-ஆம் மறுப்பாளருக்கு ஆயுட்கால அனுபவ உரிமை மட்டுமே உள்ளதென்றும், அதனை விற்க அதிகாரமில்லை என்றும், அச்சொத்துகளில் வழக்காளர்கள் மற்றும் 3 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களுக்கு மரணமடைந்த ஆர்.வி. ரங்கசுவாமி நாயுடுவின் உயிலின்படி பிற்கால உரிமையுள்ளதென விளம்புகை செய்யவேண்டும்.

ஆ) இவ்வழக்கின் செலவினங்களை வழக்காளர்களுக்கு 1-ஆம் மறுப்பாளர் செலுத்துமாறு பணிக்கவேண்டும்.

மற்றும்

இ) இவ்வழக்கின் சூழ்நிலைகளுக்கேற்ப உகந்ததென இந்நீதிமன்றம் கருதும் பரிகாரம் வழங்கவேண்டும்.

மேற்படி வழக்கும், தரப்பினர்கள் சமரசத்தை தேர்ந்தெடுப்பதற்கு மாறாக, நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்புரையின்மூலம் முற்றுப்பெறவில்லை. 18.2.1974-ஆம் தேதியிடப்பட்ட சமரச ஆவணமானது, அத்தரப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையை

நினைவுகூரியது. அது பின்வருமாறு தெரிவிக்கிறது:

"வழக்காளர்களும், 1 மற்றும் 3-ஆம் மறுப்பாளர்களும் வழக்குரையின்மீது கூட்டாக மேற்குறிப்பிட, அதனை கண்டதற்கு அடையாளமாக, 5 மற்றும் 7 முதல் 10 வரையிலான மறுப்பாளர்களுக்காக முன்னிலையாகும் வழக்குரைஞர், அதில் கையெழுத்திட்டார். கூட்டு மேற்குறிப்பின் நிபந்தனைகளுக்கிணங்க, இந்நீதிமன்றமானது உத்தரவு மற்றும் தீர்ப்பாணையை வழங்கியது:

1. இதன்கீழே வழக்குரை அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள 5 மற்றும் 6-ஆம் சொத்துகளில், 1-ஆம் மறுப்பாளர் திருமதி கிருஷ்ணம்மாளுக்கு ஆயுட்கால அனுபவ உரிமை மட்டுமே உள்ளது மற்றும் 1-ஆம் மறுப்பாளர் மேற்படி சொத்துகளை தன் ஆயுட்காலம்வரை அனுபவித்துக்கொள்ளலாமே தவிர, அதை விற்கும் அதிகாரம் உடையவரல்ல; அவருடைய ஆயுட்காலத்திற்கு பின்னர் அச்சொத்துகள், 1 மற்றும் 2-ஆம் வழக்காளர்களுக்கும், 2 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களுக்கும் சேரவேண்டும்.

2. இவ்வழக்கில், ஒவ்வொரு தரப்பினரும் அவரவர் செலவை அவரே ஏற்கவேண்டும்.

18.2.1974 அன்று வழக்காளர்கள் மற்றும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்ட நிபந்தனைகள்.

1. வழக்குரை அட்டவணையில் 5 மற்றும் 6-ஆம் சொத்துகள் தொடர்பாக வழக்காளர்கள் வேண்டியபடி தீர்ப்பாணை

வழங்கப்படலாம்; அவை, வழக்குரையிலுள்ள எல்லைகளுக்குட்பட்டு, ச.எண் 467 0.98 ஏக்கர், இதில் 0.82 ஏககர். வழக்குரை அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள எல்லைகளுக்குட்பட்டு, ச. எண் 466, 6.02 ஏக்கர், இதில் 3.60 ஏக்கர், இது களபட்டி கிராமத்திற்குட்பட்டதாகும். மேற்படி சொத்துகளை 1-ஆம் மறுப்பாளர் தன் ஆயுட்காலத்திற்கும் அனுபவித்துக்கொள்ளவேண்டியது, அவற்றை விற்கும் அதிகாரமில்லை, அவருடைய ஆயுட்காலத்திற்குப் பின்னர், அவை 1 மற்றும் 2-ஆம் வழக்காளர்களையும், 3 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களையும் சென்றடையவேண்டும்.

மேற்படி சொத்துகளில் எந்தவொரு வில்லங்கமோ அல்லது சுவாதீனமோ செய்யவில்லையென, 1 மற்றும் 2-ஆம் மறுப்பாளர்கள் உறுதிகூறுகின்றனர்.

2. 5-ஆம் மறுப்பாளருக்கு விற்கப்பட்டுள்ள அட்டவணை சொத்துகள் 1 முதல் 3 வரையிலான சொத்துகள், அரசினால் கையகப்படுத்தப்பட்டுள்ள அட்டவணை 4-ஆம் சொத்து மற்றும் 6-ஆம் மறுப்பாளருக்கு விற்கப்பட்டுள்ள அட்டவணையின் 7-ஆம் சொத்து ஆகியவை தொடர்பாக கோரப்பட்ட பரிகாரங்களை வழக்காளர்கள் கைவிடுகின்றனர். கிரையம் பெற்றவர்கள் இச்சொத்துகள்மீது முழு உரிமையுடையவர்கள் என வழக்காளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

3. வழக்கின் செலவினங்களை, ஒவ்வொரு தரப்பினரும் தானே ஏற்கவேண்டும்.

4. மேற்படி நிபந்தனைகளின் அடிப்படையில் 3 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்களுக்கு எதிராகவும் தீர்ப்பாணை வழங்கப்படவேண்டுமென, வழக்காளர்கள் மற்றும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்கள் வேண்டுகின்றனர். இவ்வழக்கின் மற்ற மறுப்பாளர்களுக்கு எதிராக பரிகாரம் ஏதும் கோரப்படவில்லை."

இரண்டு மரணங்கள்

8. லட்சுமண நாயுடுவின் மகன் ரங்கசாமி நாயுடு 1976-ஆம் ஆண்டில் மரணமடைந்தார். ஓராண்டிற்குப் பின்னர், 1977-ஆம் ஆண்டில் ரங்கசாமி நாயுடுவின் மனைவியும், விதவையுமான ஆர். கிருஷ்ணம்மாள் மரணமடைந்தார்.

4-ஆம் கட்டம்

9. 1977-ஆம் ஆண்டில் ஆர். கிருஷ்ணம்மாளின் மரணத்திற்குப் பின்னர் ஆர். அழகிரிசுவாமி நாயுடுவால் அ.வ. எண் 732/1981 தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கின் மறுப்பாளர்கள், வி. கல்யாணசுவாமி, சௌந்தரராஜன் மற்றும் எ. அழகிரிசுவாமி ஆகியோர். வழக்காளர்கள் மற்றும் மறுப்பாளர்கள் ஆகியோர் உயில்வழி உரிமையாளர்களாவர், அவர்களே இங்குள்ள மேல்முறையீட்டாளர்களுள் உள்ளனர். வழக்குரை (எ16)-இல் ஏற்படுத்தப்பட்ட வழக்கானது, ஏற்கெனவே கண்ட அ.வ. எண் 36/1963 வழக்கின் சொத்துகள் 5 மற்றும் 6 தொடர்பானவையாகும். அ.வ. எண் 36/1963-இன் சமரசத் தீர்ப்பாணையானது, ஆர். கிருஷ்ணம்மாளை சொத்துகளின் ஆயுட்கால அனுபவத்திற்கு மட்டுமே அருகதையுடையவராக்கி, அவற்றின் உரிமையை

வழக்காளர் மற்றும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களுக்களித்தது. மேலும், வழக்காளரின் வழக்கு யாதெனில், 30.04.1977 அன்றைய ஆர். கிருஷ்ணம்மாளின் மரணத்தின் அடிப்படையில், வழக்காளர்களும் மற்றும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களும் சொத்தின் கூட்டு அனுபவத்திலுள்ளனர். 1-ஆம் மறுப்பாளர், 4 மற்றும் 5-ஆம் மறுப்பாளர்களுக்கு 1.2 ஏக்கர் நிலத்தை விற்க எண்ணியிருந்ததாக முறையிடப்பட்டது. வழக்காளர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமையானது, ஆர். கிருஷ்ணம்மாளின் ஆயுட்கால அனுபவ உரிமைக்கு உட்பட்டதென, அ.வ. எண் 36/1963-இல் வழங்கப்பட்ட 18.02.1974 தேதியிடப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையிலேயே வழக்குமூலம் எழுகிறது. வேண்டுரையானது, பாகப்பிரிவினைக்குரிய தீர்ப்பாணைக்கானதாகும்.

10. 1/4 பாகம் கோரி 3-ஆம் மறுப்பாளரான எ. அழகிரிசுவாமியால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்து வடிவ பதிலுரையானது வா.சா.ஆ.17 ஆகும். சொத்தானது வழக்காளர் மற்றும் மறுப்பாளர்களின் கூட்டு அனுபவத்திலிருந்ததாகவும் கூறப்பட்டது.

11. அ.வ. எண் 732/1981-இல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையானது வா.சா.ஆ.18 ஆகும். அது கோயமுத்தூர் கூடுதல் சார்பு நீதிபதியால் வழங்கப்பட்ட 21.06.1984 தேதியிடப்பட்ட பாகப்பிரிவினை வழங்கிய தீர்ப்பாகும்.

5-ஆம் கட்டம்/தற்பொழுதைய வழக்கு

12. வெளிப்படையாக, எ. அழகிரிசுவாமியால் (ரங்கசுவாமி நாயுடுவின் உயிலின் உரிமையாளர்களான நால்வரில் ஒருவரானவர்) சொத்து கிரையம் செய்யப்பட்டதே, தற்பொழுதைய வழக்கிற்கு உந்துவிசையாகும். எங்கள் முன்பான மேல்முறையீடுகளை உருவாக்கிய (இரு வழக்குகளுள் முதல் வழக்கானது) எட்டு

வழக்காளர்களால் தாக்கல் செய்யப்பட்டது. அது அ.வ. எண் 2087/82 ஆகும். (எனினும், ஆது அ.வ. எண் 649/1985-ஆக மறு எண்ணிடப்பட்டது) முதல் மூன்று வழக்காளர்களும் லட்சுமண நாயுடுவின் மகன்களாவர், 4-ஆம் வழக்காளர், லட்சுமண நாயுடுவின் மகனான ரங்கசுவாமி நாயுடுவின் மனைவி/விதவையாவார்; அந்த ரங்கசுவாமி நாயுடு, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று 1976-ஆம் ஆண்டில் மரணமடைந்துவிட்டார். 5 முதல் 8 வரையிலான வழக்காளர்கள், ரங்கசுவாமி நாயுடுவின் மகள்களாவர்.

13. மறுப்பாளர்களைப் பொறுத்தவரையில், தற்பொழுதைய வழக்கிற்கு உடனடி காரணமான செயல்பாட்டிற்குரிய எ. அழகிரிசுவாமியே ஒன்றாம் மறுப்பாளராவார். 2, 3 மற்றும் 4-ஆம் மறுப்பாளர்கள் ரங்கசுவாமி நாயுடுவின் பிற மைத்துனர்களாவர்; அவர்கள், உயிலின் அடிப்படையில் உரிமை கோருகின்றனர். இவ்வாறாக, 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள், ரங்கசுவாமி நாயுடுவின் மைத்துனர்கள், அவர்கள் உயில்வழி உரிமையாளர்கள் மற்றும் இங்கு எங்கள் முன்பாக உள்ள மேல்முறையீட்டாளர்களும் கூட. வழக்குச் சொத்துகளில் சில, மறுப்பாளர்கள் 5 முதல் 26 வரையிலானவர்களுக்கு எ. அழகிரிசுவாமியால் விற்கப்பட்டன என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில், அவர்கள் இவ்வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். 27 முதல் 33 வரையிலான மறுப்பாளர்கள் 10-ஆம் மறுப்பாளரின் வாரிசுதாரர்கள், அவர்கள், 29.4.1987 தேதியிடப்பட்ட உத்தரவின்மூலம் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். வழக்காளர்கள், முந்தைய வழக்கில் உள்ளதுபோன்றே அவர்களுடைய தற்பொழுதைய வழக்கைப் பதிந்துள்ளனர். அவை கீழே குறிப்பிடப்படுகின்றன.

14. சொத்துகள் மூதாதையர் வழியாக ஆர். லட்சுமண நாயுடு மற்றும்

அவருடைய சகோதரர் ரங்கசுவாமி நாயுடு ஆகியோருக்கு உரியவையாகும். லட்சுமண நாயுடு மற்றும் ரங்கசுவாமி நாயுடு ஆகியோர் இந்து கூட்டுக் குடும்பத்தை ஏற்படுத்தினர் மற்றும் வழக்குரை சொத்துகள் இந்து கூட்டு குடும்பச் சொத்துகளாகும். ரங்கசுவாமி நாயுடு எந்தவித வாரிசுமின்றி மற்றும் பாகப்பிரிவினையின்றி, 1955-ஆம் ஆண்டில் மரணமடைந்தார். எனவே, ரங்கசுவாமி நாயுடுவின் மரணத்தையடுத்து, அச்சொத்துகள் கூட்டுக் குடும்பச் சொத்துகளாகின்றன, வாழும் கூட்டுக் குடும்ப உறுப்பினர் லட்சுமண நாயுடு, அச்சொத்துகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டார். ரங்கசுவாமி நாயுடுவின் மனைவியும்/விதவையுமான கிருஷ்ணம்மாள், அன்றைய சட்டப்படி, கூட்டுக் குடும்பச் சொத்தில் கட்டுப்படுத்தப்பட்ட உரிமை நலன் மட்டுமே கொண்டிருந்தார். இந்து வாரிசுரிமைச் சட்டத்திற்கு முன்பான ரங்கசுவாமி நாயுடுவின் மரணமானது, உயிர்வாழும் இந்து கூட்டுக்குடும்ப உறுப்பினர் அனைத்து சொத்துகளையும் எடுத்துக்கொள்ளும்படி நேர்ந்தது. அ.வ. எண் 71/1958 சுட்டப்பட்டது. ரங்கசுவாமி நாயுடுவின் மரணத்திற்குப்பின்னரே, வழக்காளர்களுக்கு உயில் குறித்து தெரியவந்ததென கூறப்படுகிறது. உயிலானது பொய்யானதென்றும், அற்பமானதென்றும் மற்றும் நிலைக்கத்தக்கதல்ல என்றும் விவரிக்கப்படுகிறது. கூறப்படும் உயிலானது 1 மதல் 4 வரையிலான மறுப்பாளர்களின் முறையற்ற ஆதிக்கத்தின் கீழ் ரங்கசுவாமி நாயுடுவால் நிறைவேற்றப்பட்டதென வழக்குரைக்கப்படுகிறது. புற்றுநோயில் துன்புற்றுக்கொண்டிருந்த ரங்கசுவாமி நாயுடுவின் உடல்நலமின்மையின் கடுமையை முறையற்ற சாதகமாகப் பயன்படுத்தி, தவறான விவரங்களை உள்ளடக்கிய உயிலை நிறைவேற்றுமாறு, ரங்கசுவாமி நாயுடுவை மறுப்பாளர்கள் அச்சுறுத்தியதாக தோன்றுகிறது. உயிலானது உண்மையான ஆவணமல்ல. இந்து வாரிசுரிமைச்

சட்டத்தின் அன்றைய நிலைப்பாட்டின்படி, அது நிலைக்கத்தக்கதல்ல. இந்து கூட்டுக் குடும்பத்தின் பிரிக்கப்படாத சொத்தில், தன்னுடைய பங்கு குறித்து இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினரால் நிறைவேற்றப்படும் எந்தவொரு உயிலும் சட்டவிரோதமானது மற்றும் செல்லத்தகாததாகும். சட்டவிரோத உயிலை நிலைக்கச்செய்யும் காரணத்திற்காக, சகோதரர்களுக்கிடையே வாய்மொழி பாகப்பிரிவினை நிகழ்ந்ததாக, பொய்யான காரணங்கள் உயிலில் சேர்க்கப்பட்டன. அவ்விவரமானது பொய்யானதென்றும் மற்றும் அடிப்படையற்றதென்றும் கூறப்படுகிறது. ரங்கசுவாமி நாயுடுவின் மரணம் வரையில், சகோதரர்கள் இந்து கூட்டுக்குடும்பத்தை ஏற்படுத்தினர். அதில் பிரிவினையுமில்லை, சொத்தின் பாகப்பிரிவினையுமில்லை. அதன்பின்னர், நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ள வழக்கு தொடர்பான குறிப்பு உள்ளது. இன்னமும் கீழ்க்காணும் பிந்தைய குற்றச்சாட்டுகள் பத்தி 13-இல் மட்டுமே உள்ளன. அது பின்வருமாறு தெரிவிக்கிறது:

> "XIII. சொத்தை பெறுவதற்காக கூட்டு சதிச்செயல் இரங்கத்தக்கவகையில் தோல்வியுற்றதை நன்கறிந்த 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள் தொந்தரவும் சிக்கலும் ஏற்படுத்தத் துவங்கினர். அண்மையில் வழக்கு சொத்துகளின் குறிப்பிட்ட சிலவற்றை தங்களுடைய சாதகமானவர்களுக்கு மாற்ற, உள்நோக்கங்களுடன் எண்ணியுள்ளனர். தம்முடைய முந்தைய நடத்தையின் அடிப்படையிலும், செல்லாத மற்றும் செயல்படாத உயிலின் அடிப்படையிலும் வழக்குச் சொத்துகளில் உரிமையேதும் கோரமுடியாது என்பதை முற்றிலும் நன்கு அறிந்த 1 முதல் 4

வரையிலான மறுப்பாளர்கள், தமக்கு சாதகமானவர்களுக்காதரவான மற்றும் போலியான ஆவணங்களை வைத்துள்ளனர். 1-ஆம் மறுப்பாளரான எ. அழகிரிசாமியால், 5 முதல் 26 வரையிலான மறுப்பாளர்களுக்கு வழக்குச் சொத்துகளில் சில விற்கப்பட்டன என்பதை வழக்காளர்கள் புரிந்துகொள்கின்றனர். வழக்காளர்கள் சமர்ப்பிப்பதாவது.., அவை செல்லத்தகாதவை மற்றும் செயல்படாதவையாகும். மேற்படி ஆவணங்களின் இவ்வழக்காளர்கள் தரப்பினர்களல்ல மற்றும் அப்பரிவர்த்தனைகளைப் புறக்கணிக்க அருகதையுடையவர்களாவர்."

1960-ஆம் ஆண்டில் வழக்காளர்கள் தங்களுடைய சொத்துகளை தங்களுடைய சொந்த உரிமைகளின் அடிப்படையில் பிரித்துக்கொண்டனர் என மேலும் கூறப்படுகிறது. அவர்கள், சொத்துகளுக்கான வரி மற்றும் பிறவற்றை செலுத்திவருகின்றனர். சொத்துகள் அவர்களுடையதென்ற அடிப்படையில், அச்சொத்துகளுக்கான விவசாய வரியை செலுத்திவருகின்றனர்.

கிருஷ்ணம்மாளின் கணவரின் மரணத்தையடுத்து, அவருடைய பிரிக்கப்படாத சொத்துகளில் கிருஷ்ணம்மாள் ஆயுட்கால உரிமை கொண்டிருந்தார் என அனுமானித்தாலுங்கூட, அவருடைய மரணத்தையடுத்து பின்னர் அது முழு உரிமையாகிவிட்டது. அவருடைய கணவரின் உரிமையானது இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் என்ற முறையிலும் மற்றும் வாரிசுரிமை அடிப்படையிலும், 1 முதல் 3 வரையிலான வழக்காளர்களையும் மற்றும் அவருடைய சகோதரர் மரணமடைந்த ரங்கசுவாமியையும் வந்தடைந்தது. வழக்குரையிலுள்ள கூற்றுகளுக்கு குந்தகமின்றி, ரங்கசுவாமியால் நிறைவேற்றப்பட்ட உயிலானது நிலைக்கத்தக்கதெனினும், உயிலில்

குறிப்பிடப்பட்ட சொத்துகள் தொடர்பான, அவருடைய மனைவி கிருஷ்ணம்மாளுக்கு அளிக்கப்பட்ட ஆயுட்கால உரிமையானது, 1956-ஆம் ஆண்டைய 30-ஆம் சட்டத்தின்மூலம், அவர், வழக்குச் சொத்துகள் உட்பட உயிலின் சொத்துகள் அனைத்திற்கும் முழு உரிமையாளராகிவிட்டாரென வாதிடப்படுகிறது.

15. பாகப்பிரிவினை கோருதல் தொடர்பாக கோயமுத்தூர் சார்பு-நீதிமன்றத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட அ.வ. எண் 732/1981-ஐ குறிப்பிட்டு, கோயமுத்தூர் சார்பு-நீதிமன்றத்தின் முன்பான அ.வ. எண் 71/1958-இன் சமரச தீர்ப்பாணையின்மூலம், ஆர். கிருஷ்ணம்மாள் வழக்குச் சொத்துகளை வழக்காளர்களுக்கு விட்டுக்கொடுத்துள்ளாரென்றும், அவை தொடர்பாக 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்கள் எதையும் கோரமுடியாதென்றும் வாதிடப்படுகிறது. அவை, கோயமுத்தூர் சார்பு-நீதிமன்றத்தின் முன்பான அ.வ. எண் 36/1963-இன் நடவடிக்கையிலும் மற்றும் அ.வ. எண் 732/1981-ம் 1 முதல் 4 வரையிலான மறுப்பாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டன.

16. வழக்காளர்கள் உரிமையின் விளம்புகைகோரி உறுத்துக்கட்டளை பிறப்பிக்குமாறு வேண்டினர். அது, அவர்கள் சொத்தின் அனுபவத்தில் இருந்தனர் என்ற அடிப்படையிலானது மற்றும் ஒன்றாம் மறுப்பாளரான எ. அழகிரிசுவாமி எந்தவித அதிகாரமுமின்றி பிற மறுப்பாளர்களுக்கு கிரையப்பத்திரம் நிறைவேற்றி, அவர்கள் வழக்காளர்களின் அனுபவத்தை இடையூறு செய்ய முயற்சிக்கின்றனர் என்பதாகும்.

17. மேல்முறையீட்டாளர்கள் தரப்பில், உயில்வழி உரிமையாளர்களுள் ஒருவரும் மற்றும் அ.வ. எண் 732/1981-இல் வழக்காளர்களுள் ஒருவருமான ஆர். அழகிரிசுவாமியால் அ.வ. எண் 89/1983 தாக்கல் செய்யப்பட்டது; அதில் 1 முதல் 3

வரையிலான மறுப்பாளர்கள் உயில்வழி உரிமையாளர்களுள் சிலராக காண்பிக்கப்பட்டது, 4 முதல் 11 வரையிலான மறுப்பாளர்கள் லட்சுமண நாயுடுவின் வகையறாவை பிரதிநிதித்துவம் செய்தனர் மற்றும் 13 முதல் 33 வரையிலான மறுப்பாளர்கள் வழக்குச் சொத்துகளை கிரையம் பெற்றவர்களாவர். மேற்படி வழக்கில் கோரப்பட்ட பரிகாரமானது, வழக்குரை அட்டவணைச் சொத்துகளில் பாகப் பிரிவினையாகும். வழக்காளர், அவர்களுடைய உரிமை விளம்புகையும் கூடுதலாக இழப்பீடு மற்றும் வருவாய் ஆதாயமும் கோரினர். சுருங்கக்கூறின், ஏற்படுத்தப்பட்ட வழக்கு பின்வருமாறு:

> வழக்காளர், தன்னுடைய மாமனால் நிறைவேற்றப்பட்ட உயிலை சுற்றினார். அவர், ஆர். கிருஷ்ணம்மாள் 30.04.1977 அன்று மரணமடைந்ததை வழக்கின் அடிப்படையாக எடுத்துக்கொண்டார். ஆர். கிருஷ்ணம்மாளின் மரணத்தையடுத்து, வழக்காளரும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களும் சம உரிமை பெற்றுள்ளனர் என கூறப்பட்டது. சொத்துகள், லட்சுமண நாயுடுவின் மகன்களான 4 முதல் 6 வரையிலான மறுப்பாளர்களின் அனுபவத்தில் உள்ளன. அ.வ. எண் 649/1985 குறிப்பிடப்பட்டு, அது செல்லத்தக்கதல்ல என கருத்துரைக்கப்படுகிறது. 1932-ஆம் ஆண்டில் லட்சுமண நாயுடுவுக்கும், ரங்கசுவாமி நாயுடுவுக்குமிடையே வாய்மொழி பாகப்பிரிவினை நிகழ்ந்ததாக குறிப்பிடப்படுகிறது. மேலும், கு.வி.மு.ச., பிரிவு 145-இன் நடவடிக்கையும் குறிப்பிடப்படுகிறது. பின்னர், அ.வ. எண் 71/1958 சுட்டப்படுகிறது. மேற்படி வழக்கின் தீர்ப்பாணையானது செல்லத்தக்கதல்ல என கூறப்பட்டது. உயிலின்படி ஆர்.

கிருஷ்ணம்மாள் ஆயுட்கால உரிமை மட்டுமே பெற்றிருந்தார். வழக்காளரும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களும் மேற்படி வழக்கின் தரப்பினர்களல்லர், அத்தீர்ப்பாணை அவர்களை கட்டுப்படுத்தாது. அதன்பின்னர், ஆர். கிருஷ்ணம்மாள், தன்னுடைய அனுபவத்தில் இருந்த சொத்தை விற்க முயன்றார். அதன்விளைவாக, கிரையத்தை ஆட்சேபித்து அ.வ. எண் 36/1963 தாக்கல் செய்யப்பட்டது. சமரசம் குறித்து குறிப்பிடப்படுகிறது. அவ்வழக்கில் இணைந்துகொண்ட 4 முதல் 11 வரையிலான மறுப்பாளர்கள், சமரசத்தினை ஆதரித்தனர், அதன் பொருள் அவர்கள் உயிலை ஏற்றுக்கொண்டனர் என்பதாகும். எதிர்மனுதாரர்களைப் பொறுத்தவரையில் பதிலுரைகள் தாக்கல் செய்யப்பட்டன, அதில், எதிர்மனுதாரர்களைப் பொறுத்தவரையில், அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வழக்குரையின் நிலைப்பாட்டையே ஒப்புக்கொண்டனர்.

இரு வழக்குகளும் சேர்த்து விசாரிக்கப்பட்டன. அ.வ. எண் 649/1985-இல், அ.1 முதல் அ.117 வழக்காளர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டன. அ.வ. எண் 89/1983-இல் வழக்காளர்களான இவ்வழக்கின் மறுப்பாளர்கள் தரப்பில், பி.1 முதல் பி.18 வரை தாக்கல் செய்யப்பட்டன. விசாரணை நீதிமன்றமானது அ.வ. எண் 649/1985-ஐ முதன்மையான வழக்காக பாவித்தது. சார் பதிவாளர் அலுவலகப் பதிவேட்டின் கைரேகையானது (X1), சி.1-ஆக குறியீடு செய்யப்பட்டது. கூடுதல் சார்பு நீதிபதியானவர், 12/08/1989

தேதியிடப்பட்ட தீர்ப்புரையின்மூலம், அ.வ. எண் 89/1983-ஐ செலவுத்தொகைகளுடன் தள்ளுபடி செய்து, அ.வ. எண் 649/1985-ஐ செலவுத்தொகைகளுடன் அனுமதித்து தீர்ப்பாணை வழங்கினார்.

18. விசாரணை நீதிமன்றமானது, வழக்கு பிரச்சினைகளை முறைப்படுத்திய பின்னர், "ரங்கசுவாமி நாயுடுவும் மற்றும் அவருடைய சகோதரரும் 1932-ஆம் ஆண்டில் சொத்துகளை பங்கு பிரித்துக்கொண்டனர்" என்பது ஏற்கப்படமுடியாதென முடிவு செய்தது. ரங்கசுவாமி நாயுடுவால் ஏற்படுத்தப்பட்ட 10.05.1955-ஆம் தேதியிடப்பட்ட உயிலின் நாளன்று 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டம் கொண்டுள்ள பிரிவு 30 நடைமுறையில் இல்லை என்பதாலும், உயிலின் நாள்வரையில் ரங்கசுவாமி நாயுடு இந்து கூட்டுக்குடும்ப உறுப்பினராக தொடர்ந்தார் என்பதாலும் மற்றும் அன்றுவரையில் இந்து கூட்டுக்குடும்ப பிரிக்கப்படாத சொத்துகள் எச்சட்டத்தினாலும் பாதிக்கப்படவில்லை என்பதாலும், மேற்படி உயிலானது செல்லாதென மேலும் அறியப்படுகிறது. உயிலானது, பல ஐயத்திற்குரிய சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டதாகவும் மேலும் அறியப்படுகிறது. மேற்படி உயிலானது அச்சுறுத்தல் மற்றும் முறையற்ற செல்வாக்கின்மூலம் பெறப்பட்டதென்னும் காரணங்களின் அடிப்படையில் லட்சுமண நாயுடுவின் வாரிசுகளால் தாக்கப்பட்டபொழுதிலும், மேற்படி வாதங்கள் ஏற்கப்படவில்லை. கிருஷ்ணம்மாளுக்கு ஆதரவான உயிலின் அடிப்படையில் முற்படவிழைந்தாலும், இந்து வாரிசுரிமைச் சட்டப்பிரிவு 14(1)-ஐ பொறுத்தவரையில், ஆயுட்கால உரிமையானது கிருஷ்ணம்மாளின் முழு உரிமையாக மலர்ந்து, அது, மேல்முறையீட்டாளர்கள் வழக்குச் சொத்துகளின் எஞ்சிய முழு உரிமையாளர்கள் என்னும் வழக்கை ஒதுக்கிவிட்டது என்பது ஏற்கப்படமுடியாதென விசாரணை நீதிமன்றம் அறிந்தது. மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது

தள்ளுபடி செய்யப்பட்டது; லட்சுமண நாயுடுவின் வாரிசுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கோ அனுமதிக்கப்பட்டது. மேல்முறையீடுகளில், ரங்கசுவாமி நாயுடுவிற்கும் மற்றும் லட்சுமண நாயுடுவிற்கும் இடையே வாய்மொழி பாகப்பிரிவினை ஏதும் நிகழவில்லை என்னும் விசாரணை நீதிமன்றத்தின் கருத்துடன் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் உடன்பட்டது. எனினும், 10.05.1955 அன்று செய்தித்தாளின் வெளியீட்டைப் பொறுத்தவரையில், பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தில் பிளவு ஏற்பட்டதாக நீதிமன்றம் அறிகிறது. அது, ரங்கசுவாமி நாயுடுவால் செல்லத்தக்க உயிலானது நிறைவேற்றப்பட்டதாக பொருள்படுகிறது. ஐயத்திற்குரிய சூழ்நிலைகள் இருப்பதான, விசாரணை நீதிமன்றத்தின் அறிந்தமையில் (முடிவில்) நற்கூறு இருப்பதாக மேல்முறையீட்டு நீதிமன்றம் அறியவில்லை. விசாரணை நீதிமன்றத்தின் அறிந்தமையை (முடிவை) பாராட்டி, மேல்முறையீட்டு நீதிமன்றமானது, உயிலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட நிபந்தனைக்குட்பட்ட சொத்துரிமையானது, இந்து வாரிசுரிமைச் சட்டப்பிரிவு 14(2)-இன்படி அமைந்ததேயன்றி, பிரிவு 14(1)-இன்படி அல்ல என மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிந்தது (முடிவு செய்தது). வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்துவது சான்றியல் சட்டப்பிரிவு 69 அன்றி பிரிவு 68 அல்ல என முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிந்தது. வேறு சொற்களில் கூறுவதானால், தற்பொழுதைய வழக்கில் உயிலின் சாட்சிகள் இருவரும் இறந்துவிட்டனர் என அறியப்பட்டது. பி.7, உயில் சாட்சிகளுடைய வாக்குமூலங்களின் நகலாகும். பிரிவு 69-இல் தேவைப்படுவது நிரூபிக்கப்பட்டுள்ளது. அதற்கப்பால், உயிலானது பதியப்பட்டதென்றும், அதன்படி நியமிக்கப்பட்ட நிறைவேற்றுநர், அவருடைய மனைவி கிருஷ்ணம்மாளின் மைத்துனர் என்றும், உயிலை உருவாக்கியதில் எந்த முறைகேடும் செய்யப்படவில்லை என்றும் முதல்

மேல்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டது. குறியீட்டாவணம் (சி.1)-ஆனது அசல் உயிலை முன்னிலைப்படுத்துமாறு நீதிமன்றத்தினால் பணிக்கப்பட்டதையடுத்து, நிறைவேற்றுநரின் மகனால் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணமாகும். உண்மையில், நீதித்துறை நடுவர் முன்பான சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையில் அசல் உயில் ஆவணம் முன்னிலைப்படுத்தப்பட்டதென்றும், அதன் இரண்டாம்தர சான்றில் விசாரணை நீதிமன்றமும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமும் திருப்தியுற்றன என்றும் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிந்தது. இச்சான்றுகளின் அடிப்படையில், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமானது, மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடுகளை அனுமதித்து அ.வ. எண் 36/1963-இல் சாதகத் தீர்ப்பாணை வழங்கி, கோரப்பட்டதுபோன்று, சொத்துகளை நான்கு பாகங்களாக பிரித்து பாகப்பிரிவினை வழங்கியது. எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது தள்ளுபடியானது.

19. உயர் நீதிமன்றமானது, இரண்டாம் மேல்முறையீடுகளில், சான்றியல் சட்டப்பிரிவு 68-இன் தேவைகள் நிறைவுசெய்யப்படாததால், உயிலானது ஏற்கப்படமுடியாதென எதிர்ப்புக்குள்ளான தன்னுடைய தீர்ப்புரையின்மூலம் முடிவு செய்தது. உயிலின் சாட்சிகளுள் ஒருவரின் வாக்குமூலமான பி.7 முறையான உயிலின் நிறைவேற்றலை நிறுவவில்லை, அதில், உயிலின் மற்றொரு சாட்சியான டாக்டர் ஐயர், அதில் சாட்சி கையெழுத்திட்டதை நிறுவவில்லை. 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமைச் சட்டப்பிரிவு 14(1) பொருந்துவதாகவும் உயர் நீதிமன்றம் முடிவு செய்தது. இது, ரங்கசாமி நாயுடுவின் மனைவி ஆர். கிருஷ்ணம்மாள் முன்பு பெற்றிருந்த வாழ்வாதார உரிமையின் அடிப்படையிலானதாகும். எனவே, பிரிவு 14(2) பொருந்தாது. கிருஷ்ணம்மாளின் வாழ்வாதார முன்னுரிமையின் சாரத்தின்

அடிப்படையிலேயே உயிலானது ஆய்வு செய்யப்பட்டது. இது, பிரிவு *14(1)*-இன் கீழான அவருடைய நிபந்தனைக்குட்பட்ட உரிமையை விரிவுபடுத்தியது. மேற்படி அறிந்தமைகளின் அடிப்படையிலும் மற்றும் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையின்கீழ் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது உயிர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையிலும், எங்கள் முன்பாக இம்மேல்முறையீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

வழக்கு பிரச்சினைகள் மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் அறிந்தமைகள் ஆகியவற்றின்மீது ஒரு ஆழமான பார்வை

20. விசாரணை நீதிமன்றமானது அ.வ. எண் *649/1985*-இல் வழக்கு பிரச்சினைகள் *14* மற்றும் கூடுதல் பிரச்சினை ஒன்றையும் இனம் கண்டது. அ.வ. எண் *89/1983*-இல் வழக்கு பிரச்சினைகள் *3* மற்றும் கூடுதல் பிரச்சினை ஒன்று ஆகியவற்றை இனம் கண்டது. மேல்முறையீட்டாளரால் கோரப்பட்டதுபோன்று, ரங்கசாமி நாயுடுவிற்கும் மற்றும் லட்சுமண நாயுடுவிற்குமிடையே வாய்மொழி பாகப்பிரிவினை நிகழ்ந்ததா*?* என்ற வழக்கு பிரச்சினை ஒன்றிற்கு, விசாரணை நீதிமன்றம் பின்வருமாறு விடையளிக்கிறது:

> வாய்மொழி பாகப்பிரிவினை நடந்தது தெளிவாக நிரூபிக்கப்படவில்லையென அறியப்படுகிறது. பி.*1* அறிவிப்பானது, *12.05.1955* தேதியிடப்பட்ட கடிதமாக பின்னர் குறிப்பிடப்படுகிறது. பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டதாக விசாரணை நீதிமன்றத்தினால் சுட்டப்பட்டதும் மற்றும் லட்சுமண நாயுடுவால் அனுப்பப்பட்டதாக கூறப்பட்டதுமான *11.05.1955* தேதியிடப்பட்ட அறிவிப்பானது முன்னிலைப்படுத்தப்பட- வில்லையென மேலும் அறியப்பட்டது. அதற்கிணையாக, பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கையில்

முன்னிலைப்படுத்தப்பட்டதாக பி.44-ஆக குறிப்பிடப்பட்டதும் மற்றும் ரங்கசுவாமி நாயுடுவால் அனுப்பப்பட்டதாக கூறப்பட்டதுமான 16.5.1955 தேதியிடப்பட்ட அறிவிப்புங்கூட முன்னிலைப்படுத்தப்படவில்லை. நீதிமன்றமானது, "பகவந்த் பி. சுலேக்-எதிர்- திகம்பர் கோபால் சுலேக்[1]" என்ற வழக்கையும் சுட்டியது. உயிலின்மூலம் பாகப்பிரிவினை நிகழ்ந்ததென்னும் பாகத்தையும் அது குறிப்பிட்டது. ரங்கசுவாமி நாயுடு தனிப்பட்டமுறையில் விவசாயவரி செலுத்தி, ஆதாரங்களைத் தாக்கல் செய்துள்ளார் என்றும், தனிப்பட்டமுறையில் வருமானவரி செலுத்தினார் என்றும், மற்றும் வங்கி கணக்கு வைத்திருந்தார் என்றும் வா.சா.1 கூறியுள்ளபொழுதிலும், 1932-ஆம் ஆண்டிற்குப் பின்னரும் இந்து கூட்டுக் குடும்பம் தொடர்ந்ததென்றும், இந்து கூட்டுக்குடும்ப உறுப்பினர்களாக தொடர்ந்தனர் என்றும், பரிவர்த்தனைகள் அனைத்தும் இந்து கூட்டுக் குடும்ப பரிவர்த்தனைகளாகவே நிகழ்ந்தனவென்றும் எ.13 முதல் எ.15 வரையிலான குறியீட்டாவணங்கள் தெரிவித்ததாக அது முடிவு செய்கிறது. இது இவ்வாறு காணப்படும்பொழுதிலும், ரங்கசுவாமி நாயுடுவால் தனிப்பட்டமுறையில் சொத்துகள் வாங்கப்பட்டது, பி.3 முதல் பி.5 வரையிலான ஆவணங்களால் நிறுவப்படுகிறது. இச்சொத்துகள் மூதாதையர் சொத்துகளாக பாவிக்கப்படுகின்றன; இறுதியில், 1932-ஆம் ஆண்டில் வாய்மொழி பங்கீடு நிகழவில்லையென முடிவுசெய்வதன்மூலம், வழக்கு பிரச்சினை எண் 2-க்கு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக நீதிமன்றம் விடையளித்துள்ளது. 12.5.1955-ஆம் தேதியிடப்பட்ட உயிலானது ரங்கசுவாமி நாயுடுவால் எழுதப்பட்டதா, செல்லத்தக்கதா, உண்மையானதா அல்லது அவருடைய

---

1. ஏ.ஐ.ஆர். 1986 எஸ்.சி. 79

மரணத்திற்குப் பின்னர் எழுதப்பட்டதா என்னும் வழக்குப் பிரச்சினை ஒன்றிற்கு நீதிமன்றத்தினால் பின்வருமாறு விடையளிக்கப்படுகிறது:

நீதித்துறை முன்பாகவுங்கூட அசல் உயிலானது முன்னிலைப்படுத்தப்-படவில்லை என்னும் எதிர்மேல்முறையீட்டாளர்களின் கூற்றை விசாரணை நீதிமன்றம் நிராகரித்து, நீதித்துறை நடுவர் முன்பான சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையில், அசல் உயிலானது பி.68-ஆக மன்னிலைப்படுத்தப்பட்டதென முடிவு காண்கிறது. உயிலை முன்னிலைப்படுத்துமாறு உயில் நிறைவேற்றுநரின் மகனுக்கு அனுப்பப்பட்ட சி.1 அறிவிப்பை நீதிமன்றம் மேலும் குறிப்பிடுகிறது. தன்னிடம் உயில் இல்லையென, உயில் நிறைவேற்றுநரின் மகனால் தாக்கல் செய்யப்பட்ட உறுதிமொழி ஆவணத்தையும் மற்றும் உயிலின் நகலானது பி.10-ஆக குறியீடு செய்யப்பட்டதையும் நீதிமன்றம் கவனத்தில் கொள்கிறது. உயிலானது எந்த அளவிற்கு உண்மையானதென்றும் மற்றும் பி.7 குறியீட்டாவணமானது எந்த அளவிற்கு நம்பகமானதென்றும் பரிசீலிக்க விசாரணை நீதிமன்றம் முனைந்தது. பி.7-ஆனது 10.05.1955 தேதியிடப்பட்ட உயிலின் சாட்சிகளுள் ஒருவரான வெங்கடசுவாமி நாயுடுவின் வாக்குமூலத்தின் நகலாகும். இவ்வாக்குமூலமானது சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கைகளில் அவரால் அளிக்கப்பட்டதாகும். விசாரணை நீதிமன்றம் இந்த சாட்சியங்களை விவாதிக்க முற்பட்டது. மேற்படி சாட்சியத்தில் (பி.7), மேற்படி சாட்சியானவர் மற்றொரு சாட்சியால் சாட்சி கையெழுத்திடப்பட்டதை குறித்து பேசவில்லை. மற்றொரு சாட்சி வந்து, சார் பதிவாளரின் வருகைக்கு முன்பே சென்றுவிட்டாரென அவர் வாக்குமூலம் அளித்துள்ளார். உயில் ஏற்கெனவே தட்டச்சு

செய்யப்பட்டது. யார் உயிலை உருவாக்கியவர் என்பது குறித்து கூறப்படவில்லை. உயிலாளர் சுய நினைவுடன் இருந்தது குறித்து சாட்சியானவர் பி.7-இல் பேசவில்லை. அது மிகவும் ஐயத்திற்குரியது. அவர் அந்த உயிலை சுதந்திரமான விருப்பத்துடன் எழுதியுள்ளாரா என்பது ஐயத்திற்குரியதாக அறியப்பட்டது. உயிலின் 1 மற்றும் 4-ஆம் பக்கங்கள் மையினால் எழுதப்பட்டிருந்தன. அசல் உயிலுங்கூட முன்னிலைப்படுத்தப்-படவில்லை. இது ஆழ்ந்த சந்தேகங்களுக்கு வழிகோலியது. சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கைகளில், 'உயிலின் அனைத்து பக்கங்களிலும் ரங்கசுவாமி நாயுடுவின் கையெழுத்திருந்தது' என வா.சா.1 வாக்குமூலம் அளித்ததாலேயே உயில் உண்மையானதென எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒப்புக்கொண்டதாக கொள்ளமுடியாதென நீதிமன்றம் கருதியது. உயிலாளரின் குடும்ப நண்பரும் மருத்துவருமான மற்றொரு சாட்சியானவர், உயிலானது இட்டுக்கட்டப்பட்டதொரு ஆவணமாக இருக்குமெனில்,அதில் தன்னுடைய பெயரை பயன்படுத்த அனுமதித்திருக்கமாட்டார் என்பதும் பி.12-ஆனது அவருடைய குடும்பத்தினரால் மற்ற சாட்சியின் மரணத்தையடுத்து செய்தித்தாளில் வெளியிடப்பட்ட விளம்பரம் என்பதும், மேல்முறையீட்டாளர்களின் வழக்காகும்; மருத்துவரும் நீதிமன்றத்தில் முறையிடவில்லை மற்றும் அவ்வுயிலானது உண்மையானதல்ல என நீதிமன்றம் முடிவுசெய்தது. உயிலாளர் 5 சகோதரிகளை கொண்டிருந்தார் என்பதையும், அவர்களுள் ஒருவருக்கு வாரிசு இல்லையென்பதையுங்கூட நீதிமன்றமானது பத்தி 32-இல் குறிப்பிடுகிறது. பிற 4 சகோதரிகளும், ஆண் மற்றும் பெண் குழந்தைகளை பெற்றிருந்தனர். ஒவ்வொரு சகோதரிக்கும் பிறந்த ஒரே ஒரு மகனுக்கு உயிலின் மூலம் சொத்து வழங்கப்பட்டதும் ஐயத்தை ஏற்படுத்தியது. அதற்கிணங்க, வழக்குப் பிரச்சினைக்கு பதிலளிக்கப்பட்டது. பங்கீடு நிகழ்ந்தது நிரூபிக்கப்படாததால், உயில் செல்லாது

எனவும் அறியப்பட்டது. நன்னி பாய் மற்றும் பலர் -எதிர்- கீதாபாய்[2] மற்றும் (மேற்படி) பகவத் பி. சுலேக் -எதிர்- திகாம்பர் கோபால் சுலேக் மற்றும் பலர் ஆகிய மேற்படி வழக்குகளில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளில் கவனம் திருப்பப்படுகிறது. அதற்கிணங்க, வழக்குப் பிரச்சினை எண் 1-க்கு பதிலளிக்கப்பட்டது. அறிந்தமை (முடிவானது), உயிலானது செல்லத்தக்கதல்ல மற்றும் அது உண்மையானதல்ல என்பதாகும்.

21. **வழக்கு பிரச்சினை எண் 3**: லட்சுமண நாயுடு, எச்ச வாரிசுரிமைமூலம் சொத்தை பெற்றாரா? ரங்கசுவாமி நாயுடு உயிலேதும் எழுதிவைக்காமல் இறந்துவிட்டார், ஆனால் அவருடைய மனைவி/விதவையான ஆர். கிருஷ்ணம்மாள் வாரிசுரிமை பெற்றார் என அறியப்பட்டது (முடிவு செய்யப்பட்டது). ரங்கசுவாமி நாயுடுவின் பாதி சொத்தில், ஆர். கிருஷ்ணம்மாள் ஆயுட்கால உரிமை பெற்றார். அவர், 1937-ஆம் ஆண்டைய இந்து பெண்கள் சொத்துரிமை சட்டத்தின்கீழ் உரிமை பெற்றார். எனவே, விசாரணை நீதிமன்றமானது, எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராகவும் மற்றும் மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாகவும் வழக்கு பிரச்சினைக்கு பதிலளித்தது. தன்னுடைய சகோதரர் ரங்கசுவாமி நாயுடுவின் மரணத்தையடுத்து, லட்சுமண நாயுடு எச்ச வாரிசுரிமையாளரானார் எனவும், இந்து சட்டப்படி லட்சுமண நாயுடு கூட்டுக் குடும்பச் சொத்துகளுக்கு முழு உரிமையாளராகிவிட்டார் என்ற அடிப்படையில், வழக்குரை அட்டவணை சொத்துகளில், எதிர்மேல்முறையீட்டாளர்கள் உரிமையுடையவர்களல்ல என்பதை, விசாரணை நீதிமன்றத்தின் அறிந்தமை (முடிவு) என பொருள்படுகிறது.

2.ஏ.ஐ.ஆர். 1958 எஸ்.சி. 706

22. வழக்குப் பிரச்சினை 4 அ.வ. எண் 89/1983-இன் வழக்காளர் மற்றும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்கள் ஆகியோர் சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கைகளால் தடைசெய்யப்படுகின்றனரா? மேல்முறையீட்டாளர்கள் மேற்படி நடவடிக்கைகளின் தரப்பினர்களல்ல என்றும் மற்றும் அந்நடவடிக்கைகளின் உத்தரவானது மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாதென முடிவுசெய்வதன்மூலம் வழக்குப் பிரச்சினை 4-ஆனது மேல்முறையீட்டாளர்களுக்காதரவாக பதிலளிக்கப்பட்டது.

23. வழக்குப் பிரச்சினை 5: அ.வ. எண் 71/1958-இல் வழங்கப்பட்ட தீர்ப்பாணையானது வஞ்சகமானதா? செல்லத்தகாததா? மற்றும் அ.வ. எண் 89/1983-இல் வழக்காளரை கட்டுப்படுத்துகிறதா? என்பதாகும். இவ்வழக்கு பிரச்சினையானது கீழ்காணுமாறு பதிலளிக்கப்பட்டது:

> எ.2 குறியீட்டாவணமான அ.வ. எண் 71/1958-இன் தீர்ப்பாணையானது, விதவை ஆர். கிருஷ்ணம்மாளுக்கு வழக்குரை அட்டவணை சொத்துகள் 1 முதல் 7 வரையிலானவற்றிற்கு முழு உரிமை வழங்கியது என அறியப்பட்டது. வஞ்சகம் ஏதும் இருந்ததற்கான ஆதாரம் ஒன்றுமில்லை என அறியப்பட்டது. எ.3 (அ.வ. எண் 36/1963) மற்றும் எ.4 (ஆர். கிருஷ்ணம்மாளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரை) ஆகியவற்றில், சமரசமானது கிருஷ்ணம்மாளின் விருப்பப்படி நிகழ்ந்தது என கூறப்பட்டதாக அறியப்பட்டது (முடிவு செய்யப்பட்டது). இவ்வாறாக வழக்குப் பிரச்சினை ஐந்தானது மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக பதிலளிக்கப்பட்டது.

24. அதன்பின்னர், விசாரணை நீதிமன்றமானது, வழக்கு பிரச்சினை எண் *6* மற்றும் அ.வ. எண் *89/1983*-இல் கூடுதல் வழக்கு பிரச்சினை எண் *1* ஆகியவற்றைப் பரிசீலித்தது. அ.வ. எண் *36/1963*-ஆனது தடையாகிறதா என்ற வழக்குப் பிரச்சினை எண் *6*-க்கு பதிலளிக்கையில், அவ்வழக்கானது சமரசத்தில் முடிந்ததா*?* அது தடையாகாது என முடிவுசெய்யப்பட்டது. அ.வ. எண் *36/1963*-ஐ தாக்கல் செய்ததன் மூலம், உ.வி.மு.ச., ஆணை II, விதி *2*-இன் கீழான தடை செயலாக்கப்பட்டு, அ.வ. எண் *89/1983*-ஐ தாக்கல் செய்யப்படுவதை தடை செய்ததா என்னும் கூடுதல் வழக்கு பிரச்சினை ஒன்றை பொறுத்தவரையில், அ.வ. எண் *36/1963*-இன் வழக்கு சொத்துகளைத் தவிர, பிற சொத்துகள் தொடர்பாக புதிய வழக்கு தொடர்வதற்கான உரிமைக்காக அந்நீதிமன்றத்தில் அனுமதி ஏதும் கோரப்படவில்லையென, நீதிமன்றத்தினால் அறியப்பட்டது. வழக்காளர், வழக்கில் ஒரு தரப்பாக செயல்பட்டுள்ளார். ஆணை II, விதி *2*-இன் கீழான தடையானது செயலாக்கப்படுகிறது என நீதிமன்றம் முடிவுசெய்தது.

25. வழக்கு பிரச்சினை எண் *7*: மறுப்பாளர் எண் *1*-ஆன எ. அழகிரிசுவாமியால் வழக்குரைக்கப்பட்டதுபோன்று, அவருக்கும், வழக்காளருக்கும், *2* மற்றும் *3*-ஆம் மறுப்பாளர்களுக்கிடையே வாய்மொழி பங்கீடு நிகழ்ந்ததா என்பதற்கு ஒன்றாம் மறுப்பாளருக்கெதிராக பதிலளிக்கப்பட்டு, அத்தகைய பாகப்பிரிவினை நிரூபிக்கப்படவில்லை என அறியப்பட்டது.

26. வழக்கு பிரச்சினை எண் *8* மற்றும் *10* ஆகியவை உரிய தரப்பினரை சேர்க்காமை, தேவையற்ற தரப்பினரை சேர்த்தமை மற்றும் அ.வ. எண் *89/1983*-இன் *13* முதல் *34* வரையிலான மறுப்பாளர்கள் தேவையான தரப்பினர்களா என்பன

தொடர்பானவையாகும்; அதற்கு. உரிய தரப்பினரை சேர்க்காமையோ அல்லது தேவையற்ற தரப்பினர்களை சேர்த்தமையோ இல்லை என்றும், அவ்வழக்கிற்கு வேறு ஏதும் தரப்பினர்கள் இருந்ததாக சான்றேதுமில்லை என்றும் முடிவு செய்து, பதிலளிக்கப்பட்டது.

(இது தொடர்பாக கவனத்திற்கொள்ளப்படவேண்டியது யாதெனில், 13 முதல் 34 வரையிலான பிரதிவாதிகளின் தொடர்பைப் பொறுத்தவரையில், சாட்டுரைக்கப்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில், முதல் பிரதிவாதியால் வழக்குரை அட்டவணைச் சொத்தின் பகுதி மாற்றம் அளிக்கப்பட்ட நபர்கள் அவர்களே என்பதாகும்.)

27. இந்த எழுவினாவுடன் தொடர்புடைய எழுவினா எண் *12*-ஆனது *13* முதல் *34* வரையிலான பிரதிவாதிகள் ஏதேனும் நியாயமான பரிகாரம் பெற உரிமையுடையவர்களா என்பதாகும். இந்த எழுவினாவிற்கு, *13* முதல் *34* வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக பதிலளிக்கப்பட்டது.

28. எழுவினா எண் *11* மற்றும் *13*-ஆனது, வாதிக்கு சொத்தில் உரிமையுள்ளதா*?* மேலும், பாகப்பிரிவினைக்கு உரிமையுள்ளதா*?* என்பது தொடர்புடைய எழுவினாவின் துணை வினாக்களாகும். இரு எழுவினாக்களும் வாதிகளுக்கு எதிராக பதிலளிக்கப்பட்டன. பின்னர் நீதிமன்றம், மு.வ. எண் *649/1985*-இன் எழுவினா எண் *1*-ஐ பரிசீலனை செய்ய முற்பட்டது. இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் அடிப்படையில், உயிலின் கீழ் வரும் சொத்திற்கு ஆர். கிருஷ்ணம்மாள் பூரண உரிமையுடையவரா என்பதே வினாவாகும். சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் கீழ் ஆர். கிருஷ்ணம்மாளின் உரிமையானது பூரண உரிமையாகியுள்ளது என நீதிமன்றம் தீர்மானித்தது.

29. இறுதியாக, வழக்குரையில் வேண்டுரைத்தபடி அதிலுள்ள வாதிகள் பரிகாரம் பெற உரிமையுடையவர்களா? மேலும், அவர்கள் உறுத்துக்கட்டளைக்கான பரிகாரம் பெற உரிமையுடையவர்களா? என்பதான எழுவினாவை மு.வ. எண் 649/1985-இல் நீதிமன்றம் பரிசீலித்தது. நீதிமன்றம், வழக்குரையின் அட்டவணைச் சொத்து மூதாதையர் சொத்து என கண்டறிந்தது. வாதிகள் லட்சுமையா நாயுடுவின் சட்டப்படியான வாரிசுதாரர்கள், ரங்கசாமி நாயுடு இறந்ததன்பேரில், ஆர். கிருஷ்ணம்மாள் தனது உரிமையை விட்டுக்கொடுத்ததன் விளைவாக மு.வ. எண் 71/1958-இல் பிறப்பிக்கப்பட்ட ஒத்திசைவுத் தீர்ப்பாணையின் அடிப்படையில் அவர்கள் உரிமைபெற்றனர். மு.வ. எண் 649/1985 தீர்ப்பாணையிடப்பட்டு மு.வ. எண் 89/1983 தள்ளுபடி செய்யப்பட்டது.

<u>முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் முன்பான வழக்கு நடவடிக்கை</u>

30. முதல் நான்கு மேல்முறையீடுகள் பொது தீர்ப்புரைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டன - மே.வ. எண் 194/1989-ஆனது மு.வ. எண் 89/1989-இல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டது, மு.வ. எண் 649/1985-இல் பிரதிவாதியான ஆர். அழகிரிசாமி என்ற அதே நபரால் மேற்படி வழக்கின் தீர்ப்பாணையை எதிர்த்து மே.வ. எண் 195/1989-ஆனது தாக்கல் செய்யப்பட்டது. மு.வ. எண் 649/1985-இன் 2-ஆம் பிரதிவாதியான வி. கல்யாணசாமி, அதிலுள்ள தீர்ப்பாணையை எதிர்த்து மே.வ. எண் 320/1992-ஐ தாக்கல் செய்துள்ளார். மு.வ. எண. 89/1983-இன் தீர்ப்புரையை எதிர்த்துரைக்கும் அதில், 2-ஆம் பிரதிவாதியாகவும் உள்ள வி. கல்யாணசாமி, மே.வ. எண் 225/1992-இன் மேல்முறையீட்டாளருமாவார். (மு.வ. எண் 689/1985-இன் பிரதிவாதிகளாகவும் உள்ள மு.வ. எண் 89/1983-இன் பிரதிவாதிகள் பி.13 முதல் பி.34

உட்பட மற்ற பிரதிவாதிகளால் மேல்முறையீடு ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்பது கவனத்திற்குரியது)

<u>முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் காண்முடிவுகள்</u>

31. வழக்குச் சொத்து ரங்கசாமி நாயுடுவிற்கு 1932-ஆம் வழங்கப்பட்டுள்ளது என்பதால், அது பிற சொத்துகளிலிருந்து தனித்திருந்தது என்பது மெய்ப்பிக்கப்படவில்லை என்ற விசாரணை நீதிமன்றத்தின் கருத்துடன் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் உடன்பட்டிருந்தது. ஆயினும், ரங்கசாமி நாயுடு பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தில் சேர்ந்து வாழ்ந்த சமயத்தில்தான் இறந்துவிட்டார், தனித்து வாழவில்லை என்ற தீர்முடிவிற்கு அது வழிகோலிவிடும் என்று நீதிமன்றம் கண்டறிந்தது. நாளிதழில் விளம்பரமான பி.1-ஐ அளித்ததன்வாயிலாக பாகப்பிரிவினை செயற்படுத்தப்பட்டது என மேல்முறையீட்டு நீதிமன்றம் கண்டறிந்தது. ரங்கசாமி நாயுடு பாகம் பிரிக்கப்படாத இந்து குடும்பச் சொத்துகளில் சிலவற்றை ஒருதலைப்பட்சமாக பிரித்து விரிவான உயிலை எழுதினார், அது பின்னிட்டு விளக்கப்படும். அவர் தமிழ்நாடு சட்டசபையின் உறுப்பினராக இருந்துள்ளார் எனத் தீர்மானிக்க நீதிமன்றம் முற்பட்டது. அவரும் அவரது சகோதரரும் 1944 மற்றும் 1958-ஆம் ஆண்டுகளுக்கிடையே பல்வேறு சொத்துகளை சுவாதீனத்தில் வைத்திருந்தனர். கூடுதலாக 1000 ஏக்கர் நிலத்தினை குடும்பம் வாங்கியது என்பதையும் அ.சா.1 ஏற்றுக்கொண்டார். ரங்கசாமி நாயுடுவின் சகோதரிகள் சராசரி வாழ்க்கையை நடத்திவந்தனர். அவர் தனது சகோதரிகளிடத்தில் மிகவும் பற்றுதலாயிருந்தார். அவர் தனது சகோதரி அம்மணி அம்மாளின் மாடி வீட்டில் வசித்து வந்தார். அவர் தனது ஒவ்வொரு சொந்த

சகோதரிகளின் மகன்களில் ஒருவரை தேர்வுசெய்தார். ஒரு மில்லின் பாகம் அவரது சகோதரருக்கு அளிக்கப்பட்டது. அவரது மனைவியின் உடன்பிறந்தோர் மகன்/மகளை நிறைவேற்றாளராக தேர்வுசெய்யப்பட்டதும் பரிசீலிக்கப்பட்டது. பதிவுசெய்யப்பட்ட உயிலின் நகலை சார்நிலை சான்றாக ஏற்றுக்கொள்வது என்பது "முற்றிலும் சரியே" என்பதை நீதிமன்றம் கண்டறிந்தது. சாட்சியச் சட்டம், பிரிவு 69 மற்றும் பி.7-இன் சாட்சியத்தில் சார்வுற்றதன்பேரில், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 69-இன் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் காணப்படுகின்றது. பதிவு செய்தல் அனைத்து சந்தேகத்தையும் நீக்கியது. ஆர்.1-ஆன உயிலவர், குறியீட்டு ரேகை வைப்பதை மறுத்து கையொப்பமிடுவதை வலியுறுத்தினார் என்ற பொருண்மை, அவர் சீரிய மனநிலையில்தான் இருந்துள்ளார் என்பதை வெளிப்படுத்துவதனால் அதன்மீது சார்வுறப்பட்டது. விசாரணை நீதிமன்றத்தால் தெரிந்துகொள்ளப்பட்ட ஐயத்திற்கிடமளிக்கும் சூழ்நிலைகள், அந்த வகையில் நீதிமன்றத்திற்கு திருப்தியளிக்கவில்லை. உயில் பி.10-ஆனது உண்மையானதாக காணப்பட்டது. உயிலானது வலுக்கட்டாயமாகவும், வற்புறுத்தலின்பேரிலும் பெறப்பட்டது என்று மெய்ப்பிக்கும் பொறுப்பு எதிர்மேல்முறையீட்டாளர்களால் நிறைவேற்றப்படவில்லை. பி.1 வாயிலாக பாகப்பிரிவினை செயற்படுத்தப்பட்டது என்பதை நீதிமன்றம் கண்டறிய முற்பட்டது. பி.1-ஆனது 10.5.1955 அன்று ரங்கசாமி நாயுடுவால் விளம்பரம் செய்யப்பட்டது என்பதை கண்டறிந்தது. ரங்கசாமி நாயுடு பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தில் தொடர்வதாக குறிப்பிட்டு பி.1-ஐ மறுத்துரைத்து 11.5.1955 அன்று லட்சுமையா நாயுடுவிற்கு கடிதம் ஒன்றை எழுதினார். ரங்கசாமி நாயுடு பி.1-ஐ உறுதிப்படுத்தி 16.5.1955 அன்று பதில் கடிதம் ஒன்று அனுப்பினார். அவை வழக்கு நடவடிக்கைகளின் பிரிவு 145-இல் பி.43 மற்றும் பி.44-ஆக குறியீடு செய்யப்பட்டன.

பி.1-ஆன நாளிதழின் அறிக்கையின் வாயிலாக பாகப்பிரிவினை செயற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்த வினா எழுப்பப்படவில்லை என்ற எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதுரையை மறுத்துரைத்து, 1-ஆம் பிரதிவாதியின் வழக்குரையிலும், மற்ற பிரதிவாதிகளின் எதிருரையிலும் வாதுரையுள்ளதாக காணப்பட்டது. ரங்கசாமி நாயுடு செய்ததுபோல், சொத்தினை தனது பங்கிற்கு ஒருதலைப்பட்சமாக பிரிப்பதற்கு கூட்டுக் குடும்ப உறுப்பினருக்கு வாய்ப்பில்லை என்ற வாதுரை தொடர்பாக வாதிகள், பிரதிவாதிகள் வியப்படையவில்லை. அது தகுதிப்பாடுகளின்றி காணப்படுகிறது, மேலும் பின்வருமாறு ஆதரவளிக்கிறது:

> மு.வ.எண். 71/1958 மற்றும் மு.வ.எண். 36/1963-இன் ஒருதலைப்பட்சமான ஒதுக்கீடு குறித்து எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஏதொரு மறுப்பும் தெரிவிக்கவில்லை. இரண்டாவதாக, இந்து கூட்டுக் குடும்பத்திற்கு சொந்தமாக நூற்றுக்கணக்கான ஏக்கர்களிலான 93 வகையான சொத்துகளுக்கு மேல் உள்ளதாகவும், அச்சொத்துகளின் ஒரு சிறிய பகுதி மட்டுமே ஒருதலைப்பட்சமாக ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் தெரிகிறது. "அதை முற்றிலும் நியாயமற்றதாக கருதமுடியாது" என்று நீதிமன்றம் கண்டறிந்தது. (மேற்படி) பகவந்த் பி. சுலாகே வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவை நீதிமன்றம் கவனத்திற்கொண்டது. அது கூட்டாண்மையில் பிரச்சினை குறித்த வழக்கு என்பதால் அவ்வாறு தீர்மானிக்கப்பட்டது என்ற தீர்முடிவின்மூலம் அது கையாளப்பட்டது. 16.5.1955-ஆம் தேதியிடப்பட்ட ரங்கசாமி நாயுடுவின் கடிதத்தில் சார்வுற்றதன்பேரில், அதில் அவர் பி.1 விளம்பரத்தை உறுதிசெய்தார், "விளம்புகை என்பது ஒருதலைப்பட்சமான

செயல்" என கருதவியலாது எனவும், இச்செயலானது கூட்டுக் குடும்பச் சொத்துகளின் தன்மையை மாற்றாது எனத் தீர்மானிக்க இயலாது எனவும் கண்டறிந்தது. பிரச்சினையைப் பொறுத்தவரையில் தெரிவிக்கப்பட்டது யாதெனில், பி.1-ஆனது பாகப்பிரிவினையை உருவாக்கியது எனத் தீர்மானிக்கப்பட்டது என்பதாகும். ரங்கசாமி நாயுடு ஒருதலைப்பட்டசமான ஒதுக்கீடு செய்திருந்தாலுங்கூட, இலட்சுமையா நாயுடு மற்றும் அவரது மகன்கள் தங்களது பின்னிட்ட நடவடிக்கையின்மூலம் அத்தகைய ஒருதலைப்பட்சமான ஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்டனர் என்றும், ஆகவே அவர்கள் உயிலை எதிர்க்க உரிமையுடையவர்களல்லர் என்பதுமாகும்.

32. மு.வ. எண் 36/1963-இல் வகை எண் 1-இலிருந்து 3, 4 மற்றும் 7 ஆகியவை தொடர்பாக ஆர். கிருஷ்ணம்மாளின் பூரண உரிமையை ஏற்றுக்கொண்ட மேல்முறையீட்டாளர்களின் நடத்தையை அடிப்படையாகக்கொண்டு, எதிர்மேல் முறையீட்டாளர்களுக்கு எதிராக முரண்தடையின் வாதம் எழுப்பப்படுவது தகுதியற்றது எனக் கண்டறியப்பட்டது. 1, 3 மற்றும் 4 வகையிலானவற்றை, மேற்படி வழக்கின் 5 மற்றும் 6-ஆம் பிரதிவாதிகளுக்கு ஆர். கிருஷ்ணம்மாள் விற்றதாக தெரிகிறது. வகை எண் 7-ஆனது அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்ட நிலமாகும். எதனடிப்படையில் 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் அரசால் கையகப்படுத்தப்பட்ட சொத்துவகைகள் மற்றும் விற்கப்பட்ட சொத்துகளுக்கு உடன்பட்டிருந்தனர் என்று வெளிப்படுத்துவதற்கான சான்றாவணம் ஏதுமில்லை எனத் தெரிகிறது. மேலும், உடன்படிக்கை என்பது விற்கப்பட்ட மற்றும் கையகப்படுத்தப்பட்ட சொத்து வகைகள் தொடர்புடையதாகும், இச்சூழலை மேல்முறையீட்டாளர்களுக்கு எதிரான செயல் என நீதிமன்றங்கூட கருதமுடியாது என்று கண்டறியப்பட்டது. அதன்பின்னர், நீதிமன்றம்

பி.10 உயிலில், 19 வகையான சொத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளதை கண்டறிந்தது. ஒத்திசைவுத் தீர்ப்பாணையின் கீழ் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு பூரண உரிமை வழங்கப்பட்ட சொத்து வகைகளான 1 முதல் 7 வரையிலானவை மு.வ. எண் 36/1963-இல் வழக்குச் சொத்துகளாக அட்டவணையிடப்பட்டன. ஆர். கிருஷ்ணம்மாள் மு.வ. எண் 71/1958-இன் மற்ற சொத்துகளிலுள்ள தனது உரிமையைத் துறந்துவிட்டார் என்பது மேல்முறையீட்டாளர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டதால், அச்சொத்துகள் மு.வ. எண் 36/1963-இல் அட்டவணையிடப்படவில்லை, மேலும், கட்டளை II, விதி 2-ஐ பயன்படுத்துவதற்கான தடை நீக்கறவு செய்யப்பட்டது என்பதே எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதுரையாகும். மு.வ. எண் 36/1963-இன் வாதியானவர் உரிமையைத் தக்கவைத்துக்கொண்டதை நீதிமன்றம் கண்டறிந்தது. இரண்டாவதாக ஆர். கிருஷ்ணம்மாளின் இறப்பைப் பொறுத்தவரையில், 1963-க்கு பின்னரான 1977-இல் ஏற்பட்டுள்ளதால், கட்டளை II, விதி 2-இன் தடையானது பொருந்தாது. 1963-ஆம் ஆண்டில் வாதிக்கு உரிமையில்லை என்பதாலும், அது உயிலின் பூரண உரிமையாளரான ஆர். கிருஷ்ணம்மாளின் இறப்பிற்குப் பின்னரே அவர்களுக்கு (உயில்வழி உரிமையாளர்கள்) வந்தடைந்ததாலும், கட்டளை II, விதி 2 பொருந்தக்- கூடியதல்ல எனக் கண்டறியப்பட்டது. மு.வ. எண் 36/1963-இன் தீர்ப்பாணையானது, மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையை வலுவிழக்கச்செய்தது, அதில் 1 முதல் 7 வகையிலான சொத்துகளுக்கு ஆர். கிருஷ்ணம்மாள் பூரண உரிமையாளராக்கப்பட்டார். மு.வ. எண் 36/1963-இன் தீர்ப்பாணையின்படி லட்சுமையா நாயுடுவின் மகன்கள் தரப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர். அவர்கள் வழக்குரைஞரை நியமித்தனர். வழக்குரைஞர் ஒத்திசைவு

தீர்ப்பாணைக்காக கூட்டு மேற்குறிப்பை மேற்கொண்டார். மு.வ. எண் 36/1963-இன் தீர்ப்பாணைப்படி 5 மற்றும் 6 வகையிலான சொத்துகளின் உரிமையானது, ஆர். கிருஷ்ணம்மாளுக்கு ஆதரவாக ஆயுட்கால பாத்தியதையின்வாயிலாக ஒதுக்கப்பட்டது, அது எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எதிரானதாக காணப்பட்டது. உயிலின் உரிமையானது, தரப்பினர்களின் நடத்தையின்மூலம் அளிக்கப்பட்டது. இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14-இன்படியானது கருத்துமாறுபாட்டை பொறுத்தவரையில், மு.வ. எண் 71/1958-இல் மாற்றுப் பரிகாரத்திற்காக மட்டுமே பிரிவு 14(1)-இன் கீழ் ஆர். கிருஷ்ணம்மாள் உரிமை கோரியதாக காணப்பட்டது. மு.வ. எண் 71/1958-இல் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு அளிக்கப்பட்ட பூரண உரிமையானது, பிரிவு 14(1)-இன் கீழ் அவருக்கு அளிக்கப்பட்ட உரிமையே என்பதை நீதிமன்றத்தால் தீர்மானிக்க இயலவில்லை, மேல்முறையீட்டாளர்களின் வழக்கு அவ்வாறிருக்கையில், அவர்கள் தரப்பினர்களாக்கப்- பட்டிருக்கவேண்டும், மேலும், உயிலின் நிறைவேற்றாளரை வழக்கிலிருந்து விடுவித்திருக்கக்கூடாது. பிரிவு 14(1)-இன் கீழ் பூரண உரிமையைப் பெறும் உள்நோக்கம் ஏதும் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு இருப்பதாகத் தெரியவில்லை. மேலும், அவருக்கு சொத்தில் எந்த பங்கும் கிடைக்கக்கூடாது என்ற முறையிலேயே எதிர்மேல்முறையீட்டாளர்களின் நடத்தை உள்ளதாகத் தெரிகிறது. லட்சுமையா நாயுடுவும், அவரது மகன்களும், சொத்தினை தங்களது உடைமையில் தக்கவைத்துக்கொள்வதற்காக பிரிவு 145-இன் கீழ் வழக்கு நடவடிக்கைகளை தொடர்ந்தனர். மு.வ. எண் 71/1958-இல் 1 முதல் 7 வரை சிறு அளவிலான சொத்து ஒத்திசைவின் மூலம் வழங்கப்பட்டது. ஒன்றும் இல்லாததற்கு ஏதேனும் இருந்தால் நலம் என கருதிய ஆர். கிருஷ்ணம்மாள் அதை அவரது ஆயுள் பாத்தியதையாக ஏற்றுக்கொண்டார் எனத் தீர்மானிக்கப்பட்டது.

மு.வ. எண்71/1958-இன் பிரிவு 14(1)-இன்படி ஆர். கிருஷ்ணம்மாள் உரிமை பெற்றிருந்தார் என்றும், மேலும் அவர் 1 முதல் 7 வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர மற்ற அனைத்து சொத்துகளையும் துறந்துவிட்டதாக வெளிப்படையாக கூறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மு.வ. எண் 36/1963-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையானது, தரப்பினர்கள் உயிலினை பின்பற்ற விரும்புவதையே வெளிப்படுத்துகிறது. அது மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையை வலுவிழக்கச் செய்து, அவர்கள் சொத்து வகைகளை ஆயுள் பாத்தியதை அளித்ததை வெளிப்படுத்துகிறது. அதன்படியே மேல்முறையீடு எண். 195/1989 மற்றும் மேல்முறையீடு எண் 20/1989 அனுமதிக்கப்படுகின்றன. மு.வ. எண் 649/1985 தள்ளுபடி செய்யப்பட்டது. மு.வ. எண் 89/1983-இன் தீர்ப்புரை நீக்கறவு செய்யப்பட்டு, மே.வ. எண் 194/1989 மற்றும் மே.வ. எண் 225/1992 அனுமதிக்கப்படுகின்றன அவ்வழக்கு தீர்ப்பாணையிடப்பட்டது. அட்டவணை II-இன் சொத்துகள் 4 சரிசமமான பாகங்களாக பிரிக்கப்படவேண்டும் என்றும், அதில் ஒரு பாகம் வாதிக்கு ஒதுக்கப்படவேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டது. பாகப்பிரிவினைக்கான முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது, மேலும், உ.வி.மு.ச., ஆணை 20 விதி 12-இன் கீழான விண்ணப்பத்தின் அடிப்படையில் இடைக்கால வருமானம் தீர்மானிக்கப்படவேண்டும்.

<u>எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில் உயர் நீதிமன்றத்தின் காண்முடிவுகள்.</u>

33. பொது தீர்ப்புரை மூலம் உயர் நீதிமன்றம் இரண்டாம் மேல்முறையீடுகளை முடிவு செய்தது. இரு நீதிமன்றங்களும் 1932-இல் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கான சான்று ஏதுமில்லை என்று ஒருங்கியல்வாக கண்டறிந்தது.

அத்தகைய சூழ்நிலையில், ரங்கசாமி நாயுடுவின் இறப்பிற்கு முன்னதாக பாகப்பிரிவினை ஏற்பட்டதா? என்ற வினாவை கண்டறிய முற்பட்டது. பி.1-ஐ வழங்கியதன்மூலம் பாகப்பிரிவினை ஏற்பட்டதா? என்பதான எழுவினா ஏதும் எழுப்பப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் பி.1-இன் அடிப்படையில் பாகப்பிரிவினையின் குறிப்பிட்ட எழுவினா வனைந்ததாக கண்டறியப்பட்டது. பி.1-இன் அடிப்படையில், பாகப்பிரிவினையின் தகுநிலை மெய்ப்பிக்கப்படவில்லை. மு.வ. எண் 89/1983-இன் வாதி 12.5.1955-ஆம் தேதியிடப்பட்ட பி.1-இல் சார்வுற்றதை எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒப்புக்கொள்ள முற்பட்டனர். அவ்வாறிருக்கையில், மு.வ. எண் 649/1985-இன் முதல் பிரதிவாதி எதிர்வழக்குரையில், அவர் 1932 முதல் தனது சகோதரரைவிட்டு பிரிந்துசென்ற குடும்ப உறுப்பினர் என்று குறிப்பிட்டு 10.5.1955 அன்று ரங்கசாமி நாயுடு பொது அறிவிப்பு ஒன்றை வழங்கினார். அதற்கான அறிவிப்பு 11.5.1955 அன்று வழங்கப்பட்டது, அதற்கு ரங்கசாமி நாயுடுவிற்கு பதிலும் வழங்கப்பட்டது. 12.5.1955-ஆம் தேதியிடப்பட்ட "நவ இந்தியா" நாளிதழைத் தவிர, வழக்கு நடவடிக்கைகளில் யாதொரு சான்றாவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என மேலும் காணப்பட்டது. ரங்கசாமி நாயுடு இறப்பதற்கு முன்பு சகோதரர்களுக்கிடையே பிரிவினை ஏதேனும் இருந்தது என்று முடிவுசெய்வதற்கான காரணம் முற்றிலும் இல்லை என்று நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும் குறிப்பிடுகையில், 1932-இல் ரங்கசாமி நாயுடுவிற்கும், அவரது சகோதரருக்குமிடையே ஏற்பட்ட முந்தைய பாகப்பிரிவினையின் அடிப்படையில், ரங்கசாமி நாயுடு அறிவிப்பு வெளியிடப்பட்டதாக கூறுவது வாதத்திலில்லை, அதுதொடர்பாக முந்தைய பாகப்பிரிவினை ஏதுமில்லை என்று நீதிமன்றங்கள் ஒருங்கியல்வாக தீர்மானித்தது, மேலும் ரங்கசாமி நாயுடுவின் இறப்பிற்கு முன்னர்

அவருக்கும், அவரது சகோதரருக்குமிடையேயான பாகப்பிரிவினை சான்று ஏதுமில்லாததால், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் காண்முடிவானது அடிப்படையற்றதாக விவரிக்கப்பட்டுள்ளது. ரங்கசாமி நாயுடுவிற்கு உயில் எழுதுவதற்கான ஏதேனும் உரிமையுள்ளதா என்பதே சந்தேகத்திற்குரியதாக காணப்படுகிறது. உண்மையான உயில் தாக்கல் செய்யப்படவில்லை. வாதி (மு.வ. எண் 89/1983-இன் வாதி) உயிலை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கவில்லை. சார்பதிவாளரிடமிருந்து பதிவேட்டிலிருந்து ஏதும் பரிசீலிக்கப்படவோ, அழைப்பாணையிட்டு X1-ஆக குறியீடு செய்யப்படவோ இல்லை. பிரிவு 145-இன் வழக்கு நடவடிக்கைகளின் நடுவர் உயிலைக் குறித்து விவாதிக்கவில்லை, மேலும், மு.வ. எண் 89/1983-இன் மேல்முறையீட்டாளர்-வாதி, செயலாட்சி நடுவரின் உத்தரவை மட்டுமே சார்வுற்றார். மேலும் அம்மணி அம்மாளின் வீட்டில் மேற்குறிப்பு செய்யப்பட்டு, உயில் பதிவு செய்வதற்காக முன்வைக்கப்பட்டது. ஆனால் பி.7 சான்றொப்ப சாட்சியின் சான்றுரைப்படி, இறந்தவரின் வீட்டில் உயில் பதிவு செய்யப்பட்டதென காணப்படுகிறது. அசல் உயில் இல்லாமல், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68 மற்றும் 69-இன் தேவைப்பாட்டிற்கு இணங்காததாலும் உயில் மெய்ப்பிக்கப்படவில்லை என நீதிமன்றம் கண்டறிந்தது. உயிலின் பதிவை உயிலை மெய்ப்பிக்கும் தன்மையுடன் தவிர்த்துவிடமுடியாது. அதைக்குறித்த விசாரணை நீதிமன்றத்தின் காண்முடிவுகள் ஒத்துப்போகிறது, 1990-இல் உயில் நிறைவேற்றாளர் இறந்துவிட்டதாக கூறப்படுகிறது. ஆனால், அச்சமயத்தில் உயிலை தாக்கல் செய்வதற்கு எந்தவொரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. பிரிவு 145-இன் கீழ் வழக்கு நடவடிக்கைகளின் ஆவணங்களை வரவழைப்பதற்கு வாதி ஏன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரியவில்லை. ஒத்திசைவின் அடிப்படையில் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு

14(1)-இன் கீழ் ஆர். கிருஷ்ணம்மாள் உரிமை பெற்றுக்கொண்டார். ஆர். கிருஷ்ணம்மாளின் உரிமையானது அவரது கணவர் 1.6.1955 அன்று செயல்பாட்டிற்கு வந்தது. ஆர். கிருஷ்ணம்மாளுக்கே உரிமையான சொத்தை அவர் பேணுவதற்கான உரிமையுள்ளது, சாது சிங் -எதிர்- குருத்துவாரா சாஉறிப் நாரிகே மற்றும் பலர்[3]; என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உயர் நீதிமன்றம் வேறுபடுத்திக் காட்டியது. அவர், பிரிவு 14(1)-இன் கீழான உரிமையின் நிமித்தம், மு.வ. எண் 71/1958-இல் ஒத்திசைவை ஏற்படுத்தினார், அது மேல்முறையீட்டாளர்களால் முற்றிலுமாக அங்கீகரிக்கப்பட்டது. மேல்முறையீடுகள் அனுமதிக்கப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணை மீட்டளிக்கப்பட்டது.

தரப்பினர்களின் வாதுரைகள்

நீதிமன்றத்தில் விவாதம் மற்றும் எழுத்துமூல வழக்குரை

34. நாங்கள் தரப்பினர்களுக்காக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதத்தைக் கேட்டோம். மேல்முறையீட்டாளர்களின் சார்பாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சி.எ. சுந்தரம்-ஆல் முன்வைக்கப்பட்ட வாதுரைகளை நாங்கள் கேட்டோம். மேலும் மேல்முறையீட்டாளர்களின் சார்பாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்கள் திருமதி மோகனா மற்றும் திரு. வி. கிரி ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம். மேலும் எதிர்மேல்முறையீட்டாளர்களின் சார்பாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர்கள் திரு. மோகன் பராசரண், திரு. எஸ். குரு கிருஷ்ணகுமார், திரு. சித்ரா சம்பத், திரு. வி. இராகவாச்சாரி ஆகியோரின் வாதங்களைக் கேட்டோம். இது தவிர, மு.வ. எண் 649/1985-இல் 1-ஆம் பிரதிவாதியிடமிருந்து

---

3. 2006 (8) எஸ்.சி.சி. 75

உடைமை மாற்றம் பெற்ற சிலரின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. எஸ். நாகமுத்து அவர்களின் பணிந்துரையைக் கவனத்திற்கொண்டோம்.

35. மேல்முறையீட்டாளர்களின் சார்பாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சி.ஏ. சுந்தரம் முன்னிலைப்படுத்தப்பட்டார். உயர் நீதிமன்றமானது, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரையில், உ.வி.மு-ச.-இன் பிரிவு 100-இன் கீழான வரம்பெல்லையின் மீறுகையையும், பொருண்மைகளின் அடிப்படையில் காண்முடிவுகளை மறுமதிப்பீடு செய்ததும் அனுமதிக்கத்தக்கதல்ல என்று அவர் வாதுரைத்தார். 1932-ஆம் வருடத்தில் வாய்மொழி பாகப்பிரிவினை நடந்துள்ளதா என்பதை கண்டறிவதால் எங்களது கவனம் ஈர்க்கப்படவில்லை என்பதில் சந்தேகம் ஏதுமில்லை, ஆயினும் 1.6.1955 அன்று ரங்கசாமி நாயுடு இறப்பதற்கு முன்பு பி.1 நாளிதழில் விளம்பரம் அளிப்பதன்வாயிலாக பிரிக்கப்படாத இந்து குடும்பச் சொத்தின் பாகப்பிரிவினையின் மாற்றத்தை கொண்டுவருவதற்கான சட்டத் தேவைப்பாடு நிறைவேற்றப்பட்டது என்று அவர் வாதுரைத்தார். அவர் பி.1-இலுள்ள வாசகங்களை கவனத்திற்கொண்டு, அதில் பிரிக்கப்பட்டதை குறித்து ரங்கசாமி நாயுடுவின் தெளிவான விளம்புகை உள்ளதாகவும் பணிந்துரைத்தார். 11.5.1955 தேதியன்று அவரது சகோதரரை தொடர்புகொண்டதில் பி.1-இன் உள்ளடக்கங்களை விவாதிப்பதாக கருத்துரைக்கிறது. கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினையை ஏற்படுத்த விரும்பும் குடும்ப உறுப்பினர் அவரது நோக்கத்தை தெரிவிக்கவேண்டும் என்பதோடல்லாமல், அது மற்ற பங்குரிமையருக்கு தெரிவிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கவேண்டும் என்பதே சட்டத் தேவைப்பாடாகும் என்று வாதுரைப்பதற்கு இப்பொருண்மைகள் கவசமாக விளங்குகின்றது. மேல்முறையீட்டாளர் வழக்கில் நம்பகத்தன்மை அளிக்கும்வரை மூத்த

சகோதரர் பதிலளித்தார். ரங்கசாமி நாயுடு சான்றாவணம் பி.1-இல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ள தனது நிலைப்பாட்டை வற்புறுத்தும்வகையில் 16.5.1955 தேதியிடப்பட்ட கடிதம் அனுப்பினார். இந்து கூட்டுக் குடும்பத்தின் குடும்ப உறுப்பினர் ஒருவர் குடும்பத்துடனான தனது தொடர்பை அறுத்துக்கொண்டு, ழாகம் பிரிக்கப்படாத நிலையிலிருந்து விட்டு நீங்குவதற்கான காரணமே தேவையில்லை என்பது சட்டமல்ல என்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் குறிப்பிட்டார். சந்தேகமற்ற விளம்புகையே தேவையானதாக உள்ளது. அது தெரிவிக்கப்பட்டு, பி.1-ஐ வழங்கியதன்மூலம் நிறைவேற்றப்பட்டது. உயில் உண்மையானதும், வில்லங்கமற்றதும், சந்தேகத்திற்கிடமற்றதுமாகும் எனப் பொருண்மைகளின் இறுதி நீதிமன்றமான முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் கண்டறிந்தது என்று மேலும் அவர் பணிந்துரைத்தார். ரங்கசாமி நாயுடுவிற்கு தனது சகோதரிகளை மிகவும் பிடிக்கும். அவருக்கு குழந்தைகளே இல்லை. எனவே, அவரது இறப்பு வெகு தூரத்திலில்லை என்பதை உணர்ந்து அவர் ஆயுள் பாத்தியதையை தனது இரு மனைவிகளுக்கு அளித்தும், தனது ஒவ்வொரு சகோதரிகளின் மகன்களில் 4 நபர்களை தேர்ந்தெடுத்து, 4 உயில்வழி உரிமையர்களாக்கி (எங்கள் முன்புள்ள மேல்முறையீட்டாளர்கள்) பூரண உரிமையளிக்க விரும்பினார் என்ற காண்முடிவிலிருந்து அது இயல்பானதும், நியாயமானதும் எனத் தோன்றுகிறது. வழக்கு நடவடிக்கைகளின் பிரிவு 145-இன் கீழ் சான்றொப்ப சாட்சிகளால் அளிக்கப்பட்ட சாட்சியங்கள் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 69-இன் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதாக முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் சரியாகவே காணப்பட்டது. சான்றாவணம் பி.1-இன் தேதியில் உள்ள முரண்பாட்டைப் பொறுத்தவரையில், அதாவது விசாரணை நீதிமன்றத் தீர்ப்புரையின் பின்னிணைப்பில் 12.5.1955 தேதியாக குறிப்பிடப்பட்டுள்ளது தவறாகும். உண்மையான

தேதியானது *10.5.1955* ஆகும். கூட்டுக் குடும்பத்தில் பாகப்பிரிவினையை நிறைவேற்றும் தேவைப்பாட்டைப் பொறுத்தவரையில், அவர் பின்வரும் தீர்ப்புரைகளில் சார்வுற்றார்:

1. **கிருஷ்ணபாய் பிரிதார் கண்பத் ராவ் தேஷ்முக் -எதிர்- அப்பாசாஉறிப் துல்ஜாராமாராவ் நிம்பால்கர் மற்றும் பலர்** [4];

2. **அட்டகாடா ராகவம்மா மற்றும் பலர் -எதிர்- ஆட்டகாடா சென்சம்மா மற்றும் பலர்** [5].

3. **அதியாலத் காதிசுமா மற்றும் பலர் -எதிர்- அதியாலத் பிசு மற்றும் பலர்**[6],

10.5.1955-ஆம் தேதியிடப்பட்ட வெளியீட்டின்மூலம் ரங்கசாமி நாயுடு தனது தகுநிலையில் பாகப்பிரிவினை ஏற்படுத்தினார் என்று வெளிப்படுத்தும்பொருட்டு மேல்முறையீட்டாளர்கள் கு.வி.மு.ச., பிரிவு *145*-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளில் பிறப்பிக்கப்பட்ட பி.*2* ஆணையின்மேல் சார்வுற்றனர். மற்றொரு வாதுரை யாதெனில், உயில் நிறைவேற்றப்பட்டதுங்கூட தகுநிலையின் விளம்புகைக்கு நிகராகும். *(மேற்படி)* **அட்டகாடா ராகவம்மா வழக்கு மற்றும் பகவான் கிரிஷ்ண் குப்தா -எதிர்- பிரபா குப்தா மற்றும் பலர்**[7], ஆகிய வழக்குகளில் சார்வுறப்பட்டது. உயில் நிறைவேற்றப்பட்ட-திலிருந்து, ரங்கசாமி நாயுடுதான் குறிப்பிட்ட சொத்துகளை கட்டுப்படுத்திவைத்து

---

4. 1979 (4) எஸ்.சி.சி. 60
5. ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 136
6. ஏ.ஐ.ஆர். 1951 எம்.எ.டி. 561
7. 2009 (11) எஸ்.சி.சி. 33

வந்தது தெரிகிறது. ஆர். கிருஷ்ணம்மாள் மற்றும் வழக்கு நடவடிக்கைகளில் உயில் நிறைவேற்றாளரின் சாட்சியம், சொத்துகளை கையாளுவதற்கும், அவரது மிகப்பெரிய சொத்தின் ஒரு பகுதியை உயில் எழுதுவதற்கும் உயிலவருக்கு தகுதியுள்ளது என்பதை நிருபிக்கிறது. **ஜலாஜா ஷெட்டி மற்றும் பலர் -எதிர்- லக்ஷ்மி ஷெட்டி மற்றும் பலர்**[8], **உறர்தியோ ராய் -எதிர்- சகுந்தலா தேவி மற்றும் பலர்**[9] **மற்றும் சார்பாற்றுநர்களின்மூலம் கல்யாணி (இறந்தவர்) -எதிர்- நாராயணன் மற்றும் பலர்**[10], போன்ற இந்நீதிமன்றத்தின் அறிக்கையிடப்பட்ட தீர்ப்புரைகளில் சார்வுறப்பட்டன. ரங்கசாமி நாயுடு உயிலின் சொத்துகளை குறித்துக்காட்டவும், தீர்வுசெய்யவும் தகுதியுடையவர் என்பதே மேல்முறையீட்டாளரின் பணிந்துரையாகும். ரங்கசாமி நாயுடு தனது பணத்தில் தனது பெயரிலேயே சொத்துகளை வாங்கினார். அது அவரது சொந்த சொத்தாக அவரால் கையாளப்பட்டது. வரம்பெல்லை வரையிலான பாகப்பிரிவினை கட்டாயமல்ல. வழக்கு நடவடிக்கைகளின் பிரிவு 145-இன் சான்றொப்ப சாட்சியத்தில் ஒருவரின் வாக்குமூலத்தை பார்வையிட்டதன்பேரில் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 69-இன் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. அ.சா.1-ஆல் உயிலவரின் கையொப்பம் அடையாளங்காணப்பட்டது. அசல் உயிலானது வழக்கு நடவடிக்கைகளின் பிரிவு 145-இன்படி தாக்கல் செய்யப்பட்டது. ஆர். கிருஷ்ணம்மாள் பிரிவு 145-இன் வழக்கு நடவடிக்கைகளையும், அதைத் தொடர்ந்து வரும், அதாவது, மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963 ஆகிய வழக்குகளையும் உயிலின்

---

8. 1973 (2) எஸ்.சி.சி. 773

9. 2008 (7) எஸ்.சி.சி. 46

10. 1980 (2) எஸ்.சி.ஆர். 1130

அடிப்படையாகக் கொண்டுள்ளார். உயிலினைக் குறித்து எழுவினா வனையப்பட்டிருந்தாலுங்கூட எதிர்மேல்முறையீட்டாளர்கள் ஒத்திசைவை ஏற்றுக்-கொண்டனர். உயிலானது பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றும், பதிவு செய்தது உளமார்ந்த செயல் என்பதையும் நினைவிற்கொண்டுள்ளோம். உயிலில் குறிப்பிட்டுள்ள வாசகங்களும், சூழ்நிலைகளும், ரங்கசாமி நாயுடு தனது சொத்துகளில் சிலவற்றை அவர் மிகவும் அன்பு வைத்திருந்த தனது சகோதரிகளின் மகன்களுக்கு கொடுக்கவிரும்பினார் என்பதே அவரது உள்நோக்கமாக இருந்தது தெளிவாகிறது. அதுவே மேல்முறையீட்டாளர்களின் வாதுரையாகும். **கே.எஸ். பழனிசாமி (இறந்தவர்) சட்டப்படியான சார்பாற்றுநர்கள் மூலம் மற்றும் பலர் -எதிர்- இந்து கம்யூனிட்டி இன் ஜெனரல் மற்றும் சிடிசன்ஸ் ஆப் கோபிசெட்டிபாளையம் மற்றும் பலர்**[11]-இல் இந்நீதிமன்றத்தின் காரணவிளக்கத்திற்கு நாங்கள் ஈர்க்கப்படுகிறோம். மேலும் மேல்முறையீட்டாளர்களின் பணிந்துரை யாதெனில், விதவையான ஆர். கிருஷ்ணம்மாளுக்கு அவரது ஆயுட்காலத்தின்போது வரையறுக்கப்பட்ட சொத்துகள் மட்டுமே இருந்தது என்றும், அதுவும் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் கீழ் பூரண உரிமையாக விரிவடையவில்லை என்பதுமாகும். மு.வ.எண் *71/1958*-இல் ஆர்.கிருஷ்ணம்மாளால் கோரப்பட்ட முதல்நிலை பரிகாரமானது உயிலின் கீழான உரிமையின் அடிப்படையிலேயேயாகும் என்று வாதுரைக்கப்பட்டது. இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் கீழ் அவர் ஏதும் கோரியதில்லை. உயிலவரின் உள்நோக்கத்தை அறிந்து அதை அவர் செய்கையின்மூலம்

---

11. 2017 (13) எஸ்.சி.சி. 15

ஏற்றுக்கொண்டார். அவருக்கு உயில்வழி கிடைக்கப்பெற்ற சொத்தானது வரம்புடை சொத்தாகும், மேலும் அவரது சகோதரிகளின சொத்துகளையும் சேர்த்து பராமரிக்க-வேண்டும் என்ற வலிமையான நிபந்தனையுடனானது; அவரது இறப்பிற்குப் பின்னர் சொத்தானது அவரது சகோதரிகளின் பிள்ளைகளுக்கு உரிமை மாற்றம் செய்யப்படவேண்டும். (மேற்படி) **சாது சிங் வழக்கு** என்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மேல் வலுவான நம்பிக்கை வைக்கப்பட்டது. உயிலினை விளக்கியதன் மூலம், உயிலவர் மற்ற சொத்துகளை பராமரிப்பதற்காகவே கிருஷ்ணம்மாளுக்கு உரிமை அளித்துள்ளார் என்றும், உயிலில் உள்ளடங்கியுள்ள வழக்குரை அட்டவணை சொத்து அவரது பராமரிக்கும் உரிமைக்கு மாற்றாக அளிக்கப்பட்டது என வாதுரைத்திடமுடியாது என்றும், இந்து வாரிசுரிமைச் சட்டம் அமலுக்கு வந்தபின் அது பூரண உரிமையாக மாற்றப்படவேண்டும் என்றும் மேல்முறையீட்டாளர்கள் வாதுரைத்தனர். பின்வரும் தீர்ப்புரைகளின்மேல் சார்வுறப்பட்டது:

1. **சிவ்தேவ் கவுர் (இறந்தவர்) சார்பாற்றுநர் மூலம் மற்றும் பலர் -எதிர்- ஆர்.எஸ். க்ரேவால்** [12]
2. **சரத் சுப்ரமணியன் -எதிர்- சௌமி மசும்தார் மற்றும் பலர்**[13] **மற்றும்**
3. **கம் இராமகிருஷ்ணரெட்டி மற்றும் பலர் -எதிர்- கடம் இராமி ரெட்டி மற்றும் பலர்**[14]

---

12. 2013 (4) எஸ்.சி.சி. 636
13. 2006 (8) எஸ்.சி.சி. 91
14. 2010 (9) எஸ்.சி.சி. 602

36. உயர் நீதிமன்றத்தின் காண்முடிவைப் பொறுத்தவரையில், ஆணை II, விதி 2-இன் கீழ் உயில்வழி உரிமையரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தடைசெய்யப்பட்டது, மேல்முறையீட்டாளர்களுக்கு (உயில்வழி உரிமையர்) ஆதரவாக இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 119(1)-இன் கீழ் அடைவுற்ற உரிமையைப் பெற்றிருந்தாலுங்கூட, ஆர். கிருஷ்ணம்மாள் இறந்தபின்னரே உயில்வழி சொத்து குறித்து வழக்கு தொடர்வதற்கான வழக்குமூலம் எழும் என்று வாதுரைக்கப்பட்டது. குறிப்பிட்ட சொத்துகளை உரிமை மாற்றம் செய்யும் உட்கருத்துடன் செயல்படும் ஆர். கிருஷ்ணம்மாளை கையாளுவதற்கு மு.வ. எண் 36/1963-ஆனது பாதுகாப்பான செயல்பாடாகும். மு.வ. எண் 36/1963-இன் வாதிகள்-மேல்முறையீட்டாளர்கள், 1958-ஆம் ஆண்டைய உரிமையியல் வழக்கின் தரப்பினர்கள் அல்ல, மேலும், மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவானது மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாது. ஆயுள் பாத்தியதையின் வாயிலான விதவையான ஆர். கிருஷ்ணம்மாளுக்கு அளிக்கப்பட்ட சொத்துகள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அவருக்கு எந்த உரிமையுமில்லை. அவர் மேல்முறையீட்டாளர்களை தரப்பினர்களாக சேர்க்காமல் ஒத்திசைவை செய்திருக்கக்கூடாது. தீர்ப்பாணையானது தொடக்கத்திலேயே விழலானது என விவரிக்கப்பட்டுள்ளது, எனவே அவ்வகையான தீர்ப்பாணையை அல்லது நடவடிக்கையை விளம்புகை செய்யவேண்டியதில்லை. மீதமுள்ள சொத்துகள் தொடர்பாக தனி நடவடிக்கையை தொடர்வதற்கு வாதிகளுக்கு உரிமையுள்ளது என மு.வ. எண் 36/1963-இன் வழக்குரையை நுண்ணாய்வு செய்ததிலிருந்து தெளிவாகிறது என மேலும் வாதுரைக்கப்பட்டது. கிருஷ்ணம்மாளுக்கு ஆயுள் பாத்தியதை மட்டுமே உள்ளது என்ற விளம்புகையை எதிர்மேல்முறையீட்டாளர்கள்

ஒப்புக்கொண்டனர், எனவே, ஆர். கிருஷ்ணம்மாளுக்கு பூரண உரிமையுள்ளது என்று வாதுரைப்பதற்கு அவர்கள் தடைசெய்யப்பட்டனர். ஆர். கிருஷ்ணம்மாள் இறந்தது முதல் 1977 ஆண்டிற்கு பின்னரே வழக்குமூலம் எழும். **பெ பெரி அபார்ட்மெண்ட் பி. லிமிடெட் மற்றும் பலர் மற்றும் ஜோபா மற்றும் பலர்**[15] **மற்றும் உஷா சுப்பா ராவ் -எதிர்- பி.இ. விஷ்வேஷ்வரய்யா**[16]-இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின்மேல் சார்வுறப்பட்டது. எந்தவொரு சட்டப்படியான தேவைப்பாட்டிற்காகவோ அல்லது குடும்பத் தேவைக்காகவோ சொத்துகளை அளிப்பதற்கு கிருஷ்ணம்மாளுக்கு எந்த உரிமையுமில்லை என்று வாதுரைக்கப்பட்டது. மு.வ. எண் 89/1983-இன் நடவடிக்கை மோசடியானது மற்றும் வஞ்சகமானது என எதிர்க்கப்பட்டு, மேலும், எழுவினா வனையப்பட்டது. ஒத்திசைவுத் தீர்ப்பாணை பதிவு செய்யப்படவில்லையாதலால், எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு எந்த உரிமை மாற்றமும் செய்யயியலாது என்ற வாதுரையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1982-ஆம் ஆண்டைய உயிலினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது காலவரையறைக்குட்பட்டு தடைசெய்யப்பட்டது என்று மேலும் பணிக்கப்பட்டது. உயிலின் உண்மைத்தன்மையை ஏற்றுக்கொண்டதன்பேரிலும் மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963-இன் உரிமை வழக்குகளின் ஒத்திசைவு ஆகியவற்றை துணைகொண்டு பார்க்கையில் உயிலின் செல்லுந்தன்மையை எதிர்ப்பதிலிருந்து எதிர்மேல்முறையீட்டாளர்கள் தடைசெய்யப்படுகின்றனர் என்று மேலும் வாதுரைக்கப்பட்டது. மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963-இலுள்ள ஒரே தரப்பினர்களுக்கு இடையேயான முந்தைய

---

15. 2006 (13) எஸ்.சி.சி. 737

16. 1996 (5) எஸ்.சி.சி. 201

ஒத்திசைவு தீர்ப்பாணை முற்றிலும் செல்லாதது என்ற விளம்புகையின்றி மு.வ. எண் 649/1985-ஐ தீர்ப்பாணையிட்டதில் உயர் நீதிமன்றம் பிழைபுரிந்துள்ளது. அவ்வாறான எந்தவொரு விளம்புகையும் 1982-ஆம் ஆண்டின் காலவரம்பால் தடைசெய்யப்படும். மு.வ. எண் 36/1963-இன் தீர்ப்பாணையின்கீழ் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு ஆயுள் பாத்தியதை மட்டுமே உள்ளது என்பதால் பிரிவு 14(2)-ஆனது பொருந்தத்தக்கதாகும். எதிர்மேல்முறையீட்டாளர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட எஞ்சுநர் உரிமைமூல சொத்தின் உரிமையானது விசாரணை நீதிமன்றத்தால் எதிர்மறையாக்கப்பட்டது, மேலும், அதற்கு எதிராக எந்த மேல்முறையீடும் செய்யப்படவில்லை. பிரிவு 14(1)-இன் கீழ் கிருஷ்ணம்மாள் பூரண உரிமை பெற்றிருந்தார் என்ற அடிப்படையில், அவர் இறந்ததன்பேரில், ரங்கசாமி நாயுடுவின் பாகத்திலுள்ள 50 சதவீத சொத்தின் 1/8 பாகத்தை அவரது சகோதரர் மற்றும் சகோதரிகளின் மகன்களுக்கு சரிசமமாக பெற்றுக்கொள்ளும் உரிமையுண்டு என்பதே மேல்முறையீட்டாளர்களின் பணிந்துரையாகும்.

37. மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. கிரி அவர்களின் வாதத்தைக் கேட்டோம். கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. நாகமுத்து, மு.வ. எண் 89/1983-இலுள்ள முதல் பிரதிவாதியிடமிருந்து உரிமை மாற்றம் பெற்றவர்களின் வாதுரைகளை ஆதரித்து, அவர்களது பணிந்துரைகள் பரிசீலிக்கப்படவோ, ஏற்றுக்கொள்ளப்படவோ இல்லை என்று முறையிட்டார்.

38. மேல்முறையீட்டாளர்களின் சார்பாக கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திருமதி. வி. மோகனா அவர்களின் பின்வரும் பணிந்துரைகளை நாங்கள் கவனித்தோம். பாகப்பிரிவினையின் மாற்றத்தைப் பொறுத்தவரையில் போதிய வாதுரைகள் உள்ளன. 10.5.1955 தேதியிடப்பட்ட "நவ இந்தியா" நாளிதழ் குறித்து

ஆட்சேபணை செய்யப்படவில்லை. கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளின் உயில் நிறைவேற்றுநரின் சாட்சியத்தில் எங்களது கவனத்தை ஈர்த்துள்ளார். விளம்புகையானது தொரிவிக்கப்பட்டது. ரங்கசாமி நாயுடுவிற்கு சொத்துகளை உயில்வழி உரிமையளிப்பதற்கான தகுதியுள்ளது. சகோதரர்கள் சொத்துகளை தனித்தனியே கையாண்டனர். இதுதொடர்பாக, **உறர்தியோ ராய் -எதிர்- சகுந்தலா தேவி மற்றும் பலர்**[17]-இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையில் சார்வுறப்பட்டது. வரம்பெல்லைகள் மூலம் பாகப்பிரிவினையை நிரூபிக்கத்தேவையில்லை. கு.வி.மு.ச.-இன் பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளின் வாயிலாக அசல் உயிலானது நீதித்துறை நடுவர் முன்பு தாக்கல் செய்யப்பட்டது. உயிலானது பதிவு செய்யப்பட்ட ஆவணமாகும். சாட்சியச் சட்டத்தின் பிரிவு 33-இன் கீழ் உயில் மெய்ப்பிக்கப்பட்டது. நடுவர் நீதிமன்றமும் ஒரு நீதிமன்றமே. **கிருஷ்ணய்யா சூர்யா ராவ் பகதூர்காரு மற்றும் பலர் (பிரதிவாதிகள்) -எதிர்- வெங்கடகுமார மஉறிதாதி சூர்யாராவ் பகதூர்காரு**[18]-இல் சார்வுறப்பட்டது. மு.வ. எண் 71/1958-இன் முந்தைய வழக்கு நடவடிக்கைகள் மேல்முறையீட்டாளர்களை கட்டுப்படுத்தாது. ஆர். கிருஷ்ணம்மாளுக்கு சொத்துகள் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிமையில்லை. மு.வ.எண் 71/1958-இன் தீர்ப்புரையானது இல்லாநிலையதாகும். மேல்முறை- யீட்டாளர்க்ள தங்களது உரிமைகளை கைவிட்டதேயில்லை. உ.வி.மு.ச.-இன் கட்டளை II விதி 2-இன் கோட்பாடானது பொருந்தத்தக்கதல்ல. மேல்முறையீட்டாளர்களுக்கு அடைவுற்ற உரிமை இருந்தபோதிலும்,

---

17. (2008) 7 எஸ்.சி.சி. 46

18. ஏ.ஐ.ஆர். 1933 பி.சி. 202

ஆர். கிருஷ்ணம்மாள் இறக்கும்வரை சுவாதீனத்தைப் பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்திருக்கக்கூடாது. மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையின்படி, மீதமுள்ள சொத்துகள் வாதிகளின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன. எனவே, மு.வ. எண் 36/1963-இல் அவர்களின் உரிமையை அவர்கள் தக்கவைத்துக்கொண்டனர். உ.வி.மு.ச.-இன் கட்டளை II விதி 2-இன் வழக்கெழு வினாவானது வாதுரைக்கப்படவோ அல்லது உயர் நீதிமன்றத்தின் காண்முடிவு ஏதும் அளிக்கப்படவோவில்லை. பாகப்பிரிவினையின் உரிமை வழக்கில் சுவாதீனத்திற்கான வேண்டுரையுமுள்ளது. எதுவாயினும், இறுதி தீர்ப்பாணையின் வழக்கு நடவடிக்கைகள் முடிந்தபின்னரே, பாகப்பிரிவினை செயல்பாட்டிற்கு வரக்கூடும். காலவரையறையின் வினா எதிர்மேல் முறையீட்டாளர்களால் விவாதிக்கப்படவில்லை, எவ்வாறாயினும், காலவரையறையானது 1977 வருடத்திலிருந்துதான் தொடர்கிறது. உயிலானது சொத்தைப் பேணுவதற்கு மாற்றீடாக இருக்காது. இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(2)-இன் கீழ் வரும் வழக்காகும். (மேற்படி) **பகவந் பி. சுலாகே -எதிர்- திகம்பர் கோபால் சுலாகே மற்றும் பலர்** என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவினை வேறுபடுத்திக்காட்ட முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1027 முதல் 1032/ 2013-இல் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. ஓம் பிரகாஷ் மற்றவற்றிற்கிடையே தனது எதிருரையில் கூட்டுக் குடும்பச் சொத்தின் பாகப்பிரிவினையும், கூட்டுப் பிரிவீடும் மெய்ப்பிக்கப்பட்டன என வாதுரைத்தார். **அட்டகாடா ராகவம்மா மற்றும் ஒருவர் -எதிர்- ஆட்டகாடா சென்சம்மா மற்றும் ஒருவர்**[19], **ஜானகி நாராயண் போயர்**

---

19. எ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 136

-எதிர்- நாராயண் நாம்தியோ காதம்[20] மற்றும் (மேற்படி) உறர்தியோ ராய் என்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளில் குறிப்பீடு செய்தார். உயிலானது, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 63-இன் கீழும், இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 68-இன் கீழும் உள்ளடக்கப்பட்டது. எஞ்சுநர் உரிமை மூலம் இறங்குரிமை பெறும் கூட்டுக் குடும்பச் சொத்துகளின் உரிமையானது, அனைத்து கீழமை நீதிமன்றங்களாலும் எதிர்மறையாக்கப்பட்டது. மேலும், அத்தகைய காண்முடிவிற்கு எதிராக மேல்முறையீடோ அல்லது குறுக்கு மேல்முறையீடோ ஏதுமில்லை.

உரிமையியல் மேல்முறையீடு எண் 1039-1044/2013

1982-ஆம் ஆண்டில் (மு.வ. எண் 649/1985)-இல் உயிலை எதிர்த்து வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீடானது காலவரையறைக்குட்பட்டு தடைசெய்யப்பட்டுள்ளது என்று எதிர்வழக்குரையில் வாதுரைக்கப்பட்டது. மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963-இன் ஒத்திசைவை கருத்திற்கொண்டு அவர்களுக்கு மறுப்புத்தடை விதிக்கப்பட்டது. முந்தைய இரு வழக்குகளின் ஒத்திசைவு தீர்ப்பாணையை இல்லாநிலையது என்ற விளம்புகை செய்யாமல், மு.வ. எண் 649/1985-ஐ தீர்ப்பாணையிடமுடியாது. அத்தகைய பரிகாரம் 1982-ஆம் ஆண்டில் காலவரையறையால் தடைசெய்யப்பட்டது. மு.வ. எண் 36/1963-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையை கருத்திற்கொண்டு, இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1)-ஆனது பொருந்தாது. எஞ்சுநர் உரிமையின் அடிப்படையிலான வழக்கு விசாரணை நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது, வாதிகளால் அதற்கெதிராக எந்த மேல்முறையீடும் தாக்கல் செய்யப்படவில்லை. பிரிவு 14(1)-இன் கீழான காண்முடிவு

---

20. (2003) 2 எஸ்.சி.சி. 91

உறுதிசெய்யப்பட்டால், கிருஷ்ணம்மாளின் இறப்பிற்குப் பின்னர், வி. ரங்கசாமி நாயுடுவின் பாகத்திலுள்ள 50 சதவீத சொத்தின் 1/8 பங்கினை சட்டப்படி அவரது சகோதர, சகோதரிகளின் மகன்கள் சமமாக பெற்றுக்கொள்ள உரிமையுடையவர்களாவர். கு.வி.மு.ச.-வின் வழக்கு நடவடிக்கைகளின் பிரிவு 145-இன்படி வாதிகள் உயிலை குறித்து அறிந்திருந்ததால், 1982-இல் உயிலை எதிர்த்துரைக்க அவர்கள் உரிமையுடையவர்களல்ல.

39. மு.வ. எண் 89/1983-இலுள்ள 13 முதல் 34 வரையிலான பிரதிவாதிகள் உ.மே.எண் 1045-1050/2013-இன் மேல்முறையீட்டாளர்களாவர். அவர்கள் மற்ற உரிமையியல் வழக்கிலும் (மு.வ. எண் 649/1985) பிரதிவாதிகளாவர். மு.வ. எண் 89/1983-இல் 1-ஆம் பிரதிவாதியும் மற்றும் மு.வ. எண் 649/1985-இல் 1-ஆம் பிரதிவாதியுமான எ. அழகரிசாமியிடமிருந்து 7 ஏக்கர் 4 சென்டை அவர்கள் வாங்கியதாக வாதுரைக்கப்பட்டது. அது உரிமை வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரும், 1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டம் அமலுக்கு வந்தபின்னரும் வாங்கப்பட்டதாகத் தெரிகிறது. பிரிவு 14(1)-ஐ சுட்டிக்காட்டியதன்பேரில், ஆர். கிருஷ்ணம்மாளுக்கு ஆயுள் பாத்தியதையாக அளிக்கப்பட்ட உரிமையானது, சட்டம் அமலுக்கு வந்தபின்னர் தனிப்பட்ட உரிமையாக மாறியது. பிரிவு 14(2)-ஐ குறிப்பிட்டதன்பேரில் உயில் உண்மையற்றது, அதில் பாகப்பிரிவினை ஏதுமில்லை என்ற லட்சுமையா நாயுடுவின் வாதுரையின்படியுங்கூட, பிரிவு 14(1)-இன் கீழ் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு பூரண உரிமை பெறுவதற்கு பிரிவு 14(2)-இன் கீழ் கட்டுப்பாடு ஏதுமில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையைக் குறித்து லட்சுமையா நாயுடுவின் மகன்கள் மற்றும்

பேரன்களிடமிருந்து எந்த ஆட்சேபணையும் வரவில்லையென்றால், தற்போது 1932-இன் பாகப்பிரிவினை மற்றும் உயிலின் நிறைவேற்றுகை குறித்தும் எந்த பிரச்சினையும் அவர்கள் எழுப்பமுடியாது என்று பணிக்கப்பட்டது. 1955-இல் இரங்கசாமி நாயுடுவும், 30.4.1977-இல் ஆர். கிருஷ்ணம்மாளும் இறந்ததன்பேரில், இரங்கசாமி நாயுடுவின் சகோதரிகளின் குடும்பத்திற்கிடையேயான வாய்மொழி பாகப்பிரிவினையின்கீழ், மேல்முறையீட்டாளர்களால் வாங்கப்பட்ட சொத்தானது அவர்கள் வாங்கிய எ. அழகிரிசாமியின் சுவாதீனத்திற்கு வந்தது. இதுநாள்வரை தரப்பினர்களில் ஒருவரும் கிரைய ஆவணத்தை எதிர்க்கவேயில்லை, கிரையத்தை எதிர்க்காமலேயே 3 ஆண்டுகளுக்குப் பின்னர் லட்சுமையா நாயுடுவின் மகன்கள் மு.வ. எண் 649/1985-ஐ தாக்கல் செய்தனர். உயர் நீதிமன்றத்தின் காண்முடிவுகளில் தலையீடு செய்யப்பட்டதற்கு எதிராக முறையீடு செய்யப்பட்டது.

40. லட்சுமையாவின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞரான திரு. குரு கிருஷ்ணகுமார் அவர்கள் விளம்புகை பி.1-ஆனது கடுஞ்சந்தேகத்தினால் மறைக்கப்பட்டுள்ளதாகப் பணித்தார். தேதியிலுள்ள முரண்பாடானது, அதாவது, 10.5.1955-ஆக அல்லாமல் 12.5.1955-ஆக இருப்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இந்நீதிமன்றத்தின் முன்பாக சான்றாவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டபொழுதிலும், பி.1-இன் தேதியானது விடுபட்டுள்ளது என்பது தெளிவாகிறது. அ.சா.1-இன் குறுக்கு விசாரணையும், அவற்றின்மேலான நம்பிக்கையும் தவறாக வைக்கப்பட்டதாகும். இரண்டாவதாக பி.1-ஆனது கையொப்பமிடாத ஆவணமாகும் என்று மேலும் வாதுரைக்கப்பட்டது. உயிலவர் அதனை விளம்பரம் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளார் என்று எவரும் சாட்சி அளிக்கவில்லை. 1932-ஆம் ஆண்டில் நடந்ததாக கூறப்படும் பாகப்பிரிவினையை மீண்டும் உறுதிசெய்யும்படியான

விளம்புகை கோரப்பட்டு, அப்பாகப்பிரிவினை மூன்று நீதிமன்றங்களாலும் நம்பப்படவில்லை என்று மேலும் வாதுரைக்கப்பட்டது. பி.1-ஆனது கூறப்பட்ட பாகப்பிரிவினையிலிருந்து தனித்துவமானதாக கருதமுடியாது. சாட்டுரைக்கப்பட்ட பாகப்பிரிவினை நம்பகமற்றதாக காணப்பட்டால், பி.1-ஆனது நிலைத்துநிற்பதற்கான நிலையில்லை. மேல்முறையீட்டாளர்களால் சார்வுறப்பட்ட வார்த்தைகளானது தொடர்-இறந்தகாலத்திலுள்ளது. அதைப்பொறுத்தவரையில் "இதன்மூலம் நான் எனது தனிப்பட்ட பாகப்பிரிவினையின் மாற்றத்தை உறுதிசெய்கிறேன்" என கூறப்பட்டுள்ளது, பிரிவினையானது அந்த நாள் முதல் செயல்பாட்டிற்கு வந்திருக்கக்கூடாது என்று வாதுரைக்கப்பட்டது. பி.1-இன் எதிர்வினையும், அதன் பதில் மறுப்புரையும், பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளின்கீழ் பி.43 மற்றும் பி.44-ஆக குறியீடு செய்யப்பட்டது, அது தற்போதைய வழக்கு நடவடிக்கைகளில் சான்று பொருளாக்கப்-படவில்லை என்ற காரணத்தின்பேரில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் காண்முடிவுகள் நெறிதிறம்பியதாக எதிர்த்துரைக்கப்பட்டது. பி.2-இன் உத்தரவானது அதன்மேலான எந்த காண்முடிவுகளையும் வெளிப்படுத்தாது. மேலும் பாகப்பிரிவினை என்ற சொல் விரிவான பொருள்கொண்டு பயன்படுத்தப்பட்டது என வாதுரைக்கப்பட்டது. பி.1-இன்மேல் சார்வுற்றபோதிலும், வரம்பெல்லைகளில் உண்மையான பாகப்பிரிவினையாக இல்லாமல், பிரிப்பதற்கான மாற்றத்திற்கு மட்டுமே வழிவகை செய்யும். **அட்டகாடா ராகவம்மா -எதிர்- ஆட்டகாடா சென்சம்மா**[21]-இன்மேல் சார்வுறப்பட்டது. பிரிக்கப்படாத குடும்ப உறுப்பினர்களுக்கு கூட்டுப் பிரிவினையின் மாற்றம் ஒருசார்பாக தெரிவிக்கப்பட்டிருந்தாலுங்கூட, குறிப்பிட்ட நோக்கத்திற்காக

---

21. ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 136

சொத்தின் பகுதியானது குடும்ப உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றே சட்டநிலைப்பாட்டின்படி குறிப்பிடப்பட்டுள்ளது. **நானிபாய் மற்றும் பலர் -எதிர்- கீதா பாய் ரமா கங்கே**[22], (மேற்படி) **பகவந்த் பி. சுலேகி -எதிர்- திகம்பர் கோபால் சுலேகி மற்றும் பலர்**, அதைத்தவிர (மேற்படி) **கல்யாணி (இறந்தவர்) அவரது சார்பாற்றுநர்கள் மூலம் -எதிர்- நாராயணன் மற்றும் பலர்** என்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளில் சார்வுறப்பட்டன. (மேற்படி) **அட்டகாடா ராகவம்மா** என்ற வழக்கில், மற்ற பங்குரிமையர்களின் ஒப்புதலின்றியும், வரம்பெல்லைகளில் பாகப்பிரிவினை இன்றியும், சொத்தின் குறிப்பிட்ட பகுதிகளை ஒருதலைப்பட்சமாக உயில் எழுதமுடியுமா? என்பதான குறிப்பிட்ட எழுவினாவை இந்நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. அசல் உயிலை தாக்கல் செய்யாதது, எதிர்ப்பின் அடிப்படையாகும். விசாரணை நீதிமன்றத்தின் காண்முடிவான, பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கையில் அசல் உயில் தாக்கல் செய்யப்பட்டதென்பதும் பிழையானதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. உயிலை தாக்கல் செய்வதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகள் உயிலை நிரூபிப்பதற்கான ஒரு களமாக கருத இயலாததால் அதை கட்டுப்படுத்திடமுடியாது என்றும், பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளின் சான்றுரையான பி.7-இல் நம்பிக்கை வைக்கப்பட்டுள்ளது எதிர்ப்புக்குள்ளாக்கப்பட்டது மேற்படி வகையத்தின் கீழான தீர்ப்பினை சாட்சியச் சட்டத்தின் பிரிவு 41-ஐ கருத்திற்கொண்டு பார்க்கையில் உயிலை மெய்ப்பிப்பதற்கு அறுதியான சாட்சியமாக கருதமுடியாது என்பதாகும். சாட்சியச் சட்டத்தின் பிரிவு

---

22. 1959 எஸ்.சி.ஆர். 479

42-ஆனது குறித்துக்காட்டப்பட்டுள்ளது. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 69-இன் ஆக்கக்கூறுகள் நிறைவேற்றப்படவில்லை என்று மேலும் வாதுரைக்கப்பட்டது. கு.வி.மு.ச.-இன் பிரிவு 145-இன் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பிரிவு 69-இன் நிபந்தனைகள் பயன்படுத்தப்படவில்லையெனில், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 68-இன் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு அச்சாட்சியத்தை பயன்படுத்திடமுடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பிரிவு 68-இன் தேவைப்பாடுகளை நிறைவேற்றாத சாட்சியம், சாட்சியச் சட்டத்தின் பிரிவு 69-இன் கீழான உயிலை நிரூபிப்பதற்கு பயன்படுத்திடயியலாது என்று மேலும் வாதுரைக்கப்பட்டது. மற்றவகையிலுங்கூட, அசல் உயில் தாக்கல் செய்யப்படாதவிடத்தும், உயிலவரின் கையொப்பத்தை நிரூபிப்பதற்கு சான்றேதுமில்லாதவிடத்து, பி.7-இன் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்படவில்லை என வாதுரைக்கப்பட்டது. பி.சா.1, உயிலவரின் கையொப்பத்தை அறிந்திருக்கவேயில்லை என்பதால் இந்த நடைமுறையை ஏற்றுக்கொள்ளமுடியாது. உயிலி சூழ்ந்துள்ள சந்தேகத்திற்குரிய சூழல்களை விவரிக்கமுடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உயிலை கூட்டுப் பாகப்பிரிவினை மாற்றத்தின் விளம்புகையாக எடுத்துக்கொள்ளமுடியாது என்ற வாதம் விவாதிக்கப்பட்டது. மிதாக்ஷர சட்டத்தின் கீழ் பாகப்பிரிவினையானது தொடங்கப்பட்ட நாளான, அதாவது, 1.6.1955 அன்று ரங்கசாமி நாயுடு இறந்தபின்னர், பிரிவு 145-இன் வழக்கு நடவடிக்கைகளின்படி உயில் வெளிப்படுத்தப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 33-ஆனது பொருந்தாது என மேலும் வாதுரைக்கப்பட்டது. ஒரு தரப்பினர் மற்ற வழக்கு நடவடிக்கைகளின்கீழ் தரப்பினராக உரிமைகோரினால்தான் பிரிவு 33-இன் கீழான விளக்கமானது பொருந்தக்கூடியது என்பதே இதன் காரணமாகும். கிருஷ்ணம்மாளின் தரப்பினராகவுள்ள மேல்முறையீட்டாளர் (மு.வ. எண் 89/1983-இல் சட்டப்படி

பின்னுரிமையராக இருக்கின்ற வாதி) உரிமை கோரவில்லை என்று வாதுரைக்கப்பட்டது. மேலும் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1)-ஆனது பொருந்தக்கூடியது என வாதுரைக்கப்பட்டது.

41. எதிர்மேல்முறையீட்டாளர்-திரு.இராகவாச்சாரியின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் பின்வருமாறு வாதுரைத்தார்:

> பாகம் ஏதும் பிரிக்கப்படவில்லை. 12.5.1955 அன்று வெளியிடப்பட்ட செய்தியில் முந்தைய பாகப்பிரிவினை குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருதலைப்பட்சமான விளம்புகையானது ஏற்புடையதல்ல. உயிலவர், உணவு குழாயில் ஏற்பட்ட புற்று நோயால் அவதியுற்று குழாய் மூலம் உணவருந்தினார் என்றும், மேலும் அவர் சுயநினைவின்றி படுத்தப்படுக்கையாக தனது கடைசி நாட்களை எண்ணிக்கொண்டிருந்தார் என்ற சந்தேகத்திற்குரிய சூழ்நிலைகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் நிலை சாட்சியத்தை அனுமதிப்பதற்கான கேள்வி எழுப்பப்படவில்லை. சாட்டுரைக்கப்பட்ட உயிலில் கருநிற பகுதியும் இடைசேர்க்கப்பட்ட வரிகளும் உள்ளன. கூட்டுக் குடும்பச் சொத்துகளை பாகம் பிரிப்பதற்காக விதவையான ஆர். கிருஷ்ணம்மாளால் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. 71/1958-இல் அவர் கூட்டுக் குடும்பத்தின் அனைத்து 93 வகையிலான சொத்துகளை பட்டியலிட்டு, அதில் பாதி பாகத்திற்கு உரிமை கோரினார் என்று மேலும் வாதுரைக்கப்பட்டது. உரிமையியல் வழக்கு ஒத்திசைவு செய்யப்பட்டு, அவர் 16 வகையிலான சொத்துகளை ஏற்றுக்கொண்டு, லட்சுமையா நாயுடுவின் மகன்களுக்கு ஆதரவாக 77

வகையிலான சொத்துகளின் உரிமைகளை உறுதிசெய்துகொண்டார். (எங்கள் முன்புள்ள மேல்முறையீட்டாளர்களின் மத்தியில்) ஆர். அழகிரிசாமி மற்றும் வி. கல்யாணசாமி மு.வ. எண் 36/1963-ஐ தாக்கல் செய்தனர், மேலும், லட்சுமையா நாயுடுவின் பிள்ளைகளும் தரப்பினர்களாக்கப்பட்டனர். மு.வ. எண் 71/1958-இல் ஒத்திசைவை ஏற்படுத்திய ஆர். கிருஷ்ணம்மாளின் உரிமையானது, அவருக்கு ஆயுள் பாத்தியதை மட்டுமே உள்ளது என்று அவர்கள் கருதுவதால் அவர்களால் எதிர்க்கப்பட்டது. பிரதிவாதியான ஆர். கிருஷ்ணம்மாள், பிரிவு 14(1)-இன் கீழ் தமக்கு பூரண உரிமையுள்ளதாகவும், எனவே ஒத்திசைவை ஏற்படுத்த அதிகாரமுள்ளதாகவும் வாதுரைத்தார். ஆர். கிருஷ்ணம்மாளின் ஆயுட்காலத்திற்குப் பின்னர் 16 வகையிலான சொத்துகளிலிருந்து 2 வகையான சொத்துகளுக்கு மு.வ. எண் 36/1963-இல் ஒத்திசைவை ஏற்படுத்தியதன்மூலம் மு.வ. எண் 36/1963-இன் வாதிகள், ஆர். கிருஷ்ணம்மாளின் மேலான உரிமைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களது உரிமை கோரிக்கையை விட்டுக்கொடுத்து, 5 வகையிலான சொத்துகளை ஆர். கிருஷ்ணம்மாள் மூன்றாம் தரப்பினர்களுக்கு விற்பதை ஏற்றுக்கொண்டனர் என்று பொருள்படுகிறது. மு.வ. எண் 36/1963-ஐ தவிர வாதியால் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 732/1981-இலும் குறிப்பீடு செய்யப்பட்டது. மேற்படி உரிமை வழக்கில், வாதிகள், மு.வ. எண் 36/1963-இல் அவர்கள் பாதுகாத்து வைத்த இரண்டுவகை சொத்துகளை பிரிக்கும்படி கோரினர். மு.வ. எண் 71/1958-இல் ஆர். கிருஷ்ணம்மாளின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்துகள் அவருக்கு சொந்தமானது, அச்சொத்துகள் அவர் இறக்கும்வரை அவரது சுவாதீனத்திலேயே இருந்தது

என்ற விளைவிற்கு மு.வ. எண் 732/1981-இன் வாதுரையில் எங்களது கவனம் ஈர்க்கப்பட்டது. வேறுவகையில் கூறவேண்டுமென்றால், உயில்மூலம் உரிமையேதும் ஏற்படுத்தப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1974-இல் உரிமை கைத்துறக்கப்பட்டு, அது 1981-ஆம் ஆண்டில் உறுதிப்படுத்தப்பட்டது, ஆகவே, முரண்தடை, இசைவிணக்கம் மற்றும் கைத்துறத்தல் போன்ற கோட்பாடுகளை ஈர்க்கிறது என்பதாகும். மு.வ. எண் 89/1983-ஆனது உயில் இருக்கிறது என்றும், மேலும், அது அசல் உயில், என்பதால், இந்து வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 14(1) பொருந்தக்கூடியது என்ற காரணத்தின் அடிப்படையில் வழக்கு நடத்தப்பட்டிருந்தாலுங்கூட காலவரையறையால் நம்பிக்கையின்றி தடைசெய்யப்பட்டுள்ளது.

42. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. மோகன் பராசரன், பாகப்பிரிவினையின் வழக்கில் வழக்குரை ஏதுமில்லை என்று மற்றவற்றிற்கிடையே பணித்தார். சட்டத்திற்கிணங்க உயில் நிரூபிக்கப்படவில்லை. கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகள் சுருக்கமானது, தரப்பினர்களுக்கிடையில் இல்லாததுமாகும். வழக்கு பொருளானது சுவாதீனமாகும். எனவே, மேற்படி வழக்கு நடவடிக்கைகளில் தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணத்தை பயன்படுத்திடமுடியாது. கிருஷ்ணம்மாளின் உரிமையானது, பிரிவு 14(1)-இன்படியானதாகும். கட்டளை II விதி 2 -இன் கீழான தடை செயற்படுத்தப்பட்டது.

43. எதிர்மேல்முறையீட்டாளர்களில் சிலருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சித்ரா சம்பத், பிரிவு 145-இன்படியான வழக்கு நடவடிக்கையின்போதிலிருந்தே வழக்குரை அட்டவணைச் சொத்தின் சுவாதீனமானது

பிரதிவாதிகளிடம் (லட்சுமையா நாயுடுவின் பிள்ளைகள்) இருந்தது என்று வாதுரைத்தார். நிலை இவ்வாறு இருந்தபோதிலும், மு.வ. எண் 89/1983-இல் சுவாதீனத்தை மீளப்பெறுவதற்கான வேண்டுரை ஏதுமில்லை என்பதாகும். அவ்வாறான பரிகாரம் ஏதும் வரையறையால் தடைசெய்யப்பட்டதாகும். **(2007) 12 எஸ்.சி.சி. 695**-இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையின்மேல் நம்பிக்கையுற்றதன்பேரில், மு.வ. எண் 89/1983-இலும் மு.வ. எண் 649/1985-இன் எதிர்வழக்குரையிலும் பாகப்பிரிவினையின் மாற்றம் குறித்து வாதுரை ஏதுமில்லாததால், மு.வ. எண் 649/1985-இல் எதிர்மேல்முறையீட்டாளர்களின் குறிப்பிட்ட வாதுரைக்கப்பால் பாகப்பிரிவினை ஏதமில்லை, மேலும், எந்த சான்றும் ஆராயப்படவில்லை என்று வாதுரைக்கப்பட்டது. பிரிவினை குறித்து வழக்கெழு வினா ஏதம் வனையப்படவில்லை. இவ்வழக்கு நடவடிக்கைகளில் தாக்கல் செய்யப்படாத சான்றாவணங்களின்மேல் மேல்முறையீட்டு நீதிமன்றம் சார்வுற்றது. அதைக்குறித்த வாதங்கள் விவாதிக்கப்படாததாலும், காண்முடிவுகள் அளிக்கப்படாததாலும், அதைக்குறித்த வாதுரைகளை தரப்பினர்கள் அறியவில்லை என்பதாகும். (இது சான்றாவணம் பி.2-இல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை குறித்ததாகும்). கு.வி.மு.ச.-இன் பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகள் சுருக்கமான தன்மையுடையது மற்றும் உரிமையியல் நீதிமன்றம் அதை கட்டுப்படுத்தாது என்பதாகும். இறப்பிற்கு முன்பு, பிரிவினையின் மாற்றம் குறித்துதகவல் ஏதுமில்லை. **மதுசூதன் தாஸ் - எதிர்- நாராயணிபாய் (இறந்தவர்) அவரது சட்டப்படியான சார்பாற்றுநர் மூலம் மற்றும் பலர்**[23] என்ற வழக்கில் நம்பிக்கை சார்வுறப்பட்டது. உயில் காணாமல்

---

23. (1983) 1 எஸ்.சி.சி. 35

போய்விட்டது என்பது வழக்கல்ல. **பெங்கா பெஉறரா மற்றும் ஒருவர் -எதிர்- பிராஜா கிஷோர் நந்தா மற்றும் பலர்**[24] என்ற வழக்கில் சார்ந்து நின்று நியாயமான காரணத்திற்கப்பால் அசல் உயில் தொலைந்துவிட்டது என்று நிரூபித்து வாதுரைத்த பின்னர்தான், சார்நிலைச் சான்று அளிக்கப்படலாம் என்று வாதுரைக்கப்பட்டது. பி.7-இல் சார்ந்து நிற்பது தொடர்பாக, இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையான **சஷி ஜீனா மற்றும் பலர் -எதிர்- காதல் ஸ்வெயின் மற்றும் ஒருவர்**[25]-இல் எங்களது கவனம் ஈர்க்கப்பட்டது. கு.வி.மு.ச.-இன் பிரிவு 145-இன்படியான வழக்கு நடவடிக்கைகள் சுவாதீனம் தொடர்புடையதாகும் மற்றும் ரங்கசாமியால் எழுதப்பட்ட உயில் பரிசீலிக்கப்படவில்லையாதலால் சாட்சியச் சட்டத்தின் பிரிவு 33-இன்படியான இரண்டு நிபந்தனைகளும் நிறைவேற்றப்படவில்லை என்று வாதுரைக்கப்பட்டது. மு.வ. எண் 89/1983-இல் வாதி பிரிவு 145-இன் கீழான வழக்கு நடவடிக்கைகளில் தரப்பினர்களின் மூலம் தங்களது உரிமைமூலத்தை கண்டறியவில்லை என்பதனடிப்படையில் வரம்புரையின் முதல் நிபந்தனையும் மற்ற நிபந்தனையும் ஒன்றுதான் என்பது தெளிவு. உயிலவர் தனது மனநிலையைக் குறிப்பிட்டு, தனது பெருவிரல் ரேகையை வைக்க மறுத்தது உட்பட சந்தேக சூழ்நிலைகள் சான்றாவணம் X1-இலிருந்து வெளிப்படுகிறது என சுட்டிக்காட்டப்பட்டது. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள தவறான கூறுகள் உயிலை எதிர்க்கச் செய்தது. இவ்வழக்கு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1)-இன் கீழ் அமைவுறும். மு.வ. எண் 732/1981-ஐ தாக்கல் செய்ததில், அது தாக்கல் செய்யப்பட்டதனடிப்படையில் மு.வ. எண் 89/1983-இல் வாதியின்

---

24. (2007) 9 எஸ்.சி.சி. 728

25. (2004) 4 எஸ்.சி.சி. 236

நடவடிக்கையானது **<u>கிருஷ்ண பெஉறரிலால் -எதிர்- குலாப்சந்த்</u>**[26] மற்றும் **<u>எஸ். சண்முகம் பிள்ளை மற்றும் பலர் -எதிர்- கே. சண்முகம் பிள்ளை மற்றும் பலர்</u>**[27] ஆகிய வழக்குகளின் கோட்பாட்டினை பயன்படுத்துவதற்கான தகுதியுடைய வழக்காக திகழ்கிறது. மு.வ. எண் 36/1963-ஐ தாக்கல் செய்ததன் வினையும், மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரப்படவில்லை என்று வழக்குரையிலுள்ள மேற்குறிப்பையும் சுட்டிக்காட்டியதைத்தவிர, உயிலின் மற்ற சொத்துகள் தொடர்பாக அவர்களது உரிமைகளை விவாதிப்பதற்கு மு.வ. எண் 36/1963-இல் எந்த உரிமையும் அளிக்கப்படாதப்பட்சத்தில் அவ்வழக்கு மெய்ப்பிக்கப்படவேண்டியதாகிறது.

<u>பிரச்சினையிலுள்ள சொத்து</u>

44. இரு வழக்குகளிலும், பிரச்சினையிலுள்ள சொத்தானது ஒன்றேயாகும். 10.5.1955-ஆம் தேதியிடப்பட்ட உயிலில் பதினாறு வகையிலான சொத்துகள் உள்ளன. மு.வ. எண் 71/1958-இல் ஏழு வகையிலான சொத்துகள் தொடர்பாக ஆர். கிருஷ்ணம்மாளுக்கு பூரண உரிமை அளிக்கப்பட்டுள்ளது. மு.வ. எண் 36/1963-இல் உள்ளடங்கியுள்ள சொத்து ஏழு வகைகளானதாகும், அது மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவுத் தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது, அதில் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு பூரண உரிமை அளிக்கப்பட்டுள்ளது. மு.வ. எண் 632/1981-ஆனது, மு.வ. எண் 36/1963-இன் 5 மற்றும் 6 வகையிலான சொத்துகள் தொடர்புடையதாகும். தற்போதைய உரிமை வழக்குகளில் அட்டவணையிடப்பட்ட சொத்து வகைகளானது,

---

26. (1971) 1 எஸ்.சி.சி. 837

27. (1973) 2 எஸ்.சி.சி. 312

ஏழு வகையிலான சொத்துகள் தவிர 10.5.1955 தேதியிடப்பட்ட உயிலில் உள்ளடங்கியுள்ள சொத்து வகைகளுமாகும், அதில் நான்கு வகை சொத்துகள் உரிமை மாற்றம் செய்யப்பட்டது, ஒன்று சேர்ந்தடை உரிமைபெற்றது. ஆர். கிருஷ்ணம்மாளால் தாக்கல் செய்யப்பட்ட மு.வ. எண் 71/1958-ஐ பொறுத்தவரையில், பங்குரிமையருக்கு சொந்தமான முழு சொத்தையும் உள்ளடக்குகின்ற 93 வகையான சொத்துகளில் பாகப்பிரிவினைக்கான மாற்றுப் பரிகாரம் கோர அவருக்கு உரிமை இருந்தது என்பதாகும்.

45. எங்கள் முன்புள்ள வழக்குகளில் உள்ளடங்கியுள்ள சொத்தின் அளவானது மிகக்குறைவானதான 36 ஏக்கர் மட்டுமேயாகும்.

<u>உ.வி.மு.ச. கட்டளை II, விதி 2-இன் விளைவு</u>

46. 1908, உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் (இதில் இதுமுதற்-கொண்டு சுருக்கமாக 'உ.வி.மு.ச.' என அழைக்கப்படும்) கட்டளை II, விதி 2-ஆல் மு.வ. எண் 89/1983-ஆனது தடை செய்யப்படும் என்று மற்றவற்றிற்கிடையே எதிர்மேல்முறையீட்டாளர்களின் வாதம் எழுப்பப்பட்டது. இந்த காரணங்களின்பேரிலேயே மேல்முறையீட்டாளர்களில் இருவர் மு.வ. எண் 36/1963-ஐ தொடர்ந்தனர், மேலும் அவர்கள் அவ்வழக்கில் ஏழு வகையிலான சொத்துகளை மட்டுமே பட்டியலிட்டனர் என்பதாகும். தற்போதைய உரிமை வழக்கில் மேல்முறையீட்டாளர்கள் கோரியுள்ள பரிகாரத்தை கோருவதற்கு அவர்களுக்கு வழிவகையுள்ளது. மு.வ. எண் 71/1958-இல் அட்டவணையிடப்பட்ட வகைகளைத் தவிர மற்ற சொத்து வகைகள் தொடர்பாக வழக்கு தொடரப்படாததால், அவை உ.வி.மு.ச., கட்டளை II, விதி 2-இன்படி தடைசெய்யப்பட்டுள்ளன. இது இதன் இரு அம்சங்களை சுட்டிக்காட்டியதன்மூலம்

மேல்முறையீட்டாளர்களால் எதிர்த்துரைக்கப்பட்டது. அவர்களுக்கு உயிலின் கீழ் அடைவுறு உரிமை இருந்தபோதிலும், மு.வ. எண் 71/1958-இன் தீர்ப்பாணையில் உள்ளடங்கியுள்ள மு.வ. எண் 36/1963-இல் அட்டவணை செய்யப்பட்ட சொத்துவகைகளை உரிமை மாற்றம் செய்வதற்காக ரங்கசாமி நாயுடுவின் விதவை மனைவியான ஆர். ரங்கம்மாள் முயன்றபோதுதான் மு.வ. எண் 36/1963-ஆனது தொடரப்பட்டது என்று முதலில் வாதுரைக்கப்பட்டது. இரண்டாவதாக, விதவை மனைவி ஆர். கிருஷ்ணம்மாளுக்கு உயில்படி வழக்குரை அட்டவணை சொத்துகளில் ஆயுள் பாத்தியதையுள்ளது என்று மேல்முறையீட்டாளர்களால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்விளைவாக உயில்படி ஆர். கிருஷ்ணம்மாளுக்கு உரிமையுள்ளபொழுது, ஆர். கிருஷ்ணம்மாள் உயிருடன் இருக்கும்வரையில் அவர் தாக்கல் செய்ததொரு உரிமை வழக்கான, மு.வ. எண் 89/1983-ஐ தாக்கல் செய்திருக்கக்கூடாது. உயில்படி அவர் இறந்ததன்பேரிலேயே அவர்களால் தாக்கல் செய்யப்பட்டதை போன்றதொரு உரிமை வழக்கை தாக்கல் செய்திருக்க முடியும். ஆர். கிருஷ்ணம்மாள் 1977-இல்தான் இறந்தார். உ.வி.மு.ச.-இன் கட்டளை II, விதி 2-இன் வகையங்களை பயன்படுத்துவதற்காக ஒத்த வழக்குமூலம் இருத்தல்வேண்டும். இவ்வாறு, ஒருவகையில், அதில் அட்டவணையிடப்பட்ட சொத்துகள் தொடர்பாக மு.வ. எண் 36/1963 தாக்கல் செய்யப்பட்டதைப்போன்று, ஒரு பாதுகாப்பு நடவடிக்கையாக வழக்கு ஒன்றை தாக்கல் செய்வதற்கு மேல்முறையீட்டாளர்களுக்கு வாய்ப்பிருந்தது என்னும் அதேவேளையில், மேற்படி உரிமை வழக்கில் முன்னிறுத்தப்பட்ட வழக்குமூலத்தின் அடிப்படையில், அது இவ்வழக்கை மேற்கொண்டு நடத்துவதற்கு நிச்சயமாக ஒரு தடையாக இராது.

47. இந்நீதிமன்றத்தின் பல்வேறு தீர்முடிவுகளில் உ.வி.மு.ச., கட்டளை II, விதி 2-ஆனது விடயப்பொருளாக இருந்துள்ளது. உ.வி.மு.ச., கட்டளை II, விதி 2-ஆனது வாதி அவரது கோருரிமை தொடர்பான ஏதேனும் பகுதியை வழக்கிடத் தவறிவிட்டாலோ அல்லது அவரது கோருரிமையின் ஏதேனும் பகுதியை வேண்டுமென்றே கைத்துறந்தாலோ, அவ்வாறு விடுபட்ட அல்லது கைத்துறக்கப்பட்ட பகுதியைப் பொறுத்தவரையில் அவர் வழக்கிடுவதற்கு தடைசெய்யப்படுகிறார் என்ற சூழ்நிலையை வலியுறுத்துகிறது. ஒரே வழக்குமூலத்திலிருந்து எழுகின்ற ஒன்றுக்கும் மேற்பட்ட பரிகாரங்களைக் கோர தகுதியுடைய வாதி இரண்டு விடயங்கள் செய்யலாம். அவர் ஒரு வழக்கின் அதே வழக்குமூலத்திலிருந்து எழும் அனைத்து பரிகாரங்கள் தொடர்பாகவும் வழக்குத் தொடரலாம். அவர், ஒரே வழக்குமூலத்தின் கீழ் கிடைக்கப்பெறக்கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பரிகாரங்களுக்காக வழக்குத் தொடரத் தவறியிருப்பின், அவ்வாறான பரிகாரங்கள் அனைத்திற்கும் வழக்குத் தொடர நீதிமன்றத்தின் அனுமதி கோரலாம், நீதிமன்றம் அவ்வாறான அனுமதியை வழங்குமெனில், பின்னர் முந்தைய உரிமை வழக்கின் அதே வழக்குமூலத்தின் அடிப்படையிலானதாக இருப்பினும் அவர் புதிய வழக்குத் தொடரலாம். எனினும், ஒரே வழக்குமூலத்திலிருந்து அவருக்கு வழக்குத் தொடர வாய்ப்பிருந்த ஏதேனும் பரிகாரங்கள் தொடர்பாக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறவில்லையெனில், அதன் விளைவு யாதெனில், அவ்வாறு விடுபட்ட வேறேதேனும் பரிகாரங்களுக்காக வழக்கு தொடர்வதிலிருந்து அவர் தடைசெய்யப்படுகிறார் என்பதாகும். உ.வி.மு.ச.-வின் கட்டளை II, விதி 2(2) மற்றும் கட்டளை II, விதி 2(3)-க்கு இடையேயான வேறுபாடு கவனிக்கத்தக்கதாகும். வழக்குமூலத்திலிருந்து

எழும் கோருரிமையானது வழக்குத் தொடர்வதிலிருந்து வேண்டுமென்றே கைத்துறக்கப்பட்டதா அல்லது விடுபட்டதா என்ற நேர்விற்கு இடையேயான வேறுபாட்டினை சட்டம் கருத்துரைக்கிறது. அத்தகைய கோருரிமையை புதிய வழக்கின் விடயப்பொருளாக கருத்திற்கொள்ளமுடியாது. ஆயினும், ஒரே வழக்குமூலத்திலிருந்து தோன்றி, ஒன்றுக்கும் மேற்பட்ட பரிகாரங்கள் கிடைக்கப்பெறும்போது அனுமதி பெறப்பட்ட பரிகாரங்களைத் தவிர்த்து, முதல் வழக்கில் கோரப்பட்டதுடன் சேர்த்து மேலும் பரிகாரங்கள் கோருவது தடை செய்யப்படும். நீதிமன்றத்தின் அனுமதி வழங்கக்கோரி முன்வைக்கப்பட்ட வழக்கு இருப்பின், தொடக்கத்தில் கோரப்படாத பரிகாரங்கள் அவருடைய பிந்தைய வழக்கில் கோரப்பட்டு அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அது ஏற்புடையதாகும். இவ்வகையத்தின் கோட்பாடானது உண்மையில் உ.வி.மு.ச.-வின் கட்டளை II, விதி *2(1)*-இல் விளக்கப்பட்டுள்ளது, அது ஒவ்வொரு வழக்கும் வழக்குமூலத்திலிருந்து எழுவதும் மற்றும் வாதியால் கோரப்பட உரிமையுடையதுமான முழு உரிமைக் கோரிக்கையையும் உள்ளடக்கவேண்டும் என்பதாகும். வாதி அவரது உரிமைக் கோரிக்கையின் ஏதேனும் பகுதியை விட்டுவிடலாம் என அது மேலும் தெரிவிக்கிறது. ஆயினும், அதன் விளைவுகள் உ.வி.மு.ச.-வின் கட்டளை II, விதி *2(2)*-இல் உறுதிபடக் கூறப்பட்டுள்ளது. *2013 (1) எஸ்.சி.சி. 625*, **<u>விர்கோ இண்டஸ்ட்ரீஸ் (இங்) பிரைவேட் லிமிடெட் -எதிர்- வென்சர்டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்</u>** என்ற வழக்கில் இதுபோன்ற கருத்துகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதை நாங்கள் கவனத்திற்கொள்கிறோம். பத்தி 9-இல் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:

"9. ஒவ்வொரு வழக்கும் ஏதேனும் குறிப்பிட்ட வழக்குமூலத்திலும் தொடர்புடைய வாதியால் கோரப்பட உரிமையுடைய முழு கோருரிமையையும் உள்ளடக்கவேண்டும் என கட்டளை 2 விதி 1 வேண்டுறுத்துகிறது. எனினும், வாதி அவருடைய கோருரிமையின் ஏதேனும் பகுதியை வேண்டுமென்றே கைத்துறக்க எண்ணினால் அவருக்கு அவ்வாறு செய்வதற்கான வாய்ப்புள்ளது. வாதியால் உரிமைகோரத் தகுதியுடைய கோருரிமையின் ஏதேனும் பகுதியை வழக்குத் தொடர தவறிவிடும் அல்லது வேண்டுமென்றே கைவிடும் நிலையைக் கட்டளை 2, விதி 2 கருத்துரைக்கிறது. வாதி அவ்வாறு செய்தால், பின்னர் அவர் கோருரிமையின் விடுபட்ட அல்லது வேண்டுமென்றே கைவிடப்பட்ட பாகம் அல்லது பகுதி குறித்து வழக்கு தொடரக்கூடாது என்பதை உ.வி.மு.ச.-வின் கட்டளை 2, விதி 2 தெளிவாக்குகிறது. வாதி தமது உரிமை கோரிக்கையின் ஏதேனும் பகுதியை வழக்கிடாது விடுமிடத்து அல்லது கைத்துறக்குமிடத்து, அவ்வாறு விடுபட்ட அல்லது கைத்துறக்கப்பட்ட பகுதியை நீதிமன்றத்தின் அனுமதியுடன் பின்னர் உரிமை கோருவதற்கு அவருக்கு உரிமையளிப்பது குறித்து கட்டளை 2 விதி 2(2) கருத்திற்கொள்ளவில்லை என்பது கவனத்திற்கொள்ளப்படவேண்டும். ஒரு குறிப்பிட்ட

வழக்குமூலத்திலிருந்து ஒன்றுக்கும் மேற்பட்ட பரிகாரங்களுக்கு வாதி உரிமையுடையவராயிருந்து, அத்தகைய அனைத்து பரிகாரங்களுக்கும் வழக்கிடாது விட்டுவிடும் சூழ்நிலைகளில் நீதிமன்றத்தின் அத்தகைய அனுமதியானது கட்டளை *2*, விதி *2(3)*-இன் மூலம் கருத்துரைக்கப்படுகிறது. அத்தகையதொரு சூழ்நிலையில், நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுள்ள சூழ்நிலையைத் தவிர்த்து, முன்னர் விடுபட்ட பரிகாரங்களுக்கு உரிமைகோரி பின்னிட்டு வழக்குத் தொடுப்பதிலிருந்து வாதி தடை செய்யப்படுகிறார். எனவே கட்டளை *2*, விதி *2*-இன் மேற்கூறிய இரு துணைவிதிகளானது இருவேறு சூழ்நிலைகளை கருத்திற்கொள்கிறது, அதாவது, வாதி அவர் உரிமைபெற்ற உரிமை கோரிக்கையின் ஒரு பகுதியை விட்டுவிடுவது அல்லது கைத்துறப்பது மற்றும் இரண்டாவதாக, வாதி வழக்கில் அவரால் கோரப்படக்கூடிய பல்வேறு பரிகாரங்களுள் ஒன்றைக் கோராது விட்டுவிடுவது அல்லது கைத்துறப்பது ஆகியவற்றைக் குறித்து கருத்துரைக்கிறது என்பது உ.வி.மு.ச.-வின் கட்டளை *2* விதிகள் *2(2)* மற்றும் *(3)*-இன் வகையங்களை உடனிணைத்து வாசிப்பதிலிருந்து தெளிவாகிறது. இதில் பிந்தைய சூழ்நிலைகளில் மட்டுமே குறிப்பிட்ட பரிகாரத்தைக் கோராமல், விடுபட்ட சமயத்தின்போது

முதல் உரிமை வழக்கில் வாதி நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றிருந்தார் என நிரூபித்துக்காட்டி, அவர் முந்தைய வழக்கில் விடுபட்ட பரிகாரத்தைக் கோரி பின்னிடடு வழக்கு தாக்கல் செய்யமுடியும்."

48. தற்போதைய வழக்கில் மு.வ. எண் 36/1963 தொடரப்பட்டபோது ஆர். கிருஷ்ணம்மாளால் கொணரப்பட்ட முந்தைய வழக்கான மு.வ. எண் 71/1958 ஒத்திசைவுத் தீர்ப்பாணையில் முடிந்தது என்பது உண்மை. மு.வ. எண் 36/1963-இல் உள்ள வாதிகள் மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவைக் குறிப்பிட்டனர் என்பது வழக்குரையை நுண்ணாய்வு செய்ததிலிருந்தே தெரிகிறது. அவர்கள் வழக்குரையின் பத்தி 7-இல் வாதுரைக்கப்பட்டுள்ளது யாதெனில், ஒத்திசைவின் கீழ் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு உயிலில் உள்ளடங்கிய சொத்துகள் மற்றும் சிறிது பணத்திற்குப் பதிலாக, மேற்படி வழக்கில் (வழக்கு எண் மு.வ. எண் 36/1963) அட்டவணையிடப்பட்ட சொத்து வழங்கப்பட்டது என்பதாகும். ஆர். கிருஷ்ணம்மாள் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு (இலட்சுமையா நாயுடுவின் மகன்களுக்கு) உயிலில் அடங்கிய மற்ற சொத்துகளை விட்டுக்கொடுத்தார். அதன்பிறகு ஆர். கிருஷ்ணம்மாள் வழக்குரையில் அட்டவணையிடப்பட்ட சொத்துகளுக்கான முழுமையான உரிமையைக் கோரினார் என்ற பிரதிவாதிகளின் வாதமானது சட்டம் மற்றும் பொருண்மைகள் ஆகிய இரண்டின்பேரிலும் நிலைக்கத்தக்கதல்ல என வாதுரைக்கப்பட்டது. மேலும், ஒத்திசைவுத் தீர்ப்பாணை முழுவதும், அதிலும் மிகக் குறிப்பாக, ஆர். கிருஷ்ணம்மாளுக்கு அவ்வகையில் வழக்குச் சொத்துகளின் முழுமையான பாத்தியதையை அளித்ததென்பது செல்லாததாகும் எனவும், மேலும், அது இரண்டு வாதிகளையும் மற்றும் எங்கள் முன்பாக உள்ள மேல்முறையீட்டாளர்களான 3 மற்றும்

4-ஆம் பிரதிவாதிகளையும் கட்டுப்படுத்தாது எனவும் வாதுரைக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் சொத்துகளில் அடைவுற்ற உரிமையைப் பெற்றிருந்தனர் என மேலும் உறுதியாகக் கூறப்பட்டது. அவர்கள் வழக்கில் (தெளிவாக மு.வ. எண் 71/1958) தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை. ஆர். கிருஷ்ணம்மாள் மேல்முறை-யீட்டாளர்களின் நலனை முன்னிலைப்படுத்தவில்லை என வாதுரைக்கப்பட்டது. வழக்குரையின் பத்தி 8-இல் வாதுரைக்கப்பட்டது யாதெனில், ஆர். கிருஷ்ணம்மாளால் வழக்குச் சொத்து வகைகள் தொடர்புடைய அவருடைய உரிமைகளை ஏதொரு ஒத்திசைவு மூலமும் விரிவாக்கம் செய்ய இயலாது, உயிலில் உள்ளடங்கிய சொத்துகளில் சில வகைகளுக்கு மட்டுமே ஆர். கிருஷ்ணம்மாள் உரிமையுடையவராவார், மேலும், உயிலின்படி அவர் பெற்றிருந்த ஆயுள் பாத்தியதையாகிய அவ்வுரிமையை மட்டுமே அவரால் கோரமுடியும் என்பதாகும். அதற்கிணங்க, ஆர். கிருஷ்ணம்மாள் ஆயுள் பாத்தியதை மட்டுமே உடையவர், மேலும், அவர் சொத்துகளை உடைமை மாற்றம் செய்வதிலிருந்து தடுக்கப்படுவது குறித்தும் 5.10.1959-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பு குறிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆர். கிருஷ்ணம்மாள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாயிராத சாட்டுரைகள் கொண்ட பதிலுரையை அனுப்பியதாக சாட்டியுரைக்கப்பட்டார். அவர் மேல்முறையீட்டாளர்கள் உயிலின்கீழ் கோருரிமை ஏதும் பெற உரிமையுடையவர்களல்லர் என மற்றவற்றிற்கிடையில் கோரியதோடு, மேலும், சொத்துகளை அவர் விரும்பிய ஏதொரு முறையிலும் கையாள உரிமையுடையவர் எனவும் வாதுரைக்கப்பட்டது. அதன்பின் ஆர். கிருஷ்ணம்மாள் மேல்முறையீட்டாளர்களை உரிமை இழக்கச் செய்வதற்காக வழக்குச் சொத்து தொடர்பான பெயரளவிலான ஆவணங்களை உருவாக்கமுயன்றார் என மேலும் வாதுரைக்கப்பட்டது. வழக்குரையின் பத்தி-II முக்கியமானதாதலால்,

கவனிக்கத்தக்கதாகிறது.

> "11. இதில் விவரிக்கப்பட்டுள்ளதைத் தவிர மற்ற சொத்துக்களையும் உள்ளடக்கிய ஆர்.வி. ரங்கசாமி நாயுடுவின் உயிலானது ஒத்திசைவுத் தீர்ப்பாணையின் கீழ் முதல் பிரதிவாதியால் அவரது கணவரின் சகோதரரின் மகன்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் தனித்தனி வழக்கு நடவடிக்கைகளுக்காக அச்சொத்துக்கள் தொடர்பான அவர்களது உரிமைகளைத் தக்கவைத்துக்கொண்டனர்."

49. அதன்படியே, ஆர். கிருஷ்ணம்மாள் உடைமை மாற்றம் செய்யும் அதிகாரம் ஏதுமின்றி, ஆயுள் பாத்தியதை மட்டுமே உடையவரென்றும் மற்றும் மேல்முறையீட்டாளர்கள் உயிலின்படியான மேற்படி சொத்துகளில் அடைவுற்ற எஞ்சுரிமையைப் பெற்றுள்ளனர் என்றும் விளம்புகை செய்யவேண்டுமெனக் கோரி மு.வ. எண் 36/1963-ஆனது தாக்கல் செய்யப்பட்டது. 'மேற்படி' என்ற சொல் தெளிவாக மு.வ. எண் 36/1963-இல் அட்டவணையிடப்பட்ட சொத்து வகைகளைக் குறிக்கிறது.

50. 1977-இல் ஆர். கிருஷ்ணம்மாளின் மரணத்திற்குப் பின் உயிலின்படி மேல்முறையீட்டாளர்களின் முழு உரிமைகள் துவங்கியது என்பதே வழக்கிற்கு (மு.வ. எண் 89/1983) அடித்தளமாகும். இதையே, மு.வ. எண் 36/1963 தாக்கல் செய்யப்பட்ட- போது உயிலின்படி ஆயுள் பாத்தியதை உடையவரான ஆர்.கிருஷ்ணம்மாள் உயிருடனிருந்தார் என வேறுவிதமாகவும் கூறலாம். ஆயுள் பாத்தியதை உடையவரின் மரணத்திற்குப் பிறகே உயிலின்படி

மேல்முறையீட்டாளர்களுக்கு சாதகமான முழுமையான உரிமைகள் தொடங்கியது. இத்தறுவாயில் ஐயத்திற்கிடமின்றி நாம் ஒரு அம்சத்தை தெளிவாக்கவேண்டும். உடைமை உரிமையானது மற்றவற்றிற்கிடையில் காலந்- தாழ்த்தப்படும்போது உயில்வழி உரிமை அடைவுறும் தேதியைக் குறித்து *1925*-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டம் *(*இதற்குப் பின் "இந்திய வாரிசுரிமைச் சட்டம்" என சுருக்கமாகக் குறிப்பிடப்படும்*)* பிரிவு *119* எடுத்துரைக்கிறது. அவ்வகையமானது பொருத்தமான எடுத்துக்காட்டுடன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> *"119.* உயில்வழி கொடையின் ஒப்படைப்புத் தேதி எப்போது செலுத்தப்படுவது அல்லது உடைமை ஒப்படைப்பு தள்ளிவைக்கப்படுவது.- உயில் வழி கொடையின் வாசகங்களின்படி,உயில்வழி கொடைப் பொருளை உயில்வழி உரிமையாளர் உடனடியாகப் பெறமுடியா- திருக்கும்பொழுது, உயிலில் முரண்பாடான நோக்கம் எதுவும் தோன்றினாலன்றி, அதனை அவர் உரிய நேரத்தில் பெறுவதற்கு உரிமையுடையவராவார். அந்த உயில்வழி கொடை, உயில் எழுதிவைத்தவர் இறந்ததன்பேரில், அது உயில்வழி உரிமையாளரைச் சென்றடையும். அவர் உயில்வழி கொடையை உரிய காலத்தில் பெறாமலேயே இறந்துபோயிருந்தால், அந்த உயில்வழி கொடை அவரது வாரிசுகளைச் சென்றடையும். இத்தகைய சூழ்நிலைகளில் உயில் எழுதிவைத்தவரின் மரணத்தின்பேரில் கிடைக்கும்

உயில்வழி கொடை, சேர்ந்தடை உரிமையாகும்.

விளக்கம்.- ஒரு உயில்வழி கொடைக்கான நோக்கம் நபர் எவருக்கும் சேர்ந்தடை உரிமையாகாது என்பதனை, உயில்வழி கொடை பொருள் சாதாரணமாக வழங்கப்படுவதைக் கொண்டோ அல்லது உயில்வழி கொடை பொருளின் உடைமை ஒப்படைக்கப்படுவது ஒத்திவைக்கப்படுவதைக் கொண்டோ அல்லது அந்த உயில்வழி கொடைக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கிடைக்கும் வட்டியை வேறொரு நபருக்கு உயில்வழி கொடையாக அளிக்கப்படுவதைக் கொண்டோ அல்லது உயில்வழி கொடை நிதி சேர்த்து வகைக்கப்பட்டிருப்-பதிலிருந்து கிடைக்கும் வருவாயை அந்தத் தொகையைச் செலுத்துவதற்கான காலம் வரும் வரையில் சேர்த்து வைத்திருத்தல்வேண்டும் என்று பணிக்கப்பட்டிருப்பதைக்கொண்டோ அல்லது ஒரு வகையத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட சம்பவம் நடைபெறும்பொழுது அந்த உயில்வழிக் கொடை மற்றொரு நபரை சென்றடையவேண்டுமென்பதைக் கொண்டோ ஊகித்தல் கூடாது.

எடுத்துக்காட்டுகள்:

i) XXX XXX

ii) XXX XXX

iii) நிதி ஒன்று "அ"-வின் வாழ்நாள் வரையில் அவருக்கு உயில்வழி கொடையாகக் கொடுக்கப்பட்டது. "அ" இறந்தபிறகு அந்தத் தொகை "ஆ"-வைச் சென்றடையவேண்டும். உயில் எழுதிவைத்தவர் இறந்ததன்பேரில் உயில்வழி கொடை "ஆ"-வின் அடைவுறு உரிமையாகும்.

XXX XXX XXX XXX "

51. 1882-ஆம் ஆண்டு சொத்துரிமை மாற்றுச் சட்டம் (இதில் இதற்குப்பின் "சொ.மா. சட்டம்" என சுருக்கமாகக் குறிப்பிடப்படும்) பிரிவு 19-ஐ நாங்கள் குறிப்பிடுவதும் பொருத்தமானதாகும். பிரிவு 19-ஆனது அடைவுறு உரிமையைக் குறித்து விவாதிக்கிறது. அது பின்வருமாறு குறிப்பிடுகிறது.

"19. அடைவுறு உரிமை:- ஒரு சொத்துரிமை மாற்றத்தின்பேரில், எப்பொழுது செல்திறம் பெறும் என்று நேரத்தைக் குறித்துரைக்காது அல்லது அது உடனடியாக அல்லது நிகழவேண்டிய நிகழ்ச்சி ஒன்று நிகழ்ந்ததன்பேரில் செல்திறம் பெறும் என்று குறித்துரைக்கிற வரையரைகளுடன் ஒரு நபருக்கு ஆதரவாக ஓர் உரித்தம் ஏற்படுத்தப்படுகிறவிடத்து, உரிமை மாற்றத்தின் வரையீடுகளிலிருந்து மாறான கருத்து தோன்றினாலன்றி, அத்தகைய உரித்தம் சேர்ந்தடையும். ஒரு சேர்ந்தடை உரித்தமானது,

உரிமை மாற்றம் பெறுபவர் உடைமையைப் பெறுவதற்கு முன்பு அவர் இறந்துபோனால் செயலிழந்து போவதில்லை.

விளக்கம்:- ஓர் உரித்தமானது சேர்ந்தடைதல் ஆகாது என்ற கருத்து, எந்த வகையத்தினால் ஓர் உரித்தம் துய்க்கப்படுவது ஒத்திப்போடப்படுகிறதோ அல்லது அதே சொத்தின் முந்தைய உரித்தம் பிறிதொரு ஆளுக்குக் கொடுக்கப்படுகிறதோ அல்லது ஒதுக்கிவைக்கப்படுகிறதோ அல்லது துய்ப்பினைப் பெறும்வரை சொத்திலிருந்து பெறப்படும் வருமானம் சேர்த்துவைக்கப்படவேண்டும் என்று பணிக்கிறதோ அந்த வகையத்திலிருந்து மட்டும் அல்லது குறிப்பிட்டதொரு நிகழ்ச்சி நிகழுமாயின், அந்த உரித்தம் பிற ஆளுக்குச் செல்லும் என்ற வகையத்திலிருந்து மட்டும் ஓர் உரித்தம் சேர்ந்தடைதல் ஆகாது என்ற கருத்து இருப்பதாக உய்த்துணரப்படுதலாகாது."

52. அடைவுறு உரிமை என்பது நிகழ்வடை உரிமையிலிருந்து வேறுபட்டதாகும். இரண்டுமே மிகப்பெரிய அளவிலான விளைவுகளை கொண்டுள்ளது. ஆர். கிருஷ்ணம்மாளின் இறப்பு உறுதியான நிகழ்வாக இருப்பதால், எஞ்சுரிமையாளர்களின் உரிமையானது அடைவுறு உரிமையாகிறது. சொ.மா.

சட்டத்தின் பிரிவு 19-க்கும், இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 119-க்கும் இடையேயான பொதுப்படையான கருத்தும் இவ்வழக்கில் பொருந்தக்கூடியதுமான பொருண்மைகள் பின்வருமாறு:

> உயிலின்படி, ஆர். கிருஷ்ணம்மாளுக்கு ஆதரவாக ஆயுள் பாத்தியதையும், மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக பூரண எஞ்சுரிமையும் அளிக்கப்பட்டிருக்கும்போது, உயிலவரின் இறப்பிற்குப் பின்னர் மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக அளிக்கப்பட்ட உயில்வழி உரிமையானது அடைவுறு உரிமையாகிறது. எனினும், உயிலின் சொத்தின் சுவாதீனமும், அனுபோகமும் உயில்வழி உரிமையரான, அதாவது, ஆர். கிருஷ்ணம்மாள் உயிருடனிருக்கும்வரையில் அவரது அதிகார எல்லைக்குட்பட்டதாகும். எனினும், உயிலின்படியான அவரது உரிமையின் எல்லைகளை விரிவாக்கம் செய்ய அவர் ஏதொரு உரிமையும் பெற்றிருக்கவில்லை. இது கூடுதலாக இயற்றப்பட்ட சட்டத்தின் விளைவிற்கு உட்படுவதோடு, பின்னிட்டு விவாதிக்கப்படும் என்பதில் ஐயமேதுமில்லை. ஆயுள் பாத்தியதை உடையவர், அவரின் தன்னிச்சையான செயலின் மூலமோ அல்லது மூன்றாம் தரப்பினருடன் கூட்டாக சேர்ந்தோ எஞ்சுரிமையாளர்களை உரிமைகள் இழக்கச்செய்ய வாய்ப்புடையவரல்லர். இந்திய வாரிசுரிமைச்

சட்டத்தின் பிரிவு 119, எடுத்துக்காட்டு (III)-இன் கீழான வழக்கின் முக்கியத்துவம் யாதெனில், உயிலவர் மரணமடைந்தால், அவர் மரணமடைந்த நாளிலிருந்து சொத்தின்மீதான உரிமை எஞ்சுரிமையாளர்களைச் சென்றடையும் என்பதாகும். இதை வேறுவிதமாக கூறுவதெனில், ஆயுள் பாத்தியதை உடையவரின் நிலையற்ற சுவாதீனம் மற்றும் அனுபோகத்திற்குப் பின்னர் உயிலின்படி முழுமையான உரிமைகள் அடைவுறப் பெற்றவரான உயில்வழி உரிமையரின் மரணத்திற்குப்பின் உள்ளபடியே, உயிலவரின் மரணத்தின்போது மரபுவழி தோன்றிய உரிமையானது, உயிலின்படியான பூரண உரிமையாளர் பின்னிட்டு உயிலை விட்டுச்செல்லாவிட்டாலும், அவரது சொத்தின் மரபுரிமை துவங்கும்போது அவருடைய வாரிசுதாரர்களுக்கு சட்டரீதியான உரிமைகளை அளிக்கும் சொத்தில் உரிமையானது அடைவுற்றிருந்தாலும், உயிலின்படி ஆர். கிருஷ்ணம்மாளின் மறைவுக்குப்பின்னரே மேல்முறையீட்டாளர்கள் சொத்தின் முழுமையான உரிமையாளர் என்ற பூரணத்துவத்துடன் சொத்தினை அனுபவிக்கமுடியும். 1925, இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 119-இல் உள்ள 'முழுமையான உரிமைகள்' என்ற சொல்லினை கவனத்திற்கொண்டோமானால், விளம்புகை மற்றும் பிரிவினைக்கான தீர்ப்பாணையில் இவ்வுரிமையே

விடயப்பொருளாகக் கொள்ளக் கோரப்பட்டது. 1963-ஆம் ஆண்டில் அல்லது ஆர். கிருஷ்ணம்மாளின் மரணம் வரை செயல்படுத்துமாறு கோரப்பட்ட உரிமைகளானது முன்விளக்கப்பட்டவாறு மேல்முறையீட்டாளர்களுக்கு மரபுரிமையில் சென்றடையவில்லை. ஆர். கிருஷ்ணம்மாள் உயிருடன் இருந்தபோது வழக்குரை அட்டவணைச் சொத்துகளில் அவர்களால் பாகப்பிரிவினை கோரப்பட்டிருக்கமுடியாது.

53. **<u>விர்கோ இன்டஸ்ட்ரீஸ் (இங்.) பிரைவேட் லிமிடெட் -எதிர்- வெண்சர்டெக் சொல்யூஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்</u>**[28] என்ற வழக்கின் தீர்ப்புரையின் பத்தி II-இல் காணப்படும் இந்நீதிமன்றத்தின் கருத்தினை நாங்கள் மீண்டும் கேட்டறிகிறோம்.

> "11. ஆகையால் கட்டளை 2, விதிகள் 2(2) மற்றும் (3)-இல் உள்ள வகையங்களைப் பொருத்திப் பார்ப்பதற்கு அடிப்படையாக வேண்டுறுத்தப்படுவது யாதெனில், பிந்தைய வழக்கின் வழக்குமூலமானது முதல் வழக்கில் உள்ளதைப்போலவே இருக்கவேண்டும்...."

54. இவ்வாறு கட்டளை II, விதி 2(2)-இன் கீழான வழக்குமூலத்தினால் எழுகின்ற கோருரிமையானது விடுபட்டதாகவோ அல்லது வேண்டுமென்றே கைதுறக்கப்பட்டதாகவோ அல்லது கட்டளை II, விதி 2(3)-இன் கீழ் பரிகாரம்

---

28. (2013) 1 எஸ்.சி.சி. 625

கோரப்படவில்லை என்றாலோ அதற்குண்டான கடுமையான விளைவுகள் வழக்குமூலம் ஒன்றாக இருக்கும்போது மட்டுமே எழும். மு.வ. எண் 36/1963-இல் உள்ள வாதிகள் உயிலின் அனைத்து இயல்புகளையும் உள்ளடக்கும்வகையில் உள்ள மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவுத் தீர்ப்பாணை தொடர்பாக விளம்புகை செய்திருக்கலாம் என்ற பொருண்மையை நாங்கள் மறந்திடாதபோதிலும், இவ்வழக்கில் உள்ள பொருண்மைகளைப் பொறுத்தவரையில், நாங்கள் வாதிட்டதை கருத்திற்-கொள்ளும்போதும் மற்றும் ஆர். கிருஷ்ணம்மாளின் இறப்பு தேதி தொடர்பான சங்கதிகளைக் கருத்திற்கொள்ளும்போதும் மு.வ. எண் 36/1963 மற்றும் தற்போதைய வழக்கின் (மு.வ. எண் 1989/1983) வழக்குமூலமானது தெளிவாக வேறுபட்டுள்ளது என நாங்கள் கருதுகிறோம். அதில் வழக்குரை அட்டவணைச் சொத்துகளை உரிமை மாற்றம் செய்வது தொடர்பான அச்சுறுத்தலே மு.வ. எண் 36/1963-இன் வழக்குமூலமானது என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1925, இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் (இதற்குப்பின் சுருக்கமாக 'இந்திய வாரிசுரிமைச் சட்டம்' எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 119-இன் கீழ் சொத்தில் அடைவுற்ற உரிமையைப் பெற்ற நபர்களின் பாதுகாத்துக்கொள்ளும் நடவடிக்கையே மு.வ. எண் 36/1963 என நாங்கள் அறிகிறோம். வழக்குமூலத்தை கோரப்படும் பரிகாரத்துடன் குழப்பிக்கொள்ளலாகாது என்ற கோட்பாட்டை நாங்கள் கருத்திற்கொள்ள வேண்டியதாகிறது. அது கோரப்படும் பரிகாரத்தின் அடிப்படையுடன் தொடர்புடையதேயாகும். இதுகுறித்து "வாதி, ஏதன் அடிப்படையில் தனக்கு ஆதரவான முடிவை எட்டுமாறு நீதிமன்றத்தை கோரினாரோ அதையே இது குறிப்பிடுகின்றது" எனக் கூறி அரசப் பேரவை வகுத்துரைத்ததையே

நாங்கள் வலியுறுத்திக் கூறகிறோம் (பார்க்க: **முகமது கலீல் கான் -எதிர்- மெஉறபூப் அலி மியான்**[29]).

மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963 மற்றும் மு.வ. எண் 732/1981-இன் வழக்கு நடவடிக்கைகள் மற்றும் தீர்ப்பாணையின் விளைவு

முரண்தடை, உரிமை விடுப்பு, உடன்பாடு.

55. ஆர். கிருஷ்ணம்மாளால் மு.வ. எண் 71/1958 தாக்கல் செய்யப்பட்டது. பிரதிவாதிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் லட்சுமையா நாயுடுவின் மகன்களாவர். ஐந்தாம் பிரதிவாதி உயிலின் நிறைவேற்றாளராவார். ஆர். கிருஷ்ணம்மாளின் இறந்த கணவரான வி. இரங்கசாமி நாயுடுவால் நிறைவேற்றப்பட்ட உயிலின்மூலம் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டது. மாறாக, அவர் உயிலின் கீழான அவருடைய உரிமைகளை செயலளவில் விட்டுக்கொடுத்ததோடு, மேலும், வி. ரங்கசாமி நாயுடு உயில் எழுதி வைக்காமல் இறந்ததனடிப்படையில் பிரிவினைக்கான தீர்ப்பாணையை வழங்குமாறு கோரினார். விடயம் விசாரணைக்கு செல்லவில்லை. அது ஒத்திசைவில் முடிந்தது. ஒத்திசைவின் சாரம் யாதெனில், உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சில வகைகள், உயிலின்படி சொத்தின் ஏழு வகைகளில் அவருக்கு வரையறுக்கப்பட்ட உரிமை மட்டுமே இருந்தபோதிலும், அவை ஆர். கிருஷ்ணம்மாளின் முழுமையான சொத்துகளா அங்கீகரிக்கப்பட்டன.ஆர். கிருஷ்ணம்மாள் ஒத்திசைவு தீர்ப்பாணையின் கீழ் தன்னுடைய பங்கிற்கு மற்ற சொத்துகளின் மீதான அவருடைய உரிமையை துறந்தார். ஆர். கிருஷ்ணம்மாளால் கோரப்பட்டதைப் போன்று

---

29. ஏ.ஐ.ஆர். 1949 பி.சி. 78

பாகப்பிரிவினை தீர்ப்பாணை நிறைவேற்றப்பட்டிருந்தால், தொண்ணூற்றாறு வகையான சொத்துகளில் தாக்கம் ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. வி. இராகவாச்சாரியின் வாதங்களை நாங்கள் கவனித்தோம். இதை வேறு வகையில் கூறுவதென்றால், வி. ரங்கசாமி நாயுடு மற்றும் லட்சுமையா நாயுடுவின் கூட்டுக் குடும்பத்திற்கு சொந்தமாக பெருமளவிலான சொத்துகள் இருந்தன எனத் தெளிவாகிறது. உயிலில் உள்ளடங்கிய சொத்துகளானவை கூட்டுக் குடும்பத்திற்குச் சொந்தமான பெருமளவிலான சொத்தின் மிகச்சிறிய பகுதியேயாகும். ஆர். கிருஷ்ணம்மாள் அதுபோன்று அவருடைய முழு உரிமைகளையும் கேட்கும் நிலையில் இல்லாமல் இருந்திருக்கலாம், மேலும், அவரால் பெறமுடிந்ததை வைத்து அவர் மனநிறைவுடன் இருந்தார் என்று முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் கண்டறியப்பட்டதை எடுத்தியம்பும் சான்றுள்ளது. ஆனால், இங்கு மிகவும் பொருத்தமானது யாதெனில், மேல்முறையீட்டாளர்கள் ஒத்திசைவுக்கான தரப்பினர்கள் அல்லர். மேல்முறையீட்டாளர்கள் ஆர். கிருஷ்ணம்மாளுக்குப் பின்பான அவர்களின் உரிமைகளைக் கண்டறியவில்லை. மேல்முறையீட்டாளர்களின் மாமாவான வி. ரங்கசாமி நாயுடுவால் நிறைவேற்றப்பட்ட உயிலின் கீழ் அவர்களுக்கு முழுமையான உரிமை வழங்கப்பட்டது. 1925-ஆம் ஆண்டின் இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 119-இல் பொருள்கொள்ளப்பட்டவாறு, அவர்களுக்கு ஆதரவாகவுள்ள விருப்பாவணம் அடைவுற்ற உரிமையை உருவாக்கியது. உயிலின்படி உறுதியாக ஆர். கிருஷ்ணம்மாளின் மரணத்திற்குப் பின்னரே சொத்தின் அனுபோகம் மற்றும் சுவாதீனத்தை அனுபவிக்கமுடியும். உயிலின்கீழ் உள்ளடங்கிய சொத்துகளில் ஆயுள் பாத்தியதை மட்டுமே உடையவரான ஆர். கிருஷ்ணம்மாள் உயிலை ஏற்றுக்கொண்டபிறகு, அவர்

இலட்சுமையா நாயுடுவின் உறவுவழி உரிமைகளை விரிவாக்கம் செய்திருக்க இயலாது. உயிலின் விடயப்பொருளாக இருக்கும் சொத்துகளின் உரிமைகளை ஆர். கிருஷ்ணம்மாளின் மரணத்திற்குப் பின்னரே மேல்முறையீட்டாளர்கள் அனுபவிக்கமுடியும், தொடர்புடைய சொத்துகளின் முழுமையான உரிமைகளை வழங்கக்கோரும் ஒத்திசைவுக்குள் செல்லும் அவருடைய நடவடிக்கைக்கு மேல்முறையீட்டாளர்கள் கட்டுப்பட்டவர்களல்லர்.

56. மேல்முறையீட்டாளர்களுள் உயிலின்படி உயில்வழி உரிமையர்களாக இருக்கும் இருவரால் மு.வ. எண் 36/1963 தாக்கல் செய்யப்படலானது. அவர்கள் ஆர். கிருஷ்ணம்மாள் அவருடைய உரிமைகளை விரிவாக்கம் செய்ய இயலாதவாறும் மற்றும் சொத்துகளை (மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவுத் தீர்ப்பாணையின் கீழ் அவரின் முழுமையான சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்ட ஏழு வகை சொத்துகள்) உடைமை மாற்றம் செய்ய இயலாதவாறும் பொருள்படும்படியாக விளம்புகை ஒன்றைக் கோரினர். மு.வ. எண் 36/1963-இல் உள்ள வாதிகள் வழக்குரை அட்டவணைச் சொத்தினை தற்போதைய வழக்கில் சேர்க்க விரும்பவில்லை, மேலும், அவ்வாறான விளம்புகை கோரவில்லை என்பது உண்மை. அதில் நாம் மனதிற்கொள்ளவேண்டிய இரண்டு அம்சங்கள் உள்ளன. முன்னதாக, மு.வ. எண் 71/1958-இல் ஆர். கிருஷ்ணம்மாள் முழுமையான உரிமைகள் பெற்ற ஏழு வகை சொத்துகளை அவர் உடைமை மாற்றஞ்செய்ய இருக்கிறார் என்ற அச்ச உணர்வே மு.வ. எண் 36/1963-ஐ தாக்கல் செய்வதற்கான வழக்குமூலமாக இருந்தது என சாட்டுரைக்கப்பட்டது (உண்மையில், ஒருவகை சொத்து உடைமை மாற்றஞ்செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது). இரண்டாவதாக, வழக்குரையின் பத்தி-II-ஐ நாங்கள் ஏற்கெனவே கவனித்தோம்,

அதில், மு.வ. எண் 89/1883-இன் வழக்குரை அட்டவணைச் சொத்துகளான மற்ற சொத்துகளுடன் தொடர்புடைய அவர்களது உரிமையை வெளிப்படையாகத் தொடர விரும்பும் அவர்களின் எண்ணத்தை வாதிகள் வெளிப்படுத்தினர். உ.வி.மு.ச., கட்டளை II, விதி 2-இன் தடையானது இங்கு பொருந்தாது என்பதை நாங்கள் ஏற்கெனவே சுட்டிக்காட்டியுள்ளோம். மு.வ. எண் 71/1958-இல் உள்ள ஒத்திசைவு தீர்ப்பாணையின் விதிமுறைகளை வலுவிழக்கச் செய்ததில் மு.வ. எண் 36/1963-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் பங்குள்ளது என்ற மேல்முறையீட்டாளர்களின் வாதுரையில் குறிப்பிடத்தக்க தகுதிப்பாடு உள்ளது. மு.வ. எண் 36/1963-இன் ஒத்திசைவு தேதியின்படி இருந்த சூழ்நிலை யாதெனில், ஏழு வகை சொத்துகளில் நான்கு வகை சொத்துகள் ஆர். கிருஷ்ணம்மாளால் உடைமை மாற்றம் செய்யப்பட்டது, அதேவேளையில், ஒரு சொத்து அரசால் கையகப்படுத்தப்பட்டது என்பதாகும். மு.வ. எண் 36/1963-இன் வழக்குரை அட்டவணையில் உள்ள சொத்து வகை எண்கள் 5 மற்றும் 6-ஐ பொறுத்தவரையில், 10.5.1955-ஆம் தேதியிடப்பட்ட உயிலின் விதிமுறைகள் வலியுறுத்திக் கூறப்பட்டது. ஆர். கிருஷ்ணம்மாளுக்கு சொத்துவகை எண்கள் 5 மற்றும் 6 தொடர்பான முழுமையான உரிமைகள் அளிப்பதற்கு அடிப்படையாக அமைந்த மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையின் வரைமுறைகளிலிருந்து விலகிச்செல்லும்போதுமாயின், அதே சொத்து வகைகளைப் பொறுத்தவரையில் மு.வ. எண் 36/1963-இல் உள்ள ஒத்திசைவுத் தீர்ப்பாணையின்கீழ் ஆர். கிருஷ்ணம்மாள் சொத்துகளை உடைமை மாற்றஞ்செய்யும் அதிகாரமின்றி, அவருடைய வாழ்நாளில் அவற்றை அனுபவிக்க மட்டுமே முடியும் என்பதே இதற்குக் காரணமாகும். இதை 10.5.1955-ஆம் தேதியிடப்பட்ட உயிலின் வரைமுறைகளை மு.வ. எண் 36/1963-இன் ஒத்திசைவுத் தீர்ப்பாணை வெளிப்படுத்துவதோடு, மேலும்

வலுவூட்டுகிறது எனக் கூறலாம். மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963 ஆகிய இரண்டிலும் நீதிமன்றத்தால் தீர்ப்பு பகரப்படவில்லை. ஒத்திசைவுத் தீர்ப்பாணையைப் பெற எது தரப்பினர்களை ஒத்திசைய வைத்ததோ அது தரப்பினர்களின் சட்டரீதியான உரிமைகளை தீர்மானிக்காது, ஆதைத் தீர்ப்புக்கூறவே நாங்கள் கோரப்பட்டோம். மு.வ. எண் 36/1963-இன் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டவர்களும், வழக்குரைஞரால் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டவர்களுமான இலட்சுமையா நாயுடுவின் உறவுவழியினரின் செயல்பாடானது மேல்முறையீட்டாளர்களின் தரப்பில் உயிலினை மெய்ப்பிப்பதற்கான தேவையினை நீக்கிவிடாது.

57. மு.வ. எண் 36/1963-இன் ஒத்திசைவுத் தீர்ப்பாணையில், இலட்சுமையாவின் உறவு வழியினர் உட்பட மற்ற பிரதிவாதிகளுக்கெதிராக தாங்கள் ஏதொரு பரிகாரமும் கோரவில்லையென வாதிகள் குறிப்பிட்டனர் என்ற பொருண்மையின்மீது எங்களது கவனம் ஈர்க்கப்பட்டது என்பது மேற்கொண்டு கருத்திற்கொள்ளப்படவேண்டிய அம்சமாகும். இதிலிருந்து மு.வ. எண் 71/1958-இல் உள்ள ஒத்திசைவுத் தீர்ப்பாணையின் கீழ் இலட்சுமையா நாயுடுவின் உறவுவழியினரின் உரிமைகள் பாதுகாக்கப்பட்ட அதேசமயம், ஆர். கிருஷ்ணம்மாள் அனைத்து சொத்துகள் தொடர்பான அவரது உரிமைகளைத் துறந்தார், அதைத்தவிர, அவருக்கு முழுமையான உரிமைகள் அளிக்கப்பெற்ற ஏழுவகைச் சொத்துகளும் குறக்கீடின்றியும், கேள்விக்கு அப்பாற்பட்டும் இருந்ததாக வாதுரைக்கும்படி கோரப்பட்டது. மு.வ. எண் 71/1958-இல் ஆர். கிருஷ்ணம்மாள் அவரது அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத்த வழக்குரை அட்டவணைச் சொத்துகளின் தொடர்பான மு.வ. எண் 89/1983-யினை நிறுவுவதில் மேல்முறையீட்டாளர்களுக்கு முரண்தடை மற்றும் உடன்பாடு போன்ற கோட்பாடுகளின்வாயிலாக அது தடையை ஏற்படுத்தும் என்பதை

சுட்டிக்காட்ட இந்நடத்தையானது எங்களின் முன்பாக வலியுறுத்திக் கூறப்பட்டது. இது தொடர்பாக நாம் நினைவிற்கொள்ளவேண்டியது யாதெனில், மு.வ. எண் 36/1963-இன் வழக்குரையிலும் ஏழுவகைச் சொத்துகளைத் தவிர மற்ற சொத்துகள் மறுப்பிற்கிடமின்றி வழக்கின் விடயப்பொருளல்ல. அதைவிட முக்கியமாக, ஒத்திசைவுத்தீர்ப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது யாதெனில், மேற்படி வழக்கில் மற்ற பிரதிவாதிகளுக்கு எதிராக ஏதொரு பரிகாரமும் கோரப்படவில்லை என்பதாகும். மு.வ. எண் 36/1963-இல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின்மூலமாக இலட்சுமையாவின் உறவுவழியினரின் உரிமைகள் பாதிக்கப்படவில்லை என்பதும் அதேசமயம் உண்மையாகும். மு.வ. எண் 36/1963-இல் உள்ள சொத்து வகை எண்கள் 5 மற்றும் 6-ஐப் பொறுத்தவரையில், ஆர். கிருஷ்ணம்மாளின் உரிமைகள் உடைமை மாற்றத்திற்கு எதிரான தடையுடன் ஆயுள் பாத்தியதை வரை மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது, அதை ஒத்திசைவின் கீழான உயிலின் வரையறைகளுக்கு ஏற்ப ஒத்திசைய வைத்தது இலட்சுமையா நாயுடுவின் உறவுவழியினருக்கு பொருட்டல்ல என்பதே இதற்குக் காரணமாகும். இதன்காரணமாக அவர்களைப் பொறுத்தவரை ஏற்கெனவே மு.வ. எண் 71/1958 ஒத்திசைவு தீர்ப்பாணையால் அவர்களை கட்டுப்படுத்தியதன் கீழ் வகை எண்கள் 5 மற்றும் 6 குறித்து ஆர். கிருஷ்ணம்மாளுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்பட்டு மற்றவற்றுக்கிடையில் தங்களது அனைத்து உரிமைகளையும் அவர்கள் இழந்துவிட்டனர். அதனால் மேல்முறையீட்டாளர்கள் மற்றும் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு இடையிலான அந்த உடைமைகள் என்ற முறையிலான ஏற்பாடு அவர்களுக்கு சம்பந்தமானதல்ல. மிஞ்சிய உடைமைகளின் மீதான அவர்களுக்குள்ள உரிமை என்னவெனில் மு.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையின்கீழ் தனித்த உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

விளைவானது வகை எண்கள் 5 மற்றும் 6 என்ற முறையில் மு.வ. எண் 36/1963 உள்ள ஒத்திசைவு தீர்ப்பாணையின்கீழ் உயிலின் ஷரத்துகளில் ஒருவகையில் வலியுறுத்திக் கூறப்பட்டது. இல்லையெனில் அ.வ. எண் 71/1958-இன் தீர்ப்பாணை கவனிக்கப்படாமல் இருந்திருக்கும், எனவே அ.வ. எண் 36/1963-இல் பிறப்பித்திருக்கும் தீர்ப்பாணை மேல்முறையீட்டாளர்கள் மற்றும் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு இடையிலான முழுமையான விடயமாகும் என்ற முடிவுக்கு நாங்கள் வருகிறோம். இலட்சுமையா நாயுடு கிளை ஒத்திசைவிற்கு தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருந்த-போதிலுங்கூட, தீர்ப்பாணைக்கு உண்மையான தரப்பினர்கள் அல்லர். அவர்கள் ஒத்திசைவு தீர்ப்பாணையில் தரப்பினர்களாக கையொப்பமிடவில்லை. ஆகையால் மேல்முறையீட்டாளர்களுமல்லாமல், எதிர்வாதிகளுமல்லாமல் அங்கு பிறப்பித்திருக்கும் ஒத்திசைவு தீர்ப்பாணை அல்லது தாக்கல் செய்திருக்கும் அ.வ. எண் 36/1963-லிருந்து எந்தவித மேன்மையும் உய்த்துணரமுடியாது. அ.வ. எண் 36/1963 உள்ள வாதிகள் அ.வ. எண் 732/1981ங்கூட தாக்கல் செய்துள்ளனர். இலட்சுமையா கிளை (மேல்முறையீடுகளிலுள்ள எதிர்வாதிகளுக்கிடையில்) தரப்பினர்கள் அல்ல. மு.வ. எண் 36/1963-இன் அட்டவணையில் வகைகள் 5 மற்றும் 6-னுடைய பிரிவினைக்கான உரிமை வழக்காகும். மேற்சொன்ன உரிமை வழக்கில் தரப்பினர்களாக இல்லாததால் அ.வ. எண் 732/1981-இன் அடிப்படையில் கொள்நிலை முன்தீர்ப்பு அல்லது முன்தீர்ப்பு கொள்கைகளுக்குரியதன்மீது அவர்களால் வெளிப்படையாக சார்ந்திருக்க இயலாததாகும். எனினும், வலியுறுத்திப் பெறவிரும்பியது என்னவெனில், வளாகத்தின் அடிப்படையிலேயே அ.வ. எண் 732/1981-இல் தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. தற்பொழுது உரிமை வழக்கின் வழக்குமூலத்துடன் முழுமையாக ஒத்துப்போகவில்லை. அ.வ. எண் 732/1981-இல் உடைமைகள்மீது ஆர். கிருஷ்ணம்மாளுக்கு உரிமைகள்

இருந்ததாக வழக்கு அமைந்திருந்தது என்றும், மேலும் தற்போதைய உரிமை வழக்கில் அமைந்த நிலவரத்துடன் முரண்பட்டுள்ளதென்று வேறுவகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அவ்வாறான நடவடிக்கையின் போக்கில் மேல்முறையீட்டாளர்கள் உறுதிமொழி எடுப்பதிலிருந்து முரணாக தடுக்கப்பட்டதாக வாதுரைக்கப்பட்டது. பின்வரும் நடப்புமுறையை எங்களாலுங்கூட குறைக்க இயலும். மு.வ. எண் 732/1981-இல் கிடைப்பதற்குரிய உரிமைகளின் வரைவுகளை உள்ளடங்கிய வழக்குமூலம் (அ.வ. எண் 36/1963-இல் வகை எண்கள் 5 மற்றும் 6 என்றமுறையில்) மு.வ. எண் 71/1958-னுள்ள அடங்கல் பெற்றதன்கீழ் அட்டவணை வகைகளை கொண்ட வழக்குரையின் சொத்துகளிலுள்ள தனது உரிமைகளை கைவிட்ட ஆர். கிருஷ்ணம்மாளின் உரிமைகள் லட்சுமையா கிளையால் ஒப்புகை செய்யப்பட்டது. நாங்கள் வெளிப்படுத்தப்பட்ட பரிமாணங்களை புறக்கணிக்கவில்லை, உடைமை-களுக்கான உரிமையை மேல்முறையீட்டாளர்களுக்கு ஆதரவாக ஒருவேளை நிறுவப்படவில்லையெனில், அது தொலைந்திருக்கக்கூடும். வழக்குரை அட்டவணை சொத்துகள் என்றமுறையில் **(ஹூா முல்சந்த் அண்ட் கோ லிமிடெட்) (கலைப்பிலுள்ள) நொடித்தவர் சொத்து நிர்வாகி உயர் நீதிமன்றம், மெட்ராஸ் மூலமாக -எதிர்- ஜவஹர் மில்ஸ் லிமிடெட், சேலம்**[30] மற்றும் **டாக்டர் கரண் சிங் -எதிர்- ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம்**[31] மற்றும் ஒருவர் இது தொடர்பாக பார்க்கவும்) உரிமைகளை கைவிடப்பட்ட வழக்காக அதனை கருத இயலாது. அ.வ. எண் 732/1981-ஐ மறுப்புத்தடை வழக்காக அமைக்க தரப்பினர்கள் அல்லாத எதிர்வாதிகளால் இயலாது.

---

30. ஏ.ஐ.ஆர். 1953 எஸ்.சி. 98

31. (2004) 5 எஸ்.சி.சி. 698

10.05.1955-ஆம் தேதியிட்ட உயில் சாசனம் மெய்ப்பிக்கப்பட்டதா?

(சாட்சியச் சட்டம், பிரிவுகள் 33, 68 மற்றும் 69)

58. இந்த கேள்விக்குள்ளான உயில் சாசனம் ஓர் உயர் சிறப்புரிமையற்றதாகும். இந்திய மரபுரிமைச் சட்டம், பிரிவு 63-இல் ஓர் உயர் சிறப்புரிமையற்ற விருப்புறுதி செய்வதற்கான முறையினை வழிவகுத்துள்ளது. அதன்படி செல்லத்தகுந்த விருப்புறுதியை இயற்றுவது மட்டுமல்லாது, ஆவணத்தை உயிலவர் கண்டிப்பாக நிறைவேற்றுவது அவசியமானாலுங்கூட குறைந்தது இரண்டு சாட்சிகள் கட்டாயம் சான்றொப்பமிட்டிருக்கவேண்டும். என்ன தேவையென்றால், இந்திய மரபுரிமைச் சட்டம், பிரிவு 63-இல் வகைசெய்துள்ளபடி ஆவணத்தில் சான்றொப்பமிடவேண்டும். ஆனால், வழக்கமாக சான்றுரைப்பதல்ல.

59. இந்திய சாட்சியச் சட்டம், 1872, பிரிவு 68 (இதன்பின்னர் சுருக்கமாக 'சாட்சியச் சட்டம்' என்று குறிக்கப்படும்) சட்டப்படி சான்றொப்பமிடப்பட்ட ஆவணத்தின் நிறைவேற்றுகையை அவசியம் மெய்ப்பிப்பது பற்றி அணுகுகிறது. விருப்புறுதி வழக்கினுள் இந்திய மரபுரிமைச் சட்டம் பிரிவு 63-னால் கோரியபடி ஒரு ஆவணம் சான்றொப்பமிடப்பட்டிருந்து, ஒருவேளை அங்கு சான்றொப்பமிட்ட சான்றுரைஞர் உயிருடனிருந்து, மேலும், நீதிமன்றத்தின் செயல்முறைக்குட்பட்டு சாட்சியமளிக்க தகுதிவாய்ந்திருப்பின் அதனுடைய நிறைவேற்றுகையை மெய்ப்பிப்பதற்காக சான்றொப்பமிட்ட சான்றுரைஞர்களுள் ஒருவரை அழைத்தால் மட்டுமே விருப்புறுதியை ஒருவேளை மெய்ப்பிக்கக்கூடும் என்பதை அதனை பார்வையிட்டதில் தெளிவாகிறது.

60. சாட்சியச் சட்டம், 1872, பிரிவு 69 பின்வருமாறு எடுத்துரைக்கப்படுகிறது:

"69. சான்றொப்பமிட்ட சான்றுரைஞர் எங்கும் கண்டறியப்பட-
வில்லை என சான்றுவிளக்கம்.- அவ்வாறு
சான்றொப்பமிட்ட சான்றுரைஞர் ஒருவேளை
கண்டறியப்படவில்லை என்றாலோ அல்லது ஐக்கிய
ராஜ்ஜியத்தில் ஆவணத்தை நிறைவேற்றப்பட்டதாக
ஒருவேளை தென்பட்டாலோ, சான்றொப்பத்தை
குறைந்தபடி சான்றொப்பமிட்ட ஒரு சாட்சியினுடைய
அவருடைய கையெழுத்தில் இருப்பதை
மெய்ப்பிக்கவேண்டியது கட்டாயமாகும், மேலும்,
ஆவணத்தை நிறைவேற்றிய நபரினுடைய கையொப்பம்
அந்த நபரின் கையெழுத்தாக இருக்கவேண்டும்."

61. 'ஒருவேளை அந்த சான்றொப்பமிட்ட சாட்சி கண்டறியப்படவில்லையெனில், மற்றவற்றுக்கிடையில் பின்வரும் பொருள்விளக்கத்தினை தாங்குகிறது' என்ற சொற்றொடர் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், 'சான்றொப்பமிடும் சாட்சி' முன்பாக 'அவ்வாறான' என்ற வார்த்தை சாட்சியச் சட்டம், பிரிவு 68-இல் குறிப்பிடப்பட்டிருக்கும் 'சான்றொப்பமிடும் சாட்சி' என்பதை குறித்துரைக்கும் உள்நோக்கம் கொண்டிருந்தது. 'கண்டறியப்பட்டது' என்ற சொற்றொடரை பொறுத்தவரையில் பல்வேறு வகையான சூழ்நிலைகளை அது உள்ளடங்கப்பெற்றிருந்தது. ஏதேனும் உடற்ரீதியான பிணியின் காரணமாக சாட்சியமளிப்பதற்கான இயலாமையுடைய நிலவரங்களை உள்ளடக்கியிருக்கிறது. சான்றொப்பமிட்ட சான்றுரைஞர்கள் இறந்திருக்கும் ஒரு சூழ்நிலையை நிச்சயமாக அது உள்ளடக்கமாகக் கொள்ளும். சான்றொப்பமிடும் சான்றாளர் தன்னிலை மறந்திருப்பின் 'கண்டறிதல்' எனும் சொல் எங்கு ஒரு

சான்றொப்பமிடும் சான்றாளர் உடற்ரீதியாக கிடைக்கக்கூடியபோதிலும், அவ்வாறு தகுதிவாய்ந்த சூழ்நிலையை உட்கொண்டிருப்பின், சாட்சியச் சட்டம், பிரிவு 68-இன் கீழ் சான்றொப்பமிட்டதை மெய்ப்பிக்கும் கடமைப் பொறுப்பினை ஆற்றுவதற்கு இயலாமலும், மேலும் அதன்காரணமாக அவர் கண்டறியப்படவில்லை என்னும் சூழ்நிலையாக உண்டாகிவிடும்.

62. **<u>பாபுசிங் மற்றும் பலர் -எதிர்- ராம் சஉறாய் என்கிற ராம்சிங்</u>**[32]-இல் பிரிவு 69 குறித்து நீதிமன்றத்தால் பின்வருமாறு விதிக்கப்பட்டது:

> 17. எங்கு ஒரு வழக்கினுள் சான்றொப்பமிட்ட சான்றாளர் இறந்துவிட்டாலோ அல்லது நீதிமன்ற ஆட்சிவரம்பிற்கு வெளியிலோ அல்லது எதிர்த்தரப்பினால் வழியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தாலோ அல்லது சிரத்தையாக தேடியும் எதிர்மாறாக தேடிக்கண்டுபிக்க இயலாவிடினும் மற்றவற்றுக்கிடையில் அது பொருந்தக்கூடும். அந்த சூழ்நிலையில்தான் இந்த உயில் சாசனம் பிரிவு 69-இல் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் நிரூபிக்க இயலும். அதாவது, சான்றாளர்களை விசாரிப்பதனால் உயிலவர் அல்லது நிறைவேற்றாளரின் கையெழுத்தினை நிரூபிக்கமுடியும். அதன்பின்னர் மற்றவர்களின்மீது மெய்ப்பிக்கும் சுமை மாற்றப்பட்டது.

---

32. (2008) 14 எஸ்.சி.சி. 754

18. எனினும், வழக்கமாக ஒரு உயில் சாசனம் வாரிசுமுறைச் சட்டத்தின் பிரிவு 63 மற்றும் பிரிவு 68-இன் விலக்குக்கூறுகளின்படி மெய்ப்பிப்பது கட்டாயமாக இருப்பதை கருத்தில் வைத்து இதற்கு முன்னால் கவனிக்கப்பட்டவாறு சூழ்நிலையில் அதனுடைய ஆக்கக்கூறுகள் பதிவாவணத்தில் வரப்பெற்று, நிறைவேற்றுதல் மற்றும் சான்றொப்பமிடுதலின் கண்டிப்பான நிரூபணம் தளர்வுற்று நிற்கும். **<u>எனினும் பிரிவு 69-இல் கருத்தில் கொள்ளப்பட்டவாறு கையொப்பம் மற்றும் கையெழுத்தினை கட்டாயமாக மெய்ப்பிக்கவேண்டும்.</u>**

(வலியுறுத்திக் கூறப்பட்டது

63. சாட்சியச் சட்டம், பிரிவு 69 உடன் அணுகியபோது **<u>கே. லட்சுமணன் -எதிர்- தேக்கையில் பத்மினி மற்றும் பலர்-</u>**இல்[33] இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நாங்கள் கவனித்தோம்.

"32. சான்றொப்பமிட்ட சான்றுரைஞர்கள் இருவரையும் விசாரிக்கப்படாத காரணத்தினால் சட்டத்தின் பிரிவு 69-இன் ஷரத்துகளின்படி பதவி வகிப்பவரிடம் குறைந்தது ஒரு சான்றொப்பமிட்ட சாட்சியின்

---

33. (2009) 1 எஸ்.சி.சி. 354

சான்றொப்பமானது அவருடைய கையெழுத்திலிருந்தது என்றும், மேலும் ஆவணத்தை நிறைவேற்றுகை செய்த நபரினுடைய கையொப்பம் அந்த நபரின் கையெழுத்தில் இருந்தது என்பதையும் நிரூபிப்பது மேல்முறையீட்டாளருக்குரியதாகும். சான்றாவணம் பி.2-விலுங்கூட பி.சா.3 ஓர் அடையாளங்காணும் சாட்சியானவர் குறிப்பிட்டு கூறியதாவது, சான்றாவணம் பி.2-வைப் பொறுத்தமட்டில் அவர் ஓர் அடையாளங்-காணும் சாட்சியாக கையொப்பமிடவில்லை என்றும், மேலும், சான்றாவணம் பி.2-விலுள்ள கையொப்பம் பற்றியுங்கூட தனக்கு தெரியாது என்பதாகும். மேலும், நன்கொடை ஆவணத்தின் தன்மையைப் பரிசீலித்ததில் நிறைவேற்றாளரால் நிறைவேற்றப்பட்ட ஆவணத்தை மறுத்து, குறிப்பாக, வாதுரை தாக்கல் செய்யவில்லை என்று அனுமானித்தாலுங்கூட, அதற்கான கட்டளை அங்கு தேவையில்லை மற்றும் ஒரு சான்றொப்பமிட்ட சாட்சியை விசாரிப்பதற்கான ஓர் கடப்பாடுமில்லை, ஆனால், வாதி நன்கொடை ஆவணத்தின் நிறைவேற்றுகையை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும், அதனால் வேறேதேனும் ஆவணத்தைப்போன்றே அதனையும் நிரூபிப்பது அவசியமானது என்ற

பொருண்மை தற்போதுவரை எஞ்சியிருக்கிறது".

64. இந்த வழக்கில் தொடர்புடைய சமயத்தில் இவ்விரண்டு சான்றொப்பமிட்ட சாட்சிகள் உயிருடனில்லை என்பதில் பூசலில்லை. ஆகையால், அப்போது எழும்பிய கேள்விகள் பின்வருமாறு:

அ) இன்னும் சான்றொப்பமிட்ட சாட்சிகள் இருவரும் இறந்துவிட்டால், அப்போது சட்டத்தின் தேவையானதாவது: சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன் கீழும், இந்திய வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 63-இன் கீழான தேவைப்பட்டவாறு சான்றொப்பம், அதாவது, இரண்டு சாட்சிகளின் சான்றொப்பம் மெய்ப்பிக்கவேண்டுமா? அல்லது குறைந்தபடி ஒரு சான்றொப்பமிட்ட சாட்சியின் சான்றொப்பமானது அவருடைய கையெழுத்தில் இருந்ததை மெய்ப்பிப்பதற்கு, சாட்சியச் சட்டம், பிரிவு 69-னுடைய எழுத்தியல்பான ஆணையை பின்வருகிற வாசகக்கூறிலிருந்து நீங்கலாக நிரூபிப்பது போதுமானதா?

ஆ) கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான நடவடிக்கைகளில் உயில் சாசனத்திலுள்ள சான்றொப்பமிட்ட சாட்சிகளில் ஒருவரது சாட்சியத்தின் பிரதியை சான்றாவணம் பி.7 சாட்சியச் சட்டம் பிரிவு 33-இன் கீழான தேவைகளை போதுமானதாக நிறைவேற்றுகிறதா? என்பதே

மேற்கொண்டு எழவிருக்கும் கேள்வியாகும்.

65. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 83-இன் தாக்கம் தொடர்பான விடயத்தை நாங்கள் முதலில் எடுத்துக்கொள்கிறோம். உயர் நீதிமன்றத்தால் உள்செல்லப்பட்ட சங்கதிகள் அதுவல்ல. சாட்சியச் சட்டத்தின் பிரிவு 33 படித்தறிவது பின்வருமாறு:

"33. பின்னிட்ட நடவடிக்கையினுள் மெய்ப்பிப்பதற்காக சில தொடர்புற்ற சான்றுரை, அங்கு கூறப்பட்ட உண்மை பொருண்மைகள்.- நீதிமன்ற நடவடிக்கையில் சாட்சியால் அளிக்கப்பட்ட சான்று அல்லது அதை எடுப்பதற்கு சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் நபர் முன்பாகவோ மெய்ப்பிக்கும் காரணத்திற்காக தொடர்புற்றிருத்தல், அடுத்துவரும் நீதிமன்ற நடவடிக்கையினுள்ளோ அல்லது அதே நீதிமன்ற நடவடிக்கையின் பின்வருகிற கட்டத்திலோ, எவை உண்மையான பொருண்மைகள் என அது கூறுகிறதோ, சாட்சி இறந்துவிட்டாலோ அல்லது கண்டறியப்படா-விட்டாலோ அல்லது சாட்சியமளிப்பதற்கு இயலாமல் இருந்தாலோ அல்லது எதிர்த்தரப்பினால் வழியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தாலோ அல்லது ஒருவேளை அவருடைய முன்னிலையை ஓர் அளவான தாமதம் அல்லது செலவில்லாமல் பெறுவதற்கு இயலாவிடில் வழக்கு சூழ்நிலைகளின்கீழ் இந்நீதிமன்றம்

நியாயமற்றதாக கருதும:

இருந்தபோதிலும், நடவடிக்கையானது ஒரே தரப்பினர்களுக்கிடையிலோ அல்லது அவர்களிடம் அக்கறைகொண்ட பிரதிநிதிகளோ முதல் நடவடிக்கையில் குறுக்கு விசாரணை செய்வதற்கான உரிமையும் மற்றும் வாய்ப்பும் உடைய எதிர்த்தரப்பினர் பொருள்வகையிலான விடயங்களினுள்ள வினாக்கள் முதல் மற்றும் இரண்டாம் நடவடிக்கையிலுள்ளவாறு ஒரே நிலையுடையதாக இருத்தல்வேண்டும்.

விளக்கம்:- ஒரு குற்றவியல் வழக்கு விசாரணை அல்லது தகவலறிதல் இப்பிரிவின் பொருள் விளக்கத்தினுள் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கும் மற்றும் அரசு வழக்குரைஞருக்கும் இடையேயான நடவடிக்கையாக கருதப்படும".

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

66. கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையில் ஆர். கிருஷ்ணம்மாள் மற்றும் உயில் சாசனத்தின் நிறைவேற்றாளருக்கு இடையிலான சச்சரவில் 'அ' தரப்பினர் எண்கள் 1 மற்றும் 2 மேலும், 'ஆ' தரப்பினர் என்னும் நடையில் குறித்துரைக்கப்பட்டுள்ளனர், அதாவது, இந்த மேல்முறையீட்டாளர்கள் தற்போதுள்ள மேல்முறையீட்டாளர்கள் தரப்பினர்கள் அல்லர். ஆகையால், அதேபோன்றோருக்கிடையில் நடவடிக்கையில்லை. பிரிவு 33-இன் முதல் வகையத்தின்

மற்றொரு வாசகக்கூறு, அதாவது, சாட்சியச் சட்டத்தின் பிரிவு 33-ஆனது பொருந்துகிறபொருட்டு, அவர்களிடம் பற்றுள்ள பிரதிநிதிகளுக்கிடையிலான நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாமலிருக்கவேண்டும். உயில் சாசனத்தின் கீழ் எஞ்சிய ஆட்களான மேல்முறையீட்டாளர்கள் எவரோ, ஆர். கிருஷ்ணம்மாளிடம் பற்றுகொண்ட பிரதிநிதிகளாக கருத இயலாது என்ற வாதுரையை எழுப்பியதாக காணப்படுகிறது.

67. மேலும், மூன்றாவது வகையத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றாக பிரிவு 145-இன் தன்மை நடவடிக்கைகளில் இல்லை என்பதை மிகுதியான ஒளியால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. "பற்றுள்ள பிரதிநிதி" என்கிற வார்த்தையின் பொருள்விளக்கம் அரசப் பேரவைக்கு முன்பு பரிசீலனைக்கு வைத்து, **<u>கிருஷ்ணய்யா சூர்ய ராவ் பகதூர் காரு மற்றும் பலர் (பிரதிவாதிகள்) -எதிர்- வெங்கடகுமார மஉறிடதி சூர்ய ராவ் பஉறதூர் காரு</u>**[34]-வின் தீர்முடிவில் அறிவிக்கப்பட்டு இந்நீதிமன்றம் பெருமளவிலான சட்ட வழக்குகளை குறித்துரைத்தும் மற்றும் அகல்விரிவான மறு ஆய்விற்குப் பின்னர் கீழ்வருமாறு தீர்மானிக்கிறது.

> "20. எளிதாக இருப்பதற்கு எதுவுமில்லை, ஆங்கில விதியை பின்பற்றுவதை விடுத்து அவ்வாறு செய்வதற்கு விருப்பம்கொண்டாலோ அல்லது முதல் நடவடிக்கையின் தரப்பினர் சொத்துடன் கூடிய தனியுரிமையும் அல்லது இரண்டாவது நடவடிக்கைகளுக்கான தரப்பினரது பாத்தியதையில் முன்னிருந்தவராக இருப்பது தேவையானதாகும். அவ்வாறு நன்கறிந்த ஷரத்துகளை பயன்படுத்துவதற்குப் பதிலாக,

---

34. ஏ.ஐ.ஆர்.1933 பி.சி. 202

தொழில்நுட்பமல்லாமலும், ஒரு கலையின் வாசகங்கள் இல்லாமலும், மிகுதியான நெகிழும் தன்மைகொண்ட ஒன்றை மேலும் பயன்படுத்தலாம், ஆங்கில சட்டத்திற்கு முன்பின் அறியப்படாத சூழ்நிலைகளும் மற்றும் பற்றுள்ள பிரதிநிதித்துவத்தின் வகை மற்றும் தரமுடைய இந்து கூட்டுக் குடும்பத்தை உள்ளடங்கிய நாட்டினுடன் அணுகும்போது (வேறுவித நிலையான ஏற்பாட்டிற்கு மத்தியில்) சட்டமியற்றும் அதிகாரக்குழு அதனை கண்டிப்பாக நினைவுகொள்ளுதல்வேண்டும். இச்சங்கதிகளின் பார்வையில் முடியாது, ஆனால், அவர்களின் நீதியரசர்களால் கண்டிப்பான ஆங்கில சட்டத்துறைச் சொல் விடுபட்டுள்ளதை ஊகித்து உய்த்துணரமுடியும், மேலும், குறைவாக வரையறுக்கப்பட்ட "பற்றுள்ள பிரதிநிதிகள்" சொற்றொடரை உள்நோக்கமுடனும் மற்றும் கலந்தாராய்ந்தும் பயன்படுத்தப்பட்டுள்ளது. எங்கு சூழ்நிலைக்குரிய ஒவ்வொரு வழக்கின் சரியான விடைக்காக சார்ந்திருக்கும் எழும்புகின்ற கேள்வியாக முதல் நடவடிக்கையில் தரப்பினராக அங்கிருந்து இரண்டாவது நடவடிக்கையிலும் தரப்பினரின் பற்றுள்ள பிரதிநிதியாக இருக்கிறாரா? என்ற விரிவான பொருள்விளக்கத்தினுள் இந்த அவர்களின்

நீதியரசர்களால் உடைமையாகக் கருதப்பட்டது. முதல் விலக்குக்கூறினை திரும்பிப்பார்க்கையில் முதல் நடவடிக்கையின் தரப்பினர்கள் இரண்டாவது நடவடிக்கையிலும் தரப்பினர்களின் சம்பந்தமாக முதல் நடவடிக்கையில் உள்ள எழுவினாவில் 'எந்த சங்கதிகளாக கூறப்பட்ட சான்றுரைகள்' தொடர்பான பற்றுள்ள பிரதிநிதிகளாக இருந்திருக்கவேண்டும் என்பது நீதியரசர்களின் கருதுநிலையில் தேவைப்படுகிறது. வாரிசுரிமையர்கள் மற்றும் சொத்துரிமை உறவுகளுக்கான வழக்குகள் மட்டுமல்லாது, எங்கு நீடித்திருக்கும் இவ்விரண்டு நிபந்தனைகள் பின்வரும் வழக்குகளும் அதில் உள்ளடங்கியுள்ளது, அதாவது *(1)* முதல் நடவடிக்கையில் கூறப்படும் செய்தி இரண்டாவது நடவடிக்கையின் தொடர்புடைய தரப்பினரின் அக்கறையுடன் ஒத்திருக்கவேண்டும், மேலும், முதல் நடவடிக்கையில் அங்குள்ள தொடர்புடைய தரப்பினரின் அக்கறைக்கு மாறாக இருத்தல்கூடாது மற்றும் *(2)* முதல் நடவடிக்கையிலுள்ள குறிப்பான எழுவினாவிற்கு இவ்விருவராலும் பதிலளிப்பதிலுள்ள அக்கறை ஒரேமாதிரியாக உள்ளது என்பதாகும். முதல் வகையத்தினுள் வேறுவிதமான வழக்குகளும்

உள்ளடங்கியிருக்கக்கூடும். ஆனால், மேற்சொன்ன நிபந்தனைகளை ஒருவேளை இவ்விருவரும் பூர்த்தி செய்திருந்தால், முதல் நடவடிக்கையிலுள்ள குறிப்பான எழுவினா சம்பந்தமாக இரண்டாவது நடவடிக்கையின் தொடர்புடைய தரப்பினர் முதல் நடவடிக்கையின் தொடர்புடைய தரப்பினரை உள்ளபடியாக முதல் நடவடிக்கையிலும் சார்பாளராயிருந்தபார், இரண்டாவது நடவடிக்கையின் தரப்பினர் நன்கொடை பிரதிநிதியாக நிலத்திலுள்ளவாறு இலக்கண விதிப்படியும் மற்றும் உண்மையாகவும் விவரிக்கப்பட்டிருக்கும".

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

68. 'பிறர் நலன் பெற்ற பெயராளர்' என்ற வார்த்தை மறுமுனையில் பரந்த கொள்கையுடையதாக அர்த்தங்கொள்ளவேண்டும், மேலும், வாரிசுரிமையாளர்கள் மற்றும் சொத்துரிமை உறவுகள் எங்குள்ளதோ அவ்வழக்குகளை கட்டுப்படுத்தாது. அவர் பிந்தைய நடவடிக்கையில் தரப்பினரின் அவ்வாறான பிரதிநிதியாக இருப்பார். இவ்வழக்கின் விடயத்திற்குள் உண்டாக்கப்பட்ட இரண்டு சோதனைகளுக்கு விடையளிப்பதில், ஆர். கிருஷ்ணம்மாளின் நலனுடன் அதிலும் குறிப்பாக உயில் சாசனத்தை நிறைவேற்றியிருப்பவருடன் மேல்முறையீட்டாளரின் நலன் முரண்பட்டுள்ளது என்பதை மேல்முறையீட்டாளர்கள் வாதுரைக்க இயலாது அவர்களுடைய நலனிற்கு அது நிச்சயமாக எதிர்மாறானதல்ல. இந்த உயில் சாசனம் நிறைவேற்றாளர் மற்றும் ஆர். கிருஷ்ணம்மாளால் உண்மையாகவே அமைக்கப்பட்டுள்ளது. அதனால், 'அ'

தரப்பினராக அடங்கியுள்ள இவ்விரண்டு நபர்களின் நலனான, பாத்தியதையின் பாதுகாப்பெதுவோ, மேல்முறையீட்டாளர்களின் நலனுடனுங்கூட இருக்கிறது என்பதை நம்பகமாக முடிவுற இயலும். மேல்முறையீட்டாளர்களுக்கு ஆர். கிருஷ்ணம்மாளுக்கு கீழ் அவர்களின் தலைப்பினை பெறவில்லை என்பது உண்மையாக இருக்கக்கூடும். ஆனால், உ.வி.மு.ச., பிரிவு 11-இன் கீழான வழக்கிலுங்கூட நிறைவுசெய்யப்பட்ட ஆக்கக்கூறுகளுடனும், சாட்சியச் சட்டம், ழிரிவு 33-இன் கீழான தேவைகளுடனும் குழப்பம் கொள்ளக்கூடாது. நடுவருக்கு முன்பு தரப்பினர்கள் எவரோ, எதிர்மேல்-முறையீட்டாளர் ஆதரவாகவும் நிறைவேற்றாளர் மற்றும் ஆர். கிருஷ்ணம்மாளுக்கு எதிராக கு.வி.மு.ச., பிரிவு 145-இன் நடவடிக்கையில் மேற்கொண்ட கேள்விகளுக்கு விடையளிப்பதினுள் மேல்முறையீட்டாளர்களின் நலன் கிடைக்கிறது என்று வாதுரைக்க இயலாது. 10.5.1955-ஆம் தேதியிட்ட விளம்புகை மற்றும் மேற்கொண்ட முன்னேற்றங்-களுடனுங்கூட உயில் சாசனத்தின் வழக்கு தெளிவாக அமைக்கப்- பட்டுள்ளது. ஆகையால், மூன்றாவது விலக்குக்கூறின் அடிப்படையிலான வாதுரையுங்கூட எங்களிடம் வேண்டுகோள் விடுக்கவில்லை. 'ஆ' தரப்பினரை குறுக்கு விசாரணை செய்வதற்கு அங்கிருந்த சந்தர்ப்பம் மட்டுமல்லாதுகூட, பயன்படுத்திக்- கொள்ளப்பட்டது. முன்கூட்டிய நடவடிக்கையினுள் அளித்திட்ட தீர்முடிவுகளின் தன்மைக்குரியதன்மீது சாட்சியச் சட்டம், பிரிவு 33-இன் பொருந்துகையுங்கூட சார்ந்திருக்கவில்லை. பிரிவு 33-இன் கீழ் அடங்கியுள்ள பொருண்மைகளின் உண்மையை மெய்ப்பிப்பதற்கு தொடர்பாக சாட்சியம் எடுப்பதற்கு சட்டத்தால் நிச்சயமாக அங்கீகரிக்கப்பட்ட நடுவர் முன்பு முன்னதான நடவடிக்கையில் கொடுக்க முற்பட்ட சான்றாவணம்-பி.7 மற்றும் சான்றாவணம் பி.13-ங்கூட (நிறைவேற்றாளரின் வாக்குமூலம்) உண்மையென இந்த சாட்சியத்தின் அடிப்படையில் நாங்கள் கருதுகிறோம்.

69. மேலும் எங்களால் தொடுக்கப்பட்ட கேள்வியானது சான்றொப்பமிட்ட சாட்சிகள் இருவரும் இறந்துபோனார்கள் என்ற சங்கதியை, மாறாக பொருட்படுத்தாதநிலையில், சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன் கீழே மெய்ப்பிக்கவேண்டிய விடயமும், சாட்சியச் சட்டம், பிரிவு 68-இன் கீழே மெய்ப்பிக்கவேண்டிய விடயமும் ஒரேநிலைப்பட்டதா? என்பதாகும். மறுமுனையில், இந்திய வாரிசுரிமைச் சட்டம், பிரிவு 63-இன் கீழ் உள்ளாகிய உயில் சாசன வழக்குகளிலும், சாட்சியச் சட்டம், பிரிவு 68-இன் கீழும் தன்னுடைய சான்றொப்பத்தை நிரூபிப்பதற்கு குறைந்தது ஒரு சான்றொப்பமிட்ட சாட்சியினை விசாரிப்பது மட்டுமல்லாது மற்றொரு, சான்றொப்பமிட்ட சாட்சியின் சான்றொப்பத்தையுங்கூட அவர் கட்டாயம் மெய்ப்பிக்கவேண்டும் என்பது இன்றியமையாததாகும். (காண்க 1995 (6) எஸ்.சி.சி. 213) இந்த உயில் சாசனம் மற்றும் சான்றொப்பத்தை மெய்ப்பிப்பதற்கு தங்குதடையில்லாமலிருக்கையில், சான்றொப்பமிட்ட சாட்சி ஒருவரை விசாரிப்பதனாலும், மற்றொரு சான்றொப்பமிட்ட சாட்சியினுடைய சான்றொப்பத்தையுங்கூட மெய்ப்பிப்பது தன்னால் மட்டுமல்லாது, பதவி வகிப்பவருக்குரியதுமாகும். நிறைவேற்றாளரின் சான்றொப்பத்தை இவ்விரண்டு சாட்சிகளாலும் மெய்ப்பிக்கவேண்டுமென்ற சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன் கீழான சட்டத் தேவைகளினுள் விழத்தவறிவிட்டது என்பது எதிர்வாதிகளின் வாதுரையாகும். சான்றாவணம் பி.7 வாயிலாக எங்களை எடுத்துச்சென்ற பின்னர் மேற்சொன்ன வாக்குமூலத்திலுங்கூட மற்றொரு சாட்சியின், அதாவது, டாக்டர் சி.எஸ். ராமசாமி ஐயர் சான்றொப்பம் பற்றி சாட்சியானவர் சாட்சியம் அளிக்கவில்லை என்பதை தெளிவாக அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதற்குமாறாக, சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன்படி சான்றொப்பமானது குறைந்தபடி சான்றுரைத்த சாட்சி ஒருவர் தனது

கையெழுத்தில்தான் உள்ளது என்பதை நிரூபித்தல் தேவையானது என்று முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் ஒப்பளித்து கண்டறியப்பட்டது என்பது மேல்முறையீட்டாளரின் வாதுரையாகும். இது உயிலவர் கையெழுத்தானது நிறைவேற்றப்பட்ட ஆவணத்தில் அந்த நபரின் கையெழுத்தில் இருந்தது என்பது நீங்கலாக மெய்ப்பிப்பது கட்டாயமாகும்.

70. சாட்சியச் சட்டம், பிரிவு 68-இல் உள்ளடங்கிய தேவைகளிலிருந்து பிறழ்வுகளை சாட்சியச் சட்டம், பிரிவு 69 வெளிப்படுத்திக்காட்டுகிறது என்பது எங்களுடைய கருத்துநிலையாகும். இந்த உயில் சாசன வழக்கினுள் இந்திய வழியுரிமை சட்டத்தின் பிரிவு 63-இல் நிறைவேற்றப்படுவதற்கு தேவையான வழிமுறைகளின்படி எங்கு ஓர் சான்றொப்பமிட்ட சாட்சிகள் கிடைக்கக்கூடுமெனில் அவரை விசாரித்து உயிலை மெய்ப்பிக்கவேண்டும். ஆனால் அவர் தன்னுடைய சான்றொப்பத்தை நிரூபிப்பது மட்டுமல்லாது சான்றுரைத்த மற்றொரு சாட்சியின் சான்றொப்பத்தையுங்கூட அவர் நிரூபிக்கவேண்டியது அவசியமாகும். எங்கு ஒரு சான்றொப்பமிட்ட சாட்சி உயில் சாசனம் அல்லது மற்ற ஆவணங்களின் நிறைவேற்றுகையை நினைவுகூற இயலாமலோ அல்லது மறுத்தாலோ வேறு ஆவணங்களுக்கிடையில் உயில் சாசனத்தை நிரூபிப்பதற்கு எடுத்துச்சொல்லும் வேறு சாட்சியத்தை அனுமதிக்கும் சாட்சியச் சட்டம், பிரிவு 71-இல் சிந்திக்கப்பட்டுள்ள சூழமைவுகளுக்கு உட்பட்டது என்பதில் சந்தேகமில்லை. வேறுவகையில், சட்டத்தின்படி சான்றொப்பம் தேவைப்படுகிற ஒரு ஆவணத்தின்கீழ் உயில்வழி உரிமையர் அல்லது மாற்றலுக்குரியவரின் இறுதி விளைவு சான்றொப்பமிட்ட சாட்சியின் தயவை முற்றிலுமாக எதிர்பார்த்தநிலையில் வைக்கப்படவில்லை என்றும், மேலும், சான்றொப்பமிட்ட சாட்சியால் ஆவணத்தின் நிறைவேற்றுகையை எதிர்மாறாக

மறுத்துள்ளபோதிலும், ஆவணத்தின் விளைபயனை மெய்ப்பிப்பதற்கு சட்டம் இயலச்செய்கிறது.

71. சாட்சியச் சட்டம், பிரிவு 69-க்கு மீண்டும் செல்கையில் அங்குள்ள தேவைகளானது ஆவணத்தை நிறைவேற்றிய நபரின் கையொப்பத்தை அவருடைய கையெழுத்தில் இருந்தது என்று ஒருவேளை நிரூபித்திருந்தால், அதன்பின் சான்றொப்பமிட்ட சாட்சிகளில் ஒருவரது சான்றொப்பம் அவருடைய கையெழுத்திலிருந்தது என்று நிரூபிக்கவேண்டும். வேறுவகையில் சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன் கீழ் வந்தடைகின்ற வழக்கில் சாட்சியச் சட்டம், பிரிவு 68-க்கு சார்புடைய தேவைகளானது இவ்விரண்டு சாட்சிகளினுடைய சான்றொப்பத்தை குறைந்த அளவிலேனும் சான்றொப்பமிட்ட சாட்சி ஒருவரையாவது விசாரித்து மெய்ப்பிக்கவேண்டும் என்பதை விட்டொழிக்கிறது. சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன் பொருள்விளக்கத்தினுள் சான்றுரைத்த மற்றொரு சாட்சியின் சான்றொப்பம் தொடர்புடைய சாட்சியத்தை உட்கொண்டு சான்றுரைத்த சாட்சியால் அளிக்கப்பட்ட சான்று அதுவாக இருக்கலாமென்றும், ஆனால் சாட்சியச் சட்டம், பிரிவு 69-ஆல் பாதுகாக்கப்பட்டுள்ள வழக்குகளில் சான்றொப்பமிட்ட இவ்விரண்டு சாட்சிகளாலும் நிரூபிக்கப்படவேண்டும் என்பது சட்டத்தின் தேவைப்பாடுகள் என கூறப்பட்டிருப்பது ஒரேமாதிரியான விடயமல்ல என்பதாகும். சுருக்கமாக சாட்சியச் சட்டம் பிரிவு 69-இன் கீழ் மூடப்பட்டுள்ள வழக்கில் மெய்ப்பிக்கவேண்டியது என்னவெனில், சான்றுரைத்த சாட்சிகள் சம்பந்தமாக பொறுத்தவரையில், சான்றொப்பமிட்ட சாட்சி ஒருவரது சான்றொப்பமாவது அவருடைய கையெழுத்தில் இருந்திடவேண்டும். சட்டப்பிரிவல் உள்ள கருத்து தெளிவாகவும் மற்றும் ஐயப்பாடின்றியும் உள்ளது. இந்நீதிமன்றத்தால் பொருள்கொள்ளப்பட்டவாறு சாட்சியச் சட்டம், பிரிவு 68 சான்றொப்பமிட்ட சாட்சிகள்

இருவரது சான்றொப்பமும் மெய்ப்பிக்கவேண்டும் என சிந்திக்கிறது. ஆனால் சாட்சியச் சட்டம், பிரிவு 69-இன் தேவைப்பாடுகள் அதுவல்ல.

72. இப்போது சான்றாவணம் பி.7-க்கு நாங்கள் திரும்புகிறோம். நன்கமைந்ததானது அதனை முழுவதுமாக நாங்கள் கவனிக்கிறோம்:

"இறந்துபோன ரங்கசாமி நாயுடுவை நான் நன்கறிவேன். அவர் ஒரு உயில் சாசனத்தை எழுதி என்னிடம் சான்றொப்பமிடுமாறு கேட்டார். நான் சென்றேன். அவர் என்னை சான்றுரைக்கும்படி கேட்டார். முதல் கையெழுத்தானது என்னுடையது. அந்த உயில் சாசனம் சான்றாவணம் பி.68 ஆகும். ஒவ்வொரு பக்கமும் இறந்துபோனவரால் கையொப்பமிடப்பட்டுள்ளது. அவர் கடைசி பக்கத்தில் கையெழுத்திட்டபிறகு நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். மருத்துவர் சி.எஸ். ராமசாமி ஐயர் தான் ராமநாதபுரத்திலுள்ள மருத்துவராகும். அவருங்கூட உடனிருந்தார். பதிவு செய்தபோது நான் உடனிருந்தேன். சார் பதிவாளர் வீட்டிற்கு வந்தார். சார்-பதிவாளர் முன்பு நானுங்கூட கையொப்பமிட்டேன். இறந்துபோனவர் நோயுற்றிருந்தார். அவரால் விடயங்களை புரிந்துகொள்ள முடிந்தது. நான் ஒரு வருமான வரி தொழில் புரிபவர்.

குறுக்கு விசாரணை: அந்த சமயத்தில் இறந்துபோனவரின் வீட்டிலிருந்து 1½ அல்லது 2 மைல் தூரத்திலுள்ள

இடத்தில் வசித்து வந்தேன். இறந்துபோனவரின் வீட்டிற்கு காலை 10.30 மணியளவில் நான் சென்றேன். நான் அங்கு சென்றபின்னரே மருத்துவர் வந்தார். அவர் காலை 11.30 மணியளவில் வந்தார். மருத்துவர் இந்த ஆவணத்தை சான்றொப்பமிடுவதற்காக வந்தாரா? அல்லது அவரை கவனிப்பதற்கு வந்தாரா? என்பது எனக்குத் தெரியாது. பிற்பகல் ஒரு மணியளவில் பின்னர் சார்பதிவாளர் வந்தார். சார்-பதிவாளர் வந்தடையும்வரையில் நான் தங்கியிருந்தேன். ஆனால் மருத்துவர் சென்றுவிட்டார். பிற்பகல் 1.30 மணியிலிருந்து 2.00 மணிக்குள்ளாக சார்பதிவாளர் சென்றுவிட்டார். பின்னர் மருத்துவர் திரும்பவில்லை. மருத்துவர் அங்கு மொத்தத்தில் பதினைந்து நிமிட காலத்திற்கு இருந்தார். அவர் ஒரு மருந்து ஊசி செலுத்தியது நான் நினைவு கொண்டுள்ளேன். ஆனால் நான் அதில் உறுதியாக இல்லை. நான் அங்கு சென்றிருந்தபோது உயில் சாசனம் ஏற்கெனவே தட்டச்சு செய்யப்பட்டிருந்தது, ரங்கசாமி நாயுடு படுக்கையில் கிடந்தார், குழாய் வழியாக அவருக்கு உணவு கொடுக்கப்பட்டிருந்தது. நான் அங்கிருந்தபோது அவருக்கு ஒருமுறை உணவு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அவருக்கு மருந்து

ஏதேனும் அளிக்கப்பட்டதா? என்று நான் நினைவில் கொள்ளவில்லை. பக்கங்கள் 1 மற்றும் 4-இல் உள்ள மைப்பகுதிகள் ஆவணத்தின் நடுப்பகுதியில் யாரால் எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. யார் அதை எழுதினாரென்றும் மற்றும் யார் அதை தட்டச்சு செய்தார்கள் என்றும் அங்கு அடிக்கையொப்பமிட-வில்லை. இறந்துபோனவருக்கு தலையில் ஒரு வலிமிகைமை இருந்து வந்தது, அவர் அவதியுற்றுக்கொண்டிருந்தார். அவர் வலியிலும், வேதனையிலும் இருந்துவந்தார். நான் அவரின் உடல்நலத்தில் அக்கறைகொண்டவராக அவருக்கு குறைந்த தொல்லைகள் கொடுத்தேன், சமயத்தில் வலி மற்றும் முழுச் சோர்விலிருந்து மீளப்பெறும்-பொருட்டு அவர் அமைதியாக படுத்துக்கொள்வார். அவரை தொந்தரவு செய்யவேண்டாமென்று நாங்கள் அவரை கேட்டோம். தடங்கல்/தடுத்துவைத்தல். ஒவ்வொரு நிமிடமும் அவர் சுயநினைவுடனோ அல்லது பாதி சுயநினைவுடனோ அல்லது செயலற்றுகிடந்தாரா? என்று என்னால் கூறயியலாது.

மறு-விசாரணை. அவர் என்னிடம் பேசியபோது சுயநினைவுடன் இருந்தார்.

(கையொப்பம்) பி. வெங்கடசாமி நாயுடு, 1.2.56

திறந்த நீதிமன்றத்தில் என்னால் எடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டு மற்றும் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது. (கையொப்பம்) கே.எஸ். நரசிம்மன், 1.2.56"

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

73. இந்திய சாட்சியச் சட்டம், பிரிவு 69 மற்றும் ஓர் தன்மை குறித்து இந்த கட்டத்தில் எங்களாலுங்கூட நிறுத்திவைப்பது கட்டாயமாகும் அங்கு வகைசெய்யப்பட்ட முறைப்படி உயில் சாசனத்தை மெய்ப்பிப்பது குறித்து பிரிவு 69 கூறுகிறது. 'மெய்ப்பித்தல்' என்னும் சொல் சாட்சியச் சட்டம் பிரிவு 3-இல் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

"மெய்ப்பித்தல் - ஒரு பொருண்மை எப்போது மெய்ப்பிக்கப்பட்டது என்று கூறுப்படுமென்றால், அதன் முன்பான சங்கதிகளைப் பரிசீலித்தபிறகு நீதிமன்றம் இரண்டிலொன்று உளதாயிருப்பதை ஒப்புக்கொண்டோ அல்லது வழக்கில் அவ்வாறு நிகழக்கூடிய சூழ்நிலைகளின்கீழ் குறிப்பாக உளதாயிருக்கின்ற முற்கோளுக்குரியதன்மீது முன்மதியுள்ள மனிதர் நடைமுறையில் செயல்பட்டிருப்பதை பரிசீலித்திருக்க-வேண்டும்."

74. ஆகையால், அதன் முன்பான சாட்சியம் குறித்தும், மெய்ப்பிக்கப்பட்ட சாட்சியத்தில் வெளிப்படுத்தப்பட்ட பொருண்மையை நீதிமன்றத்தால் நம்ப இயலுமா?

என்பதே வினாவாக இருக்கிறது. இதனை தெளிவுபடுத்துவதற்காக நாங்கள் கூறுகிறோம். ஒரு வழக்கில் பிரிவு 69-இன் கீழான தேவைப்பாடுகளை அங்குள்ள சான்றுகள் உறுதிசெய்வதாக தோன்றுமாயின் பிரிவு 69-இன் தேவைப்பாடுகள் மெய்ப்பிக்கப்பட்டதா? என்பதை கண்டறிவதும் மற்றும் சாட்சியத்தில் தன்னுடைய கவனத்தை செலுத்தும் சுமையிலிருந்து இந்நீதிமன்றம் விடுபடவில்லை. வேறுவகையில் சாட்சிகளின் நேர்மைத்தன்மையும் மற்றும் சாட்சியத்தின் நம்பகத்தன்மையும் நீதிமன்றம் எப்போதும் நீளநினைப்பதற்கான விடயமாகும். இந்த வழக்கைப் பொறுத்தவரையில், சான்றுரைத்த சாட்சியின் ஒருவரது சாட்சியம் பி.7-இல் உள்ளடங்கியுள்ளது. மேலும், அவர் வருமானவரி தொழில்புரிபவர் என்பதை நிலைநாட்டி பிரிவு 33-இன் கீழ் தொடர்புடையதை நாங்கள் கண்டறிந்தோம். அவர் ரங்கசுவாமி நாயுடுவால் அழைத்து தான் உயில் சாசனம் எழுதியிருப்பதாக அவருக்கு தகவல்கொடுத்து, மேலும், அதில் சான்றொப்பமிடுவதற்கு அடையாளங்காட்டப்-பட்டுள்ளார். உண்மையில் அன்றைய தினம் அங்கு செல்வதற்குரியதிலுங்கூட சான்றுரைக்க அவரை கேட்டனர். ஒவ்வொரு பக்கத்திலும் உயிலவர் கையெழுத்திட்டது பற்றியும், அவர் கையெழுத்திட்டது பற்றியுங்கூட கூறியுள்ளார். ஆதலால், சான்றொப்பமிட்ட சாட்சிகளில் ஒருவர் தன்னுடைய கையெழுத்தில் இருப்பதை மெய்ப்பித்து, பிரிவு 69-இல் கையொப்பம் சம்பந்தமான தேவைப்பாடுகளை அவர் நிலைநாட்டியதில் சந்தேகமில்லை. வாக்குமூலத்தை சந்தேகிப்பதற்கு காரணமில்லை என்பதை நாங்கள் காண்கிறோம். உயிலவரின் கையொப்பத்தை பொறுத்தவரையில் பி.13 உள்ள பி.7-இலிருந்து நீங்கலாக உயிலவர் கையெழுத்திடடதை நிறைவேற்றாளர் உரையாடியுள்ளார். மேலும், அ.சா.1 உயில் சாசனம் தன்னிடம் காண்பிக்கப்பட்டது என்றும், ஒவ்வொரு பக்கத்திலும் தந்தைவழி

சிற்றப்பனுடைய கையெழுத்து கொண்டதை ஒப்புக்கொண்டும் சாட்சியமளித்துள்ளார். எனவே பிரிவு 69-இன் கீழான உயில் சாசன அறுதி சான்றுக்கான தேவைப்பாடுகள் நிறைவுசெய்யப்பட்டன.

<u>பி.10-ஐ சார்நிலைச் சான்றாக வரவேற்றிருப்பது சட்டப்படியானதா?</u>

75. பி.10-ஆன உயில் சாசன சான்றிட்ட நகலை ஏற்றுக்கொண்டிருப்பது சட்டத்தினாலோ அல்லது பொருண்மையினாலோ தாக்குதலுக்கு ஆளாகக்கூடியதா? கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான நடவடிக்கைகளில் நடுவர் முன்பாக அளிக்கப்பட்ட உயில் சாசனம் பி.68-ஆக இந்த விசாரணை நீதிமன்றம் கண்டறிந்தது. இது பி.68 உண்மையான உயில் சாசனமல்ல என்ற எதிர்மேல்முறையீட்டாளர் வாதுரைகளை ஒதுக்கி தள்ளியபின்னராகும். உயில் சாசனத்தின் சார்நிலைச் சான்றுக்கு, அதாவது பதிவு செய்யப்பட்ட உயில் சாசனத்தின் சான்றிட்ட நகலின் மெய்மையை அளித்தது, எதிரான மறுப்புரையிலுள்ள குறைவான நற்கூறுகளை இந்த விசாரணை நீதிமன்றம் கண்டறிந்தது. உண்மையில், உயில் சாசனம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க X1 மற்றம் பி.7 படிவத்தில் எங்களிடம் சான்றுள்ளது.

76. ரங்கசுவாமி நாயுடுவின் விதவையான ஆர். கிருஷ்ணம்மாளின் உடன்பிறந்தவர் மகனான நிறைவேற்றாளருடன் உண்மையாகவே உயில் சாசனத்தின் அசல் தொடர்ந்து இருந்தது என்பது மேல்முறையீட்டாளரின் வழக்காகும். நிறைவேற்றாளர் காலஞ்சென்றபின்பு, அதனடிப்படையில் அவருடைய மகன் அசல் விருப்புறுதி ஆவணத்தை உடைமையாகக் கொண்டுள்ளார், இயைபுடைய சமயத்தில் அளிப்பதற்கான அசல் விருப்புறுதி ஆவணம் கிடைக்கப்பெறுவதற்கான ஒரு முயற்சி செய்யப்பட்டது. சி.1-ஆல் விருப்புறுதி ஆவணத்தை தாக்கல் செய்வதற்காக அவர்

அழைக்கப்பட்டார். அசல் விருப்புறுதி ஆவணம் அவரிடம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்டி அவர் எதிர்த்துரைத்தார். விருப்புறுதி ஆவணத்தை மெய்ப்பிப்பதற்கு கொடுத்த சார்நிலைச் சான்றினை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலைகள் இருந்ததை முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உறுதிசெய்யப்பட்டவாறு இந்த விசாரணை நீதிமன்றமும் கண்டறிந்தது. உயர் நீதிமன்றத்தால் எடுக்கப்பட்ட கருதுநிலையை உறுதிசெய்ய இயலாது, மேலும் வெவ்வேறான கருதுநிலையை எடுப்பதற்கு காரணமில்லை என்று நாங்கள் காண்கிறோம்.

77. மு.வ. எண் 71/1958 மற்றும் மு.வ. எண் 36/1963-இன் நடவடிக்கையில் ஆர். கிருஷ்ணம்மாளால் முதன்முதலிலும் அதன்பின்னர், மு.வ. எண் 36/1963-இலும் எங்கள் முன்பு மேல்முறையீட்டாளர்களுள்ள வாதிகளாலும் விருப்புறுதி ஆவணம் வெளிப்படையாகத் தோற்றுவிக்கப்பட்டது உண்மையாக இருக்கக்கூடும். எனினும், இந்த விடயம் விசாரணைக்கு செல்லவில்லை. விருப்புறுதி ஆவணம் சாட்சியச் சட்டத்தின்கீழ் மெய்ப்பிக்கவேண்டுமே தவிர மு.வ. எண் 36/1963-லுள்ள விருப்புறுதி ஆவணத்தின் மெய்மை அடிப்படையிலான தீர்ப்பாணையை ஆதாரமாகக்கொண்டு மேல்முறையீட்டாளர்களால் எடுக்கப்பட்டவாறு முரண்தடை எதிர்வாதத்துடன் குறிப்பிட்டல்ல என்பதே எங்களது கருத்துநிலையுங்கூட, மேலும், ஒத்திசைவிற்குங்கூட எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பினர்களாக பங்கேற்கவில்லை, ஆனால், வழக்கின் பொருண்மைகள் விருப்புறுதி ஆவணம் சம்பந்தமாக சார்நிலை சான்றினை ஏற்பதற்கு அதிகாரம் கொடுக்கவில்லை என்பதை கண்டறிந்ததில் அது நெடுந்தொலைவிலான வேண்டுகோளாகும்.

விருப்புறுதி ஆவணம்: ரங்கசுவாமி நாயுடுவின் உயில் சாசனம் உண்மைத்தன்மை உடையதா? ஏதேனும் காரணத்தினடிப்படையில் அது விழலாகின்றதா?

78. உயில் சாசனத்தில் நாங்கள் கவனித்துள்ள தொடர்புடைய பகுதிகள் பின்வருமாறு:

"1995-ஆம் ஆண்டு மே திங்கள் 10-ஆம் தேதி உப்பிலிப்பாளையம் தாலுகா, கோயம்புத்தூர், எண்டபிள்ளர் வெங்கடசுவாமி நாயுடு மகனான திரு. வி. ரங்கசுவாமி நாயுடுவால் நிறைவேற்றப்பட்ட கடைசி உயில்சாசனம் மற்றும் இறுதி விருப்பப் பத்திரம். எனது சொந்த உரிமைகளாலும் மற்றும் இங்குள்ள அட்டவணை 'அ'-வில் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள் தனிப்பட்டதாகவும், பூரணமாகவும் எனக்கு சொந்தமானதாகும். 1932-இல் திரு. ஆர்.வி. இலட்சுமையா நாயுடு என்கிற எனது சகோதரருக்கும் எனக்கும் இடையேயான குடும்ப பாகப்பிரிவினையில் எனக்கு ஒதுக்கப்பட்டதும் மற்றும் என்னால் வாங்கப்பெற்ற சொத்துக்களானவை இந்த உடைமைகளில் உள்ளடங்கும். மேலும், 1932 முதற்கொண்டு நான் பிரிக்கப்பட்ட உறுப்பினரான தேதியிலிருந்து தனிப்பட்ட பாத்தியதையிலும் மற்றும் அனுபோகத்திலும் நாளது தேதிவரை அவ்வாறாக தொடர்ந்திருந்து வருகிறேன். இன்று எனது பிரிக்கப்பட்ட சமுதாயப்படிநிலையின்படி ஓர் திறந்த

விளம்புகை சம்பந்தமாக செய்ததிலுள்ள ஏதேனும் நிலையற்றவைகளையுங்கூட நான் கவிர்க்கவேண்டும். அசையாச் சொத்துகளன்றியும், இங்குள்ள 'ஆ' அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள ரொக்கம் மற்றும் இதர தொகைகளுக்கு நான் உரிமையுள்ளவன். நான் நீண்டகாலம் உயில்வாழும் நிலை இல்லாததாலும், எனது தயக்கத்தின் காரணத்தினால்கூடவும், மேலும், எனது குறைவான பலத்தாலும் மற்றும் சமீபகால குன்றிய உடல்நல அறிகுறியின் காரணத்தாலும் இங்குள்ள முறைப்படி எனது உடைமைகள் பற்றிய அதிகாரமுறையான சான்றறிக்கையை நான் அளித்திருக்கவேண்டும். நான் எனது மனவலிமையை முழுவதுமாகக் கொண்டிருக்கவில்லை. நான் இந்த உயில்சாசனத்தின் கீழ் மேட்டுப்பாளையத்தைச் சேர்ந்த கங்கள்ளார் வெங்கடசுவாமி நாயுடுவின் புத்திரரான திரு ராமசந்திர நாயுடுவை முழுநிலை முயற்சியுடன் கூடிய உள்நோக்கங்களுடனும், மேலும் சிந்தித்து ஆராய்ந்தும் மற்றும் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னரே நியமித்து இந்த உயில் சாசனம் மற்றும் இறுதி விருப்பப் பத்திரத்தை இயற்றுகிறேன். அட்டவணை 'அ'-வில் கண்டுள்ள அனைத்து நிலத்தைக் கொண்டுள்ள எனது உடைமைகளையும் மற்றும் எனது

வீட்டையும் ஆயுட்காலம் முழுவதும் எனது மனைவிக்கு நான் உயில்வழி உரிமையை அளிக்கிறேன். பராதீனம் செய்ய அவளுக்கு அதிகாரமில்லை. ஆனால், நிலத்திலிருந்து வருகின்ற வருவாயை துய்த்துணரவும் மற்றும் அவற்றை நிருவகிக்கவுங்கூட அவளுக்கு உரிமையளிக்கிறேன். நிலத்தைக் கொண்டுள்ள சொத்துகளிலிருந்து வருகின்ற வருவாயினை எனது மனைவி தன்னுடைய சொந்த குடும்பச் செலவுகளையும் மற்றும் வீட்டுப் பராமரிப்புகளையும் சந்தித்த பின்னரே எனது சகோதரிகளின் குடும்பத்திலுள்ள சிறப்பு விசேஷங்கள் மற்றும் நிகழ்நிலை சடங்குமுறை-களுக்கான செலவினங்களை சந்திக்கவேண்டுமென்பது என்னுடைய உளமார்ந்த விருப்பமாகும். எனது மனைவியின் ஆயுட்காலத்திற்குப் பின்னர் இந்த சொத்துகள் வி. ரங்கசுவாமி, 2. ... . . அட்டவணை 'அ'-வில் உள்ளவைகள் எனது சகோதரிகளின் மகன்களான பின்வரும் நபர்களுக்கு முழுமையாகவும் மற்றும் சரிசமமாகவும் சென்றடையும். 1) என்னுடைய சகோதரி தாயம்மாளின் மகன் வி. கல்யாணசாமி நாயுடு, 2) எனது மூன்றாவது சகோதரி நாகம்மாளின் மகன் ஆர். சௌந்தரராஜ், 3) எனது நான்காவது சகோதரி ரங்கநாயகி அம்மாளின் மகன்

எ. அழகிரிசுவாமி, 4) எனது கடைசி சகோதரி கிருஷ்ணம்மாள் மகன் ஆர். அழகிரிசுவாமி. இந்த நான்கு நபர்களும் தங்களது குடும்பங்களுக்காக சொத்துகளை முறையாக வைத்திருக்கவேண்டு-மென்றும், மேலும், அவைகளை பராதீனம் செய்யக் கூடாது, ஆனால் தேவையான சூழலில் முதல் தறுவாயில் அவைகளை ஏதேனும் மற்ற பங்குதாரர்களுக்கு அவர்கள் விற்கவேண்டும். அட்டவணை 'ஆ'-இல் ரூ.44,000/- (ரூபாய் நாற்பத்தி நான்காயிரம் மட்டுமே)-ஆக மதிப்பிடப்பட்டு விவரிக்கப்பட்டுள்ள ரொக்கம் மற்றும் இதர காப்புறுதி பத்திரங்களையும் எனது மறைவிற்கு பின்னர் கூடுமானவிரைவில் வசூலித்து கீழ்க்கண்ட நபர்களுக்கு பின்வருமாறு செலுத்தவேண்டும். 1) மேற்சொன்ன திரு. கல்யாணசுவாமியின் மனைவி திருமதி அமிர்தத்திற்கு ரூ.10,000.0.0 2) எனது இரண்டாவது சகோதரி அம்மணி அம்மாளுக்கு ரூ.10,000.0.0 3) எனது மூன்றாவது சகோதரி நாகம்மாளுக்கு ரூ.8,000.0.0, 4) எனது நான்காவது சகோதரி ரங்கநாயகி அம்மாளுக்கு ரூ.8,000.0.0, 5) எனது ஐந்தாவது மற்றும் கடைசி சகோதரியான கிருஷ்ணம்மாளுக்கு ரூ.8,000.0.0. விருப்புறுதி ஆவணத்தின் கீழான சொத்துகளிலிருந்து

நீங்கலாக வேறுசில வழிவகைகளை என் மனைவிக்காக நான் ஏற்கெனவே செய்துவிட்டேன். அவற்றிற்கு இந்த வழிவகைகளால் எந்தவிதத்திலும் பாதிப்பில்லை. இவ்வகைக்கு அட்டவணைகளுள் உள்ளடங்கப்படா அசையும் சொத்துகளுக்கு அவள் உரிமையுள்ளவளாவாள்..... வி. ரங்கசுவாமி, 3. ..... இது என்னுடைய முதலாவது உயில்சாசனம் மற்றும் இறுதி விருப்பப் பத்திரமாகும். முந்தைய அனைத்து முன்னேற்பாடுகள் மற்றும் உட்கருத்துக்கொண்ட முன்னேற்பாடுகள் இதன்மூலமாக முற்றிலுமாய் தள்ளுபடி செய்யப்படுகிறது. எனது ஆயுட்காலத்திற்குப் பின்னர் இந்த உயில் அமலுக்குவரும்."

79. இந்த உயில் சாசனத்தில் தனது சொந்த பொறுப்பிலும் மற்றும் பூரணமாகவும், அட்டவணை 'அ'-வில் விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள் அவருக்கு சொந்தமானதென்று உயிலவரின் வாசகத்தை உயில் சாசனத்திலிருந்து காணலாம். மேற்கண்ட சொத்துகள் 1932-இல் அவருக்கும், அவருடைய சகோதரருக்குமிடையேயான குடும்ப பாகப்பிரிவினை வழியாக ஒதுக்கப்பட்டதும் மற்றும் அவரால் வாங்கப்பட்ட சொத்துகள் உள்ளடங்கியதாக சொல்லப்படுகிறது. அவர் 1932 முதற்கொண்டு பிரிக்கப்பட்ட உறுப்பினராகவும் உயில்சாசன தேதிவரை அவ்வாறே தொடர்ந்துகொண்டிருப்பதாக மேலும் கூறுகிறார். இறுதியாக ஏதேனும் நிலையற்றவைகளை தவிர்க்கும்பொருட்டு இன்றையதினம் தனது பிரிக்கப்பட்ட சமுதாயப் படிநிலையினை வெளிப்படையாக்கி ஓர் விளம்புகை செய்ததாக அவர்

கூறுகிறார். மேலும், அட்டவணையில் கண்டுள்ளவாறு அவருக்கு உரிமையுள்ள தொகைகளை உயில் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அட்டவணை 'அ'-வினுள் அவரது வீடு உள்ளடங்கலாக அனைத்து சொத்துகளும் பராதீனம் செய்யும் அதிகாரமில்லாமல் அவருடைய மனைவிக்காக விவரிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர் தனது மனைவி வீட்டு பராமரிப்பு, அவளுடைய சொந்த குடும்பச் செலவுகளை சந்தித்த பின்னரே தனது சகோதரிகளின் குடும்பத்தில் நிகழக்கூடிய சிறப்பு விசேஷங்களுக்கும் மற்றும் சடங்குமுறைகளுக்குமான செலவுகளை சந்திப்பதற்கும், நிலத்தைக் கொண்டுள்ள சொத்துகளிலிருந்து வரும் வருவாயினை பயன்படுத்திக்கொள்வதற்கு தான் எதிர்நோக்குவதாக கூறுகிறார். தன்னுடைய நான்கு சகோதரிகளின் வழியாக தனது உடன்பிறந்தார் மகன்களுக்கு, அதாவது, தன்னுடைய நான்கு உயல்வழி உரிமையாளர்களுக்கு அளித்திட்டது பூரணமான தன்மையில் அங்கு நிலைமாறாதிருக்கிறது. இந்த உயில்வழி உரிமையர் நால்வரும் தத்தம் குடும்பங்களுக்காக உடைமைகளை வைத்திருக்கவேண்டுமெனவும், அவற்றை பராதீனம் செய்யக்கூடாது எனவும், ஆனால், தேவைப்படும்போது மற்ற ஏதேனும் பங்குதாரர்களுக்கு முதல் தருவாயில் விற்கவேண்டுமென்ற தனது உளமார்ந்த விருப்பத்தினை வெளிப்படுத்தியுள்ளார். உயில்சாசனத்தின் கீழான உடைமைகளிலிருந்து நீங்கலாக தன்னுடைய மனைவிக்கு ஏற்கெனவே அவர் வேறு வழிவகைகளை செய்திருப்பது கடைசி பகுதியிலுள்ள கூற்றின்படி கவனிக்கப்படவேண்டியதாகும்.

80. எதிர்மேல்முறையீட்டாளர் எங்களது முன்புங்கூட ஒரேநிலையான தன்மை குறித்து வலியுறுத்தப்பட்டது. *1932*-இல் சகோதரர்களுக்கிடையில் வாய்மொழியான பாகப்பிரிவினை இல்லையென்றும், உயில்சாசனத்தில் உயிலவர் செய்த

திருத்தமுடியாதபடி நிலைக்கூற்று உண்மையற்ற உயில்சாசனம் என்று அதுவாகவே மூடிமறைக்கின்ற வழக்காக தோற்றுவிக்கிறது என்று வாதுரைக்கப்பட்டது.

81. உயில்சாசனத்தில் உள்ள சீர்கேடான கூற்று பற்றிய தன்மை குறித்தும், உயில்சாசனத்தில் செய்த ஒட்டுமொத்த சீர்கேடான கூற்றினால் ஐயங்கொள்வதற்கான நிலையை எழுப்பியுள்ளதை கவனத்திற்கொள்ளவேண்டும். உயிலவர் ஒரு விருப்புறுதி ஆவணத்தை இயற்றும்போது சீர்கேடான வாக்குமூலங்களை செய்வது கூடாது என்பது இதிலுள்ள கொள்கையாகும். ஒருவேளை அவர் பாங்கற்ற உண்மைக்குமாறான வாக்குமூலத்தை கொடுத்திருந்தால், அவர் விருப்புறுதி ஆவணத்தை இயற்றவில்லை என்றே அனுமானிக்கவேண்டும். இவ்வழக்கிலுள்ள பொருண்மைகளுக்கு இந்த கொள்கைகள் பொருந்தாது. 1932-இல் பாகப்பிரிவினை செய்தது அவருக்கு ஒதுக்கப்பட்டதாக கூறுவது உயிலவரின் தெளிவான புரிந்துகொள்ளுதலாகும். நீதிமன்றத்தில் இந்த விடயம் பொது விவாதத்தை உருவாக்கியுள்ளது. உயிலவரால் வெளிப்படுத்தப்பட்ட கருத்துநிலை நீதிமன்றத்தின் ஆதரவைப் பெறவில்லை, ஆனால், அதுவொரு முற்றிலுமான பொய் கூற்றினை விவரிப்பது நெடுந்தொலைவில் உள்ளது. உயிலவரால் இயற்றப்பட்ட உயில்சாசனத்தில் அது ஒரு பகுதியாக இருக்கும்வரையில், நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இதுகுறித்த கண்டறிதல் எதிர்வாதிகளின் வழக்கினை முன்னேற்றாது என அவர் நம்பிக்கை கொண்டிருந்தார்.

82. மேலும் நாங்கள் கீழ்க்கண்ட நோக்கங்களை கவனித்துள்ளோம்:

ரங்கசுவாமி நாயுடு படித்தவராவார். அவர் ஒரு முன்னாள் எம்.எல்.சி. ஆவார். அவர் ஒரு செழுமையான மனிதராவார். அவருக்கு வாரிசுகள் கிடையாது. அவருடைய

சகோதரிகள்மீது பாசம் கொண்டிருந்தார். அவர் தன்னுடைய சகோதரிகளின் ஒவ்வொருவரினுடைய பிரிவிலும் ஒரு புதல்வரை தேர்வுசெய்து உயில்வழி உரிமையாளர்களான அவர்களிடம் உடைமைகள் அடைவுறவேண்டுமென ஒவ்வொரு பிரிவினருக்கும் ஆதரவாக விருப்பம் தெரிவித்துள்ளார். உடைமைகள் குடும்பத்தில் நிலைத்திருக்கவேண்டுமென்றும், மேலும், உயில்வழி உரிமையர்களுள் எவரேனும் ஒருவர் விற்கவேண்டுமெனில், அவற்றை மற்ற உயில்வழி உரிமையர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று உண்மையாகவே அவருங்கூட வழிவகை செய்துள்ளார். அவரின் உடல்நலத்தைப் பொறுத்தவரையில் சீராக தீர்மானிக்கும் திறனின் தேவைகளை உடல்சார்ந்த நலத்துடன் குழப்பம் கொள்ளக்கூடாது என்று நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால், ஒரு நபரின் உடல்சார்ந்த பிணிகளுடன் அவரின் சீராக தீர்மானிக்கும் திறன் பறிபோகக்கூடாது. ஒரு நபருக்கு உடல்சார்ந்த நோயுடன் கூடிய வேதனையும் அல்லது கடும் வேதனை தருகிற வலியும் அவரின் உயில் சாசனம் இயற்றும் திறனை இழக்கச்செய்யாது என்பது உண்மைதான் முக்கியமானது என்னவெனில், என்ன செய்யவேண்டுமென்ற அவரின் தீர்மானத்தை பிரதிபலிக்கும் இந்த உயில்சாசனம் மற்றும் அவர் என்ன செய்கிறார் என்பதுபற்றிய சுயநினைவுடனிருந்தாரா? என்பதுதான். அவர் மூச்சுக்குழல் புற்றுநோயினால் அவதியுற்றுவந்தார் என்பது உண்மையாக இருக்கையில், உயில் சாசனத்தை விட்டுச்செல்வதற்கான விடயத்தில் தன்னுடைய மனநிலையை உருவாக்கிக்கொள்வதில் திறனற்றவராக அவர் இருந்தார் என்பதற்கு சாட்சியத்தில் அங்கு அறிகுறிகளில்லை. அவருக்கு குழாய் வழியாக உணவளிக்கப்படுகின்ற நிலையானது உயில் சாசனம் இயற்றக்கூடிய அவரின் திறனை இழக்கச்செய்யாது. மேலும், அந்த விருப்புறுதி ஆவணம் பதிவுசெய்யப்பட்ட விருப்புறுதி ஆவணம் என்பதை

நாங்கள் உன்னிப்பாக கவனித்தோம். பதிவாளர் வீட்டிற்கு வந்துள்ளார். சான்றாவணம் X1 ரங்கசுவாமி நாயுடு அவரின் பெருவிரல் ரேகையை வைப்பதற்கு கேட்டபோதிலும் கையொப்பமிடுவதையே அவர் வற்புறுத்தினார் என்பதை காண்பிக்கிறது. இவ்வாறான நடவடிக்கைகள் எங்களது கருத்துநிலைப்படி விடயங்களின் மீதான இறுதி நீதிமன்றத்தாலும், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தாலும் சரியாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு முரண்பாடாக வரையப்பட்ட முடிவுச்செயல் எங்கள் முன்பு வேண்டுகோள்விடுக்கவில்லை. குடும்ப நண்பரும் மற்றும் பேரளவில் புகழ்பெற்ற மருத்துவருமான டாக்டர் சி.எஸ். ராமசாமி ஐயர்தான் மற்றொரு சான்றொப்பமிட்ட சாட்சி என்பது சாட்சியங்களிலிருந்துங்கூட தெளிவாகிறது. மேற்சொன்ன மருத்துவர் காலமானபோது இறப்பு செய்தியை பிரசுரித்ததை எதிர்மேல்முறையீட்டாளரின் சார்பான சாட்சி அ.சா.1-ஆனவர் அவராகவே ஒப்புக்கொண்டுள்ளார். அ.சா.1 சட்டத்திற்கு மாறான முறையில் அவர் செயல்படமாட்டார் என்றும் மற்றும் ஒரு பண்பாளர் எனவும் அவரைப்பற்றி கூறியுள்ளார். பி.7-இல் மற்றொரு சான்றொப்பமிட்ட சாட்சியுங்கூட அங்கு எஞ்சியிருக்கும் மருத்துவரைப்பற்றி பேசியுள்ளார் மேலும், வந்திருந்த பதிவாளர் முன்பு சந்தேகத்தை விட்டுவைக்கவில்லை. மற்றபடி சாட்சியச் சட்டம் பிரிவு 69-க்கான தேவைப்பாடுகள் நிறைவுசெய்து நிற்பதை நாங்கள் ஏற்கெனவே தீர்மானித்துள்ளோம். இலட்சுமையா நாயுடுவின் புதல்வர்களுக்கு ஆதரவாக கொடைபொருள் கொடுக்கவில்லை என்ற காரணத்தால் ஐயமுற்ற சூழ்நிலையாக அதனை கருத இயலாது. இலட்சுமையா நாயுடு மிகுதியான செல்வச் செழிப்புடன் இருந்தார் என்பது தெளிவாகிறது. தனது மனைவியின் உடன்பிறந்தவரின் மகனை உயில் சாசனத்தின் நிறைவேற்றாளராக ஆக்கியிருப்பது உயில்வழி உரிமையர்களின் தரப்பில் ஏதேனும் முறைதவறான ஆட்டத்தின் இராமையை உண்மையாகவே எங்களிடம்

உறுதியளித்துள்ளது. அவரது சாட்சியத்தில் (145 நடவடிக்கையினுள் நிறைவேற்றாளால் அளிக்கப்பட்ட சான்று பி.13) 2-3 சந்தர்ப்பங்களில் உயில்சாசனத்தை நிறைவேற்றப்படவேண்டியது குறித்து உயிலவர் தன்னுடைய விருப்பத்தை வெளிப்படுத்தியது பற்றி அவர் பேசியுள்ளார். அ.சா.1-ஆல் எடுத்துச்சொல்லப்பட்ட சாட்சியத்திலிருந்துங்கூட முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் உயில்சாசனம் குறித்து எடுக்கப்பட்ட கருத்துநிலையை இரண்டாம் மேல்முறையீட்டினுள் தலையிடுவதற்கான அதிகாரம் கொடுக்கும் ஒன்றை முரண்பட்டுள்ளதாக விரித்துரைக்க இயலாது.

83. இறுதியாக, எதிர்வாதிகளால் மோசடி, தகாத செல்வாக்கு அல்லது வலுக்கட்டாயத்தால் விருப்புறுதி ஆவணத்தை முயன்று பெற்றதாக அதேபோன்று சொல்லப்படுவதை மெய்ப்பிக்கும் பொறுப்பும், மேலும், உயில்சாசனத்தை மெய்ப்பிக்கும் கடப்பாடு கொண்டிருக்கையில், அங்கு சந்தேகத்திற்கிடமான சூழ்நிலைகள் இல்லை என்பதையும் அல்லது ஒருவேளை அவைகள் ஏதேனும் விளக்குவதற்கு அங்கிருப்பின் நீதிமன்ற உளச்சான்றினை திருப்திப்படுத்துவது விருப்புறுதி ஆவணத்தை முன்னெடுத்துரைத்தவருக்கு உரியதாகும். இதுதொடர்பாக விருப்புறுதியாவணத்தின் பண்பு கெட்டுள்ளது என்பதை நிரூபிக்க எதிர்மேல்முறையீட்டாளர்கள் தவறிவிட்டனர் என்று அ.சா.1-இன் சான்றுரை காண்பிக்கிறது. எனவே விருப்புறுதி ஆவணமானது ஆர். நாயுடுவால் உண்மையாக நிறைவேற்றப்பட்டது என்றும், மேலும், அவருடைய இறுதியான விருப்புறுதியாவணம் என்ற முடிவிற்கு நாங்கள் வருகிறோம்.

84. சந்தேகமின்றி, சகோதரர்களான ரங்கசுவாமி நாயுடு மற்றும் இலட்சுமையா நாயுடு இந்து கூட்டுரிமைச் சொத்தில் பாகப்பிரிவினை உரிமையர்கள். மேல்முறையீட்டாளர்களின் வழக்கு இந்து கூட்டுக் குடும்பத்தின் கூட்டுப் பிரிவீடு

அடிப்படையின்மீதானதாகும். இவ்வழக்கின் சூழ்நிலைப் பொருத்தத்தில் 'இந்து கூட்டுக் குடும்பம்' என்னும் சொற்றொடரை கூட்டுரிமைச் சொத்தாக புரிந்துகொள்ளவேண்டும். மற்றவகையில் இலட்சுமையா நாயுடு பிரிவின் சார்பாக எதிர்மேல்முறையீட்டாளர்கள் ரங்கசுவாமி நாயுடு *1.6.1955* அன்று இறந்துவிட்ட காரணத்தால் அவருடைய சொத்துகளுக்கு வாரிசுரிமை தொடங்கியது. ரங்கசுவாமி நாயுடு வாரிசற்ற நிலையில் இறந்துவிட்டதால், அவருடைய சொத்துகளுக்கு சகோதரரான இலட்சுமையா நாயுடு மரபுரிமையினராக வந்தார், மேலும், அன்றைய தேதியில் சட்டத்தின்கீழ் உள்ளவாறு சொத்துகளுக்கு இலட்சுமையா நாயுடு எச்சவுரிமையில் பின்உரிமையாளராகிறார்.

85. 1932-ஆம் ஆண்டில் இரு சகோதரர்களுக்கிடையில் அவர்களின் உண்மையான ஓர் வாய்மொழி பாகப்பிரிவினையின் அடிப்படையில் மேல்முறை-யீட்டாளர்களின் வழக்கு அமைந்துள்ளது. இந்த வாதுரைகளில் நற்கூறுகள் இல்லை என்பதை மூன்று நீதிமன்றங்கள் கண்டறிந்துள்ளன. உண்மையில், மேல்முறை-யீட்டாளர்களுங்கூட எங்கள் முன்பு இந்தப் பாதையில் வாதத்தை மேற்கொள்ளவில்லை. அதற்குமாறாக, *10.5.1955* அன்று ரங்கசுவாமி நாயுடு பி.*1* அறிவிப்பை பிரசுரித்ததால் கூட்டுக் குடும்பம் பிளவுற்றதன் பயனாக தனது சகோதரரிடமிருந்து பிரிந்து ரங்கசுவாமி நாயுடு இறந்துபோனார் என்றும், ஆகையால், *1.6.1955* அன்று ரங்கசுவாமி நாயுடுவின் சொத்துகளுக்கு இம்மாதிரியான வழியுரிமை தொடங்கியதாக எங்கள் முன்பு வலியுறுத்தி வாதிடப்பட்டது. இனிமேற்கொண்டும் மேல்முறையீட்டாளர்களின் வழக்கு ரங்கசுவாமி நாயுடுவால் விருப்புறுதி ஆவணம் நிறைவேற்றப்பட்டு, மேலும், *10.5.1955* அன்று பதிவுசெய்யப்பட்டதுமான பி.*10*-இன்மீது கண்டறியப்படுகிறது.

இந்து கூட்டு குடும்பச் சொத்தின் உரிமை; பாகப்பிரிவினை; அதன் விளைவுகள்

86. இந்த வாதுரைகளின் வெளிச்சத்தில் இந்து கூட்டுக் குடும்பம் தொடர்பான கோட்பாடுகள், அது தொடர்ந்திருக்கும் பயன்கள், கூட்டுக்குடும்பம் முடிவுக்குவரும் முறைகள் மற்றும் "வகுக்கப்பட்ட கூட்டுக் குடும்பம்" சொற்றொடரின் நிழற்பொருளை தனிப்பட்டமுறையிலுங்கூட ஆராய்வது அவசியமானதாகும். அதோடு உயில்சாசனத்தை உருவாக்குவது தொடர்பாக ஒரு இந்துவின் உரிமையையும் மற்றும் அதன் வரையறைகளையும் நாம் பரிசீலிப்பது அவசியமாகும்.

87. **அப்போவியர் -எதிர்- ராம சுப்ப ஐயன் மற்றும் பலர்**[35]-இல் அரசப் பேரவைக்கு இந்த கோட்பாடுகளை பரிசீலிப்பதற்கான தறுவாய் இருந்தது. இந்தியாவிலுள்ள மூன்று நீதிமன்றங்கள் அனைத்திலும் வெற்றியுறாத இந்த மேல்முறையீட்டாளர்கள் இந்நீதிமன்றம் முன்பு ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தில் மாறாக பிரிவினை இருந்தபோதிலும், அது இன்னமும் ஆற்றல் வாய்ந்ததாக இல்லையென்றும், இதுவரையில் அளவாலும், எல்லையாலும் பிரிவினை உச்சநிலையடையவில்லை என்றும் வாதுரைத்தனர். மற்றவற்றுக்கிடையில் இந்த கேள்வியுடன் அணுகியபோது இந்நீதிமன்றம் பின்வருமாறு தீர்மானிக்கிறது:

> "1. திருநெல்வேலி மாவட்டத்தின் உயரிய அமீன் தாமாக உறுதிசெய்த முதல்நிலைத் தீர்ப்பாணை அந்த ஜில்லா நீதிமன்றத்தின் தீர்ப்பாணையை உறுதிசெய்த சென்னை உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பாணையிலிருந்து

---

35. (1866) 11 எம்.ஐ.எ. 75

கொண்டுவரப்பட்ட ஓர் மேல்முறையீடாகும். ஆகையால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கையை ஒருமனதாக நிராகரித்த மூன்று தீர்ப்பாணையிலிருந்து வரும் ஓர் மேல்முறையீடாகும், தற்போதுள்ள மேல்முறையீடு தொடக்கமுதலே மேல்முறையீட்டாளர் உறுப்பினராக உள்ள ஓர் பகுக்கப்படாத குடும்பத்தின் முழுமையான உடைமையாக நீடித்துவருகின்ற (மேல்முறையீட்டாளரால் கோரப்பட்ட பங்குள்ளவைகள்) நிலையான உடைமைக-ளுக்குரிய சாட்டுரைகளாக கண்டறியப்பட்டது. மேல்முறையீட்டாளரின் கோரிக்கைக்கு எதிர்த்தரப்பினரின் பத்திரமே அடிப்படை ஆதாரமாகும். தற்போதுள்ள நோக்கத்திற்காக 1834-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 22-ஆம் தேதியிட்ட பகுக்கப்பட்ட ஆவணம் என்று நாங்கள் அழைக்கிறோம்.

2. மேல்முறையீட்டாளரால் நிலையான கொள்கைகள் அல்லது சொல்லப்படுகிற சட்டத்தின் விதிகளுக்காகவும் உறுதியாக வாதுரைக்கப்பட்டது. அவற்றுள் ஒன்றானது, ஒருவேளை பகுக்கப்படாத குடும்ப உறுப்பினர்களுக்-கிடையில் பிரிவினைக்குரிய ஒப்புதலை கூறுகின்ற பங்கீடு ஆவணம் இருக்குமாயின், அதன்பின்னர் அந்த குடும்பத்தின் உடைமைகள் குறித்து இயற்றப்பட்ட ஆவணத்தில் அளவாலும், எல்லையினாலும் உள்ளபடியாக

ஓர் பிரிவினையை முழுமையாக நிறைவடையும்வரையில் பகுக்கப்படாத உடைமைகளை பகுக்கப்பட்ட உடைமைகளாக நிலைமாற்றுவது பலனற்றதாகும்.

3. அவ்வகைப்பட்ட கோட்பாடு ஏதேனும் நிறுவப்பட்டதாக நீதியரசர்கள் கண்டறியவில்லை; மேலும், தலைப்பு பிரிவுடன் பொருள் பிரிவுக்கு பொருந்துகின்ற மரபுக்குறிப்புப் பெயரில் வியக்கத்தக்க முறையில் உள்ள பிழையின்மீது நீதியரசர்கள் மேல்நடத்திச்செல்ல இந்த வாதுரைகள் பிரதிநிதியாகச் செயலாற்றுகிறது.

4. இந்து சட்டத்திலுள்ள ஓர் பிரிக்கப்படாத குடும்பத்தின் நேர்நிலையிலுள்ள கருத்துபாங்கிற்கிணங்க அது பிரிக்கப்படாமல் எஞ்சியிருக்கையில் கூட்டு மற்றும் பிரிக்கப்படாத சொத்தில், அவருக்கோ, குறிப்பிட்ட உறுப்பினருக்கோ உறுதியாக வரையறுக்கப்பட்ட பங்குரிமைகள் இருப்பதாக அந்த குடும்பத்தின் தனிப்பட்ட உறுப்பினர் எவராலும் வலியுறுத்திக்கூற-முடியாது. ஓர் பிரிக்கப்படாத குடும்பத்தின் தனிப்பட்ட உறுப்பினர் யாரும் ஒரு உறுதியான வரையறுக்கப்பட்ட பங்குரிமையின் குத்தகைத் தொகைகளை பெறுபவரிடமோ அல்லது மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து உரிமைக் கோரிக்கைகளை மரபுரிமையாகப்

பெறுவதற்கோ அல்லது குத்தகை தொகை பெறப்படும் இடத்திற்கோ செல்லக்கூடாது. ஓர் பிரிவினையாகாத குடும்பத்தின் கருத்தியல் திட்டப்படி இந்த பிரிவினையாகாத குடும்பத்தின் வருமானம் பேழை அல்லது பொது நிதியில் கட்டாயம் கொண்டுவரப்பட்டு, அதன்பிறகு ஓர் பிரிவினையாகாத குடும்பத்தின் உறுப்பினர்களால் மகிழ்ந்துணரக்கூடிய முறைகளுக்-கிணங்க பகுத்தளிக்கவேண்டும். ஆனால் ஒரு பிரிவினையாகாத குடும்பத்தின் உறுப்பினர்கள் அவர்களுக்கிடையில் தனிப்பட்ட சொத்து குறித்து இணங்கிப்போயிருப்பின் அப்போதிருந்து சில வரையறுக்கப்பட்ட பங்குரிமைகள் உடைமையுரிமை-களுக்கு உட்பட்டிருக்கும் அவ்வண்ணம் அணுகக்-கூடியதுடன் இணங்கிப்போன பின்னர் பிரிவினையாகாத சொத்து மற்றும் கூட்டுப் புழக்கத்திற்கான இயற்-பண்புகள் தொலைந்துபோகிறது. மேலும், தானாகவே உடைமைகளை நடைமுறையில் துண்டிக்கப்பட்டு பிரிக்கப்படவில்லையென்றாலும், சொத்துகளில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் அக்கணம் முதல் பெறுவதற்கான உரிமைக்கும் மற்றும் தனித்தனியாக துய்த்துணருவதற்கும் தகுதியுடையவராகிறார்கள்.

XXX XXX XXX XXX

12. ஒருவேளை ஓர் பிரிவினையாகாத குடும்பத்தின் கூட்டு குத்தகையுரிமையை அந்த குடும்பத்தின் பிரிவினையாகாத உறுப்பினர்களுக்கு பொதுவான குத்தகையுரிமையாக நிலைமாற்றியபின் உள்ளபடியான பிரிவினையின் உட்கிடைப்பொருளினை மெய்நடப்பில் உடனடியாக பின்பற்றவில்லையென்றாலும், உடன்-படிக்கையில் சொத்துகள் குறித்த உரிமை மற்றும் பாத்தியதையுடனான பிரிவினையின்படி பிரிவினையாகாத குடும்பம் பிரிவினையான குடும்பமாவதற்கு தொடங்குகிறது."

(வலியுறுத்திக் கூறப்பட்டது)

88. **<u>கிரிஜா பாய் -எதிர்- சதாசிவ் தண்டிராஜ் மற்றும் பலர்</u>**[36]-இல் அரசப் பேரவையின் தீர்ப்புரையைக் கவனிப்பது இப்போது பொருத்தமானதாகும். மேற்சொன்ன வழக்கில் மிதாக்ஷரா இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களில் ஒருவர் தனது மூன்றில் ஒன்று பங்குரிமையை பாகப்பிரிவினை செய்வதற்கான தனது விருப்பத்தை தெரிவித்த ஒரு அறிவிப்பினை சார்வு செய்துள்ளார். உரிமை வழக்கு நிலுவையில் உள்ளபோது வாதி இறந்துவிட்டார். அவருடைய விதவை தொடர்ந்து வாழ்ந்தார். பதிலாக அமைப்பதற்கு அவள் முயற்சித்தாள், இதனை பிரதிவாதிகள் அவருடைய மரணத்தின்போது பிரிவினையாகாத உறுப்பினராக இந்து கூட்டுக் குடம்பத்தில் இருந்தார் என்றும், அவரது இறப்பினால் அவரின் பங்குரிமைகள் எஞ்சுநர் உரிமை

---

36. எ.ஐ.ஆர். 1916 பி.சி. 104

வழியாக அவர்களை வந்தடைந்தது என்ற காரணத்தினடிப்படையில் எதிர்த்தனர். உரிமை வழக்கினுள் முன்னதான சங்கதிகளுக்கு எதிர்மாறாக வாதிகளின் கோரிக்கைகளை பிரதிவாதிகள் ஏற்றுக்கொண்டும் மற்றும் உரிமை வழக்கு முதிராத நிலையில் இருக்கிறது என்றும், சொத்துகளை பிரிப்பதில் அவர்களுக்கு விருப்பமுள்ளதென்றும் வாதுரைத்தனர். இந்நீதிமன்றம் **பண்டிட் சூரஜ் நரேன் மற்றும் ஒருவர் -எதிர்- பண்டிட் இக்பால் நரேன் மற்றும் பலர்**[37]-இல் அறிவித்த அரசப் பேரவையின் முந்தைய தீர்ப்புரையை ஆதாரமாகக் குறித்தது. இதுதொடர்பாக நீதிமன்றம் முன்னேறுவதற்கு அறிவித்து விதிக்கப்பட்டது என்னவெனில்:

> *"25. இவ்வழக்கில் மேல்முறையீட்டு நீதிமன்றம் மேலே ஆதாரமாக குறித்துக்கொண்ட இரு பரிசீலனைகளுடன் குழப்பிக்கொண்டதாக நீதியரசர்களுக்கு தோன்றியுள்ளது அதாவது, தனிநபர் விருப்பத் துணிவாற்றல் தொடர்பான தகுநிலை கூட்டுச்சிதைவினை இந்நீதிமன்றத்தினால் இறுதி வகைமுறையாக அல்லது தரப்பினர்களால் நியமிக்கப்பட்ட காரணிகர்களால், தனியார் உடன்படிக்கைகளால், ஒதுக்கப்பட்ட பங்குரிமைகளுடன் கூடிய வெவ்வேறு வழிமுறைகளால் செயலுறுத்தக்கூடும்."*

---

37. (1912-13) 40 ஐ.எ. 40; (1913) 11 அலகாபாத் எல்.ஜெ. 172

(மேற்கண்ட) அப்போவியரில் உள்ள கூற்றுகளை ஆதாரமாகக் குறித்துக்கொண்ட பின்னர் இந்நீதிமன்றத்தின் தீர்மானம் பின்வருமாறு:

> "*28.* இந்தியாவிலுள்ள சில நீதிமன்றங்கள் தகுநிலைக்கூட்டுச் சிதைவு உடன்படிக்கையினால் மட்டுமே நிகழக்கூடும் என்கிற வெஸ்ட்பெர்ரி கோமானின் சொல்லமைப்புகளை மறைமுகமாகக் குறிப்பிட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இது தவறான கருத்து என்பதில் நீதியரசர்களுக்கு சந்தேகமில்லை 'பங்கீடு ஆவணம்' ஏற்கெனவே நடந்தேறிய உரிமைகளின் பிரிவினைக்கான வழக்குடன் அங்குள்ள குழுமத்தால் அணுகப்பெற்றதை தெளிவுப்படுத்தியுள்ளது. இந்தக் கூட்டு உடைமையில் ஒவ்வொரு தனிப்பட்ட உறுப்பினருக்கான உரிமைகள் ஆவணம் அல்லது தரப்பினர்களின் உடன்படிக்கையில் வழங்கப்பட்ட சொல்லமைப்பிலிருந்து ஊற்றெடுக்கவில்லை. இந்த உடன்படிக்கை தனிப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் விரும்பிய எந்த நேரத்திலும் நீடித்துக்-கொண்டிருக்கும் உரிமைகளை நிலைநாட்டுவதற்கு தகுதியுள்ளவர்கள் என்பதை மட்டுமே அங்கீகரிக்கின்றது.

29. பிரிப்பதற்கான உள்நோக்கத்தை திட்டவட்டமான விளம்புகையாலும் அல்லது செயலாட்சியாலும் பல்வேறு வழிகளில் வெளிப்படுத்திக்காட்டக்கூடும".

89. அடுத்ததாக **'அட்டகாடா ராகவம்மா மற்றும் ஒருவர் -எதிர்- அட்டகாடா சென்செம்மா மற்றும் ஒருவர்-இல்**[38] அறிவிக்கப்பட்ட இந்த நீதிமன்றத்தின் கற்றறிந்த மூன்று நீதியராயத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரையைக் கட்டாயம் நாங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்கிறோம். மேற்சொன்ன வழக்கில் இந்நீதிமன்றம் முன்பு பிச்சையா என்பவரின் விதவைதான் மேல்முறையீட்டாளராவார். பிச்சையா என்பவரின் உண்மையான சகோதரரின் மகனான வெங்கையா என்பவரின் மனைவியான சென்செம்மா என்பவர்தான் இவ்வழக்கின் எதிர்மேல்முறையீட்டாளராவார். மேல்முறையீட்டாளரின் மைத்துனரால் நிறைவேற்றப்பட்ட ஒரு விருப்புறுதி ஆவணத்திற்கு முன்னதாக கொண்டுவரப்பெற்ற இந்து கூட்டுக்குடும்பம் அங்கு ஏறத்தாழ பிளவுற்றிருந்ததா? என்பதே பூசலை சுற்றியுள்ள கேள்வியின் சாராம்சமாகும். அங்கு இரண்டு கேள்விகள் இருந்தபோதிலும், இரண்டாவது கேள்வியுடன் மட்டுமே நாங்கள் தொடர்புற்றுள்ளோம், அதாவது, விருப்புறுதி ஆவணத்தின் நிறைவேற்றுதலுக்கு முன்னர் பாகப்பிரிவினை குறித்து கொண்டுவரப்பெற்றதா? மற்றும் விருப்புறுதி ஆவணத்தின் வாசகங்களாலேயே ஊடறு கொண்டுவரப்பட்டதா? என்று எழும்பிய கேள்வியையுங்கூட நாங்கள் மேலும் கவனத்தில் கொள்கிறோம்.

90. இந்நீதிமன்றம் பதிவாவணங்களிலுள்ள சாட்சியத்தை விரிவாக பரிசீலிப்பதற்கு முன்னேறிச்சென்று 1946-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட விருப்புறுதி

---

38. ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 136

ஆவணத்திற்கு மிகவும் முன்னதாக *1894*-இல் ஒரு பாகப்பிரிவினை நிகழ்ந்துள்ளது என்னும் மேல்முறையீட்டாளரின் வாதுரைகளை சாட்சியங்கள் ஆதரிக்கவில்லை என்ற முடிவிற்கு வந்தது. அதன்பின்னர், இந்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கருத்துரையிலுள்ள கீழ்வரும் பத்திகளை கவனத்திற்கொள்வது அவசியமாகும்:

> *"25.* விருப்புறுதி ஆவணம் நிறைவேற்றப்பட்ட தேதியான ஜனவரி *14, 1945* அன்று சிம்பிரையா தனது பேரன் சுப்பாராவிடமிருந்து தகுநிலையை பிரித்துவிட்டதாக கருதிக்கொள்வது அவசியமென்ற தன்னுடைய வாதுரைக்கு ஆதரவாக கற்றறிந்த மாநில அரசு தலைமை வழக்குரைஞரால் சான்றாவணம் எ.*2 (அ)* மீது வலுவான நம்பிக்கை வைக்கப்பட்டிருந்த விருப்புறுதியாவணத்துடன் அணுகுவதற்கு இப்போது நாங்கள் முன்னேறுகிறோம். உயிலவர் இறந்துபோன தேதியிலிருந்துதான் ஒரு உயில்சாசனம் செயலாற்றலுடையதாயிருக்கிறது. ஓர் பிரிவினையாகாத கூட்டுரிமைச் சொத்தின் உறுப்பினருக்கு ஒரு விருப்புறுதி ஆவணத்தை நிறைவேற்றுவதற்கான சட்டப்படியான திறன் உள்ளது. ஆனால், குடும்பத்தின் கூட்டுச் சொத்திலுள்ள தனது பிரிவினையாகாத பங்குரிமையை அவரால் செல்லத்தக்கமுறையில் உயில்வழி உரிமையளிக்க இயலாது. ஒருவேளை ஒரு

குடும்பத்தின் பிரிவினையாகாத உறுப்பினராக இறந்துபோனால் அவருடைய பங்குரிமைகள் குடும்பத்தின் மற்ற நபர்களிடத்தில் எஞ்சுநர் உரிமையாக இருக்கும். ஆதலால், கூட்டுக் குடும்பச் சொத்தின் பங்குரிமையில் மேலும் இந்த விருப்புறுதி ஆவணம் இயங்காது. ஆனால் தனது இறப்பிற்கு முன்னர் ஒருவேளை தனது குடும்பத்திலிருந்து அவர் பிரிந்துறைந்தால், உயில்வழி கொடை செல்திறம் கொள்ளும், அதனால் தற்போதுள்ள வழக்கில் உயிலவர் தனது இறப்பிற்கு மன்னதாக கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்துறையத் தொடங்கினரா? என்பதே முக்கிய கேள்வியாக எழும்பியுள்ளது".

XXX XXX XXX XXX

27. ஒரு இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினரானவர் குடும்பத்திலிருந்து பிரிவதற்கான தன்னுடைய உள்நோக்கத்தை அதே குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்களின் அறிவு பரப்பெல்லைக்குள் தெளிவாக கொண்டுவராமல் வெறும் சாற்றுகையினால் பிரிந்துரையத் தொடங்கிவிட்டாரா? என்பதே சட்டப்படி எழும்பியுள்ள முக்கியமான கேள்வியாகும். அப்போதைக்கப்போது எழுகின்ற சிக்கல்களை இந்து

சட்டநூல்களின் மூலம் நீதிமன்றத்தின் நேர்மையான அணுகுமுறையால் உண்டாகப்பெற்ற கோட்பாட்டினை இந்தத் தறுவாயில் குறிப்பிடுவது பொருத்தமானதாகும். கோட்பாட்டின் பரிணாமத்தை இரு பகுதிகளாக படித்தறியலாம் அதாவது, *1)* உள்நோக்கத்தின் சாற்றுகை மற்றும் *2)* அதன்விளைவாக பாதிப்புற்ற மற்றவர்களுக்கான அறிவிப்பு. முதல் பகுதியில் பின்வரும் நூல்கள் சில முக்கியம்வாய்ந்த விளக்கமளிக்கும். அடியாலத் காதீசுமா -எதிர்- அடியாலத் பீச்சு *(*ஐ.எல்.ஆர். *1930* மெட்ராஸ் *502)*-இல் இந்து சட்டத்தின் மூலாதாரங்களில் நிலையான பகுத்தறிவும் மற்றும் நடைமுறைச் செய்தி கொண்டிருக்கும் நீதியரசர் விஸ்வநாத சாஸ்திரிகளால் அவை சரிபார்க்கப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டது. அவருடைய மொழிபெயர்ப்பு சரியாக உள்ளது என்பதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். மேலும், உண்மையாகவே அதனடிப்படையில் இருதரப்பு வழக்குரைஞர்களும் மேற்கோளாக நடத்திச்சென்றனர் யஜ்னவல்கியா, அத்தியாயம் II, பிரிவு *121* "பாட்டனாரிடமிருந்து பெறப்பட்ட மனையிலுள்ள செல்வ வளம் அல்லது கரம்பு *(*ஆண்டுத்தொகை*)* முதலியவற்றின் தந்தைக்கும், மகனுக்குமான உடைமையுரிமை சரிசமமானதுதான்."

மேற்சொன்ன ஸ்லோகத்தின் மீது விஜ்ஞனேஸ்வரா கூறுகின்ற விளக்கவுரை:

"அதனால் அன்றைக்கு மாதந்தோறும் நிகழ்கிற விரைந்தொழுகு இருப்பினும் (குழந்தைபேறுக்கான திறனை இழக்கவில்லை) மற்றும் இந்தத் தந்தை பாசப்பிணைப்பு கொண்டுள்ளார். மேலும், பாகப்பிரிவினையை விரும்பவில்லை, ஏனினும் மகனின் ஆசைப்படி (விருப்பத்தின்படி) தாத்தாவின் சொத்துகளின் பாகப்பிரிவினை நடைபெறும்". (சட்லூரின் மிதாக்ஷரா, பக்கங்கள் 646-48).

சரஸ்வதி விலேஸ், பிளாசிடம் 28. "பேச்சு (அல்லது விளக்கம்) ஏதுமின்றி, தீர்மானத்தின் மூலமே பாகப்பிரிவினை நிகழ்த்தப்படுகிறது, பேச்சேதுமின்றி எண்ணத்தினால் மட்டுமே நியமிக்கப்பட்ட மகள் பாகப்பிரிவினையை ஏற்படுத்துகிறார் என்பது இதிலிருந்து அறியப்படுகிறது."

இத்ர மிஸ்ரா-வின் வீரமித்ரோதயா (அத்தியாயம் -II பி1.23)

"இங்குங்கூட, தந்தையாரின் காலத்தின்பொழுதைய பாகப்பிரிவினைக்கும் மற்றும் அவருடைய மரணத்திற்கு பின்னர் மகன்களின் விருப்பத்தினால் எழும் பாகப்பிரிவினைக்கும் (அல்லது இந்து கூட்டுக்

குடும்பத்தின் தனி ஒரு உறுப்பினரின் விருப்பத்தில்) எழும் பாகப்பிரிவினைக்கும் வேறுபாடு ஏதுமில்லை.

நீலகண்டபட்டாவின் வயாவகர மயூக்கா புத்தகத்தின் (அத்தியாயம் IV, பிரிவு iii-I)

"கூட்டுக் குடும்ப பொதுச் சொத்து ஏதுமில்லாத நிலையிலும், உண்மையில் பிரிவினையானது அறிவிப்பின்மூலம் கூற ஏற்படுகிறது "நான் உன்னிலிருந்து தனிப்பட்டவன்" ஏனெனில், பிரிவினையானது மனதின் குறிப்பிட்ட நிலையாகும் மற்றும் அறிவிப்பானது இம்மனநிலையின் வெளிப்பாடாகும்."

சமஸ்கிருத சொற்களில் "சங்கல்ப" (தீர்மானம்), சரஸ்வதி வில்லாஸ் என்ற புத்தகத்தில், "அக்கெசெயா" (இந்து கூட்டுக் குடும்பத்தின் தனி ஒரு உறுப்பினரின் விருப்பம்), வீரமித்ரோதயா என்ற புத்தகத்தில், "புத்திவிசேஷ" (மனதின் குறிப்பிட்ட நிலை) வையாவகாரா மயூகா என்ற புத்தகமானது கூட்டுக் குடும்ப நிலையின் பிரிவினையானது, தனி நபரின் நேரடி நடவடிக்கையை சார்நததாகும் என்ற கருத்தை தெரிவிக்கிறது. எனவே, இந்து சட்டப் புத்தகங்கள்,

கூட்டுக் குடும்பநிலையின் பிரிவினையானது தனி நபர் விருப்பத்தின் தனிப்பட்ட செயல்பாட்டின்மூலம் கொண்டுவரப்படுகிறது என்ற கோட்பாட்டை ஆதரிக்கின்றன.

28. துவக்கத்தில் கருத்து வேறுபாடுகள் இருப்பதாக தோன்றியபொழுதிலும், பிந்தைய தீர்ப்புரைகள், இந்து சட்டப் புத்தகங்களை சரியாக பொருள் விளக்கின. இந்நோக்கமானது பரிசீலிக்கப்பட்டு மற்றும் அதுதொடர்பான சட்டமுங்கூட வரிசையாக பல தீர்ப்புகளில் பிரிவி கவுன்சிலால் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது: சுராஜ் நரேய்ன் -எதிர்- உறிக்பால் நரேய்ன் [*(1912)* ஐ.எல்.ஆர். *35* அல *80 (பிசி)*]; கிரியா பாய் -எதிர்- சதாசிவ் துண்டிராஜ் [*(1916)* ஐ.எல்.ஆர். *43* கல் *1031 (பிசி)*]; மற்றும் பாமலிங்கா அன்னவி -எதிர்- நரவனா அன்னவி [*(1922)* ஐ.எல்.ஆர். *45* மெட். *489 (பிசி)*] ஆகிய வழக்குகளை காண்க. சையத் கசம் -எதிர்- ஜொராவர் சிங் [*(1922)* ஐ.எல்.ஆர். *50* கல் *84 (பிசி)*] என்ற வழக்கில் நீதித்துறை குழுவானது, தன்னுடைய முந்தைய தீர்ப்புரையை மறுஆய்வு செய்தபின், இந்த

சாரத்தின்மீதான தீர்வான சடடத்தை இவ்வாறாக வகுத்தது:

"மிதாக்ஷரா சட்டத்திற்குட்பட்ட இந்து கூட்டுக் குடும்பச் சொத்தைப் பொறுத்தவரையில், சொத்தானது உண்மையில் பிரிக்கப்படவில்லை- யெனினும் இந்து கூட்டுக் குடும்பத்தில் ஒருவர், தன்னுடைய சொத்தை தனியாக வைத்துக்கொள்ளும் தன்னுடைய எண்ணத்தை தெளிவாக அறிவிக்கும்பொழுது, கூட்டுக் குடும்பச் சொத்தின் பிரிவினை நிகழ்கிறது என்பது நன்கு தீர்வுசெய்யப்பட்ட சட்டமாகும்.....".

எனவே, இதுவரையில், இந்து கூட்டுக் குடும்பச் சொத்தின் பிரிவினையானது தனி நபர் விருப்பத்தைச் சார்ந்ததென்பதும் மற்றும் அதனை நடைமுறைக்கு கொண்டுவர, அதுகுறித்த தெளிவான அறிவிப்பு இருத்தல்வேண்டும் என்பது போன்றவை இந்து சட்டப் புத்தகங்களால் கோட்பாடுகள் வகுக்கப்பட்டு மற்றும் நீதிமன்றங்களின் அதிகாரப்பூர்வ தீர்ப்புரைகளால் அங்கீகரிக்கப்பட்டவை என்பது நன்கு தீர்வு செய்யப்பட்ட சட்டமாகும். சொத்தின் பிரிவினையை ஏற்படுத்துவதற்கு குடும்பத்தில் பாதிக்கப்பட்ட பிற உறுப்பினர்களின் நோக்கம் தேவையானதா என்பது

கடினமானதொரு வினாவாகும். சமூக மாற்றத்திற்கேற்ப தேவையை நிறைவு செய்வதற்கான கருத்துகளை உருவாக்குமாறு நீதிமன்றங்களால் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டபொழுதிலும், இந்து சட்டப் புத்தகங்கள் அது தொடர்பான யோசனையைத் தெரிவிப்பதைத் தவிர, இது தொடர்பாக நமக்கு அதிகளவில் நேரடியாக உதவவில்லை. இது தொடர்பாக, வயாவகாரா மயூகாவின் பின்வரும் வாசகங்கள் நமக்கு உதவிகரமாக உள்ளன:

"....உண்மையில், அறிவிப்பினாலேயே பிரிவினை நிகழ்கிறது" 'நான் உன்னிலிருந்து தனிப்பட்டவன்' ஏனெனில், பிரிவினையானது மனதின் குறிப்பிட்ட நிலை மற்றும் அறிவிப்பானது மனநிலையின் வெளிப்பாடேயாகும்."

ஒருவர் தன்னுடைய மனநிலையை வெற்றிடத்தில் அறிவிக்கவோ அல்லது வெளிப்படுத்தவோ முடியாது. அறிவித்தல் என்பது பிறருக்கு தெரிவித்து உறுதிசெய்வதாகும். *"பிறர்"* என்பவர் அத்தகைய அறிவிப்பினால் பாதிக்கப்படுபவராக இருக்கவேண்டும். எனவே மற்றவர்களிடமிருந்து தன்னை

பிரித்துக்கொள்ள விழையும் இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர், எவரிடமிருந்து தன்னை பிரித்துக்கொள்ள விழைகிறாரோ அவருக்கு (இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினருக்கு) தன்னுடைய எண்ணத்தை தெரிவிக்கவேண்டும். வெளிப்பாட்டின் செயல்முறையானது சூழ்நிலைகளுக்கேற்ப வேறுபடும். வெவ்வேறு கலைச்சொற்களை பயன்படுத்தியதன்மூலம் அறிவார்ந்த மாண்புமிகு நீதியரசர்களால் இக்கருத்து வெளிப்படுத்தப்பட்டது, ஆனால், அவர்கள் அதனை அறிவிப்பின் உட்பொருளாக அறிந்தனர். "தெளிவாக வெளிப்படுத்தப்பட்டது" என்ற சொல்லானது, சுராஜ் நரேய்ன் -எதிர்- இக்பால் நரேய்ன் [*(1912)* ஐ.எல்.ஆர். *35* ஆல். *80 (பி.சி.)*] என்ற வழக்கில் இந்து கூட்டுக் குடும்பத்தின் பிற உறுப்பினர்களின் அறிவிற்கு நிச்சயமாக தெரியும்படியாக அறிவித்தல்" என்ற பொருளின், ப்ரிவி கவுன்சிலால் பயன்படுத்தப்பட்டது என சௌந்தரராயன் -எதிர்- அருணாச்சலம் செட்டி [*(1915)* ஐ.எல்.ஆர். *39* மெட். *159 (பி.சி.)*] என்ற வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. சதாசிவ ஐயர் கூறினார். கிரிஜா பாய் -எதிர்- சதாசிவ் தண்டிராஜ [*(1916)* ஐ.எல்.ஆர். *43* கல். *1031 (பி.சி.)*] என்ற

வழக்கில், வெளிப்படையான எண்ணமானது இந்து கூட்டுக் குடும்பத்தின் பிற உறுப்பினர்களுக்கு "தெளிவாக தெரிவிக்கப்படவேண்டும்" என நீதித்துறை குழு கருத்து தெரிவித்தது. பால் கிருஷ்ணா -எதிர்- ராம் கிருஷ்ணா -எதிர்- ராம் கிருஷ்ணா [*(1931)* ஐ.எல்.ஆர். *53* ஆல் *300 (பிசி)*] என்ற வழக்கில் கூட்டுக் குடும்பத்திலிருந்து தனித்தல் என்பது இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவர், அக்கூட்டுக் குடும்பத்திலிருந்து தான் விலகி செல்வதான தன்னுடைய விருப்பத்தை, பிற உறுப்பினர்களுக்கு தெளிவாக அறிவிப்பதன்மூலம் நடைமுறைக்கு வருகிறது' என மாண்புமிகு நீதிரசர் ஸ்ரீ ஜார்ஜ் லோன்லஸ், தீர்வு செய்யப்பட்ட சட்டமாகக் கருதினார். பாபு ரமேஷ் ராய் பிரசாத் சௌத்ரி -எதிர்- ராதிகா தேவி [*(1935) 43* எல். டபிள்யூ. லா வீக்லி *172 (பிசி)*] என்ற வழக்கில் "இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவர், தான் குடும்பத்திலிருந்து பிரிவதான திண்ணமான எண்ணத்தை பிற உறுப்பினர்களுக்கு, தெளிவான அல்லது பிழையற்ற செயல் அல்லது அறிவிப்பின்மூலம், பிரிவினை நடைமுறைக்கு வருகிறது" என்ற கோட்பாட்டை, தீர்வான சட்டமாக ஸ்ரீ

ஜான் வாலிஸ் மீண்டும் ஏற்றுக்கொண்டார். கேம்பள்ளி அவிலாம்மா -எதிர்- மண்ணேம் வெங்கடசுவாமி [*(1913) 33* எம்.எல்.ஜெ.*(746)*] என்ற வழக்கில், இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர், தான் குடும்பத்திலிருந்து பிரிவதற்கான எண்ணத்தை பிற உறுப்பினர்களுக்கு வாழ்நாளில் தெரிவிக்கவில்லையெனில், தன்னுடைய எண்ணத்தின் அறிவிப்பு மட்டுமே அது வெளிப்படுத்தப்பட்டபொழுதிலும், பிரிவினையை நிகழ்த்தாது என்பதை மாண்புமிகு நீதியரசர் திரு. ஸ்ரீ ஜான் வாலிஸ் மற்றும் மாண்புமிகு நீதியரசர் திரு குமாரசுவாமி சாஸ்திரி ஆகியோர் வலியுறுத்தினர். இந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து விலகும் ஒருவரின் எண்ணத்தின் வெளிப்பாடானது பிற உறுப்பினர்களின் அறிவிற்கு எட்டியிருத்தல், அவ்வாறு குடும்பத்திலிருந்து ஒருவர் விலகுவதற்கு தேவையான நிபந்தனையாகும் என்பது, இம்முடிவுகள் வகுத்த கோட்பாடாகும். ஆனால், சென்னை உயர் நீதிமன்றத்தின் இரு தீர்ப்புரைகள் மேற்படி விதியிலிருந்து விலகலைப் பதிவுசெய்தன. அவற்றுள் முதலானது, ராம ஐய்யர் -எதிர்- மீனாட்சி அம்மாள் [*(1930) 33* எல். டபிள்யூ *384*] என்ற வழக்கில், மாண்புமிகு நீதியரசர் திரு. மாதவன் நாயர்

அவர்கள் வழங்கிய தீர்ப்பாகும். அங்கு, குடும்ப பிரிவினையானது தகவல் அனுப்பப்பட்டபொழுதைய தேதிக்கும் முந்தையதென அறிவார்ந்த நீதியரசர் தீர்ப்பளித்தார். வழக்கில் பிற உறுப்பினர்களுக்கு வேறு வாய்ப்போ அல்லது தேர்வோ இல்லை என்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாட்டிலிருந்து, அறிவார்ந்த நீதியரசர் இம்முடிவிற்கு வந்தார். ஆனால், அவ்வழக்கின் முதன்மையான சூழ்நிலைகள் யாதெனில், உயிலாளர் அறிவிப்பு வழங்கப்படும்வரையிலும் மற்றும் வழங்கப்பட்ட பின்னரும் உயிர் வாழ்ந்தார் என்பதாகும். அது அப்படியானால், அந்தப் பொருண்மைகளின் அடிப்படையிலான அம்முடிவு சரியானதாகும். பிந்தைய நிலையில், முன் நிகழ்வை தொடர்புபடுத்துதல் என்ற கோட்பாட்டை நாம் கையாளுவோம். இரண்டாம் தீர்ப்புரையானது, நாராயண ராவ் -எதிர்- புருஷோத்தம் ராவ் *(ஐ.எல்.ஆர்.1938 மெட். 315, 318)* என்ற வழக்கில், நீதியரசர் திரு. வரதாச்சாரியார் மற்றும் நீதியரசர் திரு. கிங் ஆகியோரை உள்ளடக்கிய சென்னை உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வினால் வழங்கப்பட்டதாகும். அங்கு, இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர், கூட்டுக் குடும்பச் சொத்தில் தனக்குள்ள பங்கை மூன்றாம் நபருக்கு உயிலெழுதி வைத்துவிட்டு,

ஆகஸ்ட் 5, 1926 அன்று மரணமடைந்தார். உயிலாளர், தன்னுடைய மகனுக்கு ஆகஸ்ட் 3, 1926 அன்று அனுப்பிய அறிவிப்பானது அவருடைய மகனால் ஆகஸ்ட் 9/1926 அன்று பெறப்பட்டது. ஆகஸ்ட் 9, 1926 அன்று மகன் அறிவிப்பை பெற்ற அன்றுதான் குடும்பச் சொத்தின் பிரிவினை நிகழ்ந்தது, ஆகஸ்ட் 5, 1926 அன்று தந்தையார் மரணமடைந்தாலும் மற்றும் அன்றே அவருடைய சொத்தானது எச்சவுரிமை மூலம் மகனை அடைந்துவிட்டதாலும், ஆகஸ்ட் 9, 1926 அன்று மகனால் பெறப்பட்ட அறிவிப்பானது, அவரால் எச்சவுரிமை மூலம் அளிக்கப்பட்ட சொத்துரிமையை அவரிடமிருந்து அகற்றமுடியாது. எனவே, உயிலானது செல்லத்தக்கதல்ல என வாதிடப்பட்டது. மாண்புமிகு நீதியரசர் திரு. வரதாச்சாரியார் அவர்கள், அமர்வின் தீர்ப்புரையை வழங்கி இவ்வாறு கருத்து தெரிவித்தார்:

"இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர், அதிலிருந்து விலகுவதற்கான தன்னுடைய எண்ணத்தை பிற உறுப்பினர்களுக்கு தெரிவித்தல் அவசியம் என, தீர்ப்புரைகள் பொதுவான விதியை வகுத்துள்ளன, ஆனால், அத்தகைய தகவலின்வரையிலும் மற்றும் பின்னரும், கூட்டுக் குடும்ப நிலையில் பிரிவினை

நிகழவில்லையென, அவற்றுள் எந்தத் தீர்ப்புரையும் விதியை வரையறுக்கவில்லை."

அவர்கள் முன்பாக வைக்கப்பட்ட வாதங்களை ஏற்பதில் எழும் பல்வேறு விதிமுரண்களை குறிப்பிட்ட பின்னர், அறிவார்ந்த நீதியரசர் இவ்வாறாக கூறினார்.

"சட்டமானது அதிகாரப்பூர்வமாக/தீர்ப்புரை வாயிலாக தீர்வுசெய்யப்படுமெனில், அது முரண்பட்ட விளைவுகளுக்கு வழிகோலும் என்ற காரணத்தின் அடிப்படையில், அதனை செயற்படுத்த மறுப்பது எங்கள் விருப்பத்தைச் சார்ந்ததல்ல; ஆனால் எந்தத் தீர்ப்புரையிலும் சட்டமானது அவ்வாறு கூறப்பட்டிராதபொழுதும் மற்றும் விதிகளின் காரணமாக அத்தகைய கருத்தானது தேவைப்படாத அல்லது நியாயப்படுத்தப்படாதபொழுதும், முகவரியாளரால் அல்லது முகவரியாளர்களால் அறிவிப்பானது உண்மையில் பெறப்படுமவரையில், கூட்டுக் குடும்பத்தில் பிரிவினை நிகழவில்லை என்பதை உட்கிடையாக பல்வேறு வழக்குகளில் கூறப்படும் 'தகவல் அளித்தல்' என்பது குறித்து நாங்கள் பொருள் விளக்கம் அளிக்க காரணம் எதையும் அறியவில்லை."

இக்கருத்தை ஏற்பதற்கு எங்களுடைய இயலாமைக்காக நாங்கள் வருந்துகின்றோம். முதலாவதாக, ஏனெனில், நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று, அதனால் பாதிக்கப்படும் குடும்பத்தின் பிற உறுப்பினர்களுக்கு வெளிப்படையான எண்ணம் தெரிவிக்கப்படவேண்டும் என்ற சட்டமானது, நீதித்துறை குழுவினால் நன்கு தீர்வுசெய்யப்பட்டுள்ளது, இரண்டாவதாக, கருத்துகளுள் எதனை ஏற்றுக்கொண்டாலும் அதில் முரண்பாடுகள் உள்ளன. மூன்றாவதாக, பாதிக்கப்படுபவருக்கு அளிக்கப்படவேண்டும் என்னும் எண்ணத்தை அறிவித்தல் கோட்பாடானது உள்ளார்ந்ததாகும்.

XXX XXX XXX

32. எனவே அத்தகைய அறிவிப்பானது அதனால் பாதிக்கப்படும் நபர்களை உரிய சூழ்நிகைளில் அடைந்தால்தான் அது ஆக்கப்பூர்வமாக இருக்கும் என காரணகாரிய நடைமுறை அணுகுமுறையின்படி, இந்து சட்டப் புத்தகங்களால் பரிந்துரைக்கப்பட்டு நீதிமன்றங்களால் உருவாக்கப்பட்டிருப்பது தெளிவாகிறது.

XXX XXX XXX

34. இம்மேல்முறையீட்டின் மூன்றாவது வினா முடிவு செய்யப்பட வேண்டியுள்ளது. அது இதுவாகும். குடும்ப

நிலையில் எந்தத் தேதியிலிருந்து பிரிவினை ஏற்பட்டதாக ஊகிக்கப்படுகிறது? எண்ணத்தை வெளிப்படுத்தும் நாளா அல்லது பிற உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படும் நாளா? அல்லது கடைசியாக தெரிந்துகொண்ட நாளா அல்லது ஒவ்வொரு நபரும் தெரிந்துகொண்ட நாளா அல்லது ஒவ்வொரு நபரும் தெரிந்துகொண்ட வெவ்வேறு நாளா? இறுதி மாற்றமானது ஏற்கப்படுமானால், பிரியும் நபர், ஒவ்வொரு உறுப்பினரிடமிருந்தும் வெவ்வேறு நாட்களில் பிரிந்ததாக கருதப்படும். மேற்படி கோட்பாட்டை ஏற்பது, தவிர்க்கமுடியாத குழப்பங்களுக்கு வழிகோலும். முதல் மாற்றமானது ஏற்கப்படுமாயின், அது அறிதல் கோட்பாட்டிற்கு உதட்டளவில் சேவை செய்வதாகிவிடும், முதல் அறியும் நபர் எந்தவித காரணமுமின்றி குடும்பத்தின் பிற உறுப்பினர்களின் பிரதிநிதி-யாகிவிடுகிறார். இரண்டாம் மாற்று தீர்வானது, குடும்ப உறுப்பினர்களுள் ஒருவர் எங்குள்ளார் என்று தெரியாதவிடத்து அல்லது அனைவரும் பல ஆண்டுகள் கழித்தே தெரியுமிடத்து, பிரியும் தேதியை நிச்சயமற்றதாக்கிவிடுகிறது. இந்நிகழ்வுகளை எதிர்கொள்ள இந்து சட்டப்புத்தகங்கள் எத்தீர்வையும் வழங்கவில்லை. தீர்ப்பு வழங்கப்பட்ட வழக்குகளும்

அதற்கான வழியைப் பரிந்துரைக்கவில்லை. எனவே, இந்து சட்டங்களுக்கு ஊறு விளைவிக்காமல் அர்த்தமுள்ள மற்றும் நியாயமான தீர்வை ஏற்படுத்துவது, இந்நீதிமன்றத்தைச் சார்ந்ததாகும். 'முன் நிகழ்வை தொடர்புபடுத்துதல்' என்ற கோட்பாடானது, ஏற்கெனவே இந்து சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டு, நீதிமன்றங்களால் மேம்படுத்தப்பட்டு, அச்சட்டப் பிரிவில் தத்தெடுத்தல் தொடர்பாக கையாளப்படுகிறது. ஒரு உறுப்பினரின் பிரியும் எண்ணத்தை அறிவித்தலில் இரு காரணிகள் உள்ளன. ஒன்று எண்ணத்தை வெளிப்படுத்துதல், மற்றொன்று அதனை பாதிக்கப்படும் நபர் அல்லது நபர்களின் அறிவிற்கு கொண்டுசெல்லுதல். ஒருமுறை அளிக்கப்பட்டுவிட்டால் - அது ஒவ்வொரு வழக்கின் பொருண்மைகளையும் சார்ந்ததாகும் - அது எண்ணம் உருவாக்கப்பட்டு, தெரிவிக்கப்படும் நாளுடன் தொடர்புறுகிறது. ஆனால் இரு நாள்களுக்கிடையில், எண்ணத்தை வெளிப்படுத்தும் நபர், குடும்பச் சொத்தில் அவருடைய நலனை இழக்கின்றனர், அவர் பிரிவதற்கான தன்னுடைய எண்ணத்தை திரும்பப் பெறலாம், பிரிவதற்கான அவருடைய எண்ணமானது குடும்பத்தின் பிற உறுப்பினர்களுக்கு கொண்டு

செல்லப்படும் முன்னர், அவர் மரணமடையலாம், அதன் முடிவு, அவருடைய நலனானது, குடும்பத்தின் பிற உறுப்பினர்களை சென்றடைகிறது. ஒரு இந்து கூட்டுக் குடம்பத்தின் தலைவர் குடம்பக் கடன்களுக்காக அனைத்து குடும்பச் சொத்துகளையும் விற்கலாம். அதுபோன்ற வேறு நிகழ்வும் இருக்கலாம். முன் நிகழ்வுடன் தொடர்புபடுத்துதல் என்ற கோட்பாடானது காலவரையறையின்றி பயன்படுத்தப்படுமானால், அவ்வாறு உருவாக்கப்பட்ட அளிக்கப்பட்ட உரிமைகள் பாதிக்கப்படும் மற்றும் தீர்வான உரிமைகள் குலைத்துவிடும். சமூக நீதி தேவையாகிறது மற்றும் உரிமை குழப்பத்தைத் தவிர்க்கும் காலவரையறையானது நிர்ணயிக்கப்பட வேண்டுமென பொது அறிவு கோருகிறது. அளிக்கப்பட்ட உரிமைகளை கோட்பாடு பாதிக்கக்கூடாது என கருத்துரைக்க, எது அதிக நியாயமானதாகவும் மற்றும் அர்த்தமுள்ளதாகவும் இருக்கும்? அத்தகையதொரு கட்டுப்பாட்டை விதிப்பதன்மூலம், நன்கு நிறுவப்பட்ட இந்து சட்டக் கோட்பாட்டின் நோக்கை நாங்கள் குறைக்கவில்லை, ஆனால், நிகழ்வை எதிர்கொள்ளும் வரையறைக்குட்பட்டே ஒத்திசைவு கோட்பாட்டை நாங்கள் பயன்படுத்துகின்றோம். மேலும், சட்டத்தின்

நோக்கம் தெளிவாக முரண்பட்டிருந்தாலன்றி, முன் நடவடிக்கை கோட்பாடானது அளிக்கப்பட்ட உரிமைகளை பாதுகாக்கிறது. முன்நிகழ்வுடன் தொடர்புறுதல் கோட்பாடானது சமநிலை காரணத்தினடிப்படையில் முன்நடவடிக்கையுடன் சம்பந்தப்படுவதால், அது அளிக்கப்பட்ட உரிமைகளை பாதிக்காது. பிரிவினை தேதியானது, இந்து கூட்டுக் குடும்பச் சொத்தில் பிறருக்கு கிடைக்கப்பெற்ற உரிமையைப் பிரித்துக்கொள்வதான எண்ணத்தை வெளிப்படுத்தும் தேதியாகும் என்கின்றபொழுதிலும், எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் அதனை பிற உறுப்பினர்கள் அறிந்துகொள்வதற்கும் இடையிலான நாட்கள் கருத்திற்கொள்ளப்படும் என்பது பின்பற்றப்படுகிறது.

35. தற்பொழுதைய வழக்கிற்கு மேற்படி கொள்கைகளை பொருத்தி, சிம்பிரய்யாவின் மரணத்தையடுத்து, அவருடைய நலனானது சுப்பாராவை சென்றடைகிறது. எனவே, அவர் (சிம்பிரய்யா) குடும்பத்திலிருந்து பிரிவதான அவருடைய எண்ணத்தை மதிப்பிடுவதற்கு அவருடைய உயிலானது சார்ந்து நிற்கப்படுமெனினும், சிம்பிரய்யாவின் மரணத்திற்கு முன்னர், மேற்படி உயிலின் சாரங்களை சுப்பாராவோ அல்லது அவருடைய

பாதுகாவலரோ அறிந்திருந்தது நிறுவப்படாத காரணத்தினால் அது குடும்பச் சொத்திலுள்ள அவருடைய நலன்களைக் கொண்டுசெல்லமுடியாது என தீர்ப்பளிக்கப்படவேண்டியிருக்கும்."

91. குடும்பத்திலிருந்து பிரிவதான தன்னுடைய எண்ணத்தின் தேவையான மற்றும் தெளிவான அறிவிப்பை உயில் கொண்டுள்ளதா? என்பதுகுறித்து முடிவுசெய்ய தேவையில்லையென நீதிமன்றமுங்கூட பத்தி 37-இல் கருத்து தெரிவித்துள்ளது.

92. அடுத்ததாக, **புட்ரங்கம்மா மற்றும் பலர் -எதிர்- எம்.எஸ். ரங்கண்ணா மற்றும் பலர்**[39] என்ற வழக்கானது, இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரைகளின் வரிசையில் ஒன்றாகும். மேல்முறையீடானது பாகப்பிரிவினைக்கான வழக்கிலிருந்து எழுந்ததாகும். வழக்காளர், இந்து கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்த உறுப்பினராக இருந்தாரா என்பது, எழுந்த வினாக்களுள் ஒன்றாகும். இச்சந்தர்ப்பத்தில், நீதிமன்றம் பின்வருமாறு வகைசெய்தது:

"5. இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவர், குடும்பத்திலிருந்து பிரிவதான தன்னுடைய எண்ணத்தை உறுதியான, தெளிவான மற்றும் ஒருமித்த அறிவிப்பின்மூலம், குடும்பத்திலிருந்து தன்னுடைய பிரிவினையை கொண்டுவந்து தனிமையாக சொத்தை அனுபவிக்கமுடியும். குடும்பப் பிரிவினைக்காக, இந்து

---

39. ஏ.ஐ.ஆர். 1968 எஸ்.சி. 1018

<u>கூட்டுக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கு-</u>

<u>மிடையில் உடன்பாடு இருக்கவேண்டிய தேவையில்லை.</u>

<u>அத்தகைய வழக்கில், பிரிவதற்கு பிற உறுப்பினர்கள்</u>

<u>ஒப்புதல் அளித்தனரா? இல்லையா? என்பது</u>

<u>அவசியமற்றதாகும்.</u> இக்கோட்பாட்டின் சட்ட

அடிப்படையானது, இந்து சட்டத்தின் முற்கால

எழுத்தாளர்களால் நிறுவப்பட்டுள்ளது.

93. உண்மையில் வழக்காளர் குடும்ப பிரிவினையை ஏற்படுத்தினார் என தொகுக்கப்பட்ட சட்டக் கோட்பாடுகளின் அடிப்படையில், இந்நீதிமன்றம் முடிவெடுத்து, மேல்முறையீட்டை அனுமதித்தது.

94. அடுத்ததாக, **<u>கிருஷ்ணாபாய் பிரித்தர் கண்பத்ராவ் தேஷ்முக் -எதிர்- அப்பாசாஉறிப் துல்ஜா ராமாராவ் நிம்பால்கர் மற்றும் பலர்</u>**[40] என்ற வழக்கின், இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நாம் குறிப்பிடவேண்டும். அனுபவம் (உடைமை) மற்றும் இடைக்கால ஆதாயத்திற்கான மேற்படி வழக்கில், "விசாரணை நீதிமன்றம் அறிந்ததுபோன்று, 1902-ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்படவில்லை" என உயர் நீதிமன்றம் முடிவெடுத்தது. இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்புரையை உயர்ப்பித்து, கீழ்க்காணுமாறு தீர்ப்பளித்தது:

"16. ஸ்ரீ பாலால் கோரப்பட்ட கருத்து எண் 1-ஐ நாம் எடுத்துக்கொள்வோம். பரிசீலிக்கப்படுவதுக்கெழும்

---

40. (1979) 4 எஸ்.சி.சி. 60

அடிப்படை வினாவானது, நாராயணராவ் மற்றும் ராமசந்தரா ராவ் ஆகிய இரு சகோதரர்களுக்கிடையே, 1902-ஆம் ஆண்டிலோ அல்லது அதற்கு முந்தைய அண்மைக் காலத்திலோ சட்டப்படி பாகப்பிரிவினை நிகழ்ந்ததா என்பதாகும். இது தொடர்பாக துவக்கத்திலேயே, இக்கருத்தை ஏற்கும் இந்து சட்டத்தின் அடிப்படை கோட்பாடுகளை கவனிப்பது தேவையாகும். ஒப்புக்கொண்டவகையில் தரப்பினர்கள் இந்து மிதாக்ஷரா சட்டக் கோட்பாட்டினால் ஆளுமை செலுத்தப்படுகின்றனர். மிதாக்ஷரா கொள்கையுடைய ஒரு கூட்டுக் குடம்பத்தில், கூட்டுக் குடும்பச் சொத்தில், ½ அல்லது $^{1}/_{3}$ அல்லது ¼ சொத்திற்கு தான் உரிமையாளரென எந்த ஒருவரும் உரிமைகோர முடியாது, குடும்பமானது பிரிக்கப்படாததாக இருக்கையில், அது ஒருமித்த உரிமை மற்றும் கூட்டனுபவம் ஆகியவை உள்ளன. அத்தகைய ஒருமைப்பாடு மற்றும் கூட்டமைப்பு ஆகியவை கூட்டுக் குடும்ப நிலைக்கு அவசியமான பண்புகளாகும். இவ்வொருமைப்பாடு மற்றும் கூட்டமைப்பு ஆகியவற்றை முடிவுறுத்தலின் பொருள், கூட்டுக் குடும்ப நிலையை முடிவுறுத்தல் அல்லது குலைத்தல் ஆகும் அல்லது அது, எல்லை மற்றும் வரையறையின்படி சொத்துகள்

பிரிக்கப்படாவிடினும், இந்து சட்டத்தின் கீழ் "பாகப்பிரிவினை" ஆகும். அப்பூவியர் -எதிர்- ராம சுப்பா ஐயன் [*(1886) 11* எம்.ஐ.எ. *75 : 2* எஸ்.ஆர். *218 : 8* டபிள்யூ. ஆர்.பி.சி.*1*] என்ற வழக்கில் நீதியரசர் வெஸ்ட்பெரி கூறியதுபோன்று, இந்து கூட்டுக் குடும்ப நிலையின் பிளவே, "உரிமை பிரிவு மற்றும் சொத்து பிரிவு ஆகிய இரண்டையும் உள்ளடக்குகிறது." அதே நிலைப்பாட்டை மீண்டும் வலியுறுத்தி கிரிஜா பாய் - எதிர்- சதாசிவ் [ஏ.ஐ.ஆர். *1916* பி.சி.*104* : *(1916) 43* ஐ.ஏ. *151*] என்ற வழக்கில் "கூட்டுக் குடும்ப நிலையின் பிரிவு அல்லது பாகப்பிரிவினையானது, சொத்து அல்லது நலனில் உண்மையில் உடனடி பிரிவினை ஏற்படாவிடினும், அது சொத்து மற்றும் உரிமையின் பிரிவினையை உள்ளார்ந்து குறிப்பிடுகிறது" என நீதித்துறைக் குழு விவரித்தது. இது எந்நேரத்திலும், தனி உரிமையின்மூலம் கோரப்படலாம்".

17. கூட்டுக் குடும்ப நிலையின் பிரிவானது, கூட்டுக் குடும்பத்தின் எந்தவொரு வயது முதிர்ந்த உறுப்பினராலும், தான் குடும்பத்திலிருந்து பிரிந்து, குடும்பச் சொத்திலிருந்து பிரிந்து, குடும்பச் சொத்தில் தன்னுடைய உரிமையைத் தனிப்பட்ட

முறையில் அனுபவிப்பதற்கான தன்னுடைய எண்ணத்தை, பிற உறுப்பினர்களுக்கு தெளிவான மொழியில் தெரிவிப்பதன்மூலம் கொண்டுவரப்படலாம். அத்தகைய தகவல் அல்லது குறிப்புணர்தல் அல்லது பிரதிநிதித்துவம் ஆகியவை பல்வேறு வடிவங்களாகும். சில நேரங்களில் அது வெளிப்படையான (எழுத்து அல்லது வாய்மொழியான), அறிவிப்பின்மூலம் சான்றாகிறது. சில நேரங்களில், குடும்ப உறுப்பினர்கள் முந்தைய குடும்பச் சொத்தை தனிப்பட்டமுறையில் கையாளும் நடத்தையின்மூலம் வெளிப்படும். குடும்ப உறுப்பினரால்/இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினரால் பிற உறுப்பினர்களுக்கு எதிராக/இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களுக்கெதிராக, குடும்பச் சொத்தில் பாகப்பிரிவினை மற்றும் தனி அனுபவம் கோரி அறிவிப்பு அனுப்புதல் அல்லது வழக்குத் தொடுத்தல் போன்றவை இந்து கூட்டுக் குடும்ப பிளவிற்கு போதுமான சான்றாகும்." (வலியுறுத்திக் கூறப்பட்டது)

கல்யாணி (இறந்துவிட்டார்) வாரிசுகள் மூலம் பிரதிநிதித்துவம் -எதிர்- நாராயணன் மற்றும் பலர்[41] என்ற வழக்கில் மூன்று நீதியரசர்களைக் கொண்ட அமர்வானது கீழ்க்காணுமாறு வகுத்தளித்தது:-

> "10. இவ்வழக்கின் சிக்கலை தீர்க்கவேண்டிய அடுத்த கட்டம் யாதெனில், வா.சா.ஆ.1 (பி.1) குறியீட்டாவணமானது பாகப்பிரிவினை ஆவணமாகுமா? என்பதாகும். பாகப்பிரிவினை என்பது இந்து சட்டத்தில் நுட்பமான உட்பொருளாகும். பாகப்பிரிவினை என்பது ஒரு பொருளில் இந்து கூட்டுக் குடும்ப நிலையின் பிரிவாகும் மற்றும் இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர் அதனை உரிமையாக தன்னுடைய விருப்பத்தினடிப்படையில் கோரலாம். இந்த குறுகிய பார்வையில், இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் ஒருவர் கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரிந்து, சொத்தை தனிப்பட்ட முறையில் அனுபவிப்பதற்கான தன்னுடைய எண்ணத்தின் உறுதியான மற்றும் தெளிவான வெளிப்பாடானது, பாகப் பிரிவினையை ஏற்படுத்த அவசியமாகிறது. பிரிவதற்கான உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் பிரிவது தொடர்பான அத்தகைய

---

41. ஏ.ஐ.ஆர். 1980 எஸ்.சி. 1173

தெளிவான எண்ணமானது, இந்து கூட்டுக் குடும்ப நிலையில் பிரிவினையை ஏற்படுத்தி, எப்படியாவது அதன்மூலம் எச்சவுரிமையுடைய கூட்டுக் குடும்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, கூட்டுக் குடும்பம் பிளவுற்ற நாள்முதல், அத்தகைய உறுப்பினர், பொது நில உரிமையாளராகிறார். அத்தகைய பாகப்பிரி வினையானது, அத்தகைய உறுப்பினர்களுக்கு பங்குகள் சென்றடைவதில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. அது எச்ச உரிமையை அப்புறப்படுத்தி, அவருடைய வாரிசுகளுக்கு செல்கிறது. அத்தகைய பாகப்பிரி வினையானது எல்லை மற்றும் வரையறையின்படி பின்பற்றப்பட்டாலும் அல்லது பின்பற்றப்படாவிடினும், உரிமை பிரிவு மற்றும் சொத்து பிரிவு ஆகிய இரண்டையும் உள்ளடக்குகிறது. (கிருஷ்ணா பாய் பிரிதர் கண்பத்ராவ் தேஷ்முக் -எதிர்- அப்பாசாஉறிப் துல்ஜாராமாராவ் நிம்பல்கர் [*(1979) 4* எஸ்.சி.சி. *60, 68*] என்ற வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள (அப்பூவியர் -எதிர்- ராம சுப்பா ஐய்யன் [*(1886) 11* எம்.ஐ.ஏ. *75 : 2* சர் *218 : 8* டபிள்யூ.ஆர். பி.சி.*1*] என்ற வழக்கை பார்க்க.) பிரிவதற்கான நிச்சயமான மற்றும் தெளிவான குறிப்பின்மூலம் ஏற்படும் கூட்டுக் குடும்ப

நிலையின் பிளவானது, சொத்தின் உண்மையான மற்றும் நடைமுறையிலான பிரிவினையைக் கொண்டிராத- பொழுதிலும், அது நலன் மற்றும் சொத்து பிரிவினையை உட்கிடையாக குறிக்கிறது. இது, எந்நேரத்திலும், தனிப்பட்ட உரிமையின்முறையில் கோரப்படலாம் (கிரிஜா பாய் -எதிர்- சதாசிவ் [ஏ.ஐ.ஆர். 1916 பி.சி. 104 : 43 ஐ.ஏ. 151 : 18 பாம்பே எல்.ஆர். 621] என்ற வழக்கின் தீர்ப்புரையைப் பார்க்க) எல்லை மற்றும் வரையறையின் அடிப்படையில் உண்மையான மற்றும் நடைமுறையிலான சொத்து பிரிவினையானது, கூட்டுக் குடும்ப நிலையின் பிளவிலிருந்து தோன்றுகிறது மற்றும் அதுவே, பரந்த பொருளில் பாகப்பிரிவினை எனப்படுகிறது."

பின்வரும் பத்தி 18-ஐயுங்கூட நாம் கவனிக்கலாம்:-

18. வா.சா.ஆ.1 (பி.1) குறியீட்டு ஆவணமானது பாகப்பிரிவினை என்ற பொருளிலமைந்த பாகப்பிரிவினை ஆவணம் அல்ல மற்றும் அது குடும்ப உறுப்பினர்களுக்குள் எல்லை மற்றும் வரையறையின் அடிப்படையில் பாகப்பிரிவினை செய்யும் நோக்கின் அடிப்படையிலானதல்ல. எனினும், இந்து சட்டத்தில் கூட்டுக் குடும்பம் மற்றும் கூட்டுக் குடும்பச் சொத்து

என்ற முறையில், "பாகப்பிரிவினை" என்ற சொல்லானது தனிப்பட்டமுறையில் பொருள்கொள்ளப்-படுகிறது. கூட்டுக் குடும்ப நிலையின் பிரிவானது ஆவணத்தின்மூலம் கொண்டுவரப்படுமெனில், அத்தகைய பிரிவினையைக் கொண்டுவருவதற்கான எண்ணத்தின் எழுத்துவடிவம் அல்லது அறிவிப்பானது, கூட்டுக் குடும்பம் என்பதைப் பிரிக்கிறது, (ராகவம்மா -எதிர்-செஞ்சம்மா [ஏ.ஐ.ஆர். 1964 எஸ்.சி. 136 : (1964) 2 எஸ்.சி.ஆர். 933 : (1964) 1 எஸ்.சி.எ, 593] என்ற வழக்கை காண்க). பாகப்பிரிவினையை மேற்கொள்ள கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர், அத்தகைய குடும்பத்திலிருந்து பிரிவதான எண்ணத்தை உறுதியான மற்றும் தெளிவான குறியீட்டின்மூலம் தெரிவிப்பது அனைத்துவகையிலும் அவசியமாகிறது. அத்தகைய தகவல் வடிவம் யாதெனில், அத்தகைய நலனின் குறிப்பு அல்லது பிரதிநிதித்துவம் ஆகியவை ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலைகளைச் சார்ந்ததாகும். குடும்பத்திலிருந்து பிரிவதான தெளிவான எண்ணத்தின் அறிவிப்பானது, அதனால் பாதிக்கப்படும் பிற உறுப்பினர்களின் அறிவிற்கு எட்டவேண்டும் என்பது அடுத்த தேவையாகும். முடிவின் மறு ஆய்வானது,

பிரிவதற்கான இந்த எண்ணமானது பல்வேறு வகையில் வெளிப்படையாக இருக்கவேண்டுமென தெரிவிக்கிறது. அது அறிவிப்பாகவோ அல்லது வழக்கு தாக்க-லாகவோ இருக்கலாம். ஐயத்திற்கிடமின்றி, குறிப்பு அல்லது அறிவிப்பு ஆகியவை அத்தகைய அறிவிப்பால் பாதிக்கப்படக்கூடிய குடும்பத்தின்பிற உறுப்பினர்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும்."

(மேற்படி) பகவந்த் பி. சுலேகே -எதிர்- திகம்பர் கோபால் சுலேகே மற்றும் பலர் என்ற வழக்கில் இந்நீதிமன்றம் கீழ்க்காணுமாறு தீர்ப்பளித்துள்ளது:-

"14. .....கூட்டுக் குடும்ப பிரிவினையால் கூட்டுக் குடும்பச் சொத்தின் தன்மையிலேதும் மாற்றம் ஏற்படாது மற்றும் கூட்டுக் குடும்பத்தில் பிரிவினை ஏதும் ஏற்படாமல் கூட்டுக் குடும்பச் சொத்தானது நிலைத்திருக்கும் வரையில், அது தன் தன்மையைத் தக்கவைத்துக்-கொள்கிறது. கூட்டுக் குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும், தன்னுடைய தனிப்பட்ட செயல்மூலம், கூட்டுக் குடும்பச் சொத்தை தன்னுடைய சொத்தாக மாற்றமுடியாது."

கல்யாணி *(மரணமடைந்துவிட்டார்)* வாரிசுதாரர்களால் பிரதிநிதித்துவம் - எதிர்- நாராயணன் மற்றும் பலர் *(ஏ.ஐ.ஆர். 1980 எஸ்.சி. 1173)* மற்றும் பகவந்த் பி. சுலேகே -எதிர்- திகாம்பர் கோபால் சுலேகே மற்றும் பலர் *(ஏ.ஐ.ஆர். 1986*

எஸ்.சி. 79) என்ற வழக்குகளுக்கிடையே முரண்பாடு உள்ளதா?

95. மேற்படி கல்யாணி வழக்கில், கரப்பன் என்ற ஒருவர் இரு மனைவிகளையும் மற்றும் குழந்தைகளையும் கொண்டிருந்தார், அவர்கள் சொத்துரிமை மற்றும் வாரிசு விடயத்தில் பழக்கவழக்க சட்டத்தின்மூலம் ஆளுமை செய்யப்பட்டபொழுதிலும், அத்தகைய குறிப்பான பழக்கவழக்கச் சட்டம் ஏதும் இல்லாதநிலையில், அவர் இந்து மிதாக்ஷரா சட்டத்தினால் ஆளுமை செய்யப்பட்டார். அவர் ஒரு பதியப்பட்ட ஆவணத்தை நிறைவேற்றினார். அது உயில் அல்லது பாகப்பிரிவினை பத்திரம் அல்லது குடும்ப ஏற்பாட்டு சான்று என பல்வேறாக விவரிக்கப்பட்டது. வழக்கானது அவருடைய முதல் மனைவி மூலமான மகனின் விதவையால் தாக்கல் செய்யப்பட்டது. கரப்பன், மூதாதையர் சொத்தை உயிலாக மாற்றமுடியாது என்பதால், வா.சா.ஆ.1 (பி.1) உயில் என கொள்ளப்படமுடியாது என நீதிமன்றம் முடிவெடுத்தது. மேலும் ம.சா.ஆ.1-ஐ (பி.1) பாகப்பிரிவினை ஆவணமாக கருதப்படமுடியுமா என பரிசீலிக்க நீதிமன்றம் முற்பட்டது. தீர்ப்புரையின் பத்தி-10-இல் உள்ள கருத்துகள் தீர்ப்பாக வழங்கப்பட இருந்தது என இத்தறுவாயில் கொள்ளப்பட்டது. நீதிமன்றமானது, பத்தி 10-இல் கருத்து தெரிவித்தபின்னர், மகன்களின் பங்குகள் குறிப்பிடப்பட்டு மற்றும் பெண்களுக்கும் வழிவகை செய்யப்பட்டபொழுதிலும், ம.சா.ஆ.1 (பி.1) மூலம், எல்லைகள் மற்றும் வரையறைகள் வாயிலாக ஆக்கப்பூர்வமான பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என நீதிமன்றம் முடிவுசெய்தது. அதன்பின்னர், பி.1-ஆனது ஆக்கப்பூர்வ பாகப்பிரிவினை ஆவணம் இல்லையெனில், தொடரும் கூட்டுக் குடும்ப நிலையின் மீதான அதன் விளைவு ஆராயப்படவேண்டுமா? என நீதிமன்றம் வினவியது. அதன்பின்னர், நாம் தெரிவித்துள்ள கருத்துகளை பத்தி-18-இல் தெரிவிக்க நீதிமன்றம் முற்பட்டது. பி.1

குறியீட்டாவணத்தில் பங்குகளை குறிப்பிட்டதன்மூலம், முதற்கண் கூட்டுக் குடும்ப நிலையில பிளவு ஏற்பட்டதென மேலும் முடிவுசெய்ய நீதிமன்றம் வியைந்தது. கூட்டுக் குடும்ப நிலையில், ஒருமுறை பிளவு ஏற்பட்டுவிட்டால், கூட்டுக் குடும்பம் இல்லாததாகி, உறுப்பினர்கள் பொதுச் சொத்தின் கூட்டுரிமையாளர்களாகின்றனர் என முடிவுசெய்யப்பட்டது. மேலும், நீதிமன்றத்தின் கருத்து யாதெனில், கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் அதே கொடையின் கீழ் தொடர்ந்து வசித்தனர் அல்லது சொத்துகளை எல்லைகள் மற்றும் வரையறைகள் மூலம் பிரிக்காமல் அனுபவித்தனர் என்பவையெல்லாம் பொருட்டல்ல. மறு இணைப்பு வாதிடப்பட்டு நிறுவப்பட்டாலன்றி, அவர்கள் கூட்டு நிலச் சொத்துரிமையைப் பெறமுடியாது. இவ்வழக்கில் என்ன வகுக்கப்பட்டுள்ளது மற்றும் பிந்தைய தீர்ப்புரையில் என்ன வகுக்கப்பட்டுள்ளது என்பனவற்றை தொகுக்க நாங்கள் கோரப்படுகின்றோம். பிந்தைய (மேற்படி) பகவந்த் பி. சுலேகே என்ற வழக்கின் தீர்ப்பும் அறிவார்ந்த மூன்று நீதியரசர்கள் அடங்கிய அமர்வினால் வழங்கப்பட்டதாகும்.

96. மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட பொருண்மைகளை, நாம் சுருக்கமாக காண்போம். வழக்கில் இரண்டாம் மறுப்பாளருடன் வழக்காளராக இருந்த மேல்முறையீட்டாளரும், அவருடைய சகோதரர்களுள் இருவரும் இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர்களாவர். பொது வரையறை நிறுவனமும் மற்றும் கூட்டாண்மையும் இருந்தன. மேல்முறையீட்டாளர் கூட்டுக் குடும்ப தலைவராக (கர்த்தாவாக) செயல்பட்டிருந்தார். அவர் நிறுவனத்தின் (நிறுமம்) மேலாண்மை இயக்குனராகவும் செயல்பட்டிருந்தார். அது தொடர்பாக, அதற்காக அவர் வருவாய் ஈட்டியிருந்தார். இந்நீதிமன்றத்தின் முன்பு அவசியம் எழுந்த வினா யாதெனில், அவ்வருவாயானது மேல்முறையீட்டாளரின் தனிப்பட்ட வருவாயாக

பாவிக்கப்படவேண்டுமா? அல்லது அது கூட்டுக் குடும்பத்திற்குரியதா? என்பதாகும். கூட்டாண்மை ஆவணத்தையும், பிற ஆவணங்களையும் பரிசீலித்தபின்னர், இந்நீதிமன்றமானது, கீழ்க்காணுமாறு கருத்து தெரிவித்தது:

> "14. ....கூட்டுக் குடும்ப பிரிவினையால் கூட்டுக் குடும்பச் சொத்தின் தன்மையிலேதும் மாற்றம் ஏற்படாது மற்றும் கூட்டுக் குடும்பத்தில் பிரிவினை ஏதும் ஏற்படாமல் கூட்டுக் குடும்பச் சொத்தானது நிலைத்திருக்கும் வரையில், அது தன் தன்மையைத் தக்கவைத்துக்-கொள்கிறது. கூட்டுக் குடும்பத்தின் எந்தவொரு உறுப்பினரும், தன்னுடைய தனிப்பட்ட செயல்மூலம், கூட்டுக் குடும்பச் சொத்தை தன்னுடைய சொத்தாக மாற்றமுடியாது."

97. கூட்டுக் குடும்பச் சொத்தானது பாகப்பிரிவினை செய்யப்படாமல் நிலைத்திருக்கும்வரையில், அச்சொத்தின் தன்மையில் மாற்றம் ஏதும் ஏற்படாது என்ற இந்நீதிமன்றத்தின் கருத்தின்மூலம் இவ்வழக்கில் விசாரணை நீதிமன்றமானது ஒரு கதையை உருவாக்கியுள்ளது. பி.1-இன்மூலம் பிரிவினை ஏற்படுத்தப்பட்டபொழுதிலும், வி. ரங்கசுவாமி நாயுடு மற்றும் அவருடைய சகோதரர் அடங்கிய குடும்பத்தின் சொத்தானது கூட்டாகவே இருந்தது என்றும், அது வி. ரங்கசுவாமி நாயுடுவால் உயில் கொடை அளிக்கப்பட்டதுபோன்று அளிக்கப்படமுடியாதென்றும் முடிவுசெய்தது. முதல் மேல்முறையீட்டு நீதிமன்றமானது, பொருண்மையின் அடிப்படையில் முடிவிலிருந்து வேறுபடுவதாக கூறி,

தீர்ப்புரையினின்று வேறுபட்டது.

98. உண்மையில் அத்தகைய முரண்பாடு ஏதுமில்லை என நாங்கள் நினைக்கின்றோம். (மேற்படி) அப்பூவியர் வழக்கில் பிரபுக்கள் நீதியவை (பிரிவீ கவுன்சில்) ஏற்கெனவே என்ன வகுத்துள்ளது என்பதை நாங்கள் கவனித்துள்ளோம். ஒரு பிரிவினையாகாத இந்து குடும்ப உறுப்பினர்கள், ஒரு குறிப்பிட்ட சொத்து, பின்னர், ஒருசில வரையறுக்கப்பட்ட பங்குகளின் உடைமையுரிமைக்குட்பட்டு இருத்தல் வேண்டும் எனத் தங்களுக்குள்ளாகவே ஒத்துக்கொள்கிறபோது, அது பிரிவினையாகாத சொத்து மற்றும் கூட்டு அனுபோகம் என்ற தன்மையை இழந்துவிடும்; அதற்குப்பிறகு அச்சொத்தே பரிக்கப்படாமலும் பங்கிடப்படாமலும் இருந்தாலுங்கூட ஒவ்வொரு உறுப்பினரும் ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட பங்கினைப் பெறுவர்.

99. மேற்படி வழக்கானது உண்மையில் பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தின் பாகப்பிரிவினைப் பத்திரத்தையும் உள்ளடக்குகிறது என்றும், மேலும், பிரிக்கப்படாத சொத்தின் வரம்பெல்லைகள் பிரிக்கப்படும்வரை அதை பிரிக்கப்பட்ட சொத்தாக மாற்றுவது என்பது பயனற்றது என்ற வாதுரையை நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்படவேண்டும் என்பதை நினைவிற்கொள்ளவேண்டும். குறிப்பாக, கூட்டுக் குடும்பத்தில் பிரிவினையை ஏற்படுத்துகின்ற கூட்டுரிமையரின் பாகம்பிரித்தல் குறித்த விளம்புகையின் விளைவை நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை. அவ்வாறான பாகப்பிரிவினை மாற்றத்தின்போது, குறிப்பிட்ட வகையிலான சொத்துகள் குறித்த கூட்டுரிமையரின் உரிமையானது, எந்த உடன்படிக்கையோ அல்லது பாகப்பிரி-வினையோ இன்றி அதன் வரம்பெல்லைகளுக்குட்பட்டு தனிப்பட்ட மற்றும் பூரண உரிமைகளாக மாற்றப்படலாமா என்பதான வினாவை நீதிமன்றம் பரிசீலிக்கவில்லை.

100. **கிரிஜாபாய் -எதிர்- சதாசிவ் துன்திராஜ்**[42]**,** என்ற வழக்கில், மேல்முறையீட்டாளரின் கணவர் மிதாக்ஷரா கூட்டுக் குடும்பத்தின் மேலாளருக்கு பாகப்பிரிவினை செய்யும்படியான தனது விருப்பத்தை வெளிப்படுத்தி பதிவுபெற்ற அறிவிப்பு ஒன்றினை சார்வுசெய்தார், அது பாகப்பிரிவினைக்கான உரிமை வழக்காக பின்தொடர்ந்தது என்பதான சூழ்நிலை குறித்து பிரிட்டனின் அரசப் பேரவையில் விவாதிக்கப்பட்டது. அதுகுறித்து பத்திகள் *25* மற்றும் *28*-இல் நாங்கள் கருத்துரைத்துள்ளோம்.

101. எனவே, விவாதத்தின் சுருக்கத்தின்படி நாங்கள் பின்வருமாறு தீர்மானிக்கிறோம்:

இந்து சட்டப்படி பாகப்பிரிவினையானது, இரு பொருள்கூறுகளை குறித்து விவாதிக்கிறது. ஒருவகையில் பார்த்தால், பாகப்பிரிவினையானது, வரம்பெல்லைகளுக்குள் பாகப்பிரிவினை பொதுவாக முடிவுசெய்யக்கூடிய முதல் நிலையாகும். கூட்டுரிமையாளர்களுக்கு மத்தியில் கூட்டு வாடகையுரிமையுள்ளது. ஒரு இந்து கூட்டுரிமையானது தரப்பினர்களுக்கிடையேயான உடன்படிக்கையின்வாயிலாக உருவாக்கப்படமுடியாமல், சட்டப்படி உருவாக்கப்படுகிறவிடத்து, அதை தகர்த்திடமுடியும் அல்லது கூட்டுக்குடும்பத்தில் முடிவை கொண்டுவரும்படியான கூட்டுரிமையாளர்களின் தன்னிச்சையான விளம்புகையின்மூலம் பாகப்பிரிவினையை ஏற்படுத்திடவும் முடியும். இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவுகள் *6* மற்றும் *30* ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளதைப்போன்று, பாகப்பிரிவினை ஏற்படுத்துவதற்கு

---

42. ஏ.ஐ.ஆர். 1916 பி.சி. 104

முன்பாக கூட்டுரிமையாளரிடம் இருந்ததே சொத்துரிமையாகும். பாகப்பிரிவினைக்கான நோக்கத்தைத் தவிர வேறெதனையும் வெளிப்படுத்தாமல் விளம்புகை செய்வதன்பேரில், அதை மற்ற கூட்டுரிமையாளர்/கூட்டுரிமையாளர்களுக்கு தெரிவிக்கும்வகையில் இருத்தல்வேண்டும் என்பதில் ஐயமேதுமில்லை, அவ்வாறாக பொருள்படுகின்ற பாகப்பிரிவினையானது உரிமைமூலத்தில் பிரிவினையை ஏற்படுத்துவது என்பதாகும். ஏற்கெனவே கருத்துரைத்துள்ளபடி, பாகப்பிரிவினையின் மேற்படி பொருள்விளக்கமானது பரந்த செயல்விளைவுகளை கொண்டுள்ளது. எஞ்சுரிமையாளரின் மரபுரிமை என்கிற கோட்பாடானது, கூட்டு குத்தகையுரிமையை உள்ளடக்குகிறது, அது முதல் சூழலில் பாகப்பிரிவினை நிறைவேற்றப்-பட்டிருக்கிறவிடத்து முடிவுறும். அவ்வாறான பாகப்பிரிவினையை ஏற்படுத்திய பின்னர் கூட்டுரிமையர் இறந்துவிட்டார், எஞ்சுரிமையர் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலான உரிமையானது இல்லாததாக்கப்படும், அவ்வாறான பாகப்பிரிவினைக்குப் பின்னர் அவருக்கு இறப்பு ஏற்பட்டால், அவரது சட்டப்படியான வாரிசுதாரர்கள் வாரிசுரிமையைப் பெற உரிமையுடையவர்களாவர். அவ்வாறாக கூட்டு குத்தகையுரி- மையானது பொது குத்தகையுரிமையாக மாற்றப்படும், ஆயினும் அது முதலில் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்பட்டிருக்கும் குடும்பச் சொத்துகளில் கூடுதலாக இன்றி பிரிக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு தனிப்பட்டமுறையில் பிரிக்கப்பட்டு மாற்றப்படும் என்று குறிப்பிடுவது ஒன்றாகாது. <u>பகவத் பி. சுலாகே</u> என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் கருத்துரை இதுவேயாகும். எங்களால் எடுத்துரைக்கப்பட்டுள்ளபடி, தீர்ப்புரையின் பத்தி 14-இல் உள்ளடங்கியுள்ள சட்டத்தின் கோட்பாடுகளானது, மேற்படி வழக்கின் சிறப்பு பொருண்மைகள் மூலமே அறிந்துகொள்ளமுடியும் என்ற முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் கருத்துரையை நாங்கள் கீழே குறிப்பிடவில்லை. வரம்பெல்லைகள்

பிரிப்பதென்பது, சொத்துகளை பாகத்திற்கேற்ப பிரிப்பதாகும் எனப் பொதுவாக புரிந்துகொள்ளப்படுகிறது.

ஓர் இந்து உயிலை எழுதமுடியுமா?

உயிலை நிறைவேற்றுவதற்கான அவரது அதிகாரத்தின் வரம்பெல்லைகள் எதுவாகும்?

1956-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 30-ஐ அமல்படுத்துவதன்மூலம் ஏதேனும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டனவா?

102. இந்து சட்ட உடன்படிக்கையானது, உயிலின் கருத்துரையை உள்ளடக்குகிறதாக தோன்றவில்லை. ஆயினும் காலப்போக்கில், உயில் எழுதுவதில் ஓர் இந்துவின் அதிகாரங்கள் குறித்து நீதிமன்றங்கள் அறிந்துகொண்டுள்ளது. இவ்வழக்கில், மிதாக்ஷரா சட்டம் தொடர்பாக நாம் விவாதிக்கிறோம். அதன்கீழ், இந்து ஒருவர், இந்து வாரிசுரிமைச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாகவே அவரது தனிப்பட்ட மற்றும் சேர்ந்தடைந்த சொத்துகளை உயில் வழி எழுதலாம். கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினராக இருக்கும் இந்து ஒருவர் பல்வேறு விதமான தனிப்பட்ட சொத்தை அவரது சுவாதீனத்திலும் வைத்திருக்கலாம். அவை இந்து ஒருவர், அவரது தந்தை அல்லாது வேறொரு நபரிடமிருந்தோ, பாட்டன், முப்பாட்டன் ஆகியோரிடமிருந்தோ வாரிசுரிமை மூலம் பெறப்பட்ட சொத்து, ஓர் இந்து கல்வி வழியினால் ஈட்டப்பட்ட அனைத்து சொத்துகளின் தனிப்பட்ட வருமானம், அரசு மானியம் *(1930*-இன் மூலம் விளம்புகை செய்யப்பட்ட இந்து கல்வி வழி ஈட்டப்பட்ட சொத்து*)* ஆகியவை உரிமைத் தடையான சொத்தை உள்ளடக்குகிறது. இதனைக்குறித்து, முல்லாவினுடைய இந்து சட்டத்தின் *23*-ஆவது பதிப்பு பக்கம் *341-342*-லுள்ள பத்தி *228*-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. உயில் எழுதுவதை

கட்டுப்படுத்துகின்ற சட்டத்தைப் பொறுத்தவரையில், அதை கட்டுப்படுத்தும் குறிப்பிட்ட சட்டம் ஏதுமில்லை. 1865-ஆம் ஆண்டில் தான் வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. அது இந்துகளுக்குப் பொருந்தாது. 1870 இந்து உயில் சட்டமானது வரம்புடைய பயன்பாட்டினைக் கொண்டது, (மற்றவற்றிற்கிடையே சென்னை நகரத்திலுள்ள இந்துக்களின் உயில்களுக்குப் பொருந்தும்) 1865-இன் இந்திய வாரிசுரிமைச் சட்டமானது இந்துகளுக்கு பொருந்தக்கூடிய குறிப்பிட்ட சில வகையங்களை அளித்துள்ளது என்பதில் ஐயமேதுமில்லை. 1881-ஆம் ஆண்டு உயில் மெய்ப்பிதழ் மற்றும் நிருவாகச் சட்டத்தின் கீழ், உயில் நிறைவேற்றாளர் என்பவர் எஞ்சுரிமையர் குறித்த சட்ட விதிக்குட்பட்டு இந்து ஒருவரின் சட்டப்படியான சார்பாற்றுநராவார். 1925-ஆம் ஆண்டு இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 211-ஆனது அதே சட்ட நிலைப்பாட்டினை தொடர்கிறது. எனினும், முந்தைய வாரிசுரிமைச் சட்டத்தை நீக்கம் செய்த 1925, இந்திய வாரிசுரிமைச் சட்டமானது பிரிவு 57-இன் வாயிலாக 1927-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ இந்து, பௌத்தம், சீக்கியம் அல்லது ஜெயனத்தை சார்ந்தவரால் எழுதப்பட்ட உயில் மற்றும் உயிலின் பிற்சேர்க்கைகள் சட்டத்தின் அட்டவணை III-இல் விவரிக்கப்பட்டுள்ளபடி பகுதி VI-இன் வகையங்களில் வகைசெய்கிறது, அதற்கு முந்தைய கூறுகளான அதாவது, பிரிவு 57-இன் கீழான கூறுகள் (அ) மற்றும் (ஆ)-க்கு அவ்வகையங்களை பொருத்திடலாகாது. எனவே, ஓர் இந்துவால் நிறைவேற்றப்பட்ட சிறப்புரிமையற்ற உயிலைப் பொறுத்தவரையில், 1927-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் நாளுக்குப் பின்னர், அத்தகையதொரு உயில் குறைந்தபட்சம் இரண்டு சாட்சிகளை கொண்டு சான்றொப்பமிடுதல் கட்டாயமாக்கப்பட்டது ஆகியவற்றை பிரிவு

63 வேண்டுறுத்துகிறது. எனவே ஓர் இந்துவால் நிறைவேற்றப்பட்ட உயிலும், 1927, ஜனவரி 1-ஆம் நாள் முதல் முறைப்படுத்தப்பட்டது.

103. இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 30-ஆனது பின்வருமாறு குறிப்பிடுகிறது:

> "உயில்வழி இறங்குரிமை: உயில் வழியாக அல்லது பிற விருப்பாவண ஏற்பாட்டின் வழியாக அயலடைவு செய்யப்படத்தக்கச் சொத்து எதனையும், இந்து ஒருவர் இந்திய வாரிசுரிமைச் சட்டம் 1925-இன் வகையங்களுக்கு இணங்கவோ அல்லது இந்துக்களுக்குப் பொருந்துறத்தக்க நிலவுறும் பிற சட்டம் எதனின் வகையகளுக்கு இணங்கவோ அயலடைவுச் செய்யலாம்.
>
> விளக்கம் - மிதாக்ஷரா சட்டத்தின்படி பிறப்புவழி பங்குரிமைச் சொத்தில் இந்து ஆண் ஒருவருக்குள்ள உரித்தமோ, தரவாடு, தரவழி, இல்லம், குடும்பம், அல்லது காவகு சொத்தில், அதனைச் சார்ந்த உறுப்பினர் ஒருவருக்குள்ள உரித்தமோ, இந்தச் சட்டத்தின் அல்லது நிலவுறு பிற சட்டம் எதனிலும் உள்ள எது எவ்வாறிருப்பினும் இந்த உட்பிரிவின் பொருள்படி அது அவளாலோ அவனாலோ அயலடைவு செய்யப்படத்தக்க சொத்தாகச் கொள்ளப்படும்".

104. அது உயிலை நிறைவேற்றுவதற்கு ஒரு இந்துவின் அதிகாரம் குறித்து சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியதா? முன்னதாக கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளபடியான, இந்து வாரிசுரிமைச் சட்டம் இயற்றப்பட்டதற்கு முன்பு, இந்து ஒருவர் தனது தனிப்பட்ட மற்றும் சுயசம்பாத்திய சொத்தை உயில்வழி அளிக்கலாம். அவர் கூட்டுரிமையாளராக இருக்கின்ற கூட்டுக் குடும்பச் சொத்தில் அவரது உரிமையை உயில்வழி நிறைவேற்றும் அதிகாரத்தைப் பொறுத்தவரையில், அத்தகையதொரு செயல் சட்டப்படி ஏற்புடையதல்ல. **எம்.என். ஆர்யமூர்த்தி -எதிர்- எம்.டி. சுப்பராய செட்டி**[43]-இல் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையை நாங்கள் குறித்துக்காட்டலாம், அதில் இந்நீதிமன்றத்தின் தீர்முடிவு பின்வருமாறு:

> "..... ஆனால் துரதிருஷ்டவசமாக, லச்சையா தந்தையாக இருந்தபோதிலும் இந்து சட்டத்தின்படி கூட்டுக் குடும்பச் சொத்தையோ அல்லது அதன் ஏதேனும் பகுதியையோ உயில்மூலம் தீர்வுசெய்ய முடியாது, அவ்வாறு உயில்மூலம் செய்யப்பட்ட பல்வேறு வகையிலான சொத்து ஏற்பாடுகள் செயலற்றது என்பது தெளிவு (காண்க, *பார்வதிபாய் -எதிர்- பகவந்த் பந்தாரிநாத் : 39 பாம்பே 593 : ஏ.ஐ.ஆர். 1915 பாம்பே 265 மற்றும் சுப்பாராமி ரெட்டி -எதிர்- ராமம்மா, 43 மெட்ராஸ் 824 : ஏ.ஐ.ஆர். 1920 மெட்ராஸ் 637).*

---

43. 1972 (4) எஸ்.சி.சி. 7

இப்பிந்தைய வழக்கானது அப்பன் பத்ரா சாரியார் -எதிர்- வி.எஸ். ஸ்ரீனிவாச சாரியார் மற்றும் பலர் : 40 மெட்ராஸ் 1122 : ஏ.ஐ.ஆர். 1918 மெட்ராஸ் 531 என்ற வழக்கில் அந்நீதிமன்றத்தின் முந்தைய தீர்முடிவின் ஏற்புடைமையைக் குறித்து வினவியது. விடால் புடன் -எதிர்- யாமீணம்மா, (1874) 8 எம்.எச்.சி.ஆர். 6 மற்றும் லஷ்மண் தாதா நாயக் -எதிர்- ராமசந்திர தாதா நாயர்; 5 பாம்பே 48 (பிசி) : 7-ஐ ஏ 181-இல் கூட்டுரிமையர், கூட்டுக் குடும்பச் சொத்தினை உயில்வழி உடைமை மாற்றம் செய்ய முடியாது, ஏனெனில், அவர் இறந்த நாள்முதல் உயில் நடைமுறைக்கு வரும் என்பதால், அவர் இறந்த தருணம் முதல் எஞ்சுரிமையர் என்றவகையில் அவரது உரிமையானது மற்ற கூட்டுரிமையருக்கு வழங்கப்படு-மாதலால் உயிலை செயல்படுத்தவது என்பது பயனற்ற-தாகிறது என்ற நன்கு அறுதியிடப்பட்ட கோட்பாட்டின்-பேரில் இத்தீர்முடிவுகள் மேல்நடத்தப்படுகின்றன".

105 **<u>வள்ளியம்மை ஆச்சி -எதிர்- நாகப்ப செட்டியார் மற்றும் ஒருவர்</u>**[44] என்ற வழக்கில், இந்நீதிமன்றம் மற்றவற்றிற்கிடையே தீர்மானித்ததாவது:

"10. ..... சொத்தானது கூட்டுக் குடும்பச் சொத்தாக இருப்பதால், பழனியப்பாவின் தந்தை உயில்

எழுதுவதற்கு உரிமையுடையவரல்லர், சொத்து பழனியப்-பாவின் கைகளுக்கு வந்தபின்னர் அவரால் எழுதப்பட்ட உயிலானது சொத்தின் தன்மையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது. உயில் எழுதுவதால் மட்டுமே தந்தையால் கூட்டுக் குடும்பச் சொத்தை தனது மகனின் பூரண சொத்தாக மாற்றிடமுடியாது, அதன்படி பின்னிட்டு பிறந்த மகன்களின் மகன்களுக்கு கூட்டுக் குடும்பச் சொத்தில் அவர்களது உரிமை பறிப்பதாகிவிடும். ஆண் வாரிசுகளைப் பொறுத்த வரையில் மூதாதையர் சொத்து என்பது மூதாதையர் சொத்தை பாகம்பிரித்ததன்பேரில் கூட்டுரிமையர் பெற்றுக்கொண்ட பாகம் என்பது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்றாகும். பாகம் பிரிக்கப்பட்ட சமயத்தில் அவர்கள் பிறந்திருந்தாலோ அல்லது பின்னிட்டு பிறந்தாலோ அவர்கள் பிறப்பின் மூலம் உரிமை பெறுவர். (முல்லாவின் 13-ஆவது பதிப்பின், பக்கம் 249, பத்தி 223 (2) (4)-ஐ காண்க) அது அவ்வாறிருக்கையில் பாகப்பிரிவினை செய்தபிறகுங்கூட மகன்களைப் பொறுத்த வரையில் மூதாதையர் சொத்தின் தன்மையானது மாறாது, மேலும், தந்தை கூட்டுக் குடும்பச் சொத்தின்

---

44. ஏ.ஐ.ஆர். 1967 எஸ்.சி. 1153

பகுதியை மகனுக்கு அளிப்பதன்மூலம் (குறிப்பிட்ட உயிலை எழுதிய பின்னர்) மூதாதையர் சொத்தின் தன்மையானது மாறிவிடும் என்பதை நாங்கள் கண்டறியத் தவறிவிட்டோம். மிதாக்ஷரா குடும்பத்தில் தந்தையாக இருப்பவர், உயில் அளிப்பதில் வரம்புடை உரிமையையே பெற்றுள்ளார், பழனியப்பனின் தந்தை எஞ்சியுள்ள சொத்தை தனது மகனுக்கு அளித்திருந்த-போதிலும், அவர் கூட்டுக் குடும்பச் சொத்து முழுவதையும் தீர்வளித்திட முடியாது என்பதாகும். பழனியப்பனின் தந்தை உயில் அளித்ததன்பேரிலேயே பழனியப்பன் கடமையுணர்ச்சிமிக்க மகனாக உயில் மெய்ப்பிதழின்படி தனது தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றினார், சொத்தின் தன்மை மாறக்கூடியதல்ல என்றும், வாரிசுகளைப் பொறுத்தவரையில் பழனியப்-பனிடமிருக்கும் சொத்து கூட்டுக்குடும்பச் சொத்தாகவே நிலைபெறும் என்பதே எங்களது கருத்தாகும்."

106. இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 30-ஆனது உயிலை எழுதும் விடயத்தில் ஓர் இந்துவின் அதிகாரத்தின் அடிப்படைக்கூறில் மாற்றத்தை கொண்டுவருமா? **சுந்தர அடப்பா -எதிர்- கிரிஜா**[45], என்ற வழக்கில் மைசூர் உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு நீதியராயத்தின் தீர்முடிவினை நாங்கள் குறித்துக்காட்டலாம். நீதியராயத்தில் கருத்துரைத்த அப்போதைய மாண்புமிகு

நீதியரசர் திரு கே.எஸ். உெறக்டே தீர்மானித்ததாவது:-

"15. "சட்டம்" அமலுக்கு வரும்வரை, மிதாட்சரா குடும்பமாக இருப்பினும் அல்லது அலியாசந்தானா குடும்பமாக இருப்பினும், இந்துகூட்டுக் குடும்பத்திலுள்ள கூட்டுரிமையரின் உரிமையை, விருப்புறுதியாவணத்தின் வாயிலாக தீர்வளித்திடமுடியாது, ஏனெனில் அவரது உயில் நடைமுறைக்கு வருவதற்குள்ளாகவே பிரிக்கப்படாத குடும்பத்தில் அவரது உரிமையானது, எஞ்சுநர் உரிமை மூலமாக மற்ற கூட்டுரிமையர்களால் எடுத்துக்கொள்ளப்-பட்டிருக்கும் என்பது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்றாகும். இந்திய வாரிசுரிமைச் சட்டமானது, அச்சூழ்நிலையை மீறச்செல்லவில்லை. இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளானது, பகுதி VI (உயில்வழி வாரிசுரிமை தொடர்புடைய வகைமுறைகள்) மற்றும் அட்டவணை III-இல் காணப்படும் விதிகளுடன் இணைந்து காணப்படுகின்றன. ஆனால், அவை அந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறைகள் மற்றும் மாற்றியமைத்தலுக்குட்பட்டதாகும். அட்டவணை III-இலுள்ள வரையறைகளானது:

45.ஏ.ஐ.ஆர். 1962 (Mysore) 72

"உயிலவர் வாழ்வோருக்கிடையே உரிமை மாற்றம் செய்திருக்கக்கூடாத சொத்தை உயில்வழி அளிக்கவோ அல்லது அதனைப் பராமரிக்கும் உரிமை எதனையும் எந்த நபர்களிடமிருந்தும் பறிக்கவோ அதில் அடங்கியுள்ள எதுவும் அவருக்கு அதிகாரம் அளிக்கவில்லை, இப்பிரிவின் பொருந்துகையைத் தவிர, அவர் அவர்களது உரிமையை உயில்மூலம் பறிக்கமுடியாது."

17. வழக்காற்றுச் சட்டத்தின் கீழோ அலலது அலியசந்தானா சட்டத்தின் கீழோ அல்லது இந்திய வாரிசுரிமைச் சட்டத்தின் கீழோ அலியசந்தானா குடும்பத்தின் கூட்டுரிமையரின் உரிமையானது உயில்வழி மாற்றம் மூலம் தீர்வளித்திருக்கக்கூடாது. அதுதொடர்பாக "சட்டம்"-இன் பிரிவு 30(1)-இன் விளக்கத்தின் வாயிலாக சட்டத்தில் வரையறுக்கப்பட்ட மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது பிரிக்கப்படாத அலியசந்தானா குடும்ப உறுப்பினர், அலியசந்தானா சொத்துகளிலுள்ள அவரது உரிமையை உயில்மூலம் தீர்வளிக்கலாம் என்பதில் பிரச்சினை ஏதுமில்லை. எனினும், பிரிவு 30(1)-இன் விளக்கமானது, பிரிக்கப்பட்ட கூட்டுரிமையரின் உரிமைகளை விரிவடையச் செய்கின்றது என்ற திரு. ஜி.கே. கோவிந்தபட்டின் கூற்றுடன் எங்களால் உடன்படவில்லை. பிரிவு 30-இன் நோக்கம் தெளிவாகத் தெரிகிறது. அப்பிரிவானது நேரடியாகவோ அல்லது தேவையான குறிப்புரையின் வாயிலாகவோ,

பிரிக்கப்பட்ட பாத்தியதையின் இறங்குரிமைகளை குறித்து விவாதிக்கிறது. முன்பே குறிப்பிட்டுள்ளபடி, அதன் நோக்கம் வரையறுக்கப்பட்டுள்ளது - பயன்படுத்தப்பட்டுள்ள சொல் தொகுதி எளிதானது, எனவே பொருள்விளக்கத்திற்கான கேள்வி எழவில்லை. பிரிவு *30(1)*-இன் விளக்கப்பொருளானது, பிரித்துவிட்டு இறந்த கூட்டுரிமையரைவிட, பிரிக்காமல் இறந்த கூட்டுரிமையர் தனது வாரிசுகளுக்கு அதிக மதிப்புமிக்க சொத்தினை விட்டுச் செல்வார் என்று பொருள்கொள்ளும்படியான எதிர்மேல்முறையீட்டாளர்களின் விருப்பத்தின்படியே பொருள்கொள்ளப்பட்டது என்ற ஸ்ரீபட்டின் வாதுரை சரியானதல்ல. அநேக வழக்குகளில் நிசந்ததி கவருவால் எடுத்துக்கொள்ளப்பட்ட பாகமானது கவருவின் ஆயுட்காலத்திற்கு வரையறுக்கப்பட்டிருந்தாலும், அதன் அளவானது "சட்ட".இன் பிரிவு *7(2)*-இன் கீழ் வகைசெய்யப்படாத அளவிற்கு பொதாகியுள்ளது. பயன்படுத்தப்பட்ட மொழி தெளிவானது, பொருள்விளக்க வினா எழவில்லை. பிரிக்கப்பட்ட இந்து கூட்டு குடும்பத்தை சார்ந்தவர் மரணத்தின்பொழுது தன் வாரிசுகளுக்கு விட்டுச்செல்லும் சொத்துகளைவிட, பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர் மரணத்தின்பொழுது தன் வாரிசுகளுக்கு விட்டுச்செல்லும் சொத்துகள் மிகுந்த மதிப்பு வாய்ந்தவையாகும் என பிரிவு *30(1)*-இன் விளக்கமானது புரிந்துகொள்ளப்படும் விதத்தில், நாங்கள் புரிந்துகொள்ள எதிர்மேல்முறையீட்டாளர்கள் வேண்டும்வகையில், திரு. பட் அவர்களால் வைக்கப்படும் வாதம்

சரியானதல்ல. பெரும்பான்மையான வழக்குகளில், கவாரு அவர்களின் கட்டுப்படுத்தப்பட்ட ஆயுட்கால உரிமைமூலம் நிசாந்ததி கவாரு அவர்களால் பெறப்பட்ட பங்கானது, சட்டப்பிரிவு *7(2)*-இல் வழங்கப்படாத ஒன்றைவிட பெருமளவினதாகும்.

<u>ஜலாஜா ஷெட்டி மற்றும் பலர் -எதிர்- லெட்சுமி ஷெட்டி மற்றும் பலர்,</u> *1973 (2)* எஸ்.சி.சி. *773* என்ற வழக்கில் உயர் நீதிமன்றத்தின் கருத்தை இந்நீதிமன்றம் அங்கீகரித்திருப்பதை நாங்கள் அறிகின்றோம். வேறு சொற்களில் கூறுவதானால் நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டு இருப்பதுபோன்று, கூட்டுக் குடும்பச் சொத்தானது கூட்டாகவே இருக்கும்வரையில், கூட்டுக் குடும்ப உறுப்பினரின் உரிமையானது ஒரு நலனாகவே விவரிக்கப்படமுடியும். நாங்கள் இதனை ஏன் கூறுகின்றோம் என்ற காரணமானது, குடும்பமானது கூட்டாகவே இருக்கும்வரையில், ஒரு கூட்டுக் குடும்ப உறுப்பினரோ அல்லது உரிமை பெறும் அருகதையுடையவரோ, பாகப்பிரிவினை இருக்கும்பொழுது, அவருடைய பங்குரிமையை கணிக்கவோ அல்லது பங்கானது பிரிக்கப்படாமலிருந்து, கூட்டுக் குடும்பத்தில், உரிமை அல்லது தகுதிநிலையின் பிரிவினையிலேயே தோன்றுகிறது. ஒருமுறை பாகப்பிரிவினை ஏற்பட்டுவிட்டால், இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினரின் பங்கானது வெளிப்படையாகிறது. இதுதொடர்பாக, **<u>உறர்தியோ ராய் -எதிர்- சகுந்தலா தேவி</u>**[46] என்ற வழக்கின் தீர்ப்புரையும், பத்தி *22* மற்றும் *23* ஆகியவற்றை இந்நீதிமன்றம் கவனிக்கலாம். அவை பின்வருமாறு தெரிவிக்கின்றன:

---

46. 2008 (7) எஸ்.சி.சி 46

"22. சொத்தில் ஒருவருடைய நலனை அளிக்கும் நோக்கிற்காக, இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினர்களிடையே எல்லை மற்றும் வரம்பு மூலம் பாகப்பிரிவினை நிகழவேண்டுமென்பதல்ல. எப்பொழுது இந்து கூட்டுக் குடும்பச் சொத்தை பாகப்பிரிவினை செய்வதற்கான நோக்கமானது வெளிப்படுத்தப்படுகிறதோ, இந்து கூட்டுக் குடும்பத்தின் ஒவ்வொருவரின் பங்கானது தெளிவானதும் மற்றும் உறுதியானதுமாகிறது. இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினரின் பங்கானது ஒருமுறை தீர்மானிக்கப்பட்டுவிட்டால், அது இந்து கூட்டுக் குடும்பச் சொத்தானது முடிவிற்கு வந்துவிடுகிறது. அத்தகைய நிகழ்வில், தரப்பினர்கள் "பொது குத்தகைதாரர்"களே அன்றி கூட்டுக் குத்தகைதாரர்"களல்ல. எனவே, ஸ்டேட் பேங்க் ஆ.ப் இந்தியா [*(1969) 2* எஸ்.சி.சி. *33* ஏ.ஐ.ஆர். *1969* எஸ்.சி. *1330*] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரையானது தற்பொழுதைய வழக்கிற்கு பொருந்தாது.

23. இ.கூ.கு. உறுப்பினர் ஒருவர் சொத்தில் அறுதியிட்ட பங்கை பெறுமிடத்து, அவர் அப்பங்கின் உரிமையாளராகிறார் மற்றும் அவர், தம்முடைய தனிப்பட்ட சொத்தை பராதீனம் செய்வதுபோன்றே, அச்சொத்தை விற்பனை மற்றும் அடகு போன்றவை மூலம் பராதீனம் செய்ய முடியும்."

"அவர் அப்பங்கின் உரிமையாளராகிறார்" மற்றும் 'அவர் அதனை விற்கமுடியும்' என இந்நீதிமன்றம் வகுத்திருப்பதை கவனிப்பது முதன்மையானதாகும்.

தனிப்பட்ட உரிமையாளர் என்ற பொருளில் அவர் உரிமையாளர் என கூறுவதினின்று அது வேறுபட்டதாகும்.

(இதுதொடர்பாக, (மேற்படி) *அப்போவியர் வழக்கின்* தீர்ப்புரையில் பத்தி 4-இல் வகுக்கப்பட்டுள்ள விதியையும் காண்க).

107. இந்து வாரிசுரிமை சட்டத்திற்கு முன்புங்கூட நான்கு சூழ்நிலைகள் இருந்தன என்பதையும் நாம் கவனிக்கவேண்டும். தனிப்பட்ட சொத்தையும் கொண்டிருக்கும் ஒரு இ.கூ.கு. உறுப்பினரை பொறுத்தவரையில், அவர், தன்னுடைய தனிப்பட்ட சொத்தை உயில் அளிக்கமுடியும். இ.கூ.கு. சொத்தை பொறுத்தவரையில், மூன்று சூழ்நிலைகள் இருக்கமுடியும். முதல் சூழ்நிலையானது, குடும்பமானது கூட்டாக இருக்குமிடத்து அவ்விடயத்தில், இ.கூ.கு. உறுப்பினர் நலன் உடையவராவார். இந்நலனைப் பொறுத்தவரையில், இந்து வாரிசுரிமை சட்டத்திற்கு முன்னர் அந்நலனானது உயில் எழுவதற்கு முற்பட்டதல்ல. இரண்டாம் சூழ்நிலையானது, உரிமையில் பிளவோ அல்லது தகுதிநிலையில் பிரிவோ இருக்குமிடத்து நாங்கள் கருதுவது யாதெனில், ஒரு இ.கூ.கு. உறுப்பினரின் தெளிவான அறிவிப்பின் மூலம், இ.கூ.கு. நிலையில், பிரிவினை என்ற பொருளில் பாகப்பிரிவினை ஏற்பட்டு அது மற்றவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுவிட்டதென்பதாகும். அது சொற்களால் இருக்கமுடியும். அது நடத்தையால் இருக்கமுடியும். அது பாகப்பிரிவினைக்கான வழக்கு தாக்கல் செய்வதை தழுவி இருக்கமுடியும். அத்தகைய பிளவு நிகழும்பொழுது, இ.கூ.குடும்பச் சொத்தில் உறுப்பினரின் பங்கானது, சட்டத்திற்கும் குடும்ப உறுப்பினர்களின் உரிமைகளுக்குட்பட்டு உண்மையானதாகி முழுவடிவம் பெறுகிறது. ஏற்கெனவே கவனித்ததுபோன்று, இது ஒரேநேரத்தில் எல்லை வரம்புடன் கூடிய பாகப்பிரிவினையாகவோ அல்லது வரையறுக்கப்படாத (வரம்பிடப்படாத)

பாகப்பிரிவினையாகவோ இருக்கலாம். இந்து வாரிசுரிமை சட்டத்திற்கு முன்னர், சட்டத்தின் கீழ் அத்தகைய தோற்றத்தில் கூட்டுக் குடும்பத்தில் பிரிவினையை ஏற்படுத்தி, கூட்டு பங்குரிமையின் அடிப்படையிலான உரிமையானது அழிகிறது. இ.கூ.குடும்ப உறுப்பினரின் பங்கானது மறுக்கமுடியாததாகிறது. ஒரு இ.கூ.கு. உறுப்பினர் இறந்துவிட்டால், அது (அவருடைய பங்கானது) பிற உறுப்பினர்களுக்குச் செல்லாது, அவருடைய வாரிசுகளுக்கு செல்லும். இ.கூ.கு. உறுப்பினர் தன்னுடைய விருப்பத்திற்கேற்ப தன்னுடைய பங்கை உயில் எழுதிவைப்பதற்கான தன்னுடைய உரிமையை செயல்படுத்தவும், கதவை திறக்கிறது. இவ்வதிகாரமானது, இந்து வாரிசுரிமை சட்டப்பிரிவு 30-க்கு முன்பே ஒரு இந்துவிற்கு உறுதியாக இருந்தது. குடும்பத் தகுதிநிலை அல்லது உரிமையில் பிரிவினை ஏற்படுமிடத்து, குடும்பத்தில், அவரவர் பங்கிற்கேற்ப, சொத்துகளில் எல்லையும், வரம்பும் ஏற்படுகிறது என்பது மூன்றாம் சூழ்நிலையின் சாட்சியாகும். உண்மையில், இந்து வாரிசுரிமை சட்டத்திற்கு முன்பே அத்தகைய சொத்தை உயில் எழுதிவைப்பதற்கு, இந்துவிற்கு தகுதி இருந்தது என்பதில் ஐயதிற்கிடமேதுமில்லை. உண்மையில், ஆண் வாரிசு இல்லாத கூட்டுக் குடும்ப உறுப்பினரால், பாகப்பிரிவினையில் பங்காகப் பெறப்பட்ட சொத்தானது, அவருடைய தனிப்பட்ட சொத்தாக பாவிக்கப்படுகிறது. பாகப்பிரிவினைக்கு பின்னர் மகன் பிறந்தது தொடர்பாக, அதுகுறித்து நாங்கள் எதையும் தீர்ப்புரைக்க தேவையில்லை. மகள்களான கூட்டு பங்குதாரர்களை அவர்களுடைய உரிமையில் கூட்டு பங்குதாரர்களாக சேர்த்து, 2005-ஆம் ஆண்டு வாரிசுரிமை சட்டத்திருத்தத்திற்குப் பின்னர் ஒரு இந்து பெண் குழந்தையை பெற்றிருப்பாரெனில், பாகப்பிரிவினையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது, இந்து கூட்டுக் குடும்ப சொத்தின் தன்மையிலேயே பகர்ந்தளிக்கப்படும். இதுதொடர்பாக,

பலவகை சொத்துகளை பட்டியலிட்டு, "இந்து சட்டம் குறித்து முல்லா அவர்களால் எழுதப்பட்ட", *23*-ஆம் பதிப்பு, பக்கம் *342*-இல் பத்தி *228*, பிரிவு *(6)*-இன் விவாதத்தை காண்க:-

> *"6.* பாகப்பிரிவினையில் பங்கு - ஆண் குழந்தை பெற்றிராத கூட்டுக் குடும்ப பங்குதாரரால், பாகப்பிரிவினையில் தன்னுடைய பங்காக சொத்து பெறப்பட்டது. *(பிரிவு 221 (4) பார்க்க). 2005*-ஆம் ஆண்டு இந்து வாரிசுரிமை சட்டத்திருத்தத்தின் மூலம், மகள்கள், தம்முடைய சொந்த உரிமையில் கூட்டு பங்குதாரர்களானவர்களை கூட்டு பங்குதாரர்களாக்கியதன் மூலம் இந்நிலைப்பாடானது அடிப்படையிலேயே மாற்றப்பட்டுள்ளது. எனவே, ஆண் குழந்தையின்றி பெண் குழந்தையுடைய கூட்டுக் குடும்ப பங்குதாரரால், பாகப்பிரிவினையில் சொத்து பெறப்பட்டிருக்கு-மெனினும், பாகப்பிரிவினையில் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தானது, கூட்டுக் குடும்பச் சொத்தின் தன்மையிலேயே பகிர்ந்தளிக்கப்படும். எனவே, பாகப்பிரிவினையில் சொத்து ஒதுக்கப்பெற்ற கூட்டுக் குடும்ப பங்குதாரர், தான் வாரிசு பெற்றிராதபொழுது, பாகப்பிரிவினையில் தனிப்பட்ட சொத்தை பெற்றதாகவே மேற்படி கூற்றானது வாசிக்கப்படவேண்டும். இது, திருத்தத்தின் மூலம், கூட்டுக் குடும்ப பங்கில் ஆண் குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கிடையிலான வேறுபாடானது வழக்கொழிகப்பட்டு நீக்கப்பட்டதையடுத்து, இருவருக்கும் கூட்டுக் குடும்ப பங்குதாரர் தகுதியானது அளிக்கப்பட்டுள்ளது."

108. இந்து வாரிசுரிமை சட்ட நிறைவேற்றலுக்குப் பின்னர், ஒரு கூட்டுக் குடும்ப பங்குதாரருக்கு பிற கூட்டுக் குடும்ப பங்குதாரரால் பிரிவினையானது அறிவிக்கப்படும் பாகப்பிரிவினையானது இன்றியும், கூட்டுக் குடும்பத்தில் தன்னுடைய நலனை உயில் எழுதியளிப்பது, ஒரு இந்துவின் விருப்பதைச் சார்ந்ததாகும். வேறு சொற்களில் கூறுவதானால், "கூட்டுக் குடும்ப சொத்தில் நலன்" என்ற சொற்கள், கூட்டுக் குடும்பமானது முழுமையாக அத்தகுதியில் இருக்கும்பொழுது மட்டுமே உறுதிப்படுத்தப்படமுடியும்; ஆனால், குடும்ப நிலையில் பிரிவினை நிகழ்ந்து பாகப்பிரிவினை ஏற்பட்டிருக்கும்பொழுதல்ல. இவ்வாறாக, கூட்டுக் குடும்பத்தில் ஒரு இந்துவின் உரிமையானது நலன் மட்டுமே. பிளவு அல்லது பிரிவினையில், அது, அறுதியிட்ட பங்கை அனுமானிக்கிறது. பின்னர், அது எல்லைவரம்பிடப்பட்ட பாகப்பிரிவினையாகி, பங்கானது குறிப்பிட்ட சொத்துகளில் முழுமையான உரிமையாக உருமாற்றம் பெறுகிறது.

இதன்பின்னர் *'1937*-ஆம் ஆண்டைய சட்டம்' என சுருக்கமாக அழைக்கப்படும். *1937*-ஆம் ஆண்டைய சட்டமான *(*XVIII*/1937)* இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின் விளைவு.

108. 1937-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவுகள் *2, 3* மற்றும் *5* ஆகியவற்றை கவனிப்பது பொருத்தமானதாகும்.

> *"2.* பொருத்தம் - இந்து சட்டத்தின் யாதொரு விதியும் அல்லது பழக்க வழக்கமும் முரணாக எதைக் கூறினாலும், ஒரு இந்து வாரிசை விட்டு இறப்பாரெனில், சட்டப்பிரிவு *3* பொருந்தும்.

3. சொத்தை குறைத்து மதிப்பிடல்.-

(1) தயாபாகா இந்து சட்டத்தினால் ஆளுமை செய்யப்படும் ஒரு இந்து சொத்தை விட்டு மரணம் அடையும்பொழுது மற்றும் பிற இந்து சட்டங்களால் அல்லது பழக்கவழக்க சட்டங்களால் ஆளுமை செய்யபபடும் ஒரு இந்து சொத்தை விட்டு மரணம் அடையும்பொழுது, அவருடைய விதவை அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட விதவைகள் இருப்பின் அவருடைய விதவைகள் அனைவரும் சேர்ந்து, உட்பிரிவு (3)-க்குட்பட்டு, அவர் தன் மகனை வாரிசாக விட்டுச்சென்றால், அம்மகன் அச்சொத்தை எவ்வாறு அடைவாரோ, அவ்விதமே, அவர்கள் அச்சொத்தை அடைய அருகதையுடையவர்களாவர்: குறிப்பு, ஏற்கெனவே இறந்துவிட்ட மகனின் மனைவியான விதவை ஏற்கெனவே இறந்தவரின் மகன் இல்லாதபொழுது, அம்மகனைப்போன்றே அச்சொத்தை அடைவார் மற்றும் ஏற்கெனவே இறந்த மகனின் மகனைப்போன்றே, அவ்விதவை அச்சொத்தை அடைவார்: குறிப்பு, மேலும், அதே விதியானது, ஏற்கெனவே இறந்தவரின் இறந்த மகனின் மனைவியான விதவைக்கு தக்க மாற்றங்களுடன் பொருந்துவதாகும்.

(2) இந்து தயாபாகா சட்டம் அல்லது பழக்கவழக்க சட்டங்கள் அல்லாது வேறு பிற இந்து சட்டங்களால் ஆளுமை செய்யப்படும் ஒரு இந்து, தன்னுடைய மரணத்தின்பொழுது

இ.கூ.கு. சொத்தில் நலனை விட்டு மரணமடையும்பொழுது, அவர் கூட்டுக் குடும்பச் சொத்தில் எந்நலனைப் பெற்றிருந்தாரோ, அதே நலனை அவருடைய விதவையானவர் உட்பிரிவு *(3)*-க்குட்பட்டு பெறுபவராகிறார்.

(3) இப்பிரிவின் விதிகளின் கீழ் இந்து பெண்களுக்கு கிடைக்கும் நலன் எவையும், "இந்து பெண்களின் உடைமை" என அறியப்படும் கட்டுப்படுத்தப்பட்ட நலனாகும், குறிப்பு எனினும், ஆண் உரிமையாளரைப்போன்றே அவர், பாகப்பிரிவினை கோரும் உரிமையுடையவராவார்.

(4) பழக்கவழக்க விதிகள் அல்லது பிற வாரிசுரிமை விதிகள் அல்லது கொடையின் நிபந்தனைகள் பொருந்தக் கூடியதாகவோ அல்லது ஒற்றை வாரிசுரிமையாக பெறப்பட்ட சொத்திற்கும், *1925*-ஆம் ஆண்டைய அல்லது இந்திய வாரிசுரிமை சட்ட விதிகள் பொருந்தக்கூடிய சொத்திற்கும், இப்பிரிவின் விதிகள் பொருந்தக்கூடியவை அல்ல.

*** *** ***

5. இச்சட்டத்தின் நோக்கிற்காக "விட்டு மறைதல்" என்ற சொற்றொடரின் பொருளானது, ஒரு நபர், தன்னுடைய சொத்துகள் தொடர்பாக செல்லக்கூடிய விருப்பாவணம் எதையும் நிறைவேற்றாமல் *(எழுதாமல்)* அவற்றைவிட்டு, மரணமடைவதாக யூகிக்கப்படவேண்டும்."

காணப்பட முடிவதுபோன்று, ஒரு இந்து சொத்தைவிட்டு மரணமடையும்பொழுது, *1937*-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு *3* பொருந்துகிறது.

இந்து தனிப்பட்ட சொத்தை விட்டு மரணமடையும் விடயங்களை, *1937*-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு *3(1)* கையாள்கிறது என்பதை கவனிப்பது முதன்மையானதாகும். அத்தகைய சூழ்நிலையில், ஒரே விதவை இருக்கவேண்டும், அவர், மகனைப்போன்றே அதே பங்கைப்பெற அச்சொத்திற்கு அருகதையுடையவரானார். இந்து பெண்களுக்கு கிடைக்கும் நலனானது இந்து பெண்களின் உடைமையென அறியப்படும் கட்டுப்படுத்தப்பட்ட நலனாகும் என அறிவிக்கும் உட்பிரிவு *(3)*-க்குட்பட்டு, இது ஏற்படுத்தப்பட்டது. கொண்டு வரப்பட்ட மிக முதன்மையான மாற்றமானது பிரிவு *3(2)*-இல் செய்யப்பட்டுள்ளது. அதன்கீழ், தயாபாகா சட்டம் அல்லது பழக்கவழக்க சட்டங்களல்லாது வேறுபிற இந்து சட்டங்களால் ஆளுமை செய்யப்படும் ஒரு இந்து, தன்னுடைய மரணத்தின்பொழுது, கூட்டுக் குடும்பச் சொத்திலுள்ள நலனை விட்டு மரணமடையும்பொழுது, அவருடைய மனைவியான விதவைக்கு, அவருடைய கணவன் பெற்றிருந்த அதே நலன் அளிக்கப்படுகிறது. இது மீண்டும், இந்து பெண்களின் உடைமையென அறியப்படும் கட்டுப்படுத்தப்பட்ட நலனை அளிக்கும் உட்பிரிவு *(3)*-இன் விதிக்குட்பட்டே ஏற்படுத்தப்படுகிறது. இது, மீண்டும் ஒருமுறை பிரிவு *3(2)*-இல் "தன்னுடைய சொத்தைக் குறித்து விருப்பாவணம் ஏதும் எழுதாமல் மரணமடைகின்றார்" என்ற சொல்லை சட்டம் பயன்படுத்தவில்லை; ஆயினும், ஒரு இந்து, தன்னுடைய தனிப்பட்ட சொத்தை விருப்பாவணம் எழுதிவைக்கும் சூழ்நிலையை, பிரிவு *3(1)*-இல் சட்டம் வகைசெய்துள்ளது மற்றும் அவர் தன்னுடைய சொத்து தொடர்பாக விருப்பாவணம் எதையும் நிறைவேற்றாமல் மரணமடையும் நிகழ்வை மட்டுமே எச்சரிக்கையாக

கொண்டுள்ளது. ஐயமேதுமில்லை, ஒரு இந்து விருப்பாவணம் ஏதும் நிறைவேற்றாமல் தன்னுடைய சொத்தைவிட்டு மரணமடையும்பொழுதே பிரிவு 3 பொருந்தப்பட்டதை பிரிவு 2 அறிவித்தது. மிடாக்ஷரா சட்டத்தினால் ஆளுடை செய்யப்படும் வழக்கு தொடர்பாக பிரிவு 3(2)-க்கு வரும்பொழுது, ஒரு இந்து, இ.கூ.கு. சொத்தில் தனக்குள்ள நலனை விருப்பாவணம் எழுதிவைக்க முடியாதென்பதை அங்கீகரித்தது நடையிலிருந்த சட்டத்தையே கொண்டுள்ளது. இ.வ. சட்டப்பிரிவு 30-இன் விளக்கமான சட்டமாக்கப்பட்டதன் மூலம் இக்கருத்து ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதாகும்; அதன்கீழ், இ.கூ.கு. சொத்தில் தனக்குள்ள நலனை உயில் எழுதிவைப்பது ஒரு இந்துவின் விருப்பத்தைச் சார்ந்ததாகும். இந்து பெண்கள் உரிமை சட்டப்பிரிவு 3(2)-க்கு திரும்பிவர சட்டமானது "இந்து கூட்டுக் குடும்பச் சொத்தில், இந்து பெண்களின் நலன்", என்ற சொற்களைப் பரிந்துரையாக பயன்படுத்தி உள்ளது. அது, "இந்து தனிப்பட்ட சொத்தை விட்டுச்செல்லுதல்" என்பதற்கு வகைசெய்யும் பிரிவு 3(1)-உடன் மாறுபடலாம், எனவே, (ஏப்ரல் திங்கள் 14-ஆம் நாள் இச்சட்டமானது நடைமுறைக்கு கொணரப்பட்டு, 1956-ஆம் ஆண்டைய இந்து வாரிசுரிமை சட்டப்பிரிவு 31-இன் மூலம் நீக்கப்பட்டதான) 1937-ஆம் ஆண்டைய சட்டத்திற்கு பின்னர் ஒரு இந்து மரணமடையும்பொழுது, அச்சூழ்நிலையை பிரிவு 3(2) கையாள்கிறது; இந்து கூட்டுக் குடும்பச் சொத்தில், கணவன் பெற்றிருந்த அதே நலனை பிரிவு 3(2)-இன் கீழ் இந்து பெண் பெற, இந்து கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து பிரிக்கப்படாதபொழுது மரணமடையவேண்டும். இந்து மரணமடையும்பொழுது, பிரிக்கப்படுகிறாரெனில், அவர் பிரிக்கப்பட்ட இந்து என்றமுறையில், இ.கூ.குடும்பம் இல்லை, அவ்வழக்கிற்கு பிரிவு 3(2)-க்கு பொருந்தாது. ஒரு இந்து உயில் ஏதும் எழுதிவைக்காமல்

மரணமடையும்பொழுது, அவர் இ.கூ.குடும்பத்தில் நலனுடையவராகிறார் மற்றும் தனிச் சொத்துமுடையவராகிறார் என்பது குறிப்பிடப்படவேண்டியதாகும். பின்னர் அவருடைய தனிப்பட்ட சொத்து என்றமுறையில், பிரிவு *3(1)* பொருந்தும், கூட்டுக் குடும்பத்தில் அவருடைய நலனை பொறுத்தவரையில், பிரிவு *3(2)* ஆளுமை செய்யும் தகராறுக்குரிய சொத்துகள் அவருடைய தனிப்பட்ட சொத்துகள் அல்லாதநிலையில் பிரிவு *3(1)* பொருந்தமுடியாது.

வி. ரங்கசாமி நாயுடுவின் சகோதரரான லெட்சுபியா நாயுடுவால் மரபுரிமை அடிப்படையில் கோரப்படுவதன் மீது இச்சட்டம் இயற்றலின் தாக்கம் என்ன? *1937*-ஆம் ஆண்டைய சட்டம் இயற்றலைத் தொடர்ந்து, மரபுரிமை அடிப்படையிலான உரிமை தொடர்ந்திருந்ததா? *1937*-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு *3(2)*-இன் கீழ் இந்து விதவைக்கு வழங்கப்படும் உரிமையின் தன்மை என்ன? இவ்வினாக்கள் பரிசீலனைக்காக நீதிமன்றங்களின் முன்பு வந்துள்ளன.

சத்ருகன் ஈஸர் -எதிர்- சபுஜ்பாரி மற்றும் பலர்[47] என்ற ஒரு தீர்ப்புரையைதான் நாங்கள் சுட்டவேண்டியுள்ளது. குறிப்பிடவேண்டியதாவது:

> "7. உறுதியான முரண்பட்ட கருத்துகள், சட்டத்தின் மூலம் ஒருங்கிணைக்கப்படவேண்டியுள்ளன. ஒரு கூட்டுரிமைதாரரின் விதவைக்கு, அவருடைய கணவர், தன்னுடைய மரணத்தின்பொழுது கூட்டுக் குடும்பச் சொத்தில் பெற்றிருந்த அதே நலனானது, சட்டத்தின் மூலம் அவருக்கு அளிக்கப்படுகிறது. அவர், அதன்மூலம், கூட்டுக் குடும்பத்தில்,

---

47. ஏ.ஐ.ஆர். 1967 எஸ்.சி. 272

அவருடைய கணவருடனான தொடரும் கூட்டுரிமையாளர்கள் மற்றும் விதவைகளுக்கிடையில் அறிமுகப்படுத்தப்பட்டு, நல சமூகம் மற்றும் அனுபவ ஒற்றுமை எழுகிறது. ஆனால் விதவையானவர், அதன் காரணமாகவே கூட்டுரிமையாளராவது இல்லை: அவருடைய கணவர் சொத்தில் பெற்றிருந்த அதே நலன் அவருக்கு அளிக்கப்படும்பொழுதிலும், பிற கூட்டுரிமையாளர்களின் நலன் மீது அவருடைய கணவர் பயன்படுத்தி இருக்கும் அதே உரிமையை, அவர் பெறுவதில்லை. இந்து மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் பிற கூட்டுமையாளர்கள் பெற்ற உரிமையான கூ.கு.சொத்தில் அவருடைய கணவரின் இடத்தில் அவருடைய நலன் சட்டப்பூர்வ இடமாற்றம் செய்யப்படுவதால் அந்நலனை எடுத்துக்கொள்ளும் மரபுரிமை விதியானது, அவ்வுடைமையானது நடைமுறைக்கு வரும்வரையில் நிறுத்திவைக்கப்படுகிறது. ஆனால், ஒரு கூட்டுரிமையாளரின் மரணத்தின் அடிப்படையில், கூ.கு.சொத்தில் விதவையின் வரையறுக்கப்பட்ட நலனை கூட்டுக் குடும்பத்திலிருந்து பிரித்தெடுக்கும்பொருட்டு, கூட்டுக் குடும்ப களைப்பேதும் இருக்காது: இலட்சுமி பெருமாலு -எதிர்- கிருஷ்ணவனம்மா *(ஏ.ஐ.ஆர். (1965) எஸ்.சி. 825).* பிரிவு *3(2)*-இன் கீழ் அவரால் பெறப்பட்ட நலனானது, பரிவர்த்தனையின் மீது நிபந்தனைக்குட்பட்டவை, அவை அவருடைய உடைமையில் உள்ளார்ந்தவையாகும். ஒரு ஆண் உரிமையாளரைப்போன்றே, அவர்

(விதவை) தன்னுடைய நலனை வரையறுக்கப்பட்டதாக்க பாகப்பிரிவினை கோரும் அதிகாரமுடையவராவார். ஒரு விதவை, அவருடைய கணவர் சார்ந்த கூட்டுக் குடும்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பாகப்பிரிவினை கோரவில்லையெனில், அவருடைய உடைமையானது முடிக்கப்பட்டதன் அடிப்படையில், அவருடைய நலனானது கூட்டுக் குடும்பத்தில் இணைக்கப்படும். ஆனால், அவர் பாகப்பிரிவினை கோருவாரெனில், அவர் பிற உறுப்பினர்களிலிருந்து பிரிக்கப்பட்டு, கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து அவருடைய நலனானது வரையறுக்கப்பட்டுவிடுகிறது மற்றும் மரபுரிமை அடிப்படையில் அந்நலனைக்கோரும் பிற உறுப்பினர்களின் உரிமையானது பறிக்கப்பட்டுவிடுகிறது. அவருடைய உடைமையானது பிரிக்கப்பட்ட அல்லது தீர்மானிக்கப்பட்ட பின்னர் அவர் மரணமடைவாரெனில், கூ.கு.சொ.-இல் அவருக்கு அளிக்கப்பட்டிருந்த நலனானது, அவருடைய கணவரின் வாரிசுதாரர்களைச் சென்றடையும். கூ.கு.செ.-இல் பிரிவு 3(2)-இன் மூலம் விதவை பெறும் நலனானது மரபுரிமையின் மூலம் பெறுவதில்லை, ஆனால் அவருடைய நலனானது சொத்தில் பிரிக்கப்படாத நலனின் தன்மையை ஒருமுறை இழந்துவிட்டால், அவருடைய உடைமையின் முடிவின் அடிப்படையில் அவருடைய கணவரின் வாரிசுதாரர்களை சென்றடையும் என்பது உண்மையாகும். சில தீர்ப்புரைக்கப்பட்ட வழக்குகளில் விதவையின் நலனின் முடிவின் அடிப்படையில், விதவையின் நலனானது வரையறுக்கப்பட்ட

நலனாகியும் அந்நலனைப் பெறும் மரபுரிமையாளர்களின் உரிமையானது தொடர்கிறது என அனுமானிப்பதுபோன்று, பாகப்பிரிவினை கோரிக்கையால் உண்மையில் பாகப்பிரிவினைக் கோரும் உரிமையானது வெறுமையாகிறது."

எனவே, சட்டத்தின் நிலைப்பாடானது, கீழ்க்காணுமாறு தேர்ந்தெடுக்கப்படலாம்:

1937-ஆம் ஆண்டைய சட்டம் பொருந்தக்கூடியவற்றிற்கு அச்சட்டம் இயற்றலின் மூலம், உண்மையில் மரணமடைந்த கூட்டுரிமையாளரின் சொத்தில், மரபுரிமை கோட்பாட்டின் அடிப்படையில் உரிமைகோரும் கூட்டுரிமையாளர்களின் உரிமையில் குறுக்கிடப்பட்டது: ஆனால் இச்சட்டமானது மேற்படி உரிமையை ஒழித்துவிடவில்லை. மரபுரிமை அடிப்படையில் கோரும் உரிமையானது நிறுத்திவைக்கப்பட்டது; ஆனால் பறிக்கப்படவில்லை. விதவை, கூட்டுரிமையாளர் அல்ல என்கின்றபொழுதிலும், பெரிதும் அவர் கூட்டுரிமையாளர் போன்றவரேயாகும். அவரும் பாகப்பிரிவினைகோரும் உரிமையளிக்கப்பெற்றார். அவர் பாகப்பிரிவினை கோராமல் சொத்தானது அவருடைய மரணத்தை அடுத்தும் அப்படியே இருக்குமெனில் மரபுரிமை அடிப்படையில்கோரும் மறைந்த உரிமையானது, புத்தாக்கம் பெற்று, கூட்டுரிமையாளர் மரணமடைந்தபொழுது வாரிசுரிமை எழுந்ததுபோன்றே விதவை மரணமடைந்தபொழுது வாரிசுரிமை எழுந்த அடிப்படையில் கூட்டுமையாளர்கள் சொத்தில் உரிமைபெற அருகதையுடையவர்களாகின்றனர். மறுபுறத்தில், விதவை பாகப்பிரிவினை கோரியிருந்தாரெனில், அவருடைய நலனானது வரையறுக்கப்பட்ட நலமாக்கப்பட்டு, நிறுத்திவைக்கப்படவேண்டிய மரபுரிமை அடிப்படையில் கோரும்

உரிமையானது ஒழிக்கப்பட்டுவிடுகிறது. பின்னர், சொத்தானது அவருடைய கணவரின் வாரிசுதாரர்களுக்கு உறுதியாகிறது. பிரிவு *3(2)*-இன் அடிப்படையில் கூ.கு.சொ.-இல் பிரிவேதுமில்லையென்பது குறிப்பிடப்படவேண்டியதாகும். வேறு சொற்களில் கூறுவதனால பிரிவு *3(2)*-இன் மூலம் பாகப்பிரிவினை ஏதும் செய்யப்படவில்லை. ஆனால், நாம் கவனித்திருப்பதுபோன்று, இ.வ. சட்டம் என்ற வடிவில் குறுக்கிடும் அச்சட்டமானது, பிரிவு *14(1)*-இன் கீழ் முழு உரிமையை வழங்கிவிடவில்லையெனில், மு.வ. எண் *71/1958*-ஐ ஆர். கிருஷ்ணம்மாள் தாக்கல் செய்தபொழுதுங்கூட, அவர் பெற்றிருந்த உரிமையின் தன்னை யாரென்பது இச்சட்டத்தைச் சார்ந்ததாகும். உடைமையுரிமையின் மீது *1.6.1955* அன்று வாரிசுரிமை துவங்கும்பொழுது பிரிவு *3(2)* பொருந்தப்பட்டு-விட்டதெனில், பின்னர், இலட்சுமியா நாயுடு நிறுத்தப்பட்டிருந்த மரபுரிமையையே பெற்றிருந்தார் என்பது தெளிவாகிறது. மு.வ. எண். *71/1958*-இல் ஒரு சமரசத் தீர்ப்பாணை உள்ளது; அதன்கீழ், இலட்சுமியா நாயுடு வாரிசுகளுக்கு ஆதரவாக வழக்குரையிலுள்ள அட்டவணை சொத்துகளில் தனக்குள்ள உரிமைகளை ஆர். கிருஷ்ணம்மாள் விட்டுக்கொடுத்துள்ளார்.

109. கூ.கு.-இல் 'இந்நலன்' குறித்த கருத்தின் சட்ட அங்கீகாரத்தை பிரிவு *6*-இல் நாங்கள் காண்கின்றோம். பிரிவு *6*-ஆனது *39/2005*-ஆம் ஆண்டைய திருத்தச் சட்டத்தினால் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்னர், சட்டத்திற்குப் பின்னர், இந்து மிடாக்ஷரா குடும்பத்தில் கூட்டுப் பங்குரிமை உள்ள நலன் ஒரு ஆண் இந்து மரணமடைகையில், சொத்தானது, மரபுரிமை அடிப்படையில் விதிக்குட்பட்டு சென்றடையும். இதன் பெரும் தெளிவு யாதெனில், அது வாசகத்தின் விளக்கம்தான் பிரிவு *6* உட்பிரிவு *3*-இன் விளக்கத்தைப்போன்று நிறுத்தப்படும் விளக்கம் பின்வருமாறு தெரிவிக்கிறது:

விளக்கம்.- இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக இந்து கூட்டுரிமையாளரின் நலனானது, அவர் பாகப்பிரிவினைக்கோரும் அறுகதையுடையவராயினும் அல்லது இல்லையெனினும், அவருடைய மரணத்திற்கு முன்னர் சொத்தில் பாகப்பிரிவினை நிகழ்ந்திருந்ததெனில், அவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் பங்காகவே அணுமானிக்கப்படவேண்டும்.

110. எனவே, மிதாஷரா குடும்பத்தில் பாகப்பிரிவினைக்கு முன்பு ஒரு கூட்டுரிமையாளர் பெற்றிருந்தது நலன் மட்டுமே என்ற கருத்தானது மீண்டும் வலியுறுத்தப்படுகிறது. எனினும், பிரிவு 6-இன் நோக்கிற்காக, நலனின் அளவை தீர்மானிக்கும்பொருட்டு, அவருடைய மரணத்திற்கு சற்றுமுன்னர் கருத்தளவில் பாகப்பிரிவினை நிகழ்ந்ததெனில், அவர் பெற்ற பங்காக அணுமானிக்கப்படுகிறது. எனினும், பிளவு வடிவிலான பாகப்பிரிவினையானது, சட்டப்பிரிவு 8-இன் கீழ் சென்றடையும் பங்கின் அளவைத் தீர்மானிக்கிறது. பிரிவு 6-இன் விளக்கம் 2-இன் கீழ் வகைசெய்யப்படும் கருத்தளவிலான பாகப்பிரிவினையானது கூட்டு மரபுரிமையின் இணையுரிமையாளரின் மரணத்தையடுத்து நிகழ்வதாக நாங்கள் தீர்ப்புரைத்திருப்பதாக கருதப்படக்கூடாதென்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம். பிரிவு 30-இன் விளக்கங்கூட இந்து வாரிசுரிமை சட்டத்திற்கு பின்னர், ஒரு இந்து எழுதி தரும் 'சொத்து நலன்' குறித்து பேசுகிறது.

<u>வி. ரங்கசாமி நாயுடு அளிக்கக்கூடிய உரிமை யாது?</u>

111. மு.வ. எண் *89/1983* என்பது வழக்காளரின் உரிமையின் விளம்புகை மற்றும் பாகப்பிரிவினைக்கான தீர்ப்பாணைக்கோரும் வழக்காகும். வழக்குமூலமானது, *10.5.1955*-ஆம் தேதியிடப்பட்ட உயிலின் வாசகத்திலிருந்து தேடப்பட்ட உரிமை

நினைவூட்டலின் அடிப்படையிலானது. ஒரு விடயத்தை மனதிற்கொள்வது பொருத்தமாகும். உயிலின் சான்றிதழைப்பெற தாக்கல் செய்யப்படும் ஒரு வழக்கில், உயில் எழுதியவரின் உரிமையயைக் குறித்த வாதம் வைக்கப்படமெனில், எபதியவரின் உரிமையை விசாரிப்பதற்கு விசாரணை வரம்பு அண்ணியமாகும். நீதிமன்றமானது சான்றிதழை வழங்கவோ அல்லது மறுக்கவோ பரிசீலிப்பது, உயிலானது எழுதியவரால் நிறைவேற்றப்பட்ட இறுதியானதும் மற்றும் உண்மையானதும்தானா என்னும் வினாவாகும். உரிமை தொடர்பான வினாக்கள், உரிய நீதிமன்றத்தின் முன்பாக வைக்கப்படவேண்டியிருக்கும். (கன்வார்ஜித் சிங் தில்லான் -எதிர்- ஆர்தியால் சிங் தில்லான்,[48] என்னும் வழக்கை காண்க) அதுதான் உரிமை வழக்கின் நிலையாகும். அதில் பாகப்பிரிவினை வழக்கென்ற முறையில், பாகப்பிரிவினைக்கான தீர்ப்பாணை வழங்குமாறு, வழக்காளர் நீதிமன்றத்தை வேண்டுகின்றார், எங்கள் முன்பு மேல்முறையீட்டாளர்களுள் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்கள், வழக்காளரின் அடிகளைப் பின்பற்றி நிற்கின்றனர். மு.வ. எண். 89/1983 மற்றும் மு.வ. எண் 649/1985 ஆகியவை உரிமை அடிப்படையிலான வழக்குகள் என நாங்கள் நினைக்கின்றோம். சொத்துரிமை தொடர்பான வினாவானது விசாரித்து முடிவு செய்யப்படவேண்டும்.

112. வி. ரங்கசாமி நாயுடு வாய்மொழி பாகப்பிரிவினையின் வாயிலாக உரிமையைப் பெற்றார் என்னும் வழக்கில் அது ஏற்கப்படமுடியாதென நாங்கள் ஏற்கெனவே முடிவு செய்துள்ளோம். அவர், சுய சம்பாத்தியத்தின் மூலம் சொத்துகளைப் பெற்றிருந்தார் என்னும் கோரிக்கையும் நிலைக்காது. குடும்ப நிலையில் பிளவு ஏற்பட்டிருக்குமெனில், உரிமையியல் பிரிவு என்னும் குறுகிய சிந்தனையிலான பாகப்பிரிவினை நிகழ்கிறது. கூட்டுக்குடும்பத்தில் பிரிவினை

நிகழ்ந்துள்ளது என்ற பொருண்மையே, உயிலில் உள்ளடக்கப்படும் சொத்துகளில் வி. ரங்கசாமி நாயுடு தனிப்பட்ட மற்றும் முழு உரிமையைக் கோரமுடியும் என சட்டத்தில் பொருளாகாது. வழக்கு அட்டவணை சொத்துகள் ஒப்புக்கொண்டவகையில் உயில் அட்டவணை சொத்துகளின் ஒரு பகுதியாகும். முடிவு என்னவாக இருக்குமெனில், பொருந்தக்கூடிய சட்ட கோட்பாடுகளின் வாசகங்களின்படி உயிலில் அட்டவணையிடப்பட்ட சொத்துகளில் வி. ரங்கசாமி நாயுடு தனிப்பட்ட உரிமையைப் பெற்றிருக்கவில்லை என நாங்கள் காண்கின்றோம்.

113. எனினும், இது தொடர்பாக, முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் காரணமானது கவனிக்கப்படலாம். ஒரு கூட்டுரிமையாளர், தன்னிச்சையாக குறிப்பிட்ட சொத்தை தன்னுடைய பங்கிற்கு ஒதுக்கிக்கொள்ள முடியாதென அறிந்தபின்னர், மேல்முறையீட்டு நீதிமன்றமானது பின்வரும் விடயங்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது:

> வி. ரங்கசாமி நாயுடு தன்னிச்சையாக சொத்துகளை ஒதுக்கிக்கொண்ட விவரத்தை மு.வ. எண். *649/1983*-இன் வழக்காளர்களான எதிர்மேல்முறையீட்டாளர்கள், ஏற்கெனவே முந்தைய வழக்குகளான மு.வ. எண். *71/1958* மற்றும் *36/1963* ஆகியவற்றின் மூலம் அறிந்திருந்தனர்; மேற்படி இரு வழக்கு நிகழ்வுகளிலும் ஆட்சேபிக்கும் சந்தர்ப்பங்கள் பெற்றிருந்தும், அத்தகைய தன்னிச்சையான ஒதுக்கீடு குறித்து அவர்கள் ஏதும் ஆட்சேபிக்கவில்லை. அடுத்ததாக, "சகோதரர்களை உள்ளடக்கிய இந்துக் கூட்டுக் குடும்பத்தில் தொந்நூற்று மூன்றிற்கும் மேற்பட்ட சொத்துகளும் மற்றும் நூற்றுக்கணக்கான ஏக்கர்களுக்கும் மேற்பட்ட

நிலங்களும் இருந்தன என்பதையும் மற்றும் அதில் ஒரு சிறு பகுதியை தன்னிச்சையாக ஒதுக்கிக்கொண்டது அநீதியாக தீர்ப்பளிக்கப்படமுடியாது என்னும் பொருண்மையை மேல்முறையீட்டு நீதிமன்றம் கவனத்திற்கொண்டது. ஆர். கிருஷ்ணம்மாள், கு.வி.மு.ச., பிரிவு 145-இன் மூலம் தன்னுடைய உரிமையை நிருவ முயற்சித்திருந்தார்; உயிலின் அடிப்படையில் மு.வ. எண். 71/1958 மற்றம் மு.வ. எண். 36/1963 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டன. தன்னிச்சையான ஒதுக்கீட்டை ஆட்சேபிக்க எதிர்மேல்முறையீட்டாளர்கள் போதிய சந்தர்ப்பங்களைப் பெற்றிருந்தனர். ஆனால், அவர்கள் அவற்றைப் பயன்படுத்திக்கொள்ள தவறிவிட்டனர். எனவே அவற்றின் விளைவான செயல்பாடுகள் அதிக முதன்மைத்துவத்தைப் பெற்றன. எனவே, நீதிமன்றமானது பகவந்த் பி. சுலேக்கே என்னும் மேற்படி வழக்கின் தீர்ப்பிலிருந்து வேறுபட்டது. 10.5.1955-ஆம் தேதியிடப்பட்ட செய்தித்தாளின் வெளியீட்டை உறுதிசெய்து, வி. ரங்கசாமி நாயுடு எழுத்துவடிவிலான மறுப்பறிக்கையை அனுப்பியதையடுத்து, ஒதுக்கீடானது தன்னிச்சையானதென்றும் மற்றும் அவருடைய செயல்பாடுகள் (நலிந்தவை) என்றும் விம்புகை செய்யப்படமுடியாது. அது இந்துக் கூட்டுக் குடும்பச் சொத்துகளின் தன்மையை மாற்றியுள்ளது என்றும் மேலும் அறியப்படுகிறது. எனவே, ஆட்சேபிக்கத் தவறி, ஒதுக்கீட்டை ஏற்று செயல்பட்ட எதிர்மேல்முறையீட்டாளர்கள், ஆர். கிருஷ்ணம்மாளின் ஆயுட்கால நலனையும் மற்றும் மேல்முறையீட்டாளர்களின் அளிக்கப்பட்ட நலனையும் மறுக்கமுடியாது.

114. மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒட்டுமொத்த காரணமும் யாதெனில், ஒரு கூட்டுரிமையாளர், பிரிவினைக்குப் பின்னரும், எந்த குறிப்பிட்ட சொத்தையும் தன்னுடைய தனிப்பட்ட சொத்தாக அபகரிக்கமுடியாது. மு.வ. எண். *71/1955* மற்றும் மு.வ. எண். *361/1963* ஆகியவற்றில் மேற்படி ஒதுக்கீட்டை ஆட்சேபிக்காத எதிர்மேல்முறையீட்டாளர்களின் நடத்தையின் அடிப்படையில் சொத்துகளின் உரிமையை ஆட்சேபிக்க அவர்கள் அனுமதிக்கப்படமுடியாது. இரு சகோதர்களை உள்ளடக்கிய இணை கூட்டுரிமையாளர்களின் குடும்பத்தில் உள்ள பெருமளவிலான சொத்துகளோடு ஒப்பிடுகையில் வழக்குரையின் அட்டவணையின் *(37* ஏக்கர்களுக்கும் குறைவான*)* சொத்துகள், ஒரு சிறு பகுதியாகும் என்னும் பொருண்மையை மேல்முறையீட்டு நீதிமன்றம் சார்ந்துநின்றது.

115. மு.வ. எண் *71/1958*-ஐ பொருத்தவரையில் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று எதிர்மேல்முறையீட்டாளர்கள் எ.*1*-வழக்குரையை சமர்ப்பித்துள்ளனர், வழக்கானது சமரசம் செய்யப்பட்டதால், சூழ்நிலையோ அல்லது வழக்கு ஆட்சேபனையோ இல்லை. மேல்முறையீட்டாளர்கள் அதில் மேற்படி தீர்ப்பாணையினால் கட்டுப்படுத்தப்படவில்லை என கோருவார்கள். மேற்படி தீர்ப்பாணையின் கீழான இக்காரணத்திற்காகத்தான், இங்குள்ள வழக்குரை அட்டவணை சொத்துகள் எதிர்மேல்முறையீட்டாளர்களின் தனிப்பட்ட சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேற்படி தீர்ப்பாணையின் மீது சார்விற்காக ஏதேனும் தீர்ப்புரைகள் வைக்கப்படவேண்டுமானால், பின்னர் சமரச தீர்ப்பாணையின் கீழ் ஒட்டுமொத்த உரிமைகளும் ஆயுட்கால உரிமையுடைமையாளரான ஆர். கிருஷ்ணம்மாளால் கைவிடப்பட்டுள்ளன என்பது பொருண்மையாகும். எ.*2* சமரச தீர்ப்பாணையாகும். அது *21.7.1958*-ஆம் தேதியிடப்பட்டதாகும். வழக்கானது *10.4.1958* அன்று தாக்கல்

செய்யப்பட்டது. அது வழக்கானது விசாரணைக்கு போவதை அனுமதிக்காமலிருக்க வெளிப்படையாகவே எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு வாய்ப்பாக இருந்திருக்கலாம். வா.சா.1-இன் சான்றானது பின்வருமாறு:

> "எனக்கு எவ்வளவு தரமுடியுமென ஆர். கிருஷ்ணம்மாள் கேட்டிருக்கின்றார்கள். ஆர். கிருஷ்ணம்மாள் வசிக்க ஒரு வீடும் மற்றும் உணவிற்கு நிலமும் கேட்டார்கள் மற்றபடி சொத்தில் சம பங்கு கேட்கவில்லை."

116. மு.வ. எண். 36/1963-ஐ பொருத்தவரையில் எ.3- வழக்குரையாகும். வழக்கின் முதல் மறுப்பாளரான ஆர். கிருஷ்ணம்மாளால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்துவடிவிலான பதிலுறையில், சமரசம் குறித்த வழக்கை அவர் எதிர்த்துரைத்து, சமரசத்தை ஆதரித்தார். மு.வ. எண். 71/1958-இல் உண்மையில் எதிர்மேல்முறையீட்டாளர்கள் துவக்கத்தில் தரப்பினர்களல்லர். மேற்படி வழக்கிலும் ஆர். கிருஷ்ணம்மாளின் முழு உரிமையை சொத்துகள் 5 மற்றும் 6-ஐ பொருத்தவரையில் ஆயுட்கால உடைமையாக கட்டுப்படுத்தி பின்வந்த சமரச தீர்ப்பாணையிலும், உயிலானது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதை நாங்கள் ஏற்கெனவே கவனித்திருக்கின்றோம். எனினும், வழக்கில் தரப்பினர்களாக இருந்து, பின்னர் சமரசம் நிகழ்ந்தபொழுது, அதன் தரப்பினர்களாக அல்லாது, வழக்காளர் ஆர். கிருஷ்ணம்மாள் மற்றும் மற்றொரு உயிலுரிமையாளரான 3-ஆம் மறுப்பாளர் ஆகியோர் கையெழுத்திட்டதைப் பார்த்ததாக கையெழுத்திட்டதாலேயே சொத்துகள் வரிசை எண் 5 மற்றும் 6 ஆகியவற்றின் உரிமையை ஒப்புக்கொண்டதாகவும் மற்றும் அவை வி. ரங்கசாமிக்குரியதாக அறிந்ததாகவும் கூறமுடியுமா? என்னும் வினா எழுகிறது. மேலும், மு.வ. எண் 36/1963-இன் அட்டவணையிலின்றி, இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட

வழக்குரை அட்டவணைச் சொத்தின் தனிப்பட்ட உரிமையை ஏற்பதாகவும் கருதப்படமுடியுமா? என்பதாகும்.

117. ஆர். கிருஷ்ணம்மாள், ஒரு புறத்தில் மு.வ. எண் 71/1958-இல் உயிலை நிறுவுகின்றார். அதே நேரத்தில் வாய்மொழி பாகப்பிரிவினையையும் மற்றும் அவருடைய கணவரின் தனிப்பட்ட உரிமையையும் நிறுவுகின்றார். மறுபுறத்தில் லக்ஷ்மையா நாயுடுவும் மற்றும் அவருடைய சகோதரரும் பிரியவில்லை என்னும் லக்ஷ்மையா நாயுடு வாரிசுகளின் நிறைபாட்டையும் பின்பற்றவும் விரும்பினார் என்பது நினைவில் கொள்ளப்படவேண்டியுள்ளது. மேற்படி கூற்றின் அடிப்படையில், அவர் 1937-ஆம் ஆண்டைய இந்து பெண்கள் சொத்துரிமைச் சட்டத்தின் அடிப்படையிலும் கோரிக்கை வைத்திருந்தார் மற்றும் அதற்கும் மேலாக இந்து வாரிசுரிமைச் சட்டத்தையும் சார்ந்துநின்றார். இவ்வழக்குதான் சமரசம் செய்யப்பட்டது. இலட்சுமையா நாயுடு வாரிசுகள் எதனடிப்படையில் சமரசத்திற்கு இணங்கினர் என உறுதியாகக் கூறுவது சாத்தியமல்ல. ஆர். கிருஷ்ணம்மாளில் வழக்கு மூலமானது முற்றிலும் உயிலின் அடிப்படையில் இருந்திருக்குமானால், அது வேறுபட்டதாக இருந்திருக்கும். இவ்வழக்கில் மேற்கூறப்பட்டதுபோன்று அவருக்குள்ள உரிமையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வழக்குத் தொடர்பாக, உயிலின் சில சொத்துகள் ஆர். கிருஷ்ணம்மாளின் சொந்த சொத்துகளாக அங்கீகரிக்கப்பட்டன மற்றும் பெருமளவிலான சொத்துகளின் ஒரு பகுதியும் மற்றும் உயிலில் உள்ளடக்கப்பட்டதுமான சொத்துகளில் அவர் தன்னுடைய உரிமையை விட்டுக்கொடுத்துள்ளார் என்பதைக் கவனிப்பதில், வி. ரங்கசாமி நாயுடுவினால் தன்னிச்சையாக ஒதுக்கிக்கொள்ளப்பட்டதை இலட்சுமையா நாயுடு வாரிசுகளால் எதிர்த்துரைக்கும் சந்தர்ப்பமானது பயன்படுத்தப்படவில்லை என

உறுதிப்படுத்தப்படமுடியாது.

118. மு.வ. எண் *36/1963*-இலுங்கூட ஏற்கெனவே நாங்கள் விவாதித்திருப்பதுபோன்று, *1974*-ஆம் ஆண்டில் சமரச நேரத்தில், இட்சுமையா நாயுடுவின் வாரிசுகள் ஏற்கெனவே மு.வ. எண் *71/1958*-இல் சமரசத்தில் தரப்பினர்களாவர். அதன் கீழ் உண்மையில் அவர்கள் சொத்துகள் வரிசை எண்கள் *5* மற்றும் *6* தொடர்பாக ஆர். கிருஷ்ணம்மாளின் முழுமையான உரிமையை அங்கீகரித்திருந்தனர். அது அவர்களுக்கு சற்று முதன்மைத்துவம் வாய்ந்ததாக இருந்தது. மு.வ. எண் *36/1963*-இல் சமரச தீர்ப்பாணையின் கீழ் அச்சொத்துகள் ஆர். கிருஷ்யம்மாளால் ஆயுட்காலத்திற்கு அனுபவிக்கப்படவேண்டியதாகவும் மற்றும் விற்கப்படமுடியாததாகவும் இருந்தது. மேற்படி வழக்கில் பிற மறுப்பாளர்களுக்கெதிராக பரிகாரம் ஏதும் கோரப்படவில்லையென கூறப்பட்டதை நாங்கள் கவனித்துள்ளோம். தன்னிச்சையான ஒதுக்கீட்டை ஆட்சேபிப்பதற்கான சந்தர்ப்பத்தை பயன்படுத்தாமையின் அடிப்படையில் முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்ட அனுமானமானது அத்தகைய சூழ்நிலையில் நாங்கள் கவனிக்கப்பட செய்வதாக இல்லை. மேல்முறையீட்டு நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அது சட்டப்பிரச்சினைகளில் கவனம் செலுத்தவில்லை.

119. இரண்டாம் விவரத்திற்கு வருவோம். குடும்பத்திற்குரிய சொத்தானது பெருமளவிலானது, அதன்விளைவாக தன்னிச்சையான ஒதுக்கீடானது அநீதியானதென கொள்ளமுடியாது என்னும் பொருண்மையை முதல் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. அது சட்டப்பிரச்சினைகளில் கவனம் செலுத்தவில்லை. இந்து கூட்டுக் குடும்ப நிலையில் பிளவு ஏற்பட்டது என்ற அடிப்படையில் ஐயமின்றி, பிரிக்கப்படாத கூட்டுக் குடும்பத்தில் ஒரு இந்து, தன்னுடைய நலனை எழுதி வைக்கமுடியாதென்னும் கோட்பாட்டின்

பிடியிலிருந்து வி. ரங்கசாமி நாயுடு விடுவிக்கப்பட்டார். நாங்கள் குறிப்பிட்டிருப்பதுபோன்று, பிளவு ஏற்பட்ட மாற்றமானது, என்ன தோன்றுகிறதோ, அது அன்றைய கூட்டுரிமையாளரின் பங்காகும். இவ்வழக்கில், இரு கூட்டுரிமையாளர்களே உள்ளனர், அதாவது வி. ரங்கசாமி நாயுடு மற்றும் லஷ்மையா நாயுடு ஆகியோர் அவர்கள் தமக்கிடையே 1/2 (அரை) பங்கை பெறுவர். ஐயமின்றி வி. ரங்கசாமி நாயுடு தன்குரிய ஒன்று-அரை பங்கினை எழுதி வைத்திருந்தாரெனில், அது சட்ட முரண்பாட்டை தோற்றுவித்திருக்காது. இது அங்கு ஏற்பட்டிருக்கும் பிளவிற்குட்பட்டதென நாங்கள் வலியுறுத்துகின்றோம். கூட்டுக் குடும்ப நிலையில் பிளவு ஏற்பட்டு குறுகிய சிந்தனையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதெனில், பிரிந்த கூட்டுரிமையாளரின் பங்கைப் பொருத்தவரையில், அவருடைய பங்கானது, மரபுரிமை கோட்பாட்டின் அடிப்படையிலான கோரிக்கையினின்று பாதுகாக்கப்படுகிறதென்னும் விளைவை அது ஏற்படுத்துகிறது என்பதை நாங்கள் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம். பிரிக்கப்படாத கூட்டுக் குடும்பத்தின் ஒரு உறுப்பினரால் தன்னுடைய நலனானது எழுதி வைக்கப்படுவது மரபுரிமை கோட்பாட்டின் அடிப்படையில் சொத்தின் மீது நபர்கள் பிறப்புரிமை அடிப்படையில் கோருவது, உயிலின் அடிப்படையில் கோருபவர்களைப் போன்றதாகும். அது சட்டப்படி வெறுக்கத்தக்கதாகும். உரிமையை உறுதிசெய்யாத வாரிசு விடயத்தில், சட்டப்பூர்வ வாரிசுரிமை மீதான இத்தடையானது ஒருமுறை விலக்கப்பட்டுவிடுமெனில், சொத்தை அடைபவர்கள் வாரிசுகளே ஆவர். அது அப்படியானால், இந்து வாரிசுரிமைச் சட்டத்திற்கு முன்னர் ஒரு இந்து ஐயத்திற்கிடமின்றி, குறிப்பிட்ட சொத்துகளில் தான் பெற்றிருந்த கூட்டுரிமைகளை எழுதி வைக்கமுடியாதா?

120. சொத்தானது எல்லை வரம்பின்படி பாகப்பிரிவினை ஏற்படுவதற்கு முன்னர் உரிமையியல் பிளவு கொண்டுவரப்பட்ட பின்னர், நிலை என்னவாகும்? இடைப்பட்ட காலத்தில் குடும்பச் சொத்துகள் கூட்டுக் குடும்பச் சொத்துகளாகத் தொடரும் என நாங்கள் குறிப்பிட்டுள்ளோம். *(பார்க்க: 1986 1 எஸ்.சி.சி. 366)* வேறு சொற்களில் கூறுவதானால், பாகப்பிரிவினை நிகழ்ந்தாலன்றி, கூட்டுக் குடும்பத்தில் பிளவின் வடிவில் பாகப்பிரிவினை ஏற்பட்டபொழுதிலும், எந்த கூட்டுரிமையாளரும் எந்த சொத்தையும் குறிப்பிட்டு அதனை தனதாக கோரமுடியாது.

121. இப்பொழுது முன்பிருந்த சென்னை மாகாணத்தில் கூட்டுக் குடும்பமானது அப்படியே இருக்கும்பொழுதிலும், ஒரு குறிப்பிட்ட சொத்தை பரிவர்த்தனை செய்வது தொடர்பாக ஒரு இந்துவின் அதிகார நிலை என்ன? இவ்வினாவை **<u>ஐயாகரி வெங்கட்டராமையா மற்றும் பலர் -எதிர்- ஐயாகரி ராமையா</u>**[49] என்னும் வழக்கின் முடிவில், சென்னை உயர் நீதிமன்றத்தின் முழு அமர்வு கையாண்டுள்ளது. முழு அமர்வின் பரிந்துரையில் நீதிமன்றத்தின் முன்பு எழுந்த உண்மையான வினாவானது பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தில் தன்னுடைய நலனை ஒருவர் விற்றபின்னர், அவரது மரணத்தின் விளைவு யாதென்பதாகும். மரபுரிமை கோட்பாடு தொடர்பாக வெளிப்படையாக வைக்கப்பட்ட வாதமானது, விற்றவர் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கையில் கிரையம் பெற்றவர் தன்னுடைய உரிமைகளை நடைமுறைப்படுத்த வழக்கு தாக்கல் செய்யவில்லையெனில், கிரையம் பெற்றவர் செயல்படுத்த உரிமை ஏதுமில்லை என்பதாகும். நீதியரசர் திரு. பாஷியம் ஐயங்கார் தனிப்பட்டதொரு தீர்ப்புரை வழங்கியுள்ளார். அதில், அவர் ஒட்டுமொத்த தீர்ப்புரையையும் ஆழ்ந்து வேறுபடுத்தியுள்ளார். அறிவார்ந்த நீதியரசர் பின்வருமாறு முடிவு செய்கின்றார்:

"பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தின் உறுப்பினர் தன்னுடைய நோக்கங்களுக்காக குடும்பச் சொத்தை விற்கும் வினாவானது விவாதிக்கப்படவில்லை. நான் அறிந்தவரையில் எந்த இந்து சட்டத்தினாலும் அல்லது விளக்குரையாளர்களாலும் விவாதிக்கப்படவில்லை. இம்முதற்பொருளின்மீது இந்துச் சட்ட புத்தகங்களில் எந்த வெளிப்படையான முடிவும் காணப்படவில்லை. கூட்டுரிமையாளரால் தன்னுடைய பிரிக்கப்படாத பங்கு மற்றும் நலனானது பரிவர்த்தனை செய்யப்படுதல் ஏதேனும் இந்துச் சட்ட வல்லுனரால் அங்கீகரிக்கப்பட்டதா? என்பது வினாவாகும். நீதித்துறை குழுவினால் கருத்துத் தெரிவிக்கப்பட்டதுபோன்று "சிறு ஐயம் எழுகிறது. பரிவர்த்தனையானது தன்னிச்சையானதெனினும் அல்லது நிபந்தனையாலானதெனினும் அவை பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தின் கண்டிப்பான கோட்பாட்டிற்கும் மற்றும் கிரையம் பெற்றவர் தனக்குக் கிரையம் கொடுத்தவரின் சுவட்டில் நின்று பாகப்பிரிவினையின் மூலம் தனக்குரிய மதிப்பிற்கான உரிமையைப் பெற அவர் அனுமதிக்கப்படவேண்டும் என்னும் சமூக நீதியின் அடிப்படையில் முன்னேற்றம் அடையப்பெற்று, சென்னை மற்றும் மும்பையில் நிறுவப்பட்டதான சட்டத்திற்கும் முரண்பட்டதாகும்." சுராஜ்பன்சி கோயைர் -எதிர்- ஷியோ பெர்சாத், ஐ.எல்.ஆர். 5 கல்கத்தா 148.

நீதியரசர் பின்வரும் சொற்களில் மேலும் கூறுவதாவது:

"தற்பொழுதைய வழக்கிலுள்ளதுபோன்று, ஒரு கூட்டுரிமையாளர் கூட்டுக் குடும்பத்தின் மொத்தச் சொத்தில் உள்ள தன்னுடைய பிரிக்கப்படாத பங்கை அல்லது மொத்த குடும்பத்தின் சொத்தில் ஒரு குறிப்பிட்ட சொத்திலுள்ள தன்னுடைய பிரிக்கப்படாத பங்கை விற்பதாகவோ அல்லது வெங்கடாச்சலப் பிள்ளை -எதிர்- சின்னையா முதலியார், 5 எம்.உெறச்.சி.ஆர். 166 என்னும் வழக்கில் குடும்பத்தின் சொத்தில் ஒரு குறிப்பிட்ட சொத்தின் மொத்தத்தையோ விற்பதாக முன்மொழியலாம். அதுவே, தன்னிச்சையாக அல்லாத விற்பனையில் நிகழலாம். இவ்வனைத்து வழக்குகளிலும் பரிவர்த்தனையன்று கிரையம் கொடுப்பவரின் பங்கு மற்றும் நலன் என்னவோ அதன்மீதே கிரையம் நிகழ்கிறது மற்றும் கிரைய தேதியன்று கிரையம் கொடுத்தவரின் பங்கு மற்றும் நலன் யாது என்பதை மதிப்பிடுவதற்கான வழக்கை தொடுப்பதன் மூலம், கிரையம் பெற்றவர் கிரையத்தை செயல்படுத்தவேண்டும். அத்தகைய வழக்கானது நிச்சயம் பாகப்பிரிவினைக்கான வழக்கல்ல மற்றும் குடும்பச் சொத்தில் மொத்தமாகவோ அல்லது பகுதியாகவோ பாகப்பிரிவினை செய்வதற்காக அவர் பெற்ற தீர்ப்பாணையே மீதமுள்ள குடும்பச் சொத்தில் குடும்ப உறுப்பினர்களின் கூட்டு உரிமையையோ அல்லது கூட்டுக் குடும்பத்தையோ சிதைத்துவிடாது."

நாங்கள் பின்வருவனவற்றையும் கவனித்துள்ளோம்:

"கிரையத்தைச் செயல்படுத்த, கூட்டுரிமையாளரிடமிருந்து கிரையம் பெற்றவரின் கோரிக்கையானது, ஐயத்திற்கிடமின்றி, அவர் உரிய மதிப்பிற்கு கிரையம் பெற்றவராவார் மற்றும் கிரையமானது இந்து கூட்டுக் குடும்பச் சொத்தின் குறிப்பிட்ட பகுதி தொடர்பானதென்னும்பட்சத்தில், கிரையம் கொடுத்தவருக்கு ஒதுக்கப்பட்ட குறிப்பிட்ட பகுதிக்கும் மேலாக எதையும் வலியுறுத்த கிரையம் கொடுத்தவருக்கும் மேலான சட்டப்பூர்வ உரிமை எதையும் அவர் பெற்றிருக்கவில்லை. உரிய மதிப்பிற்கு கிரையம் பெற்றவர் என்கின்றமுறையில், அவர் அத்தகைய பகுதியையோ அல்லது நடைமுறையில் ஒதுக்கப்பட்ட பகுதியையோ பிற பங்குதாரர்களுக்கு தீங்கு விளைவிக்கவில்லையெனில், அதனைப் பெறும் சமூக நீதிக்குரியவராவார். <u>கிரையத்தைச் செயல்படுத்த அவரால் தொடர்பானதால் தொடரப்படும் யாதொரு வழக்கிலும், வழக்கின் முதற்பொருளானது, கிரைய தேதியன்று குடும்பச் சொத்து தொடர்பானதால், பாகப்பிரிவினை வழக்கைப்போன்று குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களும் தரப்பினர்களாக சேர்க்கப்படவேண்டும்</u>."

அதில் வெங்கடாச்சலப்பிள்ளை -எதிர்- சின்னையா முதலியார், *(1870)* என்னும் வழக்கில் நீதிமன்றமானது பின்வருமாறு தீர்ப்பளித்தது:

"…. மற்றும் மேல்முறையீட்டாளர் தரப்பில் வைக்கப்பட்ட வாதமானது யாதெனில், விற்கப்படும் சொத்தானது வினாவிற்கிடமின்றி

விற்பவரின் பங்கு மற்றும் அதன் மதிப்பு ஆகியவற்றைவிட அளவிலும் மற்றும் மதிப்பிலும் குடும்பத்தின் மொத்தச் சொத்தின் மதிப்பு மற்றும் அளவைவிட குறைவானதாக உள்ளபொழுது, குடும்பச் சொத்தானது ஒரு கூட்டுரிமையாளரால் கிரையம் செய்யப்படுவது பிற கூட்டுரிமையாளரால் ஆட்சேபிக்கப்படமுடியாது.

இது நிலைக்கத்தகா ஆட்சேபணை என நாங்கள் கருதுகின்றோம். ஒரு கூட்டுரிமையாளர், கூட்டுரிமைச் சொத்தில் தனக்கு அளிக்கப்பட்ட நலனை விற்கும் உரிமை தொடர்பான இந்நீதிமன்றத்தின் முடிவானது, கிரையச் சொத்தில் தன்னுடைய பங்கை மீராதவகையில் கிரையம் செய்வதன் செல்லுந்தன்மையை நிறுவுவதற்கப்பால் செல்லவில்லை. "ஒவ்வொரு கூட்டுரிமையாளரும் தன்னுடைய பங்கில் அளிக்கப்பட்ட தற்பொழுதைய பிரிக்கப்படாத உடைமையைப் பெற்றுள்ளனர். அதனை அவர் எந்நேரத்திலும் தன்னிச்சையான அல்லது கண்டிப்பான பாகப்பிரிவினையின் மூலம் தனிப்பட்ட உடைமையாக மாற்றலாம். அத்தகைய உடைமையானது சொத்தின் பிற நலனைப்போன்று பரிவர்த்தனை செய்யத்தக்கதாகும்" என்னும் கோட்பாட்டின்மீது நிருவப்பட்டன. மேலும், தற்பொழுதைய வழக்கில் கிரையத்தில் உள்ள முதல் மறுப்பாளரின் உரிமையானது, மாற்றப்படமுடியாது என நாங்கள் நினைக்கின்றோம்.

*** *** ***

எனவே, எங்களுடைய தீர்ப்புரையில், விற்பனையாளர் சுப்புராயான், கூட்டுக் குடும்பச் சொத்தின் எந்தவொரு குறிப்பிட்ட பகுதியையும்

மதிப்புவாய்ந்த உரிமையாக பரிவர்த்தனை செய்யமுடியாது. ஆனால், பிரிக்கப்படாத கூட்டுரிமையாளர் என்கின்றமுறையில், பாகப்பிரிவினை உரிமையுடன் தனக்குரிய ஆதாயப் பகுதியை பரிவர்த்தனை செய்யலாம்; கிரைய உடன்படிக்கையின் முதற்பொருளான கிராம நிலங்களின் இதற்குமேல் ஒன்றாம் மறுப்பாளர் அறுகதையுடையவரல்ல."

ஒரு கூட்டுரிமையாளர் பிரிக்கப்படாத தன்னுடைய நலனை விற்கும் அதிகாரம் குறித்து, ஒருமித்த கருத்தேதும் இல்லை என தோன்றுகிறது. ***சித்தேஷ்வர் முக்கெர்ஜி -எதிர்- புவனேஷ்வர் பிரசாத் சிங் மற்றும் பலர்***[51] என்னும் வழக்கில் நாங்கள் பின்வருவனவற்றை குறிப்பிட்டுள்ளோம்:

"9. மிதாக்ஷரா சட்டத்தின் கீழ் பீஉறார் மாநிலத்தில் நிர்வகிக்கப்படுவதுபோன்று, கூட்டுரிமையாளர் கூட்டுச் சொத்தில் பிரிக்கப்படாத தன்னுடைய நலனை இணைக் கூட்டுரிமையாளர்களின் அனுமதியின்றி, மதிப்புவாய்ந்த மறுபயனிற்கு விற்கமுடியாது; கூட்டுரிமையாளர், தனது இணைக் கூட்டுரிமை நலனை விற்கும் தகுதியற்றவராயினும், அவருக்கெதிராக தீர்ப்பாணை பெற்றுள்ள கடனாளர், அவருடைய பிரிக்கப்படாத நலனை நீதிமன்றத்தின் மூலம் பறிமுதல் செய்து, கிரையத்திற்கு விட்டு, பின்னர் கிரையம் பெற்ற பின்னர், பாகப்பிரிவினைக்கான வழக்கின் மூலம் தனியாக்கப்பட்ட உரிமையைப் பெறலாம்."

எம்.வி.எஸ். மணிக்கயல ராவ் -எதிர்- நரசிம்மசுவாமி மற்றும் பலர்[52] என்னும் வழக்கில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்பிற்குள்ளான உத்தரவிற்கெதிராக எழுந்த ஒரு வழக்கில், அது கிரைய ஏலத்தை உள்ளடக்கியது. அதில் நீதிமன்றமானது பின்வருமாறு தீர்ப்பளித்தது:

> "....கூட்டுக் குடும்பச் சொத்தில் ஒரு கூட்டுரிமையாளரின் பிரிக்கப்படாத நலனை கிரையம் பெற்றவர், அவர் வாங்கியதன் அனுபவ உடைமையைப் பெற அருகதையற்றவர் என்பது இப்பொழுது நன்கு தீர்வு செய்யப்பட்டதாகும். அவருடைய ஒரே உரிமையானது, சொத்தின் பாகப்பிரிவினைக்கான வழக்கிட்டு, அவர் எந்த கூட்டுரிமையாளரின் பங்கை வாங்கியுள்ளாரோ அவருக்கு பாகப்பிரிவினையில் ஒதுக்கப்படும் பங்கை தனக்கு ஒதுக்குமாறு கேட்கலாம்....."

122. பெரமநாயகம் பிள்ளை -எதிர்- சிவராமன் மற்றும் பலர், 53 என்னும் வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. பாஷியம் ஐயங்கார் அவர்களின் கருத்துங்கூட உயர் நீதிமன்றத்தின் ஐந்து அறிவார்ந்த நீதியரசர்கள் அடங்கிய முழு அமர்வினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

123. இவ்வாறாக, இந்துவினால் செய்யப்படும் கிரையத்தில் கூட்டுச் சொத்தைச் சார்ந்த குறிப்பிட்ட சொத்தாயினும், அது சமதர்மத்தின் அடிப்படையிலேயே கையாளப்படும். கிரையம் பெற்றவர் முறையாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் வடிவில் கிரையத்தை செயல்படுத்த நடவடிக்கையெடுக்கவேண்டும். நாங்கள் மேற்கொள்ளும் முடிவு யாதெனில், இந்து மிதாக்ஷரா கூட்டுக் குடும்பத்தின் கூட்டுரிமையாளரால் குறிப்பிட்ட சொத்தில்

செய்யப்படும் உரிமை விற்பனையுங்கூட, சட்டவிளைவைப் பெறுகிறது. அது அனுமதிக்கப்படுகிறது மற்றும் அது இல்லா பரிவர்த்தனையாகாது என்பதாகும். இவ்விவாதத்தை மேற்கொள்வதன் நோக்கானது, உரிமை பிளவு வடிவில் பாகப்பிரிவினை ஏற்படாதபொழுதிலும் குறிப்பிட்ட சொத்தை பரிவர்த்தனை செய்யும் ஒரு கூட்டுரிமையாளரின் அதிகாரம் தொடர்பான சட்டத்தை ஆய்வதாகும். அதன்மூலம், இந்து வாரிசுரிமைச் சட்டத்திற்கு முன்னர், ஒரு இந்து உயிலை நிறைவேற்றுமிடத்து, குடும்பத்தில் பிரிவினை ஏற்பட்ட பின்னர், அவர் உயிலின் மூலம் குறிப்பிட்ட அசையாச் சொத்துகளை எழுதிவைக்கமுடியுமா? என்னும் வினா தொடர்பாக ஆராயும் நல்லநிலையில் நாங்கள் உள்ளோம்.

124. அதன் உளப்பாங்கில் இப்பிரச்சினையைப் புரிந்துகொள்ளும்பொருட்டு, நாங்கள் குறிப்பிட்ட சில முதன்மையான கோணங்களில் கவனஞ்செலுத்தவேண்டும். ஒரு இந்துக் கூட்டுக் குடும்பத்தில் ஒரு கூட்டுரிமையாளரின் நலனானது ஒரு மதிப்புவாய்ந்த உயிலின் முதற்பொருளாக இருக்கமுடியாதென்பதன் அடிப்படையிலான உண்மையான கோட்பாடானது, பிறப்பின் அடிப்படையில் பிற கூட்டுரிமையாளர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் மரபுரிமையின் அடிப்படையில் சொத்தைக்கோரும் உரிமையுடன் முரண்படுவதாகும். இவ்வாறாக, அது உயிலாளரின் உயில் தேதி முதலன்றி, உயிலாளரின் மரண நாளன்று நடைமுறைக்குவரும் அவ்வுரிமையைவிடவும் பிறப்புரிமை முந்தையதாகும். இவ்வேறுபாடானது, மரபுரிமைக்கும் மற்றும் கூட்டுரிமையாளரால் ஏற்படுத்தப்படும் உரிமைக்கும் இடையில் முரண்பாடற்றதான இந்துக் கூட்டுக் குடும்பத்தில் உயிற்புடன் தனக்குள்ள நலனை ஒரு கூட்டுரிமையாளர் பரிவர்த்தனை செய்யும்பொழுது சாத்தியமாகும். எழிச்சியூட்டும் பரிவர்த்தனையை மட்டுமே அங்கீகரிக்க நீதிமன்றங்களை வெளிப்படையாக அனுமதிக்கிறது. எனினும், ஒருமுறை

பிளவு ஏற்பட்டுவிடுமெனில், மரபுரிமை தவிர்த்து, குறிப்பிட்ட சொத்தானது எழுதிவைக்கப்படுவதற்கு மேற்படி கோட்பாட்டை பொருத்துவதற்கு ஆட்சேபிக்கமுடியும். குறிப்பிட்ட சொத்தின் பிரிவினைக்குப் பின்னர் எழுதிவைக்கப்படும் உயிலானது வேறுபட்ட நிலைபாட்டில் நிற்கும் மற்றும் கூட்டுரிமையாளரால் கிரையம் செய்யப்பட்டபொழுது கூட்டுக் குடும்பம் நடைமுறையில் இருந்தது என்னும் வழக்கில் அவ்வாதம் சிறப்புராது.

125. நாங்கள் கவனிக்கும் வேறுபாட்டின் இரண்டாம் கருத்தானது, *(மேற்கூறப்பட்ட)* ஐயங்காரி வெங்கட்டராமையா மற்றும் ஒருவர் என்னும் வழக்கில் மாண்புமிகு நீதியரசர் திரு. பாஷியம் ஐயங்கார் அவர்களால் குறிப்பிடப்பட்டதுபோன்று, மதிப்புவாய்ந்த மறுபயனிற்கு சொத்தை வாங்க எண்ணியிருக்கும் கிரையம் பெற்றவரின் உரிமையானது, சமூக நீதியின் அடிப்படையிலான உரிமையாகும் என்பதாகும். உயிலானது மிகுந்த நிபந்தனைக்குட்பட்டதும் மற்றும் உயில் பயனாளரின் உரிமைகள் தேர்வு கோட்பாட்டிற்குட்பட்டதுமாகும். மறுபுறத்தில் ஆவணக்கொடையானது *(உயில்)* உயில் பயனாளருக்கு பொறுப்பு எதையும் அளிக்காது; அவ்வழக்கில் மதிப்புவாய்ந்த மறுபயனிற்கு சொத்தை வாங்கும் எழுச்சிக்கிடையே கிரையம் பெற்றவரை ஒத்த சுதையை அவர் ஏற்கமாட்டார்.

---

*48. (2007) 1*எஸ்.சி.சி. *357*
49. (1902) ஐ.எல்.ஆர். *25* மெட்ராஸ் *690*
50. (1870) 5 எம்.எச்.சி.ஆர். *166*
51. ஏ.ஐ.ஆர். *1953* எஸ்.சி. *487*
52. ஏ.ஐ.ஆர். *1966* எஸ்.சி. *470*
53. ஏ.ஐ.ஆர். *1952* மெட்ராஸ் *419* ,

126. குறைந்தபட்சம், நேர்மையான கோரிக்கையாக, இந்து கூட்டுக் குடும்பமானது தொடர்ந்து நிலைத்திருக்கும்பொழுதிலுங்கூட, சொத்தைப் பெறுபவர் அச்சொத்துகள் உயில் எழுதியவருக்கு ஒதுக்கப்பட்டிருக்கமுடியும் என்ற அடிப்படையில், அவை தமக்கு ஆதரவாக ஒதுக்கப்படவேண்டுமென, மேல்முறையீட்டாளர்கள், தம்முடைய உரிமை மற்றும் கோரிக்கையைச் செயல்படுத்தமுடியாதா? அத்தகைய சொத்துரிமை பெற்றவர்களை, உதவியற்றவராக சட்டம் விடவில்லை என்பதை நாங்கள் கண்டிருக்கின்றோம். ஐயமில்லை, அனைத்து பங்குதாரர்களும் தரப்பினர்களாக வரிசைப்படுத்தப்படவேண்டும் என்பது, (மேற்படி) **அய்யாகிரி வெங்கடரமணய்யா** என்ற தீர்ப்பில், நீதியரசர் திரு. பாஷ்யம் ஐயங்காரால் தோற்றுவிக்கப்பட்ட நிபந்தனைகளுள் ஒன்றாகும். இவ்வழக்கில், அ.வ. எண் 89/ 1983-இல் அவர்கள் 4 முதல் 11 வரையிலான பிரதிநிதித்துவம் செய்ததால், மேற்படி நிபந்தனையானது நிறைவுசெய்யப்படுகிறது. ஐயமில்லை, அத்தகைய வழக்கில், கூட்டுக் குடும்பச் சொத்துகள் அனைத்தும் அட்டவணையிடப்படவேண்டும் என்பது மற்றொரு நிபந்தனையாகும் என்பதை நாம் கவனிக்கின்றோம். இந்நிபந்தனையானது நிறைவுசெய்யப்படவில்லை என காணப்படுகிறது மற்றும் வழக்கானது, உயில் கொடையின் அடிப்படையிலான வழக்காளர் மற்றும் 1 முதல் 3 வரையிலான மறுப்பாளர்களின் உரிமையின் அடிப்படையிலானதாகும்.

127. குடும்பத்திற்குரிய சொத்துக்களின் அளவு குறித்து, வா.சா.1 பின்வருமாறு சாட்சியம் அளித்திருப்பதை கவனிப்பது பொருத்தமானதாகும்:

> என்னுடைய சகோதரர் பக்தாச்சலம், அவருடைய தந்தையாருக்கு அரசு ஒப்படைப்பின்பெயரில் 1944-ஆம்

ஆண்டில், சத்தியமங்கலம், கொல்லகல் கிராமத்தில் 750 ஏக்கர் நிலத்தைக் கொடுத்தார். அந்த 750 ஏக்கர் நிலமும் எங்கள் குடும்பத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. என்னுடைய தந்தையார் 1932 முதல் 1958 வரையில், என்னுடைய பெயரிலும் மற்றும் ராமாத்தாள் பெயரிலும் கோயம்புத்தூரில் 150 ஏக்கர் நிலம் வாங்கினார். 1944 முதல் 1958 வரையில், அவர்களுடைய குடும்பத்தில் 1,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை வாங்கினார். வி. ரங்கசாமி நாயுடு, கோலகல், கொல்லங்கோடு, கோயம்புத்தூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் வாங்கப்பட்ட 1,000 ஏக்கர் நிலத்தில் உரிமை கொண்டுள்ளார். 1,000 ஏக்கர் நிலத்தில் ஆர். கிருஷ்ணம்மாள் உரிமை கொண்டுள்ளார் என்பது எனக்கு தெரியும். ஆ.1-இல் உள்ள 1,000 ஏக்கர் சொத்துகளிலும் ஆர். கிருஷ்ணம்மாள் உரிமை கோரவில்லை. நாங்கள் வழக்கைத் தீர்த்து ஆர். கிருஷ்ணம்மாளுக்கு பங்கு கொடுத்தபொழுது, 1,400 ஏக்கர் நிலத்தை நாங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. 700 ஏக்கருக்கு மேற்பட்ட நிலத்தில் உரிமையிருப்பதாக ஆர். கிருஷ்ணம்மாள் உரிமை கோரவில்லை.

மேற்படி விவரமே குடும்பச் சொத்து தொடர்பானதாகும். அவை வழக்குரையில் அட்டவணையிடப்படவில்லை. நாங்கள் உண்மையில் இந்நிலங்களின் மதிப்பை அறியவில்லை.

128. ஒரு இந்துவால் உயில் எழுதி வைக்கப்பட்டு, அதனடிப்படையில் உரிமைபெற்ற உயில் உரிமையர், குடும்பத்திற்குரிய குறிப்பிட்ட சொத்து தொடர்பாக குடும்பத்தில் பிரிவினை ஏற்பட்ட பின்னர், உரிமையாளர் என்ற முறையில் சொத்தில் உண்மையில் உரிமை பெறுவார், ஆனால், அது உயில் நிறைவேற்றுனரின் உரிமைக்குட்பட்டதென நாங்கள் நிச்சயம் நினைக்கின்றோம். ஒரு மனிதன் என்ன உரிமை கொண்டிருக்கின்றாரோ அதற்கு மேலான உரிமையை அவர் பிறருக்கு அளிக்கமுடியாது என்ற முரண்பாட்டின் சட்டக்கோட்பாடாக அது இருக்கமுடியாது. இந்து வாரிசுரிமைச் சட்டப்பிரிவு 59-இன் கீழுங்கூட, பிரிவினை இருந்ததெனில், வி. ரங்கசுவாமி நாயுடு தன்னுடைய பங்கை உயில் எழுதுவதற்கு தடையேதும் இருக்கமுடியாது. உயில் கொடையில், உயில் உரிமையாளருக்கு விருப்பக்கொடை பரிவர்த்தனைமூலம் கிடைக்கக்கூடிய நேர்மையான கைமாறானது, அதில் அவர் மதிப்புவாய்ந்த கைமாறு செலுத்தியிருப்பது பொருந்தாதென நாம் ஏற்கெனவே பார்த்திருக்கின்றோம். ஒவ்வொன்றும் நிரூபிக்கப்படுமானால், ஆவண உரிமையாளர் பரிகாரமின்றி விடப்படவேண்டுமென்று பொருள்படமுடியாது. நேர்மையின்மை சம்பந்தப்பட்டது தொடர்பாக வா.சா.1-இன் வாக்குமூலத்தினால் வெளிக்கொணரப்பட்ட இவ்வழக்கின் தனிப்பட்ட பொருண்மையில், இந்திய அரசமைப்பு சட்டப்பிரிவு 142-இன் கீழ் அதிகாரத்தைப் பயன்படுத்துவதாக பாவித்துங்கூட மேல்முறையீட்டாளருக்கு ஆதரவாக தீர்ப்பளிப்பதற்கு பரிசீலிக்கும் யோசனையில் சிறிது முயன்றோம். ஐயமில்லை,

வழக்கின் வரைவானது, மேல்முறையீட்டாளர்களுக்கு அரிதாகவே உதவுவதாக நாங்கள் அறிகின்றோம். ஆனால், பொருண்மையைப் பொறுத்தவரையில், மேல்முறையீட்டாளர்கள் கைவிடவேண்டும் என்ற பொருண்மையைப் பொறுத்தவரையில், மற்றபடி, இவ்வழக்கை மேலும் நாங்கள் ஆய்வுசெய்யத் தேவையில்லை.

உயிலானது பாகப்பிரிவினைக்கு வழிவகுக்கிறதா?

129. பி.1-இனால் பாகப்பிரிவினை ஏற்படுத்தப்படவில்லையெனில், அதே விளைவை இன்னமும் உயில் செய்கிறது என்ற வாதம் மேல்முறையீட்டாளர்களால் வைக்கப்படுகிறது. வேறு சொற்களில் கூறுவதானால், ரங்கசுவாமி நாயுடு எழுதிவைத்த உயிலைப் பொறுத்தவரையில், 1932-ஆம் ஆண்டைய பாகப்பிரிவினை மற்றும் தெரிவிக்கவில்லை, உயிலின் தேதிவரையில் பிரிக்கப்பட்ட குடும்ப உறுப்பினராகவே தான் தொடர்வதாகவும் கூறியுள்ளார் மற்றும் தன்னுடைய பிரிக்கப்பட்ட நிலை குறித்து அவர் ஏற்கெனவே வெளிப்படையாக அறிவித்துள்ளார்; அப்பிரிவினையுங்கூட தவிர்க்கமுடியாத உயில் முடிவிற்கு வகைசெய்கிறது. உயில், பிரிவினையை விளைவிக்கிறது; எனவே, லட்சுமண நாயுடுவின் சட்டப்பூர்வ வாரிசுகளான எதிர்மேல் முறையீட்டாளர்கள், உயிர்த்திருக்கும் உறுப்பினர் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் சட்டப்படி உரிமை கோரமுடியாது. இவ்வாதத்தில் நற்கூறு ஏதும் இருப்பதாக நாங்கள் நினைக்கவில்லை. அத்தகைய பிரச்சினை ஏதும் எழுப்பப்படவில்லை என்பது உண்மையே, எனினும், உண்மையில், இவ்வினாவிற்கு பதிலளிக்குமாறு, விசாரணை நீதிமன்றமானது தரப்பினர்களால் கோரப்பட்டது. அவசியம் சம்பந்தப்பட்டிருப்பது யாதெனில், பிரிவதற்கான கூட்டுக்குடும்ப உறுப்பினரின் தெளிவான எண்ணத்தின் அறிவிப்பானது தாக்கம் ஏற்படுத்தியுள்ளதா? என்பதை உறுதிசெய்யும்பொருட்டு, உயிலின் வாசகங்களை படிப்பதாகும்.

130. உயில் உள்ளதென்றும், அதன் வாசகங்கள் அறிவிற்கொப்பாகும் என்ற அடிப்படையில் நடவடிக்கைகள் இருந்தாலுங்கூட, ரங்கசுவாமி நாயுடு 1.6.1955 அன்று மரணமடைந்ததையடுத்து, பிற கூட்டுக் குடும்ப உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், அவரது மரணத்திற்குப் பின்னர் நிகழ்ந்த கு.வி.மு.ச., பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையின்பொழுதுதான் உயில் வெளிச்சத்திற்கு வந்ததென்றும், ரங்கசுவாமியின் சொத்திற்கு வாரிசுரிமை துவங்கியபொழுது, லட்சுமண நாயுடுவிற்கு உயில் தெரிவிக்கப்படவில்லை, அது, சட்டத்தின் தேவையை நிறைவுசெய்யவில்லை என்றும் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. குரு கிருஷ்ணகுமார் வாதிட்டார்.

1937-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு 3(2) பொருந்தும்பொருட்டு, இந்து கூட்டுக் குடும்பத்தின் பிரிக்கப்படாத நலனை விட்டுவிட்டே வி. ரங்கசுவாமி நாயுடு மரணமடைந்திருக்கவேண்டும். நாங்கள் செய்யுமாறு மேல்முறையீட்டாளர்கள் கோருவது யாதெனில், சட்டப்படி பிரிவினைக்கு வழிசெய்யும் உயிலின் ஒரு பகுதியை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான். ஆனால், உயிலானது செயல்படுத்தப்படவேண்டுமெனில், அதிலுள்ள புதிர் யாதெனில், வழக்குரையில் அட்டவணையிடப்பட்ட சொத்துகளின் உரிமையாளர் என்ற முறையில் வி. ரங்கசுவாமி நாயுடு மரணமடந்தார் என கூறப்படமுடியாது என்பதாகும். உண்மையில், 1937-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு 5-ஆனது "சொத்துகளுக்கு விருப்ப ஆவணம் எழுதாமல் இறத்தல்" என்பது, "தன்னுடைய அனைத்து சொத்துகள் தொடர்பாக நடைமுறைக்கு வரக்கூடிய விருப்ப ஆவண வாக்குமூலம் எதையும் ஏற்படுத்தாத நபரே, விருப்ப ஆவணமின்றி இறந்தவர்" எனப் பொருள்படும். மறுபுறத்தில், பி.10-உயிலானது தரப்பினர்களின் உரிமைகளை கட்டுப்படுத்தவேண்டுமென்றும், அது செயல்பாட்டிற்கு வரத்தக்கதென்றும் முடிவு செய்யுமாறு, மேல்முறையீட்டாளர்கள் இந்நீதிமன்றத்தில்

வேண்டுகின்றனர். அது செயல்பாட்டிற்கு வரத்தக்கதென காணப்படவில்லையெனில், வழக்குமூலம் தோல்வியுறும். எனவே, உயில் உள்ளதென்றும், பிரிவு 3(2) பொருந்தாது என்ற அடிப்படையிலும் நாங்கள் செயல்படுவோமானால், விதவையான ஆர். கிருஷ்ணம்மாள் பிரிவு 3(2)-இன் கீழ் எந்த உரிமையும் பெறமுடியாது. உயிலினால் நெறிப்படுத்தப்பட்டுள்ள சொத்துகள் தொடர்பாக சட்டத்தின் கீழ் அவர் எந்த உரிமையும் பெறவில்லையெனில், பின்னர், லட்சுமண நாயுடு தன்னுடைய சகோதரரின் சொத்தை அடைவதற்கான விஞ்சிய மரபுரிமை தொடர்பான சட்டமானது 1.6.1955 அன்று வி. ரங்கசுவாமி நாயுடுவின் மரணத்தையடுத்து, உடனடியாக இயக்கம் பெறுகிறது. எனினும், உயிலின் உள்ளடக்கங்களின் அடிப்படையில், சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையின்பொழுது தன்னுடைய சகோதரர் மரணமடைந்த பின்னரும், லட்சுமண நாயுடு உயிலை அறிந்ததும் பாகப்பிரிவினை வெற்றிபெறுகிறது, அது ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைப்பாடாகும், 10.5.1955 அன்று உயில் எழுதப்பட்டது முதல் அதன் விளைவு உணரப்பட்டுள்ளது, எனவே, இக்காரணத்தினால், வி. ரங்கசுவாமி நாயுடுவின் மரணத்திற்கு முன்பான 10.5.1955 அன்று பாகப்பிரிவினை செயலாக்கப்பட்டது; எனவே, உயில் செல்லத்தக்கதாகிறது என மேல்முறையீட்டாளர்கள் மேற்படி அட்டகடா ராகவம்மா வழக்கில் நிறுவப்பட்ட "மீண்டும் தொடர்புபடுத்துதல்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் வாதிட முடியுமா? வேறு சொற்களில் கூறுவதானால், உயில் செல்லத்தக்கதா என அறிய, உயிலை கவனிக்க, 1.6.1955 அன்று உயில் நிறைவேற்றுனர் மரணமடைந்த நாள் முதல் உயில் பேசுவதையடுத்து, அதன் உள்ளடக்கங்கள் 10.5.1955 முதல் பாகப்பிரிவினையை செயல்படுத்தும் விளம்புகையாகுமா என்பதை அறியவேண்டும்.

நாங்களும் இது தொடர்பாக, இதற்கு முன் ஏற்கெனவே பத்தி 77.இல் எடுத்துத் தந்துள்ள உயிலின் வாசகங்களை திரும்பப் பார்க்கலாம். உயிலானது, பாகப்பிரிவினையில் ஒதுக்கப்பட்ட சொத்துகள் மற்றும் தனிப்பட்டமுறையில் தான் வாங்கிய சொத்துகள் ஆகியவற்றை சொந்தமாக கொண்டிருப்பதாக, உயில் நிறைவேற்றுனரின் கூற்றுடன் துவங்குகிறது. அதன்பின்னர், 1932-ஆம் ஆண்டிற்குப் பின்னர் அவர் பிரிக்கப்பட்ட குடும்ப உறுப்பினராக தொடர்ந்ததாக கூறுகிறார். இவ்வாக்குமூலங்கள் ஏதும் விளம்புகையாகாது. 1932-ஆம் ஆண்டைய பாகப்பிரிவினை மற்றும் தனிப்பட்டமுறையில் கிரையம் பெற்றமை ஆகியவை மூன்று நீதிமன்றங்களிலும் மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராகவே முடிவானதை தாங்கள் அறிந்தோம். அதன்பின்னர், இன்றைய நிச்சயமற்ற நிலைமை எதையும் தவிர்க்கும்பொருட்டே தன்னுடைய பிரிக்கப்பட்ட நிலை குறித்து அவர் வெளிப்படையான விளம்புகை செய்துள்ளார். பாகப்பிரிவினையை ஏற்படுத்த சட்டத்தில் போதுமான விளம்புகையாக இக்கூற்றை ஏற்பது எங்களுக்கு கடினமானதாகும். எனினும், அது விளம்புகையாக செயல்படும் என்பதற்காகவுங்கூட, மேற்படி அட்டகடா ராகவம்மா வழக்கில் இந்நீதிமன்றத்தால் வகுக்கப்பட்ட சட்டமானது, மேல்முறையீட்டாளர்களுக்கு சமாளிக்க முடியாத தடைகளை ஏற்படுத்தக்கூடும் என நாங்கள் நினைக்கின்றோம்.

மீண்டும் தொடர்புபடுத்துதல் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலும் மற்றும் உயில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற உள்ளடக்கங்களின் அடிப்படையிலான நடவடிக்கையின் அடிப்படையிலும், அது தனித்துவத்தைக் குறித்த தெளிவான அறிவிப்பிற்கு ஒப்பாகும் மற்றும் அது 10.05.1955 முதல் செயலாக்கம் பெறுகிறது என்பது உண்மையே என்றாலுங்கூட, அளிக்கப்பட்ட உரிமைகள் குறித்து நாங்கள் அசட்டையாக இருக்கமுடியாது. ஏற்கெனவே குறிப்பிடப்பட்டதுபோன்று விடையமானது

1937-ஆம் ஆண்டைய சட்டப்பிரிவு *3(2)*-இன் கீழ் கட்டுப்படுத்தப்படவிருக்குமானால், வி. ரங்கசுவாமி நாயுடு வாரிசுகளை விட்டுச்சென்றதாகவே வழக்கு இருக்கவேண்டும். எனவே, உண்மையில் நாங்கள் வழக்கை ஒப்புக்கொள்ளவேண்டியுள்ளது என்பதுபோன்று உயில் இருப்பதான அடிப்படையில் நாங்கள் செயல்படுவோமெனில், சட்டப்பிரிவு *3(2)* இவ்வழக்கிற்குப் பொருந்தாது. சட்டப்பிரிவு *3(20)* பொருந்தவில்லையெனில் எச்ச உரிமையின் வாயிலாக சொத்துரிமை எழுகிறது, மேலே குறிப்பிடப்பட்டதுபோன்று கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. குரு கிருஷ்ணகுமார் அவர்களால் முன்வைக்கப்பட்ட காரணத்திற்காக, அது வழக்கிற்கு குந்தகமாகும். இவ்வழக்கின் பொருண்மையின் அடிப்படையில் கூறுவது, வாரிசுரிமை துவங்கிய பின்னரே உயிலின்மூலம் தகவல் தெரிவிக்கப்பட்ட பிரிவினையின் அடிப்படையில் உயில் எழுதப்பட்ட நாளான *10.5.1955* முதல் பிரிவினையானது அனுமதிக்கப்பட்டாலும், லட்சுமண நாயுடுவின் சகோதரர் மரணமடைந்த நாளான *1.6.1955* முதல் அவருடைய *(*லட்சுமண நாயுடுடைய*)* எச்ச உரிமை அடிப்படையிலான சொத்துரிமையானது செயலியக்கம் பெறுகிறது; உயிலின் அடிப்படையிலான பிந்தைய தகவல் மற்றும் வழக்குரை அட்டவணை சொத்துகள் தொடர்பான உயிலின் அடிப்படையிலான வழக்கு ஆகியவை அளிக்கப்பட்ட உரிமையை பிரிக்கமுடியாது; *(*இது தொடர்பாக மேற்படி அட்டகடா ராகவம்மா வழக்கின் பத்தி *34*-ஐ காண்க*)*.

<u>பி.1-இன் நாள் மற்றும் உள்ளடக்கங்கள்: *11.5.1955* மற்றும் *16.5.1955* ஆகிய தேதியிடப்பட்ட கடிதங்களை முன்னிலைப்படுத்தாமையின் விளைவு</u>

131. எனவே, உண்மையான வினாவிற்கு வருகையில், பி.*1*-ஆனது பிரச்சினைக்குரியதா, அதன் உள்ளடக்கங்கள் பிரிவினையை ஏற்படுத்தும்வகையில்

அறிவிப்பாகுமா மற்றும் இறுதியாக அது லட்சுமண நாயுடுவிற்கு தெரிவிக்கப்பட்டதா என்பனவற்றை நாங்கள் கீழ்க்காணுமாறு காண்கின்றோம:

132. பி.*1*-ஆனது *10.5.1* அன்று வெளியிடப்பட்டது என்பதே மேல்முறையீட்டாளர்களின் வழக்காகும். பி.*1*.ஆனது செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிவிப்பாகும். பி.*1*-ஆனது முதல் மேல்முறையீட்டு நீதிமன்றத்தினால் குறிப்பிடப்பட்டதுபோன்று பின்வருமாறு:

> *"1932* முதல் நான் என்னுடைய சகோதரர் ஆர்.வி. லட்சுமணநாயுடுவிடமிருந்து பிரிக்கப்பட்ட உறுப்பினராக இருந்து வருகிறேன். என்னுடைய பிரிக்கப்பட்ட மற்றும் தனிப்பட்ட நிலையையுங்கூட நான் பிரகடனம் செய்கின்றேன்."

133. மேல்முறையீட்டாளர்களின் மேற்படி வழக்கு யாதெனில், லட்சுமண நாயுடு பி.*1*-ஐ பெற்று அடுத்த நாளே *11.5.1955*-ஆம் தேதியிடப்பட்ட தகவலை அனுப்பி, பி.*1*-இன் உள்ளடக்கமான, *"1932*-ஆம் ஆண்டில் பாகப்பிரிவினை நிகழ்ந்தது" என்ற சாரத்தை மறுத்து கருத்து தெரிவித்தார் என்பதன்மூலம் இந்து கூட்டுக் குடும்பத்தின் பிற உறுப்பினர்களுக்கு தகவல் அளிக்கப்பட வேண்டியமையானது நிறைவேற்றப்பட்டுள்ளமை நிரூபிக்கப்படுகிறது. லட்சுமண நாயுடுவால் அனுப்பப்பட்ட *11.5.1955* தேதியிடப்பட்ட தகவலை மறுத்து ரங்கசுவாமி நாயுடுவால் அனுப்பப்பட்ட *16.5.1955*-ஆம் தேதியிடப்பட்ட செயல்மூலம், மேல்முறையீட்டாளர்களின் மேற்படி வழக்கானது நிறுவப்படுகிறது. எனினும், *11.5.1955* மற்றும் *16.5.1955* தேதியிடப்பட்ட இரு கடிதங்களையும் முன்னிலைப்படுத்தாமையானது, மேல்முறையீட்டாளர்களின்

வழக்கிற்கு குந்தகமாகுமென, விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவை முடிவு செய்தன. அது தொடர்பாக உயர் நீதிமன்றம் தன் முடிவு சரியானதே என்றும், எதிர்மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர். மறுபுறத்தில், கு.வி.மு.ச., சட்டப்பிரிவு 145-இன் கீழான நடவடிக்கையில் லட்சுமண நாயுடுவால் அனுப்பப்பட்ட 11.5.1955 தேதியிடப்பட்ட கடிதமானது குறியீட்டாவணம் (43)-ஆகவும் மற்றும் 16.5.1955 தேதியிடப்பட்ட ரங்கசுவாமி நாயுடுவின் கடிதமானது குறியீட்டாவணம் 44-ஆகவும் குறியிடப்பட்டு, அவற்றை குறிப்பிடும் நீதித்துறை நடுவரின் உத்தரவானது, இவ்வழக்கின் பி.2-ஆவணமாக குறியிடப்பட்டிருப்பதை உயர் நீதிமன்றம் கவனிக்க தவறியிருக்கக்கூடாதென மேல்முறையீட்டாளர்கள் வாதிட்டனர். மேலும், ரங்கசுவாமி நாயுடு இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினராக மரணமடைந்தார் என்னும் அ.வ. எண் 649/1985 வழக்கை மறுத்து, பாகப்பிரிவினையை ஏற்படுத்தும் பி.1-ஆவணமானது வெளியிடப்பட்டது என்கிற வாதம் இன்மையை, எதிர்மேல்முறையீட்டாளர்கள் குறை கூறுகின்றனர்.

<u>கூட்டுக் குடும்பத்தில் பி.1-ஆவணமானது பிரிவினையை ஏற்படுத்துவது குறித்து வாதம் ஏதமில்லையா?</u>

134. எதிர்மேல்முறையீட்டாளர்களால் தாக்கல் செய்யப்பட்ட அ.வ. எண் 649/1985-இல் வழக்குரை அட்டவணை சொத்துகள் இரு சகோதரர்களின் கூட்டுக் குடும்பச் சொத்துகளென வாதிடப்படுகிறது மற்றும் அவர்களுக்கிடையே பாகப்பிரிவினை ஏதுமில்லை என்றும், வி. ரங்கசுவாமி நாயுடுவின் 1955-ஆம் ஆண்டைய மரணம் வரையில், அவர்கள் கூட்டுக் குடும்பத்தினராகவே வாழ்ந்தனர் என்றும், மேலும் வாதிடப்படுகிறது. வழக்குரையின் பத்தி 5-இல் வி. ரங்கசுவாமி நாயுடு மரணம் வரையில், அவரும் அவருடைய சகோதரரும் கூட்டுக் குடும்பத்தை

ஏற்படுத்தினர் என்றும், அவர்களுக்கிடையே பிரிக்கப்பட்ட நிலையேதும் இல்லை என்றும், வி. ரங்கசுவாமி நாயுடுவின் மரணத்தையடுத்து, விஞ்சியிருக்கும் கூட்டுக் குடும்ப உறுப்பினர், எச்ச உரிமையடிப்படையில் அனைத்து சொத்துகளையும் எடுத்துக்கொண்டனர் என்றும் குறிப்பாக வாதிடப்படுகிறது. மேல்முறையீட்டாளர்கள் தரப்பில் (இரண்டாம் மறுப்பாளர்) தாக்கல் செய்யப்படும் எழுத்துவடிவ பதிலுரையில், வழக்குரையின் பத்தி 3-இல் பின்வரும் வாசகங்களை நாங்கள் காண்கிறோம்:

> "3. ஆர். வி. லட்சுமண நாயுடுவும் மற்றும் வி. ரங்கசுவாமி நாயுடுவும் சகோதரர்கள் ஆவர். அவர்கள் பிரிந்து தனித்தனியே வார்ந்தனர். அவர்கள் அவர்களுடைய நிலங்களை தனித்தனியே பயிரிட்டனர். ஆர்.வி. இலட்சுமண நாயுடுவும் மற்றும் வி. ரங்கசுவாமி நாயுடுவும் கூட்டுக் குடும்பத்தினராக வாழ்ந்தனர் மற்றும் வி. ரங்கசுவாமி நாயுடுவின் மரணம் வரையில், கூட்டுக் குடும்ப நிலையில் பிரிவினை ஏதுமில்லை என்னும் வழக்காளர்களின் கோரிக்கையானது தவறாகும். சகோதரர்களுக்கிடையிலான கூட்டுக் குடும்ப நிலையானது முறையாக தகர்க்கப்பட்டு, முடிவிற்கு கொண்டுவரப்பட்டது. சொத்துகளும் பிரிக்கப்பட்டு, ஒவ்வொருவரும் தனக்குரிய சொத்தை தனித்தனியே அனுபவித்துக்கொண்டிருந்தனர். வி. ரங்கசுவாமி நாயுடுவும் தனிப்பட்ட முறையில் சொத்துகள் வாங்கினார்." (வலியுறுத்தல்கள்)

135. ஐயமில்லை, அ.வ. எண் 89/1983-இல் சொத்துகள் வி. ரங்கசுவாமி நாயுடுவிற்குரியன என வாதிடப்பட்டது. சகோதரர்கள் 1932-ஆம் ஆண்டிலேயே சொத்துகளை பிரித்துக்கொண்டனர் என வழக்குரைப் பத்தி 9-இல் மேலும் வாதிடப்பட்டது. (அ.வ. எண் 89/1983-இன்) வழக்குரையில் அட்டவணையிடப்பட்ட ஒன்பது சொத்துகளுள் 1 முதல் 3 வரையிலான சொத்துகளும் மற்றும் 6 முதல் 9 வரையிலான சொத்துகளும் வி. ரங்கசுவாமி நாயுடுவின் பங்கிற்கு ஒதுக்கப்பட்டு, அவருடைய அனுபவத்தில் இருந்து வந்தன. 4 மற்றும் 5 ஆகிய சொத்துகள், பாகப்பிரிவினைக்கு வெகுநாள் கழித்து வி. ரங்கசுவாமி நாயுடுவால் வாங்கப்பட்டு, அவை முற்றிலும் அவருக்குரியதாயின. மறு எண்ணிடப்பட்ட அ.வ. எண் 649/1985-இன் வழக்கின் குற்றச்சாட்டுகளைக் குறித்து, அ.வ. எண் 89/1983 வழக்கில் குறிப்பிடும் பொருண்மையையும் நாம் கவனிக்கத் தவறக்கூடாது. இன்னமும் மேலும் சட்டப்பிரச்சினைகள் வரையறுக்கப்பட்டபொழுது, வி. ரங்கசுவாமி நாயுடுவால் நிறைவேற்றப்பட்ட உயிலானது உண்மையானதா, செல்லத்தக்கதா மற்றும் அது நடைமுறைக்கு வந்ததா என்பதே முதல் சட்டப் பிரச்சினை (சட்டப் பிரச்சினை எண் 2) வாய்மொழி பாகப்பிரிவினை நிகழ்ந்ததா என்பது தொடர்பானதாகும். 12.05.1955 அன்று "நவ இந்தியா" செய்தித்தாளில் அறிவிப்பு செய்ததன்மூலம் பாகப்பிரிவினை நிகழ்ந்திருந்தது என்ற அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் முன்பாக வழக்கானது விவாதிக்கப்பட்டது என்பதும் விவாதப் பொருளில் காணப்படுகிறது.

136. அ.வ. எண் 649/1985-இன் எழுத்து வடிவ பதிலுரையில் இரண்டாம் மறுப்பாளரின் மறுப்புரையை நாங்கள் ஏற்கெனவே கண்டிருக்கின்றோம். இரு வழக்குகளும் சேர்த்து விசாரிக்கப்பட்டன. சகோதரர்கள் பிரிந்து தனித்தனியே வாழ்ந்தனர் என வழக்குரைக்கப்பட்டுள்ளது. வி. ரங்கசுவாமி நாயுடுவின் மரணம்

வரையில் பிரிவினையேதுமில்லை என்னும் எதிர்மேல்முறையீட்டாளரின் வழக்கு பொய்யானதென குறிப்பாக உரைக்கப்பட்டது. கூட்டுக் குடும்ப நிலையைப் பொருத்தவரையில், அது தகர்க்கப்பட்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டதாக கூறப்பட்டுள்ளது.

137. இவ்வழக்கின் பொருண்மையில், எதிர்வாதமில்லையெனில், சான்று ஏதும் கவனிக்கப்படத்தேவையில்லை என்ற கோட்பாட்டை நாங்கள் கருத்தில்கொள்கின்றோம். கூட்டுக் குடும்பம் எவ்வாறு தகர்க்கப்பட்டது அல்லது குடும்ப நிலையில் பிரிவினை இல்லையா, என்பவையெல்லாம் அவசியம் சான்றைச் சார்ந்தவையாகும். கூட்டுக் குடும்பத்தில் பிரிவினை ஏற்படுத்தப்பட்ட விதம் குறித்து குறிப்பாக வாதிடப்படவில்லை என்ற பொருண்மையானது, எங்களுடைய கருத்தில், அது வேறு விதத்தில் நிறுவப்படுமானால், மேல்முறையீட்டாளர்களின் வழக்கிற்கு பாதிப்பேதுமில்லை.

<u>பி.1-இன் உள்ளடக்கங்கள் பிரிவினையை ஏற்படுத்தும் அறிவிப்பாகுமா?</u>

138. வாய்மொழி பாகப்பிரிவினை நிகழ்ந்தது, மறுக்கமுடியாத நிலையில் காணப்படவில்லை. எனவே, அதுகுறித்த பி.1-இன் கூற்றானது, சரியின்மையால் புறக்கணிக்கப்படவேண்டியுள்ளது, ஆனால் எங்களுடைய கருத்தில், இறுதி வாக்கியமானது நிலைப்பாடாக நிற்கிறது. சொல்லின் பயன்பாடும் வெளிப்படையானதாகவே தோன்றுகிறது. உயில் எழுதுதல் மற்றும் அறிவிப்பு எழுதுதல் ஆகிய இரண்டிற்கும் வழிகோலிய சட்ட ஆலோசனைக்கு சாத்தியங்கள் இருந்திருக்கவேண்டும். வி. ரங்கசுவாமி நாயுடு, உயில் எழுதுவதற்கான தன்னுடைய விருப்பத்தையும் மற்றும் அதுகுறித்த சட்ட ஆலோசனையையும் இரண்டு அல்லது மூன்று சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்தியதைக் குறித்து, உயில் நிறைவேற்றுனர்

பி.13-இல் பேசியுள்ளார். வி. ரங்கசுவாமி நாயுடு ஒரு படித்த மனிதர். ஒரு முன்னாள் சட்ட மேலவை உறுப்பினர். அவர் ஒரு செல்வந்தர். வாய்மொழி பாகப்பிரிவினையின் ஏற்பாடுங்கூட, கூறப்பட்ட தனிப்பட்ட கிரையங்கள் பெற்றமைக்கானதாகும். சகோதரர்கள் பல எண்ணிக்கைகளிலான சொத்துகளை பரஸ்பரம் மாற்றிக்கொண்டதாக விவரம் உள்ளது. வாய்மொழி பாகப்பிரிவினைக்கான வழக்கை ஏற்படுத்துவதால் என்ன நிகழ்ந்திருக்கும் என்பது குறித்து அவர் கருத்து வைத்திருக்கலாம். தனியாகும் எண்ணத்தை அறிவிக்கும் அறிவிப்பின்மூலம் பாகப்பிரிவினை செய்வது என்பது உயிலின் செல்லுந்தன்மைக்கு தேவையானதென்னும் அறிவை வி. ரங்கசுவாமி நாயுடு பெற்றிருந்தார் என தாம் கருதுவோமெனில், அது, 'அதுவும்' என்ற சொல்லின் பயன்பாடும், கூட்டுக் குடும்பத்தை தகர்ப்பதற்கு சட்டப்படி அறிவிப்பு போதுமானதென புரிந்துகொள்ளப்படவேண்டும்.

139. வாக்கியத்தின் இலக்கணத் தொடர்பானது முந்தைய 1932-ஆம் ஆண்டைய பாகப்பிரிவினையை தொடர்புபடுத்தக்கூடியது என்னும் கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. குரு கிருஷ்ண குமாரின் வாதங்கள் எங்களுக்கு ஏற்புடையதாக இல்லை. பி.10 ஆகிய உயிலானது அறிவிப்பு குறித்த விவரம் கொண்டிருப்பதையும் நாங்கள் கருத்தில் கொள்ளாமல் இருக்கமடியாது. பிரிவதற்கான கூட்டுக் குடும்ப உறுப்பினரின் விருப்பத்தைப் பொருத்தவரையில், அவர் தனியே பிரிவதற்கான காரணம் ஏதும் தரத்தேவையில்லை.

<u>பிற இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினருக்கு தகவல் அளிக்கப்பட்டதா?</u>

140. தற்பொழுது, பி.1 தெரிவிக்கப்பட்டதா என்ற விவரத்திற்கு நாங்கள் வருகின்றோம். பி.1-ஆனது 12.5.1955 தேதியிடப்பட்ட ஆவணமாக விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேல்முறையீட்டாளர்களின் ஒட்டுமொத்த

வழக்கு யாதெனில், அறிவிப்பானது *10.5.1955* தேதியன்று அனுப்பப்பட்டது மற்றும் அது "நவ இந்தியா" செய்தித் தாளில் வெளியிடப்பட்டது; ஆனால் ஒப்புக்கொள்ளப்பட்ட வகையில் பிரிவதற்கான எண்ணமானது நேரடியாக வி. லட்சுமண நாயுடுவிற்கு அறிவிப்பின்மூலம் தெரிவிக்கப்பட்டதாக, மேல்முறையீட்டாளர்களின் வழக்கில்லை. லட்சுமண நாயுடு, செய்தித்தாளில் அறிவிப்பைப் பார்த்து பாகப்பிரிவினையை மறுத்து, *11.5.1955*-ஆம் தேதியிடப்பட்ட அறிவிப்பை அனுப்பினார் என்பது மேல்முறையீட்டாளர்களின் வழக்காகும். உண்மையில், வி. ரங்கசுவாமி நாயுடு பிற இந்து கூட்டுக் குடும்ப உறுப்பினருக்கு பிரிவினையை குறித்து தகவல் அளிக்கவேண்டுமென, லட்சுமண நாயுடு தன்னுடைய மனநிலையை வெளிப்படுத்தினார். இன்னமும் மேலும், உயிலின் *(பி.1)* உள்ளடக்கங்களை வலியுறுத்தி, வி. ரங்கசுவாமி நாயுடுவால் லட்சுமண நாயுடுவிற்கு அளிக்கப்பட்ட *16.5.1955*-ஆம் தேதியிடப்பட்ட தகவலைச் சுற்றியே மேல்முறையீட்டாளர்களின் வழக்கு அமைந்துள்ளது.

141. பி.1-இன் இறுதி பகுதி தொடர்பான நிலையில் உள்ளடக்கங்கள், கூட்டுக் குடும்ப நிலையில் பிரிவினை ஏற்படுத்த போதுமானதென, நாங்கள் கவனித்திருக்கின்றோம். சட்டத்தில் கோரப்படுவதுபோன்று பிரிவினை தெரிவிக்கப்பட்டதா என்பது வினாவாகும். ஒருபுறத்தில் மேல்முறையீட்டாளர்களால் கோரப்படும் *11.5.1955* மற்றும் *16.5.1955* தேதியிடப்பட்ட கடிதங்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இக்குறைபாடானது, பி.2-இல் வெளிப்படுத்தப்-பட்டதுபோன்று, 'எ' தரப்பின் வழக்கைச் சார்ந்து, மேல்முறையீட்டாளர்களால் வெற்றிகொள்ளப்பட்டதாக தோன்றியது. அது நீதித்துறை நடுவரால் கு.வி.மு.ச., பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவாகும். வி. ரங்கசுவாமி நாயுடுவால் அனுப்பப்பட்ட அறிவிப்பைப் பொருத்தவரையில், அது செய்தித்தாளில்

வெளியிடப்பட்ட ஒரு அறிவிப்பு என்பதை நாங்கள் காண்கின்றோம். *11.5.1955* மற்றும் *16.5.1955* தேதியிடப்பட்ட கடிதங்களில் உள்ளதுபோன்று, செய்தித்தாளில் ஒரு நகலைப் பெறுவது, தனிப்பட்டதொரு தகவலை பெறுவதாகும் என்பதால், செய்தித்தாளின் ஒரு நகலைப் பெறுவது மிகுந்த கடினமாக இருக்காது. *10.5.1955*, *11.5.1955* மற்றும் *16.5.1955* ஆகிய தேதியிடப்பட்ட கடிதங்கள், பி.*2* (சட்டப்பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கை உத்தரவில்) பி.*42*, பி.*43* மற்றும் பி.*44* ஆகிய ஆவணங்களாக குறியிடப்பட்டிருப்பதை நாங்கள் காண்கின்றோம். இவ்வாவணங்களுக்காதரவான வாதங்கள், உண்மையில் நீதித்துறை நடுவரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவான பி.*2*-இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

142. கு.வி.மு.ச., பிரிவு *145*-இன் கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்தரவான பி.*2* தொடர்பாக சான்றியல் சட்டப்பிரிவு *40* மற்றும் *43* ஆகியவற்றின் கீழ் பொருந்தக்கூடியவையல்ல என்ற வாதம் வைக்கப்படுகிறது. இவ்வினாவானது கீழமை நீதிமன்றங்களில் எழுப்பப்பட்டதாக காணப்படவில்லை. புதிய வழக்கை தடைசெய்யும் முந்தைய தீர்ப்புரைகளை சட்டப்பிரிவு *40* கையாள்வதும் மற்றும் பி.*2* ஆவணமானது சான்றியல் சட்டப்பிரிவு *40*-இன் கீழ் பொருந்தக்கூடியதல்ல என்பதும் உண்மையாக இருக்கலாம். சான்றியல் சட்டப்பிரிவு *41*-இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விளைவுகளையுடைய உயிலை நிறைவேற்றும் வழக்கு, திருமண வழக்கு, கடல் சட்ட வரம்பு அல்லது நொடிப்புநிலை சட்ட வரம்பு கையாளுகிறது. அது வழக்கின் பொருண்மைகளுக்கு பொருந்தக்கூடியதல்ல என்பது தெளிவாகும். புலன்விசாரணையுடன் பொருந்தக்கூடிய பொதுத்தன்மையுடன் தொடர்புடையதெனில், அவற்றிற்கு பொருந்தும் வழக்குகளின் தீர்ப்புரைகளை சட்டப்பிரிவு *42* கையாளுகிறது என்பதும் பொருத்தமுடையதல்ல. பிரிவு *43* பின்வருமாறு கூறுகிறது:

"43. பிரிவுகள் 40 முதல் 42 வரையிலானவற்றில் கூறப்படுவதைத் தவிர தீர்ப்புரைகள் போன்றவை எப்பொழுது பொருந்தக்கூடியவை.- தீர்ப்புரைகள், உத்தரவுகள் அல்லது தீர்ப்பாணைகள் போன்றவை வழக்கு பிரச்சினைகளில் தொடர்புற்றிருந்தாலன்றி அல்லது இச்சட்டப்பிரிவுகளின் ஏதேனும் விதிகளின் கீழ் பொருந்தக்கூடியவையாக இருந்தாலன்றி, அவை பிரிவுகள் 40, 41 மற்றும் 42 ஆகியவற்றில் குறிப்பிடப்படுபவற்றைத் தவிர, மற்றவை பொருந்தக்கூடியவையல்ல."

143. இது தொடர்பாக, பி.2 உத்தரவை நாங்கள் ஆராய்ந்துள்ளோம். வாதத்தில் கோரப்படும் தொடர்புடைய பகுதியானது பின்வருமாறு:

"மரணமடைந்தவர், "நவ இந்தியா" செய்தித்தாள் வாயிலாக 10.5.1955 தேதியிடப்பட்ட அறிவிப்பின் (குறியீட்டாவணம் பி.42) மூலம் தன்னுடைய பிரிக்கப்பட்ட நிலையை அறிவித்தார். இது பி. தரப்பில் முதல் நபரின் கவனத்தை ஈர்க்க, அவர் 11.5.1955 தேதியிடப்பட்ட கடிதம் (குறியீட்டாவணம் பி.43) எழுதி, அதில் அனைவரும் பிரிக்கப்படாத இந்து கூட்டுக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்றும், அவ்வாறு பிரிக்க விரும்புபவர் உடன் கூட்டாளிக்கு தகவல் தெரிவித்திருக்கவேண்டுமென்றும் கூறினார். பி. தரப்பு

முதலாம் நபரால் மேற்கொள்ளப்பட்ட நிலைப்பாடானது சரியானதல்ல என மரணமடைந்தவர் *15.5.1955* தேதியிடப்பட்ட குறியீட்டாவணம் பி.44 மூலம் பதிலளித்தார். இது, பி. தரப்பு முதல் நபரால் *17.5.1955* தேதியிடப்பட்ட (குறியீட்டாவணம் பி.45) மூலம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

144. பி.2 உத்தரவில் இல்லாததன்மூலம் தெளிவாவது யாதெனில், இவ்வாவணங்களுக்கு பி. தரப்பினர் பதிலளித்ததாகும். பி.42, பி.43 மற்றும் பி.44 ஆகிய ஆவணங்களை பி. தரப்பினரான லட்சுமண நாயுடுவின் வாரிசுகள் வாதுரையில் ஒப்புக்கொண்டதான குறிப்பேதும் உள்ளதாக வழக்கில் இல்லை. ஆனால் அதுகுறித்து மறுப்பேதுமில்லை. நாம் குறிப்பிட்டுள்ள வரிசைகளில் எ. தரப்பினருக்கு வழக்கிருந்ததாக, பி.2-ஆன உத்தரவு தெரிவிக்கிறது. 'பி.1'-இன் தேதியில் *12.5.1955* என்றும், குறியீட்டாவணம் *42*-இல் *10.5.1955* என்றும் உள்ள முண்பாட்டைத்தவிர, மேல்முறையீட்டாளர்களால் வைக்கப்பட்டுள்ள வழக்கில் ஒருமித்த தன்மையே நிலவுகிறது.

145. தீர்ப்புரைகளின் பொருத்தமுடைமை குறித்த வினாவானது, **<u>பீகார் மாநில அரசு -எதிர்- இராதாகிருஷ்ணா சிங் மற்றும் பலர்</u>**[54] என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் ஒரு அமர்வினால் பரிசீலிக்கப்பட்டுள்ளது. தீர்ப்புரையானது, சட்டப்பிரிவுகள் *40* முதல் *42* வரையிலானவற்றின்கீழ் வந்தாலன்றி, சான்றியல் சட்டப்பிரிவு *13*-இன் கீழ் அதனை சார்ந்து நிற்க முடியாதென்ற நிலைப்பாட்டை

---

54. 1983 (3) எஸ்.சி.சி. 118

இந்நீதிமன்றம் மேற்கொண்டது. அதன்பின்னர், நீதிமன்றமானது பின்வருமாறு தீர்ப்பளித்தது:

"129. கடாதர் சௌத்திரி -எதிர்- சரத் சந்திர சக்கரவர்த்தி [ஏ.ஐ.ஆர்.1941 கல்கத்தா.193 : (1940) 44 கல்கத்தா டபிள்யூஎன் 935 : 195 ஐ.சி.412 : 72 கல் எல்.ஜெ.320)] தரப்பினர்களுக்கிடையில் அல்லாத தீர்ப்புரையின் முடிவானது, சான்றாக ஏற்கத்தக்கதல்ல எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதுதொடர்பாக, கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் கூட்டமர்வானது பின்வருமாறு கருத்து தெரிவித்தது:

"தரப்பினர்களுக்கிடையில் அல்லாத தீர்ப்புரையின் விவரங்களும், முடிவுகளும் சான்றாக ஏற்கத்தக்கவையல்ல என்கின்றபொழுதிலும், அத்தகைய தீர்ப்புரையும் மற்றும் தீர்ப்பாணையும், எங்களுடைய கருத்தில், எந்த நிலங்களுக்காக வழக்கானது தாக்கல் செய்யப்பட்டது என்பதை அறியவும் மற்றும் குறிப்பிட்ட தரப்பினர்களுக்கிடையே தீர்ப்பாணை வழங்கப்பட்டது என்ற பொருண்மையை நிரூபிக்கவும் ஏற்புடையதாகும்.

130. இதில், ஒன்றுக்கொன்று அல்லாத தீர்ப்புரைகளின் ஏற்றுக்கொள்ளத்தக்க தன்மையின் சட்டநிலை சரியானது என்பது எங்களது கருத்துநிலையாகும்".

மேல்முறையீட்டாளர்கள் கோருவதன்கீழான விருப்புறுதி ஆவணத்தின் நிறைவேற்றாளர் உண்மையில் 'அ' தரப்பினரின் இரண்டாமவர் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம்.

146. சுவாரஸ்யமாக, உயர் நீதிமன்றம் முன்பு உள்ள சீராய்வில் அச்சுக்கோப்பின் பிரதியாக குறியீடு செய்யப்பட்டுள்ள அ.*109*-ஐ எதிர்மேல்முறையீட்டாளர்கள் தாக்கல் செய்துள்ளனர். *(*இந்த சீராய்வு பிரிவு *145* நடவடிக்கையில் பிறப்பிக்கப்பட்ட பி.*2* ஆணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது*)* நடவடிக்கையினுள்ள வரிசைப்படி தவறாக குறியிடப்பட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதில் கேள்விக்குள்ளான ஆணை *(*பி.*2)* நீங்கலாக எதிர்வாதிகளின் ஆவணங்களை உட்கொண்டிருக்கும் பொருளடக்கத்தை நாங்கள் கவனத்திற்கொள்கிறோம். பொருளடக்கத்தின் இடையில் 'ஆ' தரப்பினரின் சார்பாக தாக்கல் செய்யப்பட்ட சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டது. இவ்வழக்கில் வேறுயாருமல்லாத அ.சா.*1* எல். வெங்கடபதியின் சாட்சியத்தையுங்கூட கொண்டுள்ளது. அதில் பி.*42*, பி.*43* மற்றும் பி.*44* பற்றிய குறிப்பு அவருடைய விசாரணையில் எதுவுமில்லை. தன்னுடைய குறுக்கு விசாரணையில் அவர் சான்றுரைத்த விருப்புறுதி ஆவணத்தின் *(*சான்றாவணம் பி.*68)* ஒவ்வொரு பக்கத்திலும் தன்னுடைய கையொப்பத்தை *(*உயிலவர்*)* கண்டுபிடித்தபின், ஒருவேளை 'நவ இந்தியா'-வின் வெளியீடுக்கு தனது தந்தை விடையளித்தது தனக்கு தெரியாது என்று கூறியுள்ளார்.

அசல் வழக்கு எண் 83/1989-இல் அ109-இன் பகுதியாக 'ஆ' தரப்பினரால் முன்னிலைப்படுத்தப்பட்டு 'ஆ' தரப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களையுங்கூட கிடைக்கத்தக்க பி.42, பி.43 மற்றும் பி.44 ஆவணங்களை முன்னிலைப்படுத்துவதிலிருந்து வாதிகளை எது தடுத்து நிறுத்தியது என்று எங்களுக்கு தெரியவில்லை. பி.2-வினுள் பி.42 பிரசுரிப்பு, பி.43 அல்லது பி.44 குறித்து கண்டறிதல் எதுவுமில்லை.

147. கேட்டறியும் நேரத்தினிடையே, எதிர்மேல்முறையீட்டாளர் எங்கள் முன்பு வலியுறுத்தப்பட்டதாவது, பி.1-ஆனது 12.5.1955 தேதியிட்டது என்றும், மேலும், ஒருவேளை 12.5.1955 தேதியிட்டதென்றால் பொிதளவிலான கட்டமைவு உடைய மேல்முறையீட்டாளரின் வழக்கு நம்பிக்கைவகையில் இழக்கப்பெறும் என்றும், அதன்பின்னர் 12.5.1955 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புக்கு பதிலாக முந்தைய தேதியில், அதாவது லஷ்மையா நாயுடுவால் 11.5.1955 அன்று கொடுத்திருக்கக்கூடும் விடைவாசகத்தின் நிலையை ஆதரிக்க இயலாததாகவிருக்கும். 11.5.1955 மற்றும் 16.5.1955 தேதியிட்ட முன்னிலைப்படுத்தாத கடிதங்கள் கிடைக்கப்பெறுவதற்கு இங்குதான் வலியுறுத்தப்படுகிறது. கற்றறிந்த மூத்த வழக்குரைஞர் திரு. சி.ஏ. சுந்தரம் அவர்களால் சுட்டிக்காட்டப்பட்டவாறு 12.5.1955 தேதியிட்ட பி.1 ஆவணங்களை குறியீடு செய்தது தவறா? அல்லது மூலப்பண்புகூறினை அது எதிரொலித்ததா? என்பதை சரிபார்ப்பதற்காக பதிவாவணங்களை குறிப்பிட்டபடி நாங்கள் கோரினோம். 12.5.1955-ஆம் தேதியிட்ட செய்தித்தாளில் அறிவிப்பு வெளியீட்டினை பி.1-இலிருந்து நாங்கள் கண்டறிந்தோம். ஆதலால் பி.1 ஆவணம் 12.5.1955 தேதியிட்டவாறு குறியீடு செய்ததில் தவறில்லை. மேற்சொன்ன கண்டறிதல்களிலிருந்து இழைந்து வீழ்வுறும் பின்விளைவுகள் என்ன? 12.5.1955 அன்று

மட்டுமே செய்தித்தாளில் வெளியிடப்பட்ட விளம்புகை கொண்டிருக்கும் அறிவிப்பின் காரணத்தினால் பார்க்கவிருக்கும் ஒருவழியானது, அறிவிப்பினை கவனித்ததில் *11.5.1955* அன்று லஷ்மையா நாயுடு பதிலுரை அளித்தார் என்னும் மேல்முறையீட்டாளர்களின் வழக்கினை ஏற்றுக்கொள்ள இயலாது. ஒருவேளை அதனை ஏற்றுக்கொள்ளாவிடில், வி. ரங்கசாமி நாயுடு அனுப்பியிருந்த எதிருரைக்கான கேள்வியுங்கூட பின்னர் எழும்பியிருக்காது.

148. விருப்புறுதி ஆவணத்தின் பொருளடக்கங்களை நாங்கள் பரிசீலித்தோம். மேற்சொன்ன தேதியில் அறிவிப்பு தொடர்பான வெளியீடு குறிப்பும் அங்குள்ளது. விருப்புறுதி ஆவணம் *10.5.1955* தேதியிட்டதாகும். விருப்புறுதி ஆவணமானது *10.5.1955* அன்று எழுதப்பட்டிருக்காது என்று மிகவும் தெளிவாக எங்களுக்கு தோன்றுகிறது. நாங்கள் ஏற்கெனவே கண்டறிந்தபடி *10.5.1955* அன்று நிறைவேற்றப்பட்டதில் எந்த சந்தேகமுமில்லை. விருப்புறுதி ஆவணத்தில் இருக்கும் விவரங்கள் மற்றும் வேறு சூழ்நிலைகள் குறித்தும், அது முன்னதாகவே வரையப்பட்டிருக்கக்கூடும் என்பதை நாங்கள் நம்ப முனைகிறோம். ஒரேபடியாக செய்தித்தாளில் வெளியிடப்பட்டிருக்கும் விடயம் முன்னதாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடும். ஆனால், எது முக்கியமானது என்றால், உயில் சாசனத்தில் விவரிக்கப்பட்டுள்ளவாறு மேலும் ஒருபட முன்சென்றுங்கூட அதனை வெளியிட்ட இலாபத்தை பிரித்துவைப்பதற்கு மற்ற பங்காளியிடம் உயிலவர் வெறும் ஒரு பங்காளியாக அறிவிப்பது அவரது மனதின் நோக்கமல்ல. ஆனால் உயிலவர் இறப்பதற்கு முன்னரே பி.1 உட்கொண்டிருந்த விடயத்தை மற்ற பங்காளியான அதாவது லஷ்மையா நாயுடு அறிந்திருந்தார். அட்டகாடா ராகவம்மா மற்றும் பலர் *(*மேற்கண்டவாறு*)*-இல் தீர்மானித்தவாறு இந்த தேவைப்பாடுகள் இன்றியமையாததாகும்.

இதுகுறித்து, மேல்முறையீட்டாளர்களின் சார்பில் சாட்சி எ.த.சா.1 இதை கூறுவதற்கிருந்தார் என்பதை நாங்கள் கவனத்தில் கொள்கிறோம்.

> "இலட்சுமையா நாயுடு பி.1-க்கு பதில்வாசகமாக 11.5.1955 அன்று விடையளித்தார். கு.வி.மு.ச., 145 நடவடிக்கையினுள் பி.44-ஆக அது குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரங்கசாமி நாயுடுவுக்கும் இலட்சுமையா நாயுடுவுக்கு இடையே செய்துகொண்ட தகுநிலை பிரிவு பற்றி தெளிவாக அவர் ஒப்புக்கொண்டார்."

149. இந்த கூற்று மேல்முறையீட்டாளர்களின் வழக்கிற்கு எதிராக செல்கிறது. ஆர். கிருஷ்ணம்மாள் என்பவரின் வழக்காக அது தோன்றுகிறது. மேலும், பி.42.ஐ காண்கையில் (10.5.1955 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்பாக குறியீடு செய்யப்பட்டுள்ளது) லஷ்மையா நாயுடு அவர்களுக்கிடையே அங்கு பாகப்பிரிவினை இல்லை என்று கூறி பி.43 அனுப்பியதாகவும், அதற்கு பி.44 பதிலுரையை இறந்துபோனவர் அனுப்பினார் என்று நிறைவேற்றாளர் கு.வி.மு.ச., பிரிவு 145 நடவடிக்கையினுள் தெரிவித்துள்ளார். அதன்பின்னர் 10.5.1955 அன்று "நவ இந்தியா"வினுள்ள விளம்பர வெளியீட்டினால் அடுத்த தேதியிலேயே ஒரு ஆட்சேபணை விளம்பரம் வெளியிடப்பட்டது அவருக்கு தெரியவந்தது என்று பி.சா.1 கூறியுள்ளார்.

150. 1955-இல் 26 வயதுடையவரும், கு.வி.மு.ச., பிரிவு 145 நடவடிக்கையிலுங்கூட சாட்சியமளித்துள்ள ம.த.சா.1-ஆனவர் என்ன கூறியுள்ளார் என்பதைப் பார்ப்போம். வி. ரங்கசுவாமி நாயுடுவின் மறைவுக்கு முன்னரே லஷ்மையா நாயுடுவுக்கு எழுத்துமூல அறிவிப்பு தெரியும் என்று நிலைநாட்டப்பட்டதை ஒருவேளை

அவர் தெளிவாக அங்கு ஒப்புக்கொண்டிருந்து, பி.1 தேதி பற்றி தெளிவுபடுத்தியிருப்பின், முரண்பாடுகளுக்குட்பட்டு மேல்முறையீட்டாளர்கள் இந்த இடத்தில் வெற்றிகாணலாம். பாகப்பிரிவினை செய்துவிட்டதாக இந்திய செய்தித்தாளில் 10.5.1955 அன்று வி. ரங்கசுவாமி நாயுடு அறிவிப்பு வழங்கினார் என்று கூறியபின்னர், மேலும் கூறியதாவது, அவ்வாறான செய்தித்தாள் விளம்பரத்தை வி. ரங்கசுவாமி நாயுடு போலியாக செய்தார் எனவும், கு.வி.மு.ச., பிரிவு 145 நடவடிக்கையில்தான் விருப்புறுதி ஆவணம் மற்றும் செய்தித்தாள் விளம்பரம் பற்றி அவருக்கு தெரியவந்தது என்று அதன்பிறகு அவர் கூறினார். 'நவ இந்தியா'-வில் 12.5.1955 அன்று வி. ரங்கசுவாமி நாயுடு ஒரு காகித வெளியீடு வழங்கினார் என்றும் அதன்பின்னர் அவர் கூறினார். ஆனால் மீண்டும் பிரிவு 145 நடவடிக்கைகளுக்கிடையே அதைப்பற்றி அவருக்கு தெரியவந்தது என்று கூறியுள்ளார். அவருடைய தந்தை வி. ரங்கசுவாமி நாயுடுவை பி.1 வெளியீடு ஏன் கொடுத்தார் என்று கேட்கவில்லை என மேலும் அவர் கூறினார் பி.1 வெளியீடு ஏன் கொடுக்கப்பட்டதென்று அவர் அறியவில்லை என்று சாட்சி கூறியுள்ளார் பிரிவு 145 நடவடிக்கையில் தன்னுடைய தந்தைவழி சிறிய மாமா செய்தித்தாள் விளம்பரத்தை தாக்கல் செய்தாரா? என்று தனக்குத் தெரியாது என அதன்பின்னர் அவர் கூறினார். பி.1-க்கு எதிர்செயலாக தன்னுடைய தந்தை விளம்பரம் செய்தார் என்று ஏ.1-இல் குறிப்பிடப்பட்டுள்ளது. தனது தந்தையால் அந்த விளம்பரம் கொடுத்திருக்கக்கூடும் என்று மேலும் அவர் கூறினார் (தமிழிலிருந்து மொழிபெயர்ப்பாகியிருந்து தெளிவாக நீதி செய்யவில்லை, "அவருடைய தந்தை விளம்பரம் கொடுத்திருக்கக்கூடும்" என்று அதை நாங்கள் படித்தறிகிறோம்") தன்னுடைய தந்தைவழி சிறிய மாமாவால் கொடுக்கப்பட்ட விளம்பரமும் மற்றும் தன்னுடைய தந்தை எதிருரையாக கொடுத்த விளம்பரமும்

ஏ.1 உரிமை வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதாக அவர் கூறினார். மேலும் சொத்துகளை அளவாலும், எல்லையினாலும் பாகப்பிரிவினை செய்யவில்லை என்று தன்னுடைய தந்தை செய்தித்தாள் விளம்பரத்தை கொடுத்ததையும் மற்றும் பங்குரிமைகள் பிரிவை தன்னுடைய தந்தை ஒப்புக்கொண்டார் என்று சொல்வது சரியல்ல என அவர் கூறினார். ரங்கசுவாமி நாயுடு 16.5.1955 அன்று தன்னுடைய தந்தைக்கு பதிலுரை வழங்கியதாக (அசல் வழக்கு எண் 71/1958 வாதுரை) ஏ.1-இல் குறிப்பிட்டிருப்பதாக அவர் கூறினார். பின்னர் கு.வி.மு.ச., பிரிவு 145 நடவடிக்கையினுள் (அப்படியே) பி.42, பி.43 மற்றும் பி.44 ஆக முறையே குறியீடு செய்யப்பட்டது என்றும் மற்றும் அந்த நடவடிக்கையில் அவர் வாக்குமூலம் கொடுத்தார் என்று சொல்வது சரிதான் என அவர் ஒப்புக்கொண்டுள்ளார். அவருடைய தந்தை அனுப்பியதாக கருதப்படும் 11.5.1955 தேதியிட்ட பி.43 அறிவிப்புக்கு வி. ரங்கசுவாமி நாயுடு 16.6.1955 அன்று மறுமொழி கூறியதாக காண்பிக்கக்கூடியதை முக்கிய ஆதாரமாக நாங்கள் நினைக்கிறோம். பி.2-வில் விவரிக்கப்பட்டவாறு இலட்சுமையா நாயுடுவுக்கு 10.5.1955 அன்று வெளியீடு தெரியவந்ததாக பொருள்படுகிறது. பி.43-இன் பொருளடக்கங்கள் மிக துல்லியமாக கிடைக்கவில்லை.

151. கு.வி.மு.ச., பிரிவு 145 நடவடிக்கையில் ம.சா.1 விசாரிக்கப்பட்டபோது, முதல் விசாரணையில் பி.42, பி.43 அல்லது பி.44 குறித்து அவர் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. பிறகு குறுக்கு விசாரணையில் 'நவ இந்தியா(வெளியீடுக்கு தனது தந்தை ஒருவேளை பதிலுரைத்தாரா என்று தனக்கு தெரியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

152. இந்த விடயத்தினுள் முரண்பாடான அடிப்படையின்மீது உயர் நீதிமன்றம் முன்னேறிச் சென்றிருப்பதை நாங்கள் கட்டாயம் கவனத்திற்கொள்கிறோம். அசல்

வழக்கு எண் *89/1983*-இல் பி.*42*, பி.*43* மற்றும் பி.*44* குறித்த வாதுரைகள் அங்கில்லை. *12.5.1955* தேதியிட்ட பி.*1* அடிப்படையின்மீது வாதியின் வழக்கிற்கு விடையாக *10.5.1955* அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டதாக ஒரு வழக்கு முதல் பிரதிவாதியால் புனையப்பட்டிருப்பதை உயர் நீதிமன்றம் கண்டறிந்துள்ளது. *11.5.1955* மற்றும் *16.5.1955* தேதியிட்ட அறிவிப்பு கடிதங்கள் முன்னிலைப்படுத்தப்-படாததையுங்கூட உயர் நீதிமன்றம் கவனத்தில் கொண்டுள்ளது.

153. எவ்வாறாயினும், இரு தினங்களன்றும் அதாவது, *10.5.1955* மற்றும் *12.5.1955* அறிவிப்பு வெளியிடப்பட்டதுபோன்ற வழக்கு அங்கில்லை. இந்நீதிமன்றம் முன்பு முன்னிலைப்படுத்தப்பட்ட சான்றுரை என்னவெனில், *12.5.1955* தேதியிட்ட பி.*1* ஆகும். அவ்வாறிருக்கையில், எதிர்ப்பை பொருட்படுத்தாது ம.சா.*1*-இன் சான்றறிக்கையிலிருந்து ஒருவரால் பொருள்கோளை வரைய இயலுமாயின் அவை சான்றுமூலத்தில் உள்ளதுடன் எங்கள் முன்னர் முரண்பாடுகளை கொணர்ந்துவிடும். ஒருவேளை *12.5.1955* தேதியிடப்பட்ட பி.*1* மீதான அடிப்படையில் நாங்கள் முன்னேறிச்சென்றோமேயானால் பின்னர் *11.5.1955* அன்று அனுப்பப்பட்டிருக்கும் பதிலுரை முற்றிலும் பொருத்தமற்றதாகிவிடும். ஒருவேளை *11.5.1955* அன்று பதிலுரை எதுவும் அனுப்பவில்லையெனில், பின்னர் இலட்சுமையா நாயுடுவை பிரிக்கும் அறிவிப்பு கடிதத்தின் போக்குவரத்தை கற்பித்துக்கூற இயலாது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அங்கு வெளியீடு செய்யப்பட்டிருந்தாலும், அவரது சகோதரரின் மறைவிற்கு முன்னரான அதே அறிவு இலட்சுமையா நாயுடுவின் உடைமையாக எங்களால் கருத இயலாது, பி.*1* தொடர்பான வழக்கில் உயர் நீதிமன்றத்துடன் நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். பிரிவினையைச் செயல்படுத்துவதற்கு செய்தித்தாளில் உள்ள அறிவிப்பு கூட்டுச்சொத்து உரிமையரால் வழங்கப்பட்ட அறிவிப்பாக கருத இயலாது என ஒரு

கணத்தில் நாங்கள் தீர்மானிக்கவில்லை, எனினும், வெளியிடப்பட்ட அறிவிப்பு பெறுநராக கருதப்படுபவருக்கு அது தெரியவந்ததென்று சான்றில்லாத வெறும் காரணம் போதுமானதல்ல. செய்தித்தாளில் உள்ள அறிவிப்பு பொதுமக்களுக்கு சார்வுசெய்யப்பட்ட அறிவிப்பாக கருதிக்கொண்டாலும், தேவையானது என்னவெனில், சம்பந்தப்பட்ட கூட்டுச் சொத்துரிமையருக்கான அறிவிப்பாகும். (மேற்கண்ட) (அட்டாகட ராகவம்மா-வில் பத்திகள் 28 மற்றும் 32-ம் இதற்கு முன் பத்தி 89-இல் எங்களால் பிரித்தெடுக்கப்பட்டதைக் காண்க). ஒரு நபர் குறிப்பாக ஒரு செய்தித்தாள் படித்தறிந்திருப்பார் என்பதையோ, இன்னும் முக்கியமாக இந்த அறிவிப்பை அவர் படித்திருப்பார் என்று அனுமானிக்க இயலாது. மேல்முறையீட்டாளர்களின் வழக்கிலுங்கூட தோன்றுவதாவது, 10.5.1955 தேதியிட்ட அறிவிப்பினை பார்த்தபின், 12.5.1955 தேதியிட்ட பி.1.ஐ கருத்திற்கொண்டு, இலட்சுமையா நாயுடுவால் அனுப்பப்பட்ட 11.5.1955 தேதியிட்ட அறிவிப்பு ஏற்றுக்கொள்ள முடியாதது என்பதை நாங்கள் கண்டறிந்தோம். இலட்சுமையா நாயுடுவின் அறிக்கையில் உள்ள தகவல்கள் 11.5.1955 தேதியிட்ட பதிலுரையின் முக்கியத்துவத்தை உறுதிப்படுத்தும். இலட்சுமையா நாயுடு தன்னுடைய மறைவிற்கு முன் 12.5.1955 தேதியிட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட அறிக்கை பற்றி அவர் அறிந்திருந்தார் என்பதற்கு ஆதாரமில்லை. ஏறத்தாழ வி. ரங்கசுவாமி நாயுடுவால் பிரிவினை எதுவும் கொண்டுவரப்படவில்லை என்ற காரணத்தால், மேற்படி கலந்தாய்வின் பார்வையில் விருப்புறுதி ஆவணம் செல்லத்தகுந்ததல்ல. ஆதலால் மேல்முறையீட்டாளர்களுக்கான பாதையின் எல்லையாக அது இருக்கும். இந்து வழியுரிமைச் சட்டம் 1956 இயற்றுவதற்கு முன்னரே 1.6.1955 அன்று ரங்கசுவாமி நாயுடு இறந்துவிட்டார் என்பதை நினைவிற்கொள்ளவேண்டும். அவரது மரணத்தின்விளைவாக இந்து

கூட்டுக்குடும்பத்தின் பொறுப்புரிமைப் பங்கினை அவர் விட்டுச்சென்றார். ஆகையால், அவருடைய ஆஸ்திகளுக்கு வாரிசுரிமை தொடங்கியபோது இந்து பெண்களின் சொத்துரிமைச் சட்டம் *1937* பிரிவு *3(2)* வகைமுறைகள் பொருந்தும். வேறுவகையில், அவரது கைம்பெண் ர. கிருஷ்ணம்மாளுக்கு ஆதரவாக தொடங்கவிருக்கும் ஒரு வரம்புடை உரிமையாகும். இந்த ஆஸ்தி இ.வ. சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் கீழ் தனித்த ஆஸ்தியாக பொலிவுறும். இவ்வழக்குகளின் வழக்குரையிலுள்ள அட்டவணைச் சொத்து உள்ளடங்கலாக சொத்து மீதான அவளுடைய உரிமைகளை விட்டுக்கொடுப்பதற்கு மு.வ. எண் *71/1958*-இல் அவள் ஒத்திசைந்தபோது இலட்சுமையா நாயுடு பிரிவினருக்கு ஆதரவாக முழுமையான உரிமைகள் வழங்கப்பட்டன. இந்து வாரிசுரிமைச் சட்டம் அமலுக்கு வந்தபின்னர் விருப்ப ஆவணம் எழுதாமல் இறப்பது குறித்து இந்து உரிமைகள் உள்ளவர்களை பறிக்கும் என்றிருக்கவேண்டும். ரங்கசுவாமி நாயுடு மறைவின் விளைவுகள் இச்சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பிருந்தது என்பதை மீண்டும் நாங்கள் திரும்பக்கூறுகிறோம். இப்போது செல்லத்தகுந்த விருப்புறுதி ஆவணம் இருப்பதாகவும், அதாவது குடும்பத்தில் பிரிவினை செயல்படுத்தப்பட்டதாக கருதிக்கொண்டு விருப்புறுதி ஆவணத்தின்கீழ் ஆயுள் உரிமை இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு *14(1)* மற்றும் பிரிவு *14(2)*-ஐ ஈர்க்குமா? என்பதை நாம் பரிசீலிப்போம்.

<u>பிரிவு *14(1)* -எதிர்- *14(2)*, இந்து வாரிசுரிமைச் சட்டம், *1956*</u>

154. இந்து வாரிசுரிமைச் சட்டம், பிரிவு *14* படித்தறிவது பின்வருமாறு:

"4. ஒரு இந்து பெண்ணிற்கு அவளுடைய உடைமைகள்

முழுநிறைவான உடைமைகளாக இருத்தல்.-

(1) ஒரு இந்து பெண்ணின் சுவாதீனத்தில் இச்சட்டம் தொடங்கிய முன்னரோ அல்லது பின்னரோ ஏதேனும் சொத்து பெறப்பட்டிருந்ததாயினும், அதிலிருந்து அவள் வரம்புடை உரிமையாளராக இல்லாமல் முழு உரிமையாளராக வகிப்பார். விளக்கம்:- இந்த உட்பிரிவில் ஒரு இந்து பெண் வாரிசுரிமையினாலோ அல்லது இறுதி பத்திரத்தின் மூலமாகவோ அல்லது பாகப்பிரிவினையாகவோ அல்லது ஜீவனாம்சத்திற்கு பதிலாகவோ அல்லது ஜீவனாம்சம் நிலுவையாகவோ அல்லது ஏதேனும் தனியொரு நபரிடமிருந்து நன்கொடையாகவோ, ஒரு உறவினராயினும் அல்லது இல்லாவிடினும் அவளது திருமணத்தின்போதோ, முன்னரோ அல்லது பின்னரோ அல்லது அவளது தனித்திறத்தினாலோ அல்லது கடுமுயற்சி அல்லது முயன்றுபெற்று அல்லது உரிமைத்தவணை அல்லது வேறு வழிமுறைகள் என்னவகையிலானும், மேலும், இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னருங்கூட அவ்வாறு உடனடி சீதன உடைமையாக வைக்கப்பட்டிருந்து அவளால் ஈட்டப்பட்ட அசையும் மற்றும் அசையாச் சொத்துகள் இவ்விரண்டும் "சொத்து" என்பதில் உள்ளடங்கும்.

(2) உட்பிரிவு *(1)*-னுள் நன்கொடை வழியாகவோ அல்லது விருப்புறுதி ஆவணத்தின்கீழ் அல்லது வேறேதேனும்

> ஒப்பந்தப் பத்திரம் அல்லது தீர்ப்பாணையின்கீழ் அல்லது ஒரு உரிமையியல் நீதிமன்றத்தின் ஆணையின் படி பெறப்பட்ட ஏதேனும் உடைமைக்கும் அல்லது ஒரு தீர்ப்பின்கீழான நன்கொடை, விருப்புறுதி ஆவணம் அல்லது வேறு ஒப்பந்தப் பத்திரம் அல்லது தீர்ப்பாணையின் ஷரத்துகள்படியும், அவ்வகை சொத்து-களினுள் ஒரு வரையறை உடைமையை நிர்ணயித்த தீர்ப்பு அல்லது ஆணைக்கு பொருந்துமாறு எதுவும் இல்லை."

155. முன்தீர்ப்பில்லாதது இன்றி பிரிவு 14-இன்மீது வைப்பதற்கான பொருளடக்கம் மட்டுமல்லாது. பெருமளவிலான சந்தர்ப்பங்களில் இந்நீதிமன்றம் உட்பட நீதிமன்றங்களின் கவனத்தை கவர்ந்துள்ளது. எங்கள் முன்னர் ஏராளமான தீர்முடிவுகள் மேற்கோளாக காட்டப்பட்டுள்ளது. இவ்வழக்கின் பொருண்மையில் பிரிவு 14(2)-இன் வகைமுறைகள் பொருந்துமென்று மேல்முறையீட்டாளர்கள் வாதிடக்கூடும். அப்படியிருக்க பிரிவு 14(1) பொருந்துகிறது என்ற உயர் நீதிமன்றத்தின் கருத்தினை நிலைநாட்டும்படி எங்களை இலட்சுமையா நாயுடுவின் பிரிவினர் அழைக்கக்கூடும்.

156. பிரிவு 14(1) பொருந்துமாயின், அது பின்வரும் விளைவுகளைக் கொண்டிருக்கும்:

> வழக்குரை அட்டவணை சொத்துகள் உள்ளடங்கலாக ஆர். கிருஷ்ணம்மாள் கொண்டிருந்த சொத்துகளில் உள்ள ஆஸ்திகள் முழுநிறைவானதாகிவிடும். பிறகு, உயில்வழி

உரிமையரான மேல்முறையீட்டாளர்கள் செய்த கோரிக்கையின் மிகையான உச்சநிலையும் விருப்புறுதி ஆவணத்தின்கீழ் அளிக்கப்பட்ட உரிமைகள் முழுவதையும் ஆர். கிருஷ்ணம்மாளின் மறைவினால் முறியடிக்கக்கூடும் மேலும், அவர்கள் உரிமையில்லாமல் இருக்கக்கூடும். அதற்குமாறாக வைத்துக்கொண்டு பிரிவு 14(2) பொருந்து-மாயின், பிறகு, ரங்கசுவாமி நாயுடு விட்டுச்சென்ற விருப்புறுதி ஆவணத்தின் அடிப்படையின்மீது இந்த மேல்முறையீட்டாளர்கள் வேறுநிலையில் செல்லத்தகுந்தது மற்றும் உண்மையென்று பின்விளைவுரிமையாளர்களாக மீண்டும் உரிமை கோரலாம்.

157. வழக்கு சட்டத்தை நாங்கள் பரிசீலிப்பதற்கு முன்பு 14(1)-இன் கீழ் ஆர். கிருஷ்ணம்மாள் வழக்கினை புனையவில்லை என்ற மேல்முறையீட்டாளர்களின் வாதுரைகளுடன் தொடர்புகொள்வது அவசியமாகும் மேலும் அவள் மு.வ. எண் 71/1958-இல் உள்ள விருப்புறுதி ஆவணத்தின் கீழ் மட்டுமே. மு.வ. எண் 71/1958-இன் பத்தி 11-ஐ தான் நாங்கள் குறிப்பிடுகிறோம். அதை கீழுள்ளவாறு படித்தறிகிறது.

"11. எவ்வாறாயினும் வாதியானவர் மேலும் கூறியதாவது, 145 நடவடிக்கையினுள் ஆர். வி. இலட்சுமையா நாயுடுவால் வழக்கு மிகையாக புனையப்பட்டுள்ளதை ஒப்புக்கொண்டிருந்தாலுங்கூட, அவளது உரிமைக்ள மிகுதியான அளவில் மேம்பட்டுள்ளது. மேலும் கூட்டுச்சொத்து உரிமையராக 1937-இன் XVIII-ஆவது

மற்றும் 1956-இன் XXX-ஆவது சட்டங்களின் ஒருங்கிணைந்த நடவடிக்கையின்கீழ் முழுமையான நிலையிலுள்ள கூட்டுச் சொத்துகளின் ஒரு பாதிக்கும், தன்னுடைய பங்குரிமையின் சுவாதீனம் மற்றும் பாகப்பிரிவினையை கோருவதற்கும் அவள் தகுதியுடைய-வராகிறார். 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் மறு பாதி பங்குரிமைகளுக்கு தகுதியுடையவராகிறார்கள். 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகளின் சுவாதீனத்திலுள்ள அனைத்து சொத்துகளையும் துல்லியமாக குறித்துரைக்க வாதியால் முடியவில்லை. ஆனால், அவளால் அவ்வாறு செய்த முடிந்த அளவிற்கு, அவற்றினை அட்டவணை II-னுள் அவள் விவரித்துள்ளார். வாதியானவர் மிகுதியான விவரக்குறிப்புகள் அவளுக்கு கிடைக்கும்போதெல்லாம் அவற்றுடன் சேர்ப்பதற்கு ஏக்கத்துடன் அனுமதி கோரினார். 1 முதல் 4 வரையிலான பிரதிவாதிகள் அவர்களின் சுவாதீனத்திலுள்ள கூட்டுக் குடும்பச் சொத்துகளை முழுமையாகவும், சரியாகவும் வெளிப்படுத்த அவர்களை அழைப்பதற்குங்கூட வாதி வேண்டுகோள் விடுத்தார்."

இந்து வாரிசுரிமைச் சட்டத்தினையுங்கூட திட்டவட்டமாக குறிப்பிட்டிருப்பது தெளிவாகின்றது.

158. கற்றறிந்த நீதிபதிகள் மூவரால் **கர்மி -எதிர் அம்ரு மற்றும் பலர்**[55]-இல் தீர்ப்புரை வழங்கப்பட்டுள்ளது. ஒரு இந்து தன்னுடைய ஒட்டுமொத்த ஆஸ்திகளின்மீது தனது விதவைக்கு அவளது ஆயுட்காலத்தின்போது உயில்வழி உரிமையளித்து அதன்பின்னர் தனது சமகாலத்தவர்களுக்கு முன்கூறப்பட்டவைகள் மரபுப்படி வந்தடையுமென்ற முன்னதான விருப்புறுதி ஆவணத்தை முறித்தறிந்து நிறைவேற்றப்பட்ட ஒரு விருப்புறுதி ஆவணத்தின் வழக்காகும். அந்த விருப்புறுதி ஆவணம் நவம்பர் 13, 1937 தேதியிட்டதாகும். விருப்புறுதி ஆவணம் என்கிற நம்பிக்கையின்மேல் அடுத்து வந்திருக்கும் விதவையானவர் விருப்புறுதி ஆவணத்தின்கீழ் அவருக்கு அளிக்கப்பட்டதற்கும் அதிகமாக உரிமைகள் எதையும் கோருவதற்கு இயலாது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இந்து வாரிசுரிமைச் சட்டம் 1956-இன் கீழ் ஆயுள் பாத்தியதை முழு உரிமைச் சொத்தாக முடியவில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

159. **வி. துளசம்மா -எதிர்- சேஷூ ரெட்டியின்**[56] தீர்ப்புரையைக் கற்றறிந்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு வழங்கியுள்ளது. அதில் 1939-ஆம் வருடத்தில் தனது சகோதரருடன் வட்டு நிலையில் மேல்முறையீட்டாளரின் கணவர் இறந்துபோனார் என்பது வழக்காகும் ஜீவனாம்சத்திற்கான தீர்ப்பாணையை அவள் பெற்றாள். அதனை பின்தொடர்ந்த நிறைவேற்றுகை நடவடிக்கையில் நீதிமன்றத்திற்கு வெளியே நிகழ்ந்த தீர்வின் கீழ் 1949 ஜூலை 30 அன்று சான்றிடப்பட்ட அட்டவணைச் சொத்துகள் மேல்முறையீட்டாளருக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது; எனினும்,

---

55. (1972) 4 எஸ்.சி.சி. 86

56. (1977) 3 எஸ்.சி.சி. 99

அது பராதீனம் உரிமை வழக்கின் மீது எழும்பியுள்ள இந்த மேல்முறையீடு மேல்முறையீட்டாளர் மேல்முறையீட்டாளரால் செய்யப்பட்ட உடைமை மாற்றத்தை குறைகூறி தாக்கல் செய்துள்ளனர். இந்த பொருண்மைகளில் நாங்கள் கவனித்துள்ள நியதிகள் பின்வருமாறு விதிக்கப்பட்டுள்ளது:

> 62. *(1)* ஒரு இந்து பெண்ணின் பராமரிப்பு உரிமை ஓர் பொருளற்ற சம்பிரதாயமாகவும் அல்லது பரந்த மனப்பான்மை மற்றும் பரிவுக்கூறு வகையில் ஏமாற்றுகின்ற ஓர் உரிமை கோரிக்கையாக இருப்பதாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால், யஜ்னவல்காவிலிருந்து மனுவரை தொடங்கி முந்தைய இந்து சட்ட வல்லுநர்களாலுங்கூட உறுதியாக ஊன்றியுரைத்தும், மேலும், தூய்மையான இந்து சாஸ்திரிய சட்டத்தின்படி வரையறை செய்தும், மேலும், அங்கீகரிக்கப்பட்ட கணவன் மனைவிக்கு இடையேயுள்ள புனிதமான உறவுமுறையிலிருந்து கசிவுறும் உரிமைப் பொருளுக்கு எதிரான நிலையான தனியுரிமைகளாகும். அப்படிப்பட்ட உரிமை உடைமைக்கான உரிமையாக இருப்பதற்கில்லை. ஆனால் உடைமைக்கு எதிரான உரிமையாகும். எனவே தனது மனைவியை பேணுவதற்கு கணவர் தனிப்பட்ட கடமையுணர்ச்சி கொண்டிருக்கிறார். மேலும், அவருக்கோ அல்லது

குடும்பத்திற்கோ சொத்துகள் இருக்குமாயின் அதனின்று பராமரிப்பதற்கு பெண்ணுக்கு சட்டப்படியான உரிமையுள்ளது. ஒரு பெண்ணை பேணுவதற்கான பொறுப்புரிமை உருவாக்கப்பட்டிருந்தால் மேற்சொன்ன உரிமை சட்டப்படி நிறைவேற்றத்தக்க ஒன்றாக ஆகிவிடும். எவ்வாறிருப்பினும் பேணுகைக்கான உரிமை கோரிக்கை பொறுப்புரிமை இல்லாமல்கூட முன்னிரு உரிமை என்பதில் சந்தேகமில்லை. அவ்வாறிருக்க, அப்படிப்பட்ட உரிமையை அங்கீகரித்தும் அல்லது அறிவிக்கும் எந்த மாற்றுரிமையும் எந்தவித புது உரிமைத்தகுதியை அளிக்காது ஆனால் முன்னிரு உரிமைகளை வெறுமையாக மேற்குறிப்பெழுதி உறுதிசெய்துள்ளது.

(2) எனினும் பிரிவு *14(1)*-இன் கூடுதலான விளக்கத்தில் பொதிந்துள்ள பரந்தகன்ற சாத்தியமான சொற்களை *1956* சட்டத்தின் நோக்கத்தை முன்னேற்றும் விதத்தில் பெண்களுக்கு ஆதரவாக பெருந்தன்மை வாய்ந்ததாக பொருள்கொள்ளவேண்டும். எனவே சமூக-பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு இந்த நெடுங்காலத்தேவையுடைய சட்டத்தினால் எய்தப்பெறவேண்டும்.

(3) மேலும் பிரிவு *14*-இன் உட்பிரிவு *(2)*-னுள்ள விலக்குக்கூறின் தன்மை பெருமளவில் பிரிவு *14(1)*-இன் இயங்குதலுடன் தலையீடு இல்லாமல் தன்னுடைய சொந்த புலத்தை கொண்டுள்ளது. இந்த விலக்குக்கூறினை முக்கிய வகைமுறையுடன் முற்றிலும் முரண்படும் விதத்திலோ அல்லது பிரிவு *14(1)*-ஆல் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அல்லது முக்கியமான வகைமுறையின் பயன்களை அழிக்கும் விதத்தில் பொருள்கொள்ளக்கூடாது.

(4) பிரிவு *14* உட்பிரிவு *(2)* பெண்களுக்கு ஆதரவாக தற்சார்புரிமை மற்றும் புதிய உரிமைகளை முதன்முறையாக உருவாக்கும் ஒப்பந்தப் பத்திரங்கள், தீர்ப்பாணைகள், தீர்ப்புகள், நன்கொடைகள் இன்னபிறவற்றுக்கு பொருந்தும். எனவே முன்னிரு உரிமைகளை அங்கீகரித்தல் அல்லது விளம்புதல், மேற்குறிப்பிடுதல், உறுதிசெய்தலை மட்டுமே நாடிச்சென்ற தொடர்பானவையைச் செயற்படுத்துவதற்-கில்லை. அவ்வகையான வழக்குகளில் பெண்களுக்கு ஆதரவாக உள்ள வரையறை உரிமை சட்டப்படி அனுமதிக்கத்தக்கதாகும். எனினும், பிரிவு *14(1)*-ஐ இந்தக் கோணத்தில் செயற்படுவதற்கில்லை. எவ்வாறிருப்பினும், எங்கு ஒரு ஒப்பந்தப் பத்திரம்

முன்னிரு உரிமையை மட்டுமே அங்கீகரித்தும் அல்லது விளம்புகைக்கிறதோ. தகுதிவாய்ந்த பெண்ணிற்கான பங்குரிமை அல்லது பாகப்பிரிவினை அல்லது வாழ்க்கைப்படியுதவி என்பன போன்ற கோரிக்கைக்கு இந்த உட்பிரிவினை பயன்படுத்துவதற்கில்லை. பின்னர் பெண்களுக்கான வரம்புடை பாத்தியதை தானாக விரிவுற்று பிரிவு *14(1)*-இன் ஆற்றலால் முழுநிறைவான ஒன்றாக ஆகிவிடும். எனவே ஆவணத்தின் கீழ் ஏதேனும் கட்டுப்பாடுகள் வைக்கப்பட்டிருக்குமாயின் அதனை பொருட்படுத்தாமல் விட்டுவிடவேண்டும். ஆகையால், எங்கு ஒரு சொத்து ஒரு பெண்ணுக்கு பாகப்பிரிவினையின் ஒரு பங்காகவோ அல்லது பராமரிப்புத் தொகைக்கு பதிலாகவோ ஒதுக்கப்பட்டு அல்லது உரிமை மாற்றீடு செய்யப்பட்டிருந்தால், இந்த ஒப்பந்தப் பத்திரத்தை உட்பிரிவு *(2)*-இன் சுற்றெல்லைக்கு வெளியே வரப்பெற்று மாற்றாளரின் அதிகாரங்கள்மீது வரையறைகள் ஏதேனும் வைக்கப்பட்டிருந்தாலும் அதனை பொருட்படுத்தாது பிரிவு *14(1)*-ஆல் ஆளப்படும்.

(5) "ஒரு பாகப்பிரிவினையில் ஒரு இந்து பெண்ணால் ஈட்டப்பெற்ற சொத்து" அல்லது "வாழ்க்கைப் படியுதவிக்கு பதிலாக" அல்லது "ஜீவனாம்ச நிலுவைத்

தொகை" முதலிய நேரடிச் சொற்களின் பயன்பாடுகள் பிரிவு *14(1)*-இன் விளக்கத்தினுள் உட்பிரிவு *(2)*-இன் செயற்பாடுகளிலிருந்து திட்டவட்டமாக தவிர்க்கப்பட்டுள்ள இந்தவகை பிரிவுகளுக்கு உட்பிரிவு *(2)* பொருந்தாதென்று தெளிவுபடுத்தியுள்ளது.

(6) பிரிவு *14(1)*-இன் பரந்தகன்ற சாத்தியமான வீச்சுக்குள் 'உடைமைகளால்' என்னும் சொற்கள் சட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்றாலும், உரிமையாளர் முன்கூறப்பட்ட சுவாதீனத்தின் உண்மையான அல்லது உடல் உடைமையில் இல்லாவிடினுங்கூட ஒரு சொத்தினை சொந்தமாக வைத்திருக்கும் நிலையை உள்ளடக்கும் ஆகையால், எங்கு ஒரு விதவைக்கு *1956* சட்டம் பிறப்பிக்கப்பட்ட சமயத்தின்போதோ, அதற்கு முன்னரோ ஒரு முதல்நிலைத் தீர்ப்பாணையின்கீழ் உடைமையில் ஒரு பங்குரிமை பெற்றிருந்து இறுதிநிலைத் தீர்ப்பாணையின் கீழ் உள்ளபடியான சுவாதீனத்தை கொடுபடாமல் இருந்ததேயானால், இந்த சொத்தின் சுவாதீனத்தில் அவள் இருப்பதாக கருதப்படும். பின்னர் பிரிவு *14(1)*-இன் ஆற்றலால் அவளுக்கு சொத்தில் முழுமையான உரிமை கிடைக்கக்கூடும். அதற்கு இணையாக நன்கு நிலைநிறுத்தப்பட்டிருப்பதாவது, எவ்வாறிருப்பினும் இந்த

விதவையின் சுவாதீனம் ஒரு பாத்தியதை, உரிமை அல்லது உரிமைமூலத்தின் சில அடிச்சுவட்டின்கீழ் கட்டாயமிருக்கவேண்டும் ஏனெனில், இந்த பிரிவு எந்தவித உரிமை மற்றும் உரிமைமூலம் எதுவுமின்றி அத்துமீறுபவரின் சுவாதீனத்தினுடைய எந்தவொரு படிநிலையையும் கூர்ந்து ஆராயவில்லை.

(7) பிரிவு *14(2)*-இல் பயன்படுத்தப்பட்டுள்ள 'வரையறை உடைமை' என்னும் சொற்கள் பிரிவு *14(1)*-இல் தெரிவித்துள்ளவாறு வரம்புடை பாத்தியதையைவிட பரந்தகன்றதாகும், மேலும், அவை வரம்புடை பாத்தியதை மட்டுமல்லாது மாற்றம் பெறுபவரின்மீது வைக்கப்பட்டிருக்கும் வேறுவகையான காலவரம்பேயானாலுங்கூட உள்ளடங்கியிருக்கும்."

160. **<u>சகுந்தலாதேவி -எதிர்- கமலா</u>**[57] -இல் மீண்டும் கற்றறிந்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு எங்கு ஒரு விருப்புறுதி ஆவணத்தின்படி ஜீவனாம்சத்திற்காக ஒரு இந்து மனைவிக்கு ஆயுள் பாத்தியதை வழங்கப்பட்ட வழக்கினை கையாண்டது இந்நீதிமன்றம் *(மேற்கண்ட)* <u>வி. துளசம்மாவின்</u> தீர்ப்புரையைப் பின்பற்றி பிரிவு *14(1)* அதில் பொருந்தக்கூடும் என்ற கருதுநிலையை எடுத்தது. விருப்புறுதி ஆவணத்தின் ஷரத்துகள் உடைமையானது பராதீனம் செய்யக்கூடியதல்ல என்றும், அவர்களுடைய பராமரிப்பிற்காக பொருள்படும் என்றும்

---

57. (2005) 5 எஸ்.சி.சி. 390

பிறவற்றுள் வகைசெய்துள்ளது. எங்கு ஒரு உயிலவர் மூன்று மனைவிகள் கொண்டிருந்து அவர்களில் ஒருவர் அவருக்கு முன் இறந்தார் என்பதே இந்த வழக்காகும். விருப்புறுதி ஆவணத்தின் கீழ் இரண்டாவது மனைவியின் மறைவிற்குப் பின்னர் ஆயுள் பாத்தியதை மூன்றாவது மனைவியிடம் வந்து அடைவுற்றது. இந்த விருப்புறுதி ஆவணம் உரிமை மாற்றத்திற்கான எந்தவொரு அதிகாரமில்லாமல் அவளுடைய பராமரிப்பிற்காக என்ற நிபந்தனையுடன் கூடிய சொத்தை மனைவிக்கு அளித்து வகைசெய்துள்ளது.

161. **சாது சிங் -எதிர்- குருத்வாரா சாஉறிப் நாரிகே**[58]-வில் கற்றறிந்த இரண்டு நீதிபதிகள் அமர்வு பின்வரும் பொருண்மைகளை அவர்கள் முன்பு கொண்டிருந்தது. கேள்விக்குள்ளான இந்த சொத்து சுயமாக ஈட்டப்பட்ட சொத்தாகும். 7.10.1968 அன்று தன்னுடைய மனைவிக்கு ஆதரவாக ஒரு இந்துவால் விருப்புறுதி ஆவணத்தின் விடயப்பொருளாகிவிட்டது. அவரது விதவை குருத்வாராவிற்கு இந்த சொத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார். பிரிவு 14(1) அல்லது 14(2)-இன் கீழ் இவ்விடயம் வீழ்கிறதா? என்று எழும்பிய கேள்வி இந்த வழக்காடியுடைய உட்கிடைப்பொருளாகிவிட்டது. இந்நீதிமன்றம் நீதியரசர் பி.கே. பாலசுப்ரமணியம் அவர்களின் வாயிலாக இந்து மகவேற்புகள் மற்றும் வாழ்க்கைப் பொருளுதவிச் சட்டத்தின் வகைமுறைகளை தெரிந்துகொண்டு தீர்மானித்ததாவது, எந்தவொரு ஒப்பந்தப் பத்திரம் தீர்ப்பாணையில் அதற்கான வகைசெய்தல் இல்லாதிருக்கையில், கணவரின் தனிப்பட்ட உடைமையில் பராமரிப்பிற்கான பொறுப்புரிமை உருவாவதற்-கில்லை. இந்நீதிமன்றம் (மேற்கண்ட) வி. துளசம்மா-விலுள்ள பொருண்மைகளை

---

58. ஏ.ஐ.ஆர். 2006 எஸ்.சி. 3282

கவனிக்க முற்பட்டு எங்கு ஒரு இந்து பெண்மணி (இந்து வாரிசுரிமைச் சட்டம், *1956)* சட்டத் தேதியில் வைத்திருந்த உடைமையில் அவளுக்கிருந்த முன்னிரு உரிமை உள்ளே வரம்பற்ற உரிமையாக நிலைமாறிய வழக்கு என்பது கண்டறியப்பட்டது. அதன்பின்னர் இந்நீதிமன்றம் தீர்மானிக்க முற்பட்டது பின்வருமாறு:

> *"7.* இந்நீதிமன்றத்தின் தீர்மானங்களின் உள்ளடக்கங்களி-லிருந்தும் மற்றும் பிரிவிலிருந்தும் இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-ஐ ஈர்ப்பதற்கு, நடைமுறைக்கு வந்துள்ள இந்து வாரிசுரிமைச் சட்டத்தின்படி ஒரு இந்து பெண்மணி உடைமையின் சுவாதீனத்தில் கட்டாயம் இருக்கவேண்டும் என்பது இப்போது தெளிவாகின்றது. மைனேவின் இந்து சட்டம், *15*-ஆவது பதிப்பு, பக்கம் *1171*-இல் கூறியிருப்பதாவது:
>
> "உட்பிரிவு *(1)*-ஐ விளக்கத்துடன் படித்தபோது, ஒரு இந்து பெண்மணியால் வரம்புடை பாத்தியதையாக கைவசம் கொண்டிருக்கும் உடைமையானது எங்கிருந்தாலும், இச்சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும் அவளுடைய வரம்பற்ற உடைமையாகத் தொடங்கிவிடும் என்பது தெளிவாகின்றது. எனினும், இச்சட்டத்திற்குப் பின் வரையறை உடைமையுடன்கூடிய சொத்தை அவள் ஈட்டியிருந்தால் உட்பிரிவு *(2)* பொருந்தக்கூடும். ஒரு

நன்கொடை, விருப்புறுதி ஆவணம் அல்லது வேறு ஒப்பந்தப் பத்திரம் அல்லது ஒரு தீர்ப்பாணை அல்லது ஆணை அல்லது தீர்ப்பு ஷரத்துகளின் கீழ் மேற்சொன்னவை ஈட்டப்பட்டிருக்கவேண்டும்."

8. கொஸ்தா பெஉறாரி பேரா -எதிர்- உறரிதாஸ் சமந்தா (ஏ.ஐ.ஆர். 1957-இல் கல்கத்தா 557 : 6 சி.டபிள்யு.என் 325] (ஏ.ஐ.ஆர். பக்கம் 559, பத்தி 12)-இல் உள்ள நீதியரசர் பி.என். முகர்ஜி அவர்களின் பின்வரும் சொற்களை கும்மாளப்புரா தக்கின மதாடா கோட்டூருஸ்வாமி -எதிர்- செட்ரா வீரவ்வா (1959 சப்ளி (1) எஸ்.சி.ஆர். 968 : ஏ.ஐ.ஆர். 1959 எஸ்.சி. 577)-இல் (எஸ்.சி.ஆர். பக்கங்கள் 977-78)-இன்படி வழங்கப்பட்ட ஒப்புதலுடன் இந்நீதிமன்றம் மேற்கோள் காட்டியுள்ளது:

"இங்கு தொடக்கத்திலுள்ள வார்த்தைகள் "ஒரு இந்து பெண்ணுடைய அனுபோகத்திலுள்ள எந்த சொத்தும்" ஐயத்திற்கிடமின்றி பொருள்படுவதாவது, பிரிவின் வரம்புக்குள் வருவதற்கு, இச்சட்டம் தொடங்கிய தேதியில் சம்பந்தப்பட்ட பெண்ணின் சுவாதீனத்தில் உடைமை கட்டாயம் இருக்கவேண்டும். இச்சட்டம் செயற்பாட்டிற்கு வந்தபோது பெண்களுடைய அனுபவ

உரிமைகளை அவை தெளிவாக கூர்ந்து ஆராய்கின்றன. உடைமையானது சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட உண்மையான அல்லது கொள்நிலையான ஏதொன்றிலும் அல்லது வேறெந்த வடிவத்திலுமான உடைமையாக இருக்குமானால், இந்து பெண்மணியாலன்றி, இந்த குறிப்பிட்ட பிரிவின் கீழ் பிரச்சினையுள்ள உடைமையிலுள்ள வரம்புடை உரிமை, மேற்சொல்லப்பட்ட சுவாதீனத்தில் வரம்பற்ற உரிமையாக நிலைமாறியதை குறைந்தபட்சம் கோரப்பட்டிருக்குமாயின் "அனுபவ உரிமை" என்னும் சொல்லை இச்சட்டம் செயற்பாட்டிற்கு வந்தபோதிருந்த அதன் பரந்தகன்ற பொருள்படுதலின்படி எடுத்தால், இப்பிரிவு பொருந்தாது."

இணைப்பு: *(எஸ்.சி.ஆர். பக்கம் 978)*

"எங்களது கருத்தில், 'ஒரு இந்து பெண்ணுடைய அனுபோகத்திலுள்ள எந்த சொத்தும்' என்ற சொற்களை எப்படி பொருள்விளக்கம் கொள்ளவேண்டும் என மேலே வெளிப்படுத்தப்பட்ட நோக்கம் சரியான நோக்கம் என்பதாகும்."

9. எரம்மா -எதிர்- வெருப்பண்ணா [*(1966) 2* எஸ்.சி.ஆர். *626* : ஏ.ஐ.ஆர். *1966* எஸ்.சி. *1879*]-இல் இந்நீதிமன்றம் வலியுறுத்தியதாவது, பிரிவினுள் கூர்ந்து ஆராய்ந்தவாறு

> ஒரு இந்து பெண்ணின் அனுபவ உரிமையிலுள்ள சொத்து இந்தச் சட்டம் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ அந்த பெண்ணால் பெறப்பட்ட சிலவகை உரிமைகள் கொண்ட சொத்து என்பது தெளிவாகிறது. எனவே ஒரு இந்து பெண்மணி முற்றிலும் நேர்மைவாய்ந்த கொடைப்பொருளாக உடைமையை அளித்தபின் இச்சட்டத்தின் தேதியில் அத்துமீறியதன்வாயிலாக அவள் உடைமையின் சுவாதீனத்தில் இருந்தார் என்ற காரணத்தின்பேரில் இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் கீழான உரிமை வாதிடலை மறுத்து தள்ளியது, ஆகையால், இந்து வாரிசுரிமைச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்த தேதியில் உரிமை போன்ற சாயலுடன் கூடிய அனுபவ உரிமைக்கான தேவை வலியுறுத்தப்பட்டது."

162. இனிமேலும், இந்நீதிமன்றம் முற்பட்டு தீர்மானித்ததாவது, இச்சட்டத்தின் தேதியில் ஒரு இந்து பெண் உரிமை போன்ற சாயலின்கீழ் வரம்புடை அல்லது முன்னிரு உரிமைகளான இரண்டில் ஒன்றை உடைமையின் சுவாதீனத்தில் கொண்டிருந்தால் *(மேற்கண்ட)* வி. துளசம்மா-வில் உள்ளவை பொருந்தும் என்பதாகும். மேற்கொண்டு தீர்மானித்ததாவது, இச்சட்டத்திற்கு பின்னருங்கூட அதற்கான உரிமை அவளால் பெறப்பட்டிருந்தாலுங்கூட இச்சட்டத்தின் தேதியில் உடைமையின் சுவாதீனத்தை நேரடியாகவும் கொள்நிலையாகவும் கொண்டுள்ள ஒரு இந்து பெண்ணின் தேவைப்பாடுகளை புறக்கணித்து பயன்படுத்த இயலாது என்பதாகும்.

புரா மற்றும் பலர் -எதிர்- காஹிராம்[59]-இல் இந்நீதிமன்றம் எங்கு ஒரு தகப்பனார் விருப்புறுதியாவணத்தின் கீழான சொத்துக்கு உயில்வழி உரிமையளித்த பின்னர் அதில் *14(2)* பொருந்தக்கூடும் என்று தீர்மானித்த வழக்கின் தீர்ப்புரையை நம்பிக்கை ஆதாரமாகக் கொண்டது. இறுதியாகவுங்கூட இந்நீதிமன்றம் **ஊரத் சுப்ரமணியன் -எதிர்- சௌமி மஜூம்தார் மற்றும் பலா**[60]-ஐ சார்ந்திருந்தது. முடிவாக **சாதுசிங் -எதிர்- குருத்வாரா சாஉறிப் நாரிகே மற்றும் பலர்**[61]-இன் தீர்ப்புரையில் பத்திகள் *11, 12, 13* மற்றும் *14*-ஐ கவனிப்பதுங்கூட அவசியமாகும்:

> *"11.* எங்களைப் பொறுத்தவரை தோன்றுவது என்னவெனில், இச்சட்டம் அமலுக்கு வந்தபின்னர் ஒரு இந்து பெண்ணின் எந்தவொரு உடைமையின் சுவாதீனத்தை *(உரிமையல்ல)* கையகப்படுத்துதலானது இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-ஐ சாதாரணமாக தகர்க்க இயலாது. அவளால் ஈட்டப்பட்ட உரிமையின் தன்மையைச் சார்ந்திருக்கும். இச்சட்டத்தின் கீழ் ஓர் மரபுரிமையராக அவள் எடுத்துக்கொண்டால், அதனை பூரணமாக அவள் எடுக்கிறார் என்பதாகும். இச்சட்டத்திற்குப்பின் ஒரு இறுதிப் பத்திரம், நன்கொடை அல்லது வேறுவித நடைமுறைப்படுத்துதலின்கீழ் உடைமையின் சுவாதீனம்

---

59. (1994) 2 எஸ்.சி.சி. 111

60. (2006) 8 எஸ்.சி.சி. 91

61. (2006) 8 எஸ்.சி.சி. 75

கிடைக்கப்பட்டிருக்கையில், அவள் உரிமையின்மீது ஏதேனும் வரையறை வைக்கப்பட்டிருப்பின், இச்சட்டத்தின் பிரிவு *14(2)*-இன் பார்வையில் இந்த வரையறை செயலாற்றக்கூடும்.

12. இந்து வாரிசுரிமைச் சட்டம் அமலுக்கு வந்தபின் உடைமையின் உரிமையிலுள்ள ஒரு இந்து ஆண் இறந்துபோனால், அட்டவணையின்படி அவரது வாரிசுகள் இச்சட்டத்தின் பிரிவு *8*-இன் ஷரத்துகளின்படி அதனை எடுத்துக்கொள்வர் அந்த வாரிசு அல்லது வாரிசுகள் அதனை முழுமையாக எடுத்துக்கொள்வர். இந்த வாரிசு அல்லது வாரிசுகள் மரபில் பெறும் எந்தவொரு வரம்புடை பாத்தியதைக்கும் அங்கு கேள்வியில்லை. அதனால் *17.6.1956*-க்கு பின் ஒரு இந்து ஆண் இறக்கும்போது தன்னுடைய கைம்பெண்ணை தனித்த வாரிசாக விட்டுச்சென்றால் முதல் வகுப்பு வாரிசாக இந்த உடைமையை அவள் பெறுவாள். பின்னர் அவளது பாத்தியதைக்கும் மற்றும் அவளது உரிமையின் காலவரம்பிற்கும் எல்லையில்லை. மேற்சொல்லப்பட்ட சூழமைவுகளில் இச்சட்டத்திற்குப்பின் வாரிசுரிமையின்மீது இச்சட்டத்தின் பிரிவு *14(1)* பொருந்தாது அல்லது செயற்பாடுகளுக்கான அளாவுகை அதற்கில்லை அல்லது வேறுவகையில் இச்சட்டத்தின்

பிரிவு *14(1)*-இன் உதவியை நாடிச்செல்லவில்லை என்றாலுங்கூட ஒரு முழுமையான உரிமையை அவள் பெறுவாள்.

13. சாதாரணமாக ஒரு உடைமையின் உரிமையாளர் அந்தச் சொத்துக்கு உயில்வழி உரிமையளித்தல் அல்லது இறுதிப் பத்திரம் எழுதுவதற்கான உரிமை உள்ளடங்கலாக சொத்தினை கையாளுவதற்கான உரிமை கொண்டிருப்பார். ஆகையால், மரண சாசனத்தினால் அதனை பராதீனம் செய்ய அவரால் இயலும். இச்சட்டத்தின் பிரிவு *30* இந்த உரிமையைப் பாதிப்பது அல்லது குறைப்பது மட்டுமல்லாது, உண்மையில் அந்த உரிமையை மீண்டும் உறுதிப்படுத்தவும் செய்கிறது. ஆகையால் உயில்வழிப்படி தன்னுடைய உடைமையை ஒரு இந்து ஆண் தீர்வுசெய்ய இயலும். அப்படி அவர் செய்யும்போது இச்சட்டத்தின்கீழ் ஒரு வாரிசரிமை விலக்கப்பட்டுள்ளது பின்னால் உயில்வழிப்படியான வாரிசுகளுக்கு இந்த உடைமை சென்றடைகிறது. இதனால், இந்தச் சொத்துகளுக்கு உயில்வழி உரிமையளிக்கும் விருப்புறுதி ஆவணத்தை ஒரு இந்து ஆண் நிறைவேற்றும்போது, அங்குள்ள ஏதேனும் ஒப்பந்தம் செல்லாதது என கண்டறிந்தது நிச்சயமானதென்றாலன்றி, விருப்புறுதி

ஆவணத்தின் ஷரத்துகளுக்கு உட்பட்டு உயில்வழி உரிமையர் எடுத்துக்கொள்வர். அதனால் தன்னுடைய விதவைக்கு ஆயுள் பாத்தியதை அல்லது வரம்புடைப் பாத்தியதையை மட்டும் வழிவகைசெய்யும் தன்னுடைய சொத்துகளை தீர்வுசெய்யும் ஒரு இந்து ஆணுடைய உரிமைகளைப் பாதிப்பதற்கு இச்சட்டத்தில் எதுவுமில்லை. தான் பொருத்தமென கருதி தன்னால் கையாளப்பட்டிருந்த தன்னுடைய தனிப்பட்ட சொத்துகளின் வழியில் இந்தச் சட்டம் நிற்கவில்லை இதன் விளைவாக இச்சட்டத்தின் தாக்குதலுக்கு ஆளாகாத நிலையில் அவருடைய விருப்புறுதி அவணத்தை எதிர்த்துரைக்க இயலாது.

14. அவர் தன்னுடைய உடைமையை வரம்புடை உரிமைக்கான வழிவகை செய்து நேர்மை வாய்ந்து தீர்வு செய்யப்பட்டதன்விளைவாக தன்னுடைய வாரிசு, தனது மனைவி, மனைவி அல்லது விதவைக்கு பாத்தியதை வந்தடைகிறவாறு எடுக்கவேண்டும். இச்சட்டத்தின் பிரிவு *14(2)*-இல் வழிவகுக்கப்பட்டிருப்பதாவது, அவ்விதமான வழக்குகளில், விதவை அவளது உரிமையின்மீது காலவரம்பினால் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இச்சட்டத்தினுடைய பிரிவு *14(1)*-இன் துணைகொண்டு

எவ்வித உயரிய உரிமைகளையும் அவளால் கோருவதற்கு இயலாது. எனவே இச்சட்டத்தின்கீழ் வாரிசுரிமை வழக்குகளில் அந்த வழிமுறை ஈர்க்கப்பட்டுள்ளதாக தீர்மானித்திருந்தாலுங்கூட இச்சட்டத்தின் பிரிவு *14(1)* இயங்குமுறை நீங்கலாக, வேறுவகையில் இச்சட்டத்தின் பிரிவு *14(2)*-இன் அறிமுகத்தினால் வரம்புடை ஆஸ்தி வழங்கப்பட்டதன்பேரிலல்லாமல் சட்டத்தினுள் செல்லத்தகுந்தவற்றை இச்சட்டத்தினால் வலுப்பெறச் செய்யப்பட்டது. இச்சட்டத்திற்குப் பின்னர் நடைமுறைக்கு வரப்பெற்ற விருப்ப ஆவணம் பற்றிய செயலுரிமை வழக்குகளில் இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் வேண்டுதல் பிரிவுகள் *30* மற்றும் *14(2)* தேவைக்கு மேம்பட்டதாகவும் அல்லது பயனற்றதாகவும் செய்யக்கூடும். இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-இல் காணப்படும் "ஒரு இந்து பெண்ணின் கைவசமுள்ள உடைமை" என்னும் சொற்றொடரை, அதுவுங்கூட மிகையானதாக செய்யும். அவ்வாறான முடிவிற்கு கொண்டுசெல்கின்ற ஓர் பொருள் விளக்கத்தினை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள ˙இயலாது. அத்தகைய ஓர் கருத்துவகையை வலியுறுத்தி இச்சட்டத்தில் உறுதியாக அங்கு எதுவுமில்லை. பிரிவுகள் *14* மற்றும்

30 இவ்விரண்டும் செயலாற்றுகிறது. மிதாக்ஷரா சட்டம் அல்லது பராமரிப்பு உரிமையின் கீழ் வரம்புடை ஆஸ்தியாக இருக்கும் உரிமை அளிக்கப்பட்டிருந்தாலுங்கூட, அதற்கு உரிமைவகையில் தகுதிவாய்ந்தவராக இருப்பின், இச்சட்டத்திற்கு முன்னர் உடைமையைப் பெற்றிருந்த பெண்களுக்கான வழக்குகளில் பிரிவு 14(1) பொருந்தும்."

163. **<u>ஜகன்சிங் (இறந்துபோனவர்) சட்டப்பூர்வமான பிரதிநிதிகள் வாயிலாக - எதிர்- தனவந்தி மற்றும் ஒருவர்</u>**[62]-இல் கற்றறிந்த நீதியர் ஆயத்தினரால் இந்தத் தீர்ப்புரை பின்பற்றப்பட்டது. உயிலவர் மனை X பொறுத்தமட்டில் உயில்வழி உரிமையருக்கு உடைமை மாற்றம் செய்வதற்கான உரிமையில்லை என்ற வரையறையுடன் விருப்புறுதி ஆவணம் பதிவு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட ஒரு வழக்காகும். மனை X-இன் உரிமை மாற்றத்தினை தடைசெய்வதற்கான ஏவு கட்டளை வழங்க கோரும் உரிமை வழக்கிலிருந்து இவ்விடயம் எழுந்துள்ளது. கற்றறிந்த நீதியர் பேராயத்தினரால் **<u>நவ்நீத் லால் (எ) ரங்கி -எதிர்- கோகுல் மற்றும் பலர்</u>**[63]-இல் வழங்கப்பட்ட தீர்ப்புரையை இந்நீதிமன்றம் பின்பற்றியதாக பொருள்படுகிறது. (மேற்கண்ட) **<u>நவ்நீத் லால் (எ) ரங்கி</u>**-இன் தீர்ப்புரையை நாங்கள் பார்வையிட்டோம். விருப்புறுதி ஆவணத்தில் விதவையின்மீது வழங்கப்பட்டிருப்பது வரம்புடை உரிமையா? அல்லது முழுமையான உரிமையா? என்பதைப் பரிசீலிப்பதற்காக

---

62. (2012) 2 எஸ்.சி.சி. 628

63. (1976) 1 எஸ்.சி.சி. 630

எழுப்பப்பட்டுள்ள வினா என்பதை நாங்கள் கவனித்தோம். இந்நீதிமன்றம் விருப்புறுதி ஆவணத்தின் பொருள்கோள்வகையின் அடிப்படையில் விதவையின்மீது வரம்புடை பாத்தியதையை மட்டுமே உருவாக்கியிருப்பது கண்டறியப்பட்டது. பிரிவு *14(1)*-னுள் வரம்புடை பாத்தியதை முழு விரிவடையுமா என்னும் கேள்வியுடன் இந்நீதிமன்றம் அணுகவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். **ஊரத் சுப்ரமணியன் -எதிர்- சௌமி மசும்தார் மற்றும் பலர்**[64]-இல் ஒரு இந்து பெண்ணிற்கு அவளது ஜீவனாம்ச உரிமைக்கு மாற்றாக உடைமையளிக்கப்பட்டதை சுட்டிக்காட்டுவதற்கு அங்கு மூலாதாரங்கள் எதுவுமில்லை என்பதை இந்நீதிமன்றம் கண்டறிந்தது. மனைவி அவளது கணவனுடன் வாழ்ந்துவருவதாகவும், மேலும், விருப்புறுதி ஆவணம் சான்றுறுதி வாய்ந்ததாகின்ற-வரையிலும் அவளது சொந்த உடைமையைப்போல் அவள் துய்த்து மகிழ்ந்தாள் என்பது கண்டறியப்பட்ட வழக்காகும். கற்றறிந்த நீதியராயத்தினரால் **ஜூபுடி பர்தா சாரதி -எதிர்- பெண்டப்பட்டி இராமகிருஷ்ணா**[65]-வில் தீர்ப்புரை வழங்கப்பட்டது. ஒரு இந்து தனது மனைவி துய்த்து மகிழவேண்டுமென்று அவளுக்கு ஆதரவாகவும், ஆனால், அவளது இறப்புக்கு பின்னர் அவளது மகன்களில் ஒருவர் முழுமையான உரிமையுடன் உடைமையை வைத்திருக்கவேண்டுமென்றும் நிறைவேறறப்பட்ட விருப்புறுதி ஆவண வழக்காகும். பிரிவு *14(1)* அல்லது *14(2)*-ஐ வழக்கு ஈர்த்துள்ளதா என்னும் கேள்வி மீண்டும் எழுந்துள்ளது. இந்நீதிமன்றம் *(மேற்படி)* **சட்டப்பூர்வமான பிரதிநிதிகள் வாயிலாக ஷிவ்தேவ் கவுர் (இறந்துபோனவர்)** நீங்கலாக *(மேற்படி)* **மிஸ்த் கர்மி** *(மேற்படி)*, **வி. துளசம்மா** *(மேற்படி)* **சாது சிங்** மற்றும் *(மேற்படி)* **ஊரத் சுப்ரமணியன்**

---

64. (2006) 8 எஸ்.சி.சி. 91

65. (2016) 2 எஸ்.சி.சி. 56

வழக்குகளைக் என்பவர்களை கருத்திற்கொண்டது. அதன்பின்னர் இதர தீர்முடிவுகளுக்கு மத்தியில் இந்நீதிமன்றம் **ஆர்.பி.எஸ்.எஸ். முன்னாலால் மற்றும் பலர் -எதிர்- எஸ்.எஸ். இராஜ்குமார் மற்றும் பலர்**[66]-ஐ குறிப்பிட்டபின் உடைமையில் பெண்களுக்கு முன்னிரு உரிமை இருந்ததில்லை என்னும் அடிப்படையில் அங்குள்ள நீதிமன்றம் மேல்நடத்திச்சென்றது என்பதைக் கவனித்து சாது சிங்கை வேறுபடுத்திக் காட்டியது. ஆகையால், பிரிவு 14(1)-இன் கீழ் ஆயுள் பாத்தியதையைப் பூரணமானதாக விரிவடையச் செய்ய இயலாது. ஜீவனாம்சம் வாயிலாக உடைமையினை விதவை துய்த்து மகிழ்ந்தது பற்றி பூசலிடப்படவில்லை என்பதைக் கவனித்து மேலும் நாங்கள் கருத்திற்கொண்டோம். ஆதலால் ஜி. இராமாராவின் தீர்ப்புரையினை இந்நீதிமன்றம் வேறுபடுத்திக்காட்டுகின்றது.

164. **(திருமதி) கும்பா மற்றும் பலர் -எதிர்- ஜெய்பாய்**[67]-இல் இரண்டு கற்றறிந்த நீதிபதிகள் அமர்வு 1941-ஆம் ஆண்டில் ஒரு இந்து தனது மனைவிகள் ஒவ்வொருவருக்கும் அவர்களது ஆயுட்காலத்திற்கு ஒருபாதி பங்கினை வழங்கியும் மேலும், இறுதியான பயனாளராக மகள்தான் இருக்கவேண்டுமென நிறைவேற்றப்பட்ட விருப்புறுதி ஆவண வழக்குடன் அணுகப்பட்டது. அங்கு குடும்பத்திற்கு முன்னிலும் புதியவருக்கு ஆதரவாக மனைவிகளில் ஒருவரால் மேற்கொண்டு ஒரு உயில் நிறைவேற்றப்பட்டது. அதாவது, அவளது வீட்டுப் பணியாள் இந்து மரபுரிமை சட்டத்தின் பிரிவு 14(1) அல்லது 14(2)-இன் கீழ் உரிமைகள் வீழ்கின்றதா என்னும் கேள்வி எழுப்பிய பின் இந்த உரிமை மாற்றம் எதிர்த்துரைக்கப்பட்டது. இந்நீதிமன்றம்

---

66. எ.ஐ.ஆர். 1962 எஸ்.சி. 1493

67. (1994) 2 எஸ்.சி.சி. 511

ஒரு விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டபின் இந்து மரபுரிமைச் சட்டம், பிரிவு *14(2)*-இன் கீழ் வீழ்கின்ற வழக்கு என்ற முடிவுரைக்கு வந்தடைந்தது. உள்ளபடியாக ஒரு மனிதனுக்கு எதிராக ஒரு இந்து பெண்ணிற்கு உயரிய உரிமை வழங்கும் எண்ணம் சட்டமன்றத்திற்கு இல்லை என்னும் கருத்து நிலையினை இந்நீதிமன்றம் எடுத்தது. மூன்று கற்றறிந்த நீதிபதிகள் அடங்கிய ஒரு அமர்வினரால் பின்னிட்ட தீர்ப்புரையில் இந்தத் தீர்ப்புரை பரிசீலனைக்கு வரப்பெற்றது. அதாவது, **சி. மாசிலாமணி முதலியார் மற்றும் பலர் -எதிர்- சுவாமிநாத சுவாமியின் சிலை, சுவாமிநாத சுவாமி திருக்கோயில் மற்றும் பலர்**[68]. சோமசுந்தரம் பிள்ளை என்பவரின் விதவைக்கு ஆதரவான ஒரு உயிலினை இந்த வழங்குங்கூட உள்ளடக்கியுள்ளது. விருப்புறுதி ஆவணத்தில் உள்ள வாசகங்கள் உயிலவர் தனது மனைவிக்கு ஜீவனாம்சம் வழங்குவது தனது கடமை என்பதை தன்னுடைய மனதில் எண்ணிக்கொண்டிருந்தார் என்பதை சுட்டிக்காட்டுகிறது. இந்நீதிமன்றம் முன்னதான தீர்ப்புவழிச் சட்டத்தில் மறு ஆய்வு மேற்கொண்டது. *(மேற்படி) (திருமதி)* கும்பா வழக்கில் எடுக்கப்பட்ட கருத்துநிலையானது வரையறுக்கப்பட்ட பொருள்விளக்கமென்னும் சட்டத்தில் சீரானநிலையில் இருப்பதாக தோன்றவில்லை என்பதையும் கண்டறிய முற்பட்டது.

165. **குல்வந்த் கவுர் மற்றும் ஒருவர் -எதிர்- மொஉறிந்தர் சிங் மற்றும் பலர்**[69]-இல் கற்றறிந்த இரு நீதிபதிகள் கொண்ட அமர்வினால் இந்து மரபுரிமைச் சட்டம் பிரிவு *14(1)*-ஐ இந்த வழக்கு ஈர்த்துள்ளது என்றும் கணவன் மற்றும் அவரது மனைவிக்கு

---

68. ஏ.ஐ.ஆர். 1996 எஸ்.சி 1697/(1996) 8 எஸ்.சி.சி. 525

69. ஏ.ஐ.ஆர். 1987 எஸ்.சி *2251*

இடையில் அக்கறையான எழுத்துத் தொடர்பும் கண்டறிந்து குறிப்பிடப்பட்டது. கணவனிடமிருந்து மனைவிக்கான கடிதத்தைப் பார்வையிட்டதிலிருந்து அவளது ஜீவனாம்சத்திற்கு பகராக நிலம் அளிக்கப்பட்டது தெரியவருகின்றது. அன்றாட செலவினங்கள் மற்றும் ஜீவனாம்சத்திற்கிடையிலான வேறுபாடுகளை புரிந்து கொள்வதில் உண்மையாகவே, இந்நீதிமன்றம் தனது இயலாமையை வெளிப்படுத்தியது. **எர்ரம்மா-எதிர்- வீருபன்னா**[70]-வை இந்நீதிமன்றம் வேறுபடுத்திக்காட்டியது. மேலும், சட்டப்பூர்வமான பிரதிநிதிகளால் **பாய் வாஜியா (இறந்துபோனவர்) -எதிர்- தகோர்பாய் செல்லாபாய் மற்றும் பலர்**[71]-இல் விரிவுபடுத்தப்பட்டது என்னவெனில், இந்து சட்டத்தின் கீழ் பெண்களின் உரிமைகள் இந்து மரபுரிமை சட்டம் பிரிவு *14(1)*-இன் கீழ் விரிவாக்கப்பட்டிருந்ததை விதிக்கப்பட்டவாறே கட்டாயம் புரிந்துகொள்ளவேண்டும் என்ற இந்நீதிமன்றத்தின் தீர்ப்புரை பற்றிய வாதத்துடனும் இந்த நீதிமன்றம் அணுகியது. *(மேற்குபடி)* குல்வந்த் கவுர்-இன் பத்தி *8*அ-வை நாங்கள் கவனத்திற்கொண்டு வாசித்தது பின்வருமாறு:

> *"8*அ. திரு. தர்குண்டே குறிப்பாக பாய் வாஜியா -எதிர்- தாகோர்பாய் வழக்கிலுள்ள பின்வரும் ஏட்டுரைப் பகுதியின்மீது சார்ந்திருந்தார். [*(1979) 3* எஸ்.சி.சி. *300* : ஏ.ஐ.ஆர். *1979* எஸ்.சி. *993*]:
>
> *"*உட்பிரிவு *(1)*-ஐ எளிமையாக வாசித்ததில் உடைமையினுள் சம்பந்தப்பட்ட இந்து பெண்மணி

---

70. ஏ.ஐ.ஆர். 1996 எஸ்.சி 1879

71. ஏ.ஐ.ஆர். 1979 எஸ்.சி 993

வரம்புடை உடைமையுரிமையை அவசியம் பெற்றிருக்கவேண்டுமெனவும், அந்த உட்பிரிவின் செயலாற்றலால் வரம்புடை உடைமையுரிமை விரிவுபடுத்தப்படும் என்பதையும் தெளிவாக்குகிறது. எந்தப் பொருள்யியைவிலும் எடுத்துரைக்க இயலாத எல்லாவிதமான உரிமைகளை விரிவாக்க உள்நோக்க-மிருக்குமாயின், 'வரம்புடை உரிமையாளராக அல்லாத' எனும் சொற்றொடர் பயன்படுத்தப்படாமல் போயி-ருந்தால் தேவைக்கு மேற்பட்டதாக ஆகிவிடும் என்றும், சட்டமன்றம் பொருளில்லாத மொழியினை பயன்படுத்தாது என்னும் நன்கு அங்கீகரிக்கப்பட்ட இயற்றுச் சட்டப்பொருள் விளக்க கொள்கைக்கு எதிரானது என்பதாகும்."

இந்து சட்டம் அறிந்தபடி இந்து பெண்களின் உரிமை ஒரு முழுமையான உரிமை என்று பிரிவு 14 உட்பிரிவு (1)-ஆல் விரிவடையச்செய்ததாக விதிக்கப்பட்ட நீதிமன்றத்தை எங்களால் புரிந்துகொள்ள முடிய-வில்லை. "வரம்புடை உரிமை" என்னும் சொல்லை நீதிமன்றம் பயன்படுத்தும்போது இந்த சொற்கள் உடைமையினுள்ள ஒரு உரிமையினை குறிப்பிலுணர்த்-துவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. அதன்படி ஒரு இந்து பெண்ணின் உரிமையை முறைமையானதாக

கண்டுபிடிக்கலாம், ஆனால், முழு உரிமையின் உரிமை இல்லாததாகும். ஜீவனாம்ச உரிமையின் அங்கீகார-மாகவோ அல்லது அதனை செயற்படுத்தியோ ஒரு இந்து பெண்மணி உடைமையின் பாத்தியதையில் அமர்த்தப்படுவாராயின், அவளுக்கு ஒரு வரம்புடை உரிமை அல்லது உடைமையினுள் உரிமை கிடைக்கப்-பெற்றதை மறுக்க இயலாது. ஒருமுறை அந்த நிலையினை ஒப்புக்கொண்டுவிட்டால், பின்னர் இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் கீழ் உரிமையானது முழு உடைமையுரிமையாய் விரிவடைந்துவிட்டதாக பின்பற்றப்படும். இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-னுடைய மொழியிலிருந்து தெளிவாக பின்தொடர்வதற்கு எங்களுக்கு தோன்றுகிறது. *(வலியுறுத்தப்பட்டது)*

166. **<u>கத்தாம் இராமகிருஷ்ண ரெட்டி மற்றும் பலர் -எதிர். கத்தாம் ராமிரெட்டி மற்றும் ஒருவர்</u>**[72]-இன் அறிவிக்கப்பட்ட தீர்ப்புரையிலிருந்து ஆதரவினை மேல்முறை- யீட்டாளர்கள் பெற இயலாது. இந்து மரபுரிமைச் சட்டத்திற்கு முன்னதாக ஒரு ஆயுள் உரிமை உருவாக்கப்பட்டு *21.12.1952* அன்று கொடையாவணம் நிறை-வேற்றப்பட்டது என்பதில் சந்தேகமில்லை. கொடையாவணத்தின் ஷரத்துகளினுடைய இன்றியமையாத மறுபயனின்மீதான தீர்முடிவின் சுழற்சியினை கவனத்திற்கொள்வது அவசியமானதாகும். எனவே மிகவும் முக்கியமான பின்தொடரும் காண்முடிவு என்னவெனில்

---

72. 2010 (9) எஸ்.சி.சி. 602

"28. மேற்சொன்ன வழிமுறையை **இவ்விரு கீழமை நீதிமன்றங்களினாலும் பரிசீலிக்கப்பட்டு ஒருங்கிணை-வாக தீர்மானித்ததாவது, புல்லா ரெட்டியால் சேஷம்மாவுக்கு ஆதரவாக உருவாக்கப்பட்ட ஆயுட்கால உரிமை அவளது ஜீவனாம்சத்திற்கு பதிலாக அல்ல என்றும், கேள்விக்குள்ளான உடைமைகளை அவள் ஏற்கெனவே நிர்வகித்து வருகிறாள்** என்றும், இங்குள்ள 1-ஆம் எதிர்வாதியான அவரது மகன் ராமிரெட்டிக்கு மேற்சொன்ன சொத்துகள் இறுதியாக சென்றடைய-வேண்டும் என்னும் கொடைபெறுபவரின் விருப்பம் மாறுபடக்கூடிய வாசகங்களினால் இல்லை. ஒருமுறை அது நிறுவப்பட்டுவிட்டால், சூழ்ந்துள்ள இதர சூழ்நிலைகளிலிருந்து நீங்கலாக, உடைமையினுள்ள சேஷம்மாவின் உரிமைகள் உடனடியாக வெளியாகி இந்து மரபுரிமைச் சட்டம், 1956 பிரிவு 14 உட்பிரிவு (2)-ஆல் ஆளப்படும், பின்னர் உட்பிரிவு (1)-இன் கீழ் கருத்திற்கொண்டபடி அவளது உரிமை ஒரு முழுமையான உரிமையாக விரிவடையாது."

167. விருப்புறுதி ஆவணத்தின் வாசகங்களில் ஏற்கெனவே எங்களதுகவனத்தை திருப்பினோம். 'அ' அட்டவணையில் குறிப்பிடப்பட்ட சொத்துகள் ஐயத்திற்கிடமின்றி அவரது மனைவியின் ஆயுட்காலத்திற்கு விருப்ப ஆவணத்தின்வாயிலாக விட்டுச்செல்லப்படுகிறது என்பது உயிலினுள்

எடுத்துக்கூறப்பட்டுள்ளது. அவளது செலவினங்களுக்காக சொத்துகளிலிருந்து பிறவற்றுடன் அவள் வருவாயினை எடுத்துக்கொள்ளவேண்டும் என இறுதிப் பத்திரத்தில் தன்னாலேயே குறிப்பாக எடுத்துக்கூறப்பட்ட வழக்காகும். விசேஷ சந்தர்ப்பங்களில் அவரது சகோதரிகளுக்கு பரிசுகள் அளிப்பதற்காகவுங்கூட வருவாயினை அவள் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஆதலால், இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர்களால் பெருமதிப்புடையதாக கருதுகின்ற போலியற்ற ஆவணம் உடைமையைக் கொடுப்பதற்கான நோக்கம் என்னவென்று கண்டறிவதற்கான எல்லா சான்றுகளையும் தேடுவது எங்களுக்கு அவசியமற்றதாக செய்கிறது. உயிலவர் அவரின் உள்நோக்கத்தை தெளிவாக கொண்டிருந்தார். முன்கூறப்பட்ட போலியற்ற ஆவணம் அவளது ஜீவனாம்சம் தொடர்பாக இதர சொத்துகள் அவளுக்கு வழங்கப்பட்டது என்ற செய்தியை குறிப்பிடுகின்றது என்னும் மேல்முறையீட்டாளர்களின் வாதுவுரை ஆயுட்கால உரிமையினை உருவாக்குவதற்கு உயிலவரை தூண்டியது என்ன? என்ற முக்கியமான கேள்வியிலிருந்து குறைவுபடச் செய்யவில்லை என்பது எங்களது கருத்துநிலையாகும். (மேற்படி) சாதுசிங் வழக்கு போன்றில்லாமல் இந்து மரபுரிமைச் சட்டத்திற்கு முன்னதாகவே இறுதிப் பத்திரம் 10.5.1955 அன்று நிறைவேற்றப்பட்டுள்ளதை. ஐயத்துக்- கிடமின்றி, அவ்வகையான ஒரு உயில் இந்து மரபுரிமைச் சட்டம், பிரிவு 14(2)-இன் வழிமுறைகளை எதிர்பார்த்து நிறைவேற்றியிருக்க முடியாது. ஜீவனாம்சத்திற்கு ஆர். கிருஷ்ணம்மாள் நிச்சயமாக தகுதியுடையவரென்பதும், மேலும் உயில் வழி விட்டுச்சென்றதற்கான கேள்வி நோக்கங்களை திட்டவட்டமாக குறிப்பிடுகிறது. எந்தவித உரிமையுமில்லாத ஆர். கிருஷ்ணம்மாளுக்கு தொடர்புடைய சொத்துகள் விருப்புறுதி ஆவணத்தின் வாயிலாக விட்டுச்செல்லப்படவில்லை. இந்த வழக்கின் சங்கதிகளில் புதிய

உரிமைகளை உருவாக்குவதன்வாயிலாக உடைமைகள் மரபுரிமையாக அளிக்கப்பட்டிருப்பதாக இந்த இறுதிப்பத்திரம் பொருள்படுத்தவில்லை. உயிலினுள் குறிப்பிட்டவாறு அவளுக்கு இதர சொத்துகள் ஜீவனாம்சத்திற்காக வழங்கப்பட்டது என்பது மேல்முறையீட்டாளர்களின் வழக்குங்கூட மேல்முறையீட்டாளர்களின் வாதுரைகள் ஏற்றுக்கொள்ளப்படுமாயின், உயிலவர் சரியென கருதக்கூடிய பராமரிப்புத் தொகைக்கான நிறையீட்டளவு என்னவாக இருக்கும் என்பதை நாங்கள் பரிசீலிக்கவேண்டும். மற்ற சொத்துகளின் பரப்பளவு காண்பிக்கப்படவில்லை. உயிலவரின் செயல்நோக்கம் அவரது கைம்பெண், அவளுக்காக மரபுரிமை வழியாக அளித்திட்ட சொத்துக்களிலிருந்து வரும் வருவாயினை தனதாக்கிக்கொண்டு தன்னைத் தன்னாலேயே பராமரித்துக்- கொள்ளமுடியும் என்பதை விருப்புறுதி ஆவணத்தின் வாசகங்கள் சுட்டிக்காட்டும்போது இப்படியான ஒரு செயலாட்சி தேவையற்றது என்று நாங்கள் எண்ணுகிறோம். மேலும், அந்த நோக்கங்களுக்காகவும் உண்டாக்கியதை சந்தேகமின்றி, என்னவென்று ஒரு வரம்புடை உரிமையினை விரித்துரைக்க இயலும்.

168.**சி. மாசிலாமணி முதலியார் -எதிர்- ஸ்ரீ சுவாமிநாத சுவாமி சிலை**[73]-இல் இது தொடர்பான பின்வரும் கருத்துரைகளை நாங்களுங்கூட கவனித்தோம்:

> "30. இரு விதவைகளுக்கும் ஜீவனாம்சம் மட்டுமே வழங்குவதற்கான எண்ணத்தை உயிலவர் கொண்டிருந்தபோது, 10 ஏக்கர்களுக்கு அதிகமாக உடைமைகள் இருந்ததால், விதவையின் தேவைக்கேற்ப மட்டுமே ஜீவனாம்சம் சரியானதாக இருத்தல்வேண்டும்,

---

73. ஏ.ஐ.ஆர். 1996 எஸ்.சி 1697

எனவே, அந்த அளவிற்கு ஓர் முழுமையான உரிமையை விதவை கிடைக்கப்பெறுவாள் ஆனால், முழுவதுமான உடைமை அல்ல என்று திரு. ரங்கம் வாதுரைத்தார்.

அந்த வாதுரையில் எந்த வலியுறுத்தலையும் நாங்கள் காணவில்லை. முன்னிரு சட்டத்தின் கீழ் காணப்படவேண்டியதாவது, விதவையின் ஆஸ்தி என்று அறியப்படும் முழுமையான ஆஸ்தியின் அனுபவ உரிமையில் தங்கியிருக்க அவள் தகுதியுடையவளாவாள்; எனினும், இச்சட்டம் நடைமுறைக்கு வந்தபின்னர் பிரிவு *14(1)*-இன் இயங்குதலால் விதவையின் உரிமை ஓர் பூரண உரிமையாக விரிவடைந்தது. சான்றாவணம் அ-*1*-ஆன உயிலிலுங்கூட, பராமரிப்புத் தொகைக்காக அவளது தேவைகளுடன் ஒத்திருக்கும் வருவாயினை நியாயமான வீதப்படி பிரித்தளிக்கவேண்டும் என்பதுபோன்ற வரையறுக்கும் ஒப்பந்தம் எதுவும் ஒன்றிணைக்கப்படவில்லை. மற்றவகையில், திட்டவட்ட-மான ஒப்பந்தமாவது அவளது ஆயுட்காலத்தின்போதே அவளது ஜீவனாம்சத்திற்கான உரிமையினை அங்கீகரித்து அவளது பராமரிப்புத் தொகைக்கு மாற்றீடாக அவளுக்கு உடைமை வழங்கப்பட்டது. அப்போது நடைமுறையிலிருந்துவந்த சட்டத்தின்படி அது முன்னிரு உரிமையாகும். இந்தச் சட்டம் அமலுக்கு

வந்தபின்னர், வரையறுக்கப்பட்ட உரிமை ஓர் பூரண உரிமையாக மலர்ச்சியுற்றது. ஆகையால், ஜீவனாம்சத்திற்கான விகிதாச்சார கோட்பாட்டினை பயன்படுத்தவும் முடியாது; மேலும், விரிவுபடுத்தவும் இயலாது."

169. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1) பொருந்தும் என்று உயர் நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்ட கருத்துநிலையினை தவறு என்று விரித்துரைக்க இயலாது.

இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1)-னுள்ள 'உடைமையாக கொள்', அ.வ. எண் 89/83 மற்றும் அ.வ. எண் 71/58-இல் வழக்குரையின் அட்டவணைச் சொத்து சுவாதீனத்தின் விளைவாக வாதுரைகளும் மற்றும் அதன் தாக்கங்களும்.

170. அ.வ. எண் 89/1983-இல் 30.04.1977 அன்று இறந்துபோன கிருஷ்ணம்மாள் பற்றி அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் விளைவாக அந்த 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளும், வாதியும் சுவாதீனத்திற்கு தகுதிவாய்ந்தவர்களாகின்றனர். மேலும், அங்குள்ள பத்தி 5-இல் வாதி மற்றும் 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் (இலட்சுமையா நாயுடு பிரிவினர்) அதிலிருக்கும் சொத்துகளின் சுவாதீனத்தை கூட்டாக துய்த்து மகிழ்ந்தனர் என்று கூறப்பட்டதை நாங்கள் கவனித்தோம். எவ்வாறாயினும், பத்தி 21-இல் 4 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் (இலட்சுமையா நாயுடு பிரிவினர்) எந்தவித உரிமையும் இல்லாமல் சுவாதீனத்தில் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளதை நாங்கள் மேற்கொண்டு கவனித்தோம். எதுவாக இருந்தாலும், அவர்களுடைய அந்த சுவாதீனம் தவறானதாகும்.

171. தக்க சமயத்தில் நாம் பின்னோக்கி பார்த்தோமேயானால், இந்த விதவை ஆர். கிருஷ்ணம்மாள் என்பவரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அ.வ. எண் *71/1958*-இல் பின்வரும் வாதங்களை நாங்கள் கவனித்தோம். அட்டவணை-I-இல் விவரிக்கப்பட்ட சொத்துகளானது பாகப்பிரிவினையில் அவளது கணவரின் பங்கில் வீழ்கிறது என்றும் அவர் தனிப்பட்ட சுவாதீனத்தை கொண்டுள்ளார் என்றும் அவள் கூறுகிறாள். அட்டவணை *1*-அ-வில் உள்ள சொத்துகள் அவரால் சுயமாக ஈட்டப்பட்டதாகும். அதன்பின்னர் பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கைகளை அவள் குறிப்பிட்டாள். *10*-ஆம் பத்தியில் அட்டவணை I மற்றும் I-அ-விலுள்ள பிரதிவாதிகளின் சுவாதீனம் சட்டப்படி குற்றமானது என்றும், அட்டவணை-I , I-அ மற்றும் II -இலுள்ள சொத்துகளில் பாதியும் அல்லது அட்டவணை I மற்றும் I-அ-வின் இரண்டில் ஒன்றின் சுவாதீனத்தை திரும்பப் பெறுவதற்கும், பின்னர் ஏதேனுமொன்றின் அடிப்படையில் வெற்றிகாண்பதற்கு அவள் தகுதியுடையவள் என்று ஆர். கிருஷ்ணம்மாள் என்பவரால் வற்புறுத்திக் கூறப்பட்டது. பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கைகளின்போது நியமிக்கப்பட்ட உடைமை காப்பாளர் பற்றி குறிப்பிடப்பட்டது. *17*-ஆம் பத்தியில் ஆர்.வி. இலட்சுமையா நாயுடு மற்றும் அவரது மகன்களின் சுவாதீனத்தை வருவாய் கோட்ட அலுவலரால் ஆதரித்தபோதும் *16.04.1956* அன்று சொத்துகளில் *1* முதல் *4* வரையிலான பிரதிவாதிகள் சட்டத்திற்கு மாறாக அத்துமீறி நுழைந்தபோதும், *1955* ஜூன் அன்றோ அல்லது அதை ஒட்டியோ பிறவற்றுடன் வழக்கின்மூலம் எழும்பியது என்றும் வலியுறுத்தப்பட்டது. அ.வ. எண் *71/ 1958*-னுள் வகுமுறை XXII விதி *3*-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் பிறவற்றினுள் கூறப்பட்டது பின்வருமாறு:

"ஆகையால் 1.6.1955 அன்று ரங்கசுவாமி நாயுடு இறந்துபோனபின் சொத்துகளின் சுவாதீனத்தை இந்த நிறைவேற்றாளரால் எடுக்கமுடியவில்லை....."

172. **<u>கும்மளப்புரா தக்கின மதடா கோட்டூருசுவாமி -எதிர்- செட்ரா வீரவ்வா மற்றும் பலர்</u>**[74]-இல் கற்றறிந்த மூன்று நீதிபதிகள் அமர்வினால் "சுவாதீனம்" என்ற சொல்லின் பொருள்விளக்கம் விதிக்கப்பட்டது பின்வருமாறு:

"11. ஐயத்துக்கிடமின்றி, பிரிவு 14-இல் குறிப்பிடப்பட்டுள்ள சுவாதீனம் உள்ளபடியான உடல்சார்ந்த அனுபோகமோ அல்லது ஒரு இந்து பெண்ணால் உடைமையின் தனிப்பட்ட குடியுரிமையாக இருக்க அவசியமில்லை, ஆனால் சட்டப்படியான அனுபவ உரிமையாக இருக்கலாம். பெண் உரிமையாளரிடமிருந்து சுவாதீனத்தின் உரிமம் உடையவர், குத்தகை எடுப்பவர் அல்லது அடமானம் பெற்றவர் அல்லாவிட்டால் காப்பாளர் அல்லது ஒரு அறங்காவலர் அல்லது ஓர் முகவரின் சுவாதீனம் பெண் உரிமையாளருடையதாக இருந்தால் பிரிவு 14-இன் நோக்கங்களுக்காக அவளது சுவாதீனமாகவே இருக்கக்கூடும். பிரிவு 14-இல் பயன்படுத்தப்பட்ட "உடைமையாக கொள்" என்னும் சொல்லின் அகல்விரிவான உட்கருத்து மற்றும்

---

74. ஏ.ஐ.ஆர். 1959 எஸ்.சி 577

சூழ்நிலையில் உடைமையாயிரு என்பது **ஒருவர் கைவசத்திலோ அல்லது அதிகாரத்திலோ அல்லாவிடில் சொந்தமான நிலையில் கொண்டிருப்பதாக பொருள்படும். அது வாடகைகள் மற்றும் லாபங்களின் வரவினால் கைவசமிருப்பதையும் உள்ளடக்கும். ஒரு பெண் உரிமையாளரின் நிலத்தினுடைய சுவாதீனத்தில் அத்துமீறுபவர் இருந்தாலுங்கூட அத்துமீறுபவர் அவரது உரிமையை நிறைவுபடுத்தவில்லையெனில், ஒரு பெண் உரிமையாளரின் கைவசத்தில் இருப்பதாகவே கருதக்கூடும்.** தற்போதைய வழக்கில் கற்றறிந்த நீதிபதிகள் சென்ற அளவிற்கு செல்ல வேண்டியது அவசியம் என்று நாங்கள் எண்ணவில்லை. பிரிவு 14-இல் "உடைமையாகக் கொள்" என்பது அகல்விரிவான உட்கருத்திலும் மற்றும் சூழ்நிலையிலும் ஒருவரது கைவசத்திலோ அல்லது அதிகாரத்திலோ அல்லது சொந்தமான நிலையில் கொண்டிருப்பதாக பொருள்படும் என்று சொல்வது போதுமானது. கோஸ்தா பெகாரி -எதிர்- உறரிதாஸ் சமந்தா (ஏ.ஐ.ஆர். 1957 கல்கத்தா. 557, 559) என்ற வழக்கில் "ஒரு இந்து பெண்ணின் கைவசத்திலுள்ள எல்லா உடைமை" என்ற சொற்களினுடைய பொருள்பற்றிய தனது கருத்து நிலையை நீதியரசர் பி.என். முகர்ஜி பின்வரும் வார்த்தைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

"ஒரு இந்து பெண்ணின் கைவசமுள்ள உடைமை" என்று தொடங்கும் சொற்கள் இப்பிரிவின் கருத்தெல்லைக்குள் வரவேண்டுமெனில், இச்சட்டம் தோற்றுவிக்கப்பட்ட தேதியில் சம்பந்தப்பட்ட பெண்ணின் கைவசத்தில் இருக்கவேண்டும் என்று பொருள்படும். இச்சட்டம் அமலுக்கு வந்தபோது பெண்களின் உரிமையை அவை தெளிவாக கூர்ந்து ஆராய்ந்துள்ளது. அந்த சுவாதீனமானது உள்ளபடியாகவோ அல்லது கொள்நிலையாகவோ அல்லாவிடில் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வடிவத்திலோ இருக்கக்கூடும், ஆனால், ஒரு இந்து பெண் என்றாலன்றி, இந்தக் குறிப்பிட்ட பிரிவின் கீழ் பிரச்சினைக்குரிய சொத்தில் எவருடைய வரம்புடை உரிமை இயல்பு முழுநிறைவான உரிமையாக மாறியது எனகோரப்படுகிறதோ, அத்தகைய சுவாதீனத்தில் குறைந்த அளவில் இச்சட்டம் அமலுக்கு வந்தபோது "உடைமையாகக்கொள்" என்னும் சொல்லை விசாலமாக குறிப்பிலுணர்த்தும்படி எடுத்துக்கொண்டால், இந்தப் பிரிவினை பொருத்திக்காட்ட முடியாது".

எங்களது கருத்துநிலையில், "ஒரு இந்து பெண்ணின் கைவசமுள்ள எல்லா உடைமை" என்னும் சொற்களை

எவ்வாறு பொருள்படக்கூடும் என்று மேலே வெளிப்படுத்தப்பட்ட கருத்துப் பாங்கு சரியானதே...."

(வலியுறுத்திக்கூறப்பட்டது)

173. (மேற்படி) எர்ரம்மாவில் வெறும் அத்துமீறுபவரின் மீது இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1) உரிமையினை அளிக்கவில்லை என்பதை இந்நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. தலைப்பிற்கான எந்தவித சான்றடையாளமில்லாமல் உடைமையின் சுவாதீனத்தைக் கொண்டுள்ள நபரின்மீது எந்த உரிமையும் அளிக்கவில்லை. பின்வரும் சூழ்நிலைப் பொருத்தங்களின் தறுவாயில் நாங்கள் இந்தக் குறிப்புரைகளை செய்துள்ளோம்:

இந்து மரபுரிமைச் சட்டம் அமலுக்கு வந்தபோது, 1.6.1955 அன்று அவளது கணவர் இறந்துபோனதைத் தொடர்ந்து ஆர். கிருஷ்ணம்மாள் என்பவருக்கு ஆதரவாக உடைமையின்மீது கோரிக்கை செய்வதற்கான **உரிமையை வழங்கு இரண்டு நீரொழுக்கு இருந்தது.** விருப்புறுதி ஆவணத்தின் கீழ் அவளுக்கு ஆயுள் பாத்தியதை வழங்கப்பட்டது. ஒருவேளை இந்த இறுதிப் பத்திரம் சட்டப்படி செல்லாததாகவோ அல்லது நடைமுறையில் இல்லாததாக பாவிக்கப்பட்டால், அப்போது மீண்டும் இரண்டு சூழ்நிலைகள் இருக்கக்கூடும். அவளது வழக்கு இந்து கூட்டுக் குடும்பச் சொத்திலுள்ள ஓர் பற்று அல்லது உடைமை வி. ரங்கசுவாமி நாயுடுவின் தனிப்பட்ட உடைமையா என்பதைப் பொறுத்து இந்துப் பெண்களின் சொத்துரிமைச் சட்டம், 1937 பிரிவு 3(1) அல்லது 3(2) இரண்டில் ஒன்றின்கீழ் கவரப்பட்டதாக **வீழக்கூடும்.** பராமரிக்கவேண்டுமென்ற ஒரு உரிமையுங்கூட அவளுக்கு இருக்கிறது. ஆதலால், இவ்வழக்கின் சங்கதிகளிலுள்ள காண்முடிவின்பொருட்டு வழக்குரையின்

அட்டவணையிடப்பட்ட சொத்துகள் மற்றும் விருப்புறுதி ஆவணத்தின் கீழ் மரபுரிமையாகப் பிற்காலத்தினருக்கு ஒப்படைக்கப்பட்ட சொத்துகள் ரங்கசுவாமி நாயுடுவின் தனிப்பட்ட சொத்துகள் அல்ல, *1937* சட்டத்தின் பிரிவு *3(2)*-இன் கீழ் உடைமைகளுக்கான உரிமை அவளுக்கு இருக்கக்கூடும். இந்து மரபுரிமைச் சட்டம் அமலுக்கு வந்தபோது கு.வி.மு.ச.-வின் பிரிவு *145*-இன் கீழான நடவடிக்கைகளின் கீழ் ஆர். கிருஷ்ணம்மாள் அவளது சச்சரவினை தொலைத்துவிட்ட காரணங்களுக்காக நாங்கள் இதனை கூர்ந்து ஆராய்கிறோம். அ.வ. எண் *71/1958*-இல் அவள் செய்த வாதுரையின் தன்மையை நாங்கள்கூட பார்த்தோம். உடைமையின் உரிமையை மீளப்பெறுவதற்கு அவள் தகுதி வாய்ந்தவள் என்று அவள் குறிப்பிட்டு கூறுகிறாள். சந்தேகமின்றி, கூட்டு சுவாதீனத்தில் அவள் தன்னாலேயே இருப்பதாக பாவிப்பதற்கு தகுதிவாய்ந்தவள் என அவள் வலியுறுத்துகிறாள். *(மேற்படி)* கோட்டூருசுவாமி வழக்கின் தீர்முடிவை உள்ளபடியாகவே, ஏ.ஐ.ஆர். *1967* எஸ்.சி. *1786*-இல் அறிவிக்கப்பட்ட **மங்கல்சிங் மற்றும் பலர் -எதிர்- திருமதி. ரத்னோ (இறந்துபோனவர்) அவளது சட்டப்படியான பிரதிநிதிகள் மற்றும் ஒருவர்-இல்** இந்நீதிமன்றத்தில் கற்றறிந்த மூன்று நீதிபதி அமர்வினரால் பரிசீலனைக்கு கொண்டுவரப்பட்டதை எவ்வாறாயினும் நாங்கள் கவனித்தோம். அதனுள், இந்நீதிமன்றம் தீர்மானித்தது பின்வருமாறு:

> "மேல்முறையீட்டாளர்களின் சார்பாக இச்சட்டத்தின் பிரிவு *14(1)*-இன் வழிமுறைகளை ஈர்க்கும்பொருட்டு பிரச்சினைக்குரிய சொத்தின் கொள்நிலை உடைமை அல்லது உள்ளவாறான நேரடி உடைமை ஆகிய இரண்டில்

ஒன்றினை இந்து பெண் கொண்டிருப்பதாக காண்பிக்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. மறுமுனையில் ஒருவேளை ஒரு இந்து பெண்ணாக இருந்தாலுங்கூட, உண்மையில், உள்ளவாறான உடைமையின் வெளியே, அந்தச் சொத்தில் அவளது உடைமையின் உரிமைகள் இன்னும் நடைமுறையில் இருக்குமாயின், அவ்வாறான உடைமையின் உரிமைகளை செயலுறுத்துகையில் அதனுடைய உண்மையான பாத்தியதையைக் கேட்டுப்பெறும் திறனுடையே அவளே அந்தச் சொத்தினை கைவசம் கொண்டுள்ளதாக தீர்மானிக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 14(1)-இல் பயன்படுத்தப்பட்ட நடையின்மீது பின்னரான பொருள்விளக்கத்தினை அவசியம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என எங்களுக்கு தோன்றுகிறது."

ஓர் இந்து பெண்மணியின் சுவாதீனத்தில் உள்ள சொத்து ஈட்டப்பட்டது இந்தச் சட்டம் தொடங்கப்பட்டதற்கு முன்னரா அல்லது பின்னரா என்பதைக் குறிப்பிட்டும் மற்றும் இச்சட்டத்தின் பிரிவு 14(1)-ஐ கருத்தில்கொண்டும் (மேற்படி) கோட்டுருசுவாமி வழக்கில் தீர்முடிவு வழங்கப்பட்ட சூழ்நிலைகளை விளக்குவதற்கு இந்நீதிமன்றம் முற்பட்டது. மேலும், அதன்பின்னர் நீதிமன்றம் விதித்தது பின்வருமாறு:

"....இச்சட்டம் தோற்றுவிக்கப்பட்ட தேதியில் உடைமையைச் சுவாதீனம் கொண்டிராத இந்து பெண்ணின் வழக்குகள் அனைத்திலும் பிரிவு 14(1) ஈர்க்கப்படுவதற்கு இயலாது என்ற பொதுவான நியமத்தை இந்நீதிமன்றம் விதிக்கவில்லை. உண்மையாகவே, இச்சட்டம் தோற்றுவிக்கப்பட்ட தேதியன்று ஒரு இந்து பெண் அவசியம் உடைமையின் சுவாதீனத்தை கொண்டிருக்க வேண்டும் என்ற பொருள்விளக்கத்திற்கு வழிநடத்தக்கூடும் வார்த்தைகள் எதுவும் பிரிவு 14(1)-இல் பயன்படுத்தப்பட வில்லை. **ஒரு இந்து பெண் கைவசம் கொண்டிருக்கக் கூடும் பிரச்சினைக்குரிய உடைமையின் தேதியானது, பிரிவு 14(1)-இன் வழிவகையை பொருத்தக்கூடிய கேள்வி எழுகின்ற தேதியே கட்டாயம் தொடர்புடையதாக இருக்கும் என்று எங்களுக்கு தோன்றுகிறது. ஒருவேளை, இந்த பிரிவின் வழிவகைகளைப் பொருத்திக்காட்டக்கூடிய தேதியின்போது, ஒரு இந்து பெண் உடைமையைக் கைவசம் கொண்டிருந்தால், பின்னர் அவள் ஒரு வரம்புடை உரிமையாளராக அல்லாமல் அதனுடைய முழுமையான உரிமையாளர் என்றே கருதக்கூடும். அவளுடைய சொந்த ஆயுட்காலத்தின்போதோ அல்லது அவளது இறப்பின்மீது அவளுடைய உடைமைக்கு வாரிசுரிமை தொடங்கும்போதோ அதனை பின்தொடர்ந்து**

> **<u>அத்தகைய கேள்வி எழலாம்.</u>** எங்களது முன்பாக இருக்கும் வழக்கு இரண்டாம் வகையினில் வீழ்கிறது, ஏனெனில், இச்சட்டம் தோற்றுவிப்பதற்கு முன்னர் திருமதி. உறர்ணம் கவுர் உடைமையின் ஒரு வரம்புடை உரிமையாளராவார். எனவே இச்சட்டம் தோற்றுவித்ததற்கு பின்னர், *1958*-ஆம் ஆண்டில் நிகழ்வுற்ற அவளது மறைவின்போது பிரச்சினைக்குரிய சொத்தில் திருமதி. ரத்னோ அவளது உரிமைகளில் வெற்றிகாண்பதற்கு தகுதிவாய்ந்தவரா என்ற கேள்வி எழும்பியது".

உண்மையாகவே, *(மேற்படி)* சாதுசிங் வழக்கில் இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வினரால் வழங்கப்பட்ட தீர்முடிவினை இந்தத் தீர்முடிவில் குறிப்பிடப்படவில்லை என்பதை நாங்கள் கவனித்தோம். எவ்வாறாக இருப்பினும், கற்றறிந்த இரண்டு நீதிபதிகள் கொண்ட அமர்வினால் மீண்டும் வழங்கப்பட்ட **<u>உதியாம் நாராயண்சிங் மற்றும் பலர் -எதிர்- ராமகாந்த்சிங் மற்றும் பலர்,</u>** *2018 (1)* ஆர்.சி.ஆர். *(சிவில்) 981*-இல் அறிவிக்கப்பட்ட இந்நீதிமன்றத்தின் சமீபத்திய பெரிதளவிலான தீர்ப்புரை மற்றும் ஏ.ஐ.ஆர். *1996* எஸ்.சி. *172 (பத்தி 14*-ஐ காண்க)-இல் எதிர்மறையாக்கப்பட்டிருப்பதை நாங்கள் கண்டறிந்தோம்.

அதனுள், பிறவற்றுடன் இந்நீதிமன்றம் தீர்மானித்தது பின்வருமாறு:

> "மற்றவகையில், அவளால் காண்பிக்கப்படவேண்டிய அனைத்துமானது அந்த உடைமை அவளால் ஈட்டப்பெற்றது எனவும், மேலும் அவளது உடைமையுரிமை

கேள்விக்குள்ளான சமயத்தின்போது அவள் உடைமையினை "சுவாதீனம்" கொண்டிருந்தாள் என்பதாகும்".

(மேற்படி) மங்கல்சிங் வழக்கின் அகவுரையின்பொருட்டு, பிரிவு 14(1) பொருந்தக்கூடும் என்ற எங்களது நோக்குநிலையைத் திரும்பவும் உறுதிசெய்வதாக உணர்கின்றோம்.

174. தற்செயலாக, மேல்முறையீட்டாளர்கள்-உயில்வழி உரிமையர்களின் சார்பான சாட்சி எ.த.சா.1-ஆனவர் தன்னாலேயே கூறியதை நாங்கள் கவனித்தோம்:

" ..கு.வி.மு.ச. 145 நடவடிக்கைகள் நடைபெற்ற சமயம் உடைமைக்காப்பாளரால் லட்சுமையா மற்றும் அவரது மகன்களிடம் சொத்துகள் ஒப்படைக்கப்பட்டது. அதுமுதற்கொண்டு நாளது தேதிவரையில் உடைமைகள் அவர்களின் கைவசத்தில் உள்ளது. சொத்துகளின் சுவாதீனத்தில் நாங்கள் ஒருபோதும் இருந்ததில்லை."

<u>உரிமையியல் மேல்முறையீடு எண்கள் 1045-1050/2013</u>

175. இவ்விரு உரிமை வழக்குகளிலும் முதல் பிரதிவாதியான எ.அழகிரிசாமி என்பவரால் நிறைவேற்றப்பட்ட கிரைய ஆவணங்களின் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டாளர்கள் கோருகின்றனர். முதல் பிரதிவாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சொத்துகளின் இடையிலும், அவர்களால் விலைக்கு வாங்கப்பட்ட உடைமைகள் மற்றும் வழக்குரை அட்டவணைச் சொத்துகளில் உயில்வழி உரிமையர்களுக்கிடையே ஒரு பாகப்பிரிவினை ஏற்பட்டதாக இந்த வழக்கு அமைவதற்கு முயற்சி

செய்யப்படுகிறது. அவர்களின் வழக்கு முழுவதும் எ. அழகிரிசாமி சொத்துகளில் உரிமையுடையவராக இருக்கிறார் என்ற அடிப்படையின்மீதானதாகும். நாங்கள் அளித்திட்ட காரணங்களுக்காக எ. அழகிரிசாமிக்கு எந்தவித உரிமையுமில்லை என்ற முடிவுரைக்கு நாங்கள் ஏற்கெனவே வந்துவிட்டோம். விருப்புறுதி ஆவணம் அல்லது பாகப்பிரிவினையின் கேள்வியிலிருந்து இலட்சுமையா பிரிவினரைத் தடுத்து, அ.வ. எண் 71/1958-இல் உள்ள ஒத்திசைவு தீர்ப்பாணையின் அடிப்படையில் விவாதங்களை ஏற்க இயலாது. அ.வ. எண் 71/1958-இன் ஒத்திசைவு தீர்ப்பாணையின்படி எதிர்வாதிகளுக்கு ஆதரவாக அவளது அனைத்து உரிமைகளையும் விட்டுக்கொடுத்திருப்பதை கருத்திற்கொண்டும், பின்னர் இந்து வாரிசுரிமைச் சட்டத்தின் பிரிவு 14(1)-இன் கீழ் ஆர். கிருஷ்ணம்மாள் பூரண உரிமையாளராகிவிட்டார் என்று நாங்கள் தீர்மானித்த காரணத்தினாலும், மேல்முறையீட்டாளர்களிடம் சென்றடைவதற்கான அடைவற்ற உரிமை எதுவும் எ. அழகிரிசாமியுடன் இல்லை. அ.வ. எண் 649/1985-இலுள்ள வாதிகள் அவர்கள தகுதிவாய்ந்த அவர்களின் உரிமையினை விளம்புகை செய்யக்கோரி முயற்சித்துள்ளனர். கிரைய ஆவணங்களுக்கு அங்கு எதிர்ப்புரையில்லை என்னும் வாதுரைகள் மேல்முறையீட்டாளர்களின் வழக்கினை ஊக்குவிப்பதற்கில்லை. உயில்வழி உரிமையர்களில் ஒருவரான எ.த.சா.1 எ. அழகிரிசாமி உடைமைகொண்டிருப்பது குறித்து சாட்சியமளித்துள்ளதை நாங்கள் கவனித்தோம். உண்மையாகவே, ஏற்கெனவே குறிப்பிட்டவாறு விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பாணைக்கு இந்த மேல்முறையீட்டாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. மேலும், இந்த விருப்புறுதி ஆவணத்தின்கீழ் உயில்வழி உரிமையாளர்களான மேல்முறையீட்டாளர்களின் துணையோடு அவர்கள் **<u>வெளிப்படையாக மிதந்துசெல்கின்றனர்.</u>** ஆகையினால் அவர்களுடைய வழக்கினில்

எந்தவித நற்கூறுகளையும் நாங்கள் காணவில்லை.

176. இதர மேல்முறையீடுகள் தொடர்பாக பரிசீலனைக்காக எழுகின்ற விடயங்களிலும் மற்றும் எங்களது காண்முடிவின் காரணமாகவும் நாங்கள் எந்தவித நற்பண்புகளையும் கண்டறியவில்லை. எல்லா மேல்முறையீடுகளிலும் சிறப்பு பெறுவதற்கான தகுதியில்லை. அதன் பயனாக, அனைத்து மேல்முறையீடுகளும் தள்ளுபடி செய்யப்படுகின்றன. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதுமில்லை.

... மாண்புமிகு நீதியரசர் திரு. சஞ்சய் கிஷன் கவுல்

... மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம். ஜோசப்

புதுதில்லி,

17.07.2020